www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

மேல்நிலை முதலாம் ஆண்டு

அறவியலும் இந்தியப் பண்பாடும்

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

11th Std - Ethics Tamil Introduction Pages_12-12-2021.indd 1 08/01/2024 13:09:57

www.tnschoolbooks.in

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2018*
திருத்திய பதிப்பு – *2019, 2020, 2022*
மறுபதிப்பு – *2021, 2023, 2024*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

11th Std - Ethics Tamil Introduction Pages_12-12-2021.indd 2 08/01/2024 13:11:18

இந்தியக் குடிமைப் பணி முதன்மைத் தேர்வில் அறவியல்

பொதுப்படிப்புகள் : IV அறவியல், ஒருங்கிணைந்த பண்புகள் மற்றும் திறன்கள்

மாணாக்கர்களின் மனப்பான்மை மற்றும் அணுகு முறையை அளந்தறியும் வகையில் இத்தாளில் வினாக்கள் அமையும். பொதுவாழ்வில் ஒழுங்கு, நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதில் ஏற்படக்கூடிய சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன், சமுதாயத்தில் நிகழக்கூடிய பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன் ஆகியவற்றை அளந்தறியும் வகையிலும் வினாக்கள் அமையும். இவ்வகையான வினாக்கள், தனியாள் வாழ்வில் நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் கேட்கப்படும். கீழ்க்காணும் பகுதிகளை உள்ளடக்கியதாக இத்தாள் அமையும்.

அறவியல் மற்றும் மானுடத் தொடர்புகள்

மனிதச் செயல்பாடுகளில் அறவியல் சார்ந்த இன்றியமையாத கூறுகள், அவற்றைத் தீர்மானிக்கின்ற செயல்களும் விளைவுகளும்; அறவியலின் பரிமாணங்கள்; தனியாள் தொடர்பு மற்றும் பொது மக்கள் தொடர்பு சார்ந்த அறவியல் கருத்துகள்.

மானுட விழுமியங்கள்

சிறந்த தலைவர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், நிர்வாகிகள் ஆகியோரின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்வுகளிலிருந்து பெறக்கூடிய பட்டறிப் படிப்பினைகள் வாழ்வியல் மதிப்புகளை வளர்த்தெடுப்பதில் குடும்பம், சமூகம் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கு.

மனப்பான்மை

- உள்ளடக்கம், அமைப்பு, செயல்திறன்: சிந்தனையிலும் நடத்தையிலும் மனப்பான்மையின் தாக்கமும் தொடர்பும்: அறம் மற்றும் அரசியல் சார்ந்த மனப்பான்மை: சமூகத்தாக்கமும் தூண்டலும்.

குடிமைப் பணிக்கான நாட்டமும் அடிப்படை விழுமியங்களும்

- நேர்மை, நடுவுநிலைமை, ஒருபால் கோடாமை, பொதுப் பணியில் அர்ப்பணிப்பு, பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல், சகிப்புத் தன்மை, நலிவடைந்த பிரிவினர் மீது கனிவு.

மெய்ப்பாட்டு நுண்ணறிவு

கருத்தாக்கங்கள் அவற்றின் பயன்பாடு மற்றும் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் அதனைச் செயல்படுத்துதல்.

- உலக, இந்திய அளவிலான அறவியல் சிந்தனையாளர்கள் மற்றும் தத்துவவாதிகளின் பங்களிப்புகள்.
- பொது/குடிமைப்பணி விழுமியங்கள் மற்றும் பொதுநிர்வாகத்தில் அறம்: நிலைமையும் பிரச்னைகளும்: அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் அறவியல் சார்ந்த கவலைகளும் குழப்பங்களும்:
- அறவியல் வழிகாட்டு மூலங்களாகத் திகழும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் மனச்சாட்சி: பொறுப்புணர்வும் அறம் சார்ந்த ஆளுகையும்: ஆளுகையில் அறவியல் மற்றும் ஒழுக்கவியல் வலுப்படுத்துதல்.
- பன்னாட்டு உறவுகள் நிதி வழங்கல் மற்றும் நிறும ஆளுகையில் அறம் சார்ந்த பிரச்சினைகள்.
- ஆளுகையில் நேர்மை: பொதுச்சேவை குறித்த கருத்தாக்கம்: ஆளுகை மற்றும் நேர்மைக்கான தத்துவார்த்த அடிப்படை.
- அரசாங்கத்தில் தகவல் பகிர்வும் வெளிப்படைத் தன்மையும், தகவல் அறியும் உரிமை, அறம் சார்ந்த விதிகள், நடத்தை விதிகள்.
- குடிமக்கள்பட்டயங்கள், பணிப்பண்பாட்டு சேவை வழங்குதலின் தரம், பொது நிதிப் பயன்பாடு, ஊழலுக்கெதிரான சவால்கள்.

மேற்கண்ட கூறுகள் குறித்த தனியாள் ஆய்வு அடிப்படை சார்ந்த வினாக்களாக அமையும்.

www.tnschoolbooks.in

வாழ்வியல் கூறுகளின் சிறந்த வெளிப்பாடாகத் திகழும் அறத்தையும் பண்பாட்டையும் கருப்பொருளாகக் கொண்டு, நற்பண்புகளை விதைக்கும் பெட்டகமாய் இப்பாடநூல்

11th Std - Ethics Tamil Introduction Pages.indd 4 21-02-2022 22:28:46

www.tnschoolbooks.in

பொருளடக்கம்

வ.எண்.	பாடத்தலைப்புகள்	ப. எண்	மாதம்
1	தமிழகப் பண்பாடு – ஓர் அறிமுகம்	01	ஜூன்
2	சிந்துவெளி நாகரிகம்	21	ஜூன்
3	தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்	36	ஜூலை
4	தமிழர் கலைகள்	56	ஆகஸ்ட்
5	திருவிழாக்கள்	90	செப்டம்பர்
6	தொல்குடி விழுமியங்கள்	109	அக்டோபர்
7	அறவியலின் இயல்பும் அறச்செயல்களும்	122	அக்டோபர்
8	அறநெறி வாழ்வு	140	நவம்பர்
9	தொழில்சார் அறங்கள்	155	நவம்பர்
10	அண்மைக்கால அறநெறிப் போக்குகள்	169	டிசம்பர்
	கலைச்சொற்கள்	200	
	பார்வை நூல்கள்	207	

65WOK

மின் நூல்

Q31XZ

மதிப்பீடு

11th Std - Ethics Tamil Introduction Pages.indd 5 21-02-2022 22:28:46

மேல்நிலை முதலாம் ஆண்டு

அறவியலும்
இந்தியப் பண்பாடும்

அலகு
1

தமிழகப் பண்பாடு– ஓர் அறிமுகம்

PGT4E

கற்றல் நோக்கங்கள்

- பண்பாடு என்ற சொல்லின் பொருள் அறிதல்.
- தமிழரின் தொன்மை மற்றும் மாண்புகளை அறிதல்.
- தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழரின் அகப்புறவாழ்க்கை முறையை அறிதல்.
- பண்டைய தமிழகத்தின் நிலவியல் பகுப்பு முறைகளைத் தெரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

பண்டைய தமிழர், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள், தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றிருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.

இப்பகுதியில் வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள், கல்வெட்டுச் செய்திகள், நாணயங்கள், பட்டயங்கள் ஆகியவற்றின் வாயிலாகத் தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறியலாம். மேலும், தமிழர்களின் அகவாழ்வு, புறவாழ்வு பற்றிய செய்திகளும் விளக்கப்படுகின்றன.

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு ஆகும். பண்பாடு என்பது, குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. எனவே, நமது பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

பண்பாடு – சொற்பொருள் விளக்கம்

'பண்படு' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். பண்படு என்பதற்குச் சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் டி.கே. சிதம்பரநாதனார். உழவன், பயிர் செழிக்க நிலத்தைப் பண்படுத்துதல்போல, மனிதவாழ்வு செழிக்க உயர்ந்த எண்ணங்களால் மனத்தைச் செம்மைப்படுத்த வேண்டும்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்கிறது தொல்காப்பியம். இங்கு, 'உயர்ந்தோர்' என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்பதைப் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இவ்வுலகம், பண்புடையவர்களால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் 'பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்' என்கிறார் வள்ளுவர். இதன்மூலம், மனிதனை மேம்படுத்துகின்ற அன்பு, ஈகை, புகழ், பெரியோரைத் துணைக் கொள்ளல், மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை மக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது

புலனாகிறது. எனவே, மனிதன் பேசும் மொழி, உணவு, உடை, வாழ்க்கை முறை, செய்யும் தொழில், எண்ணங்கள் ஆகியவை பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாகத் திகழ்கின்றன.

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் வழியாகவும், தாயகப் பிணைப்பின் வழியாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள் ஊடாகவும், சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாடு பல காலமாகப் பேணப்பட்டு, திருத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட கூறுகளைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஓர் இயங்கியல் பண்பாடே ஆகும்.

பண்பாடு (Culture)	நாகரிகம் (Civilisation)
பண்பாடு என்பது, மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிப்பது	நாகரிகம் என்பது, மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது
மாந்தன் தன் அறிவுத்திறத்தாலும், உள்ளுணர்வுத் திறத்தாலும் உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி அன்புடையவன் – அருளுடையவன் – ஈகையுடையவன் – இரக்கமுடையவன் – பண்புடையவன் – பக்குவமுடையவன் – வீரமுடையவன் – தீரமுடையவன் – ஊக்கமுடையவன் – உணர்வு உடையவன் – மானமுடையவன் – மரியாதையுடையவன் – பற்றுடையவன் – பணிவுடையவன் – தன்னலங்கருதாதவன் – பிறர் நலம் பேணுபவன் – உடைமையை, உடலை, உயிரை ஈபவன் என்ற வகையில் பெயரெடுப்பது, அகத்தோற்றப் பொலிவை உணர்த்தும் பண்பாட்டின்பாற்பட்டதாகும். நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணைபுரியும்; அதுபோலவே பண்பாட்டுவளர்ச்சிக்கு நாகரிகம் உறுதுணையாக இருக்கும்.	மாந்தன் தன் அறிவுத்திறனாலும் ஆற்றல் திறனாலும், உள்ளுணர்வுத் திறனாலும் பேணப்பட்டு வளர்ந்து வருவன சுவையான உணவு – அழகான உடை – வசதியான உறையுள் – வாய்ப்பான போக்குவரத்துப்பொறிகள் – வளம் மிகுந்த நாடு – நலம் மிகுந்த நகரங்கள் – கல்விச்சாலைகள் – கலைக் கூடங்கள் – இசை – கூத்து – நாடகம் – நாட்டியம் – ஓவியம் – சிற்பம் – விளையாட்டு – வளர்ந்து நிற்கும் வாணிகம் – சிறந்து செயல்படும் தொழிற்சாலைகள் – அழகான சாலை – வனப்பான பூஞ்சோலை போன்றவையெல்லாம் மாந்தனது புறத்தோற்றப் பொலிவுகளைக் குறிக்கும் நாகரிகத்தின் பாற்பட்டவையாகும்.

தமிழர்களின் தோற்றம்

தமிழர் தோற்றம் பற்றி நான்கு வகையான கருதுகோள்கள் உள்ளன. தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்பது ஒரு கருதுகோள். தென் இந்தியாவின் பழங்குடிகள் என்பது இரண்டாவது கருதுகோள். ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் வழியாகத் தென் இந்தியா வந்தோரின் வழித்தோன்றல்கள் என்கிறது மூன்றாவது கருதுகோள். மத்திய ஆசியா, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர் என்பது நான்காவது கருதுகோள். எப்படி இருப்பினும், தமிழினம் தொன்மை வாய்ந்த மக்கள் இனங்களில் ஒன்று. எனவே, தமிழர்கள் கலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், மொழி, விழுமியங்கள் முதலான பண்பாட்டுக் கூறுகளைத் தொன்றுதொட்டு பெற்றிருந்தனர்.

தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள்

தமிழர்கள், தொன்றுதொட்டுப் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றை இலக்கியச்சான்றுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், தொல்பொருள் சான்றுகள் என வகைப்படுத்தலாம்.

XI Ethics_Lesson 1 Folder.indd 2 13-12-2021 10:38:40

இலக்கியச் சான்றுகள்

தமிழகப் பண்பாட்டின் தொன்மையை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை புரிபவை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களுமாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறுகிறது. சங்க இலக்கிய நூல்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

சங்க இலக்கியங்கள் அக வாழ்க்கையைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 'அன்பின் ஐந்திணையாகப்' பகுத்துள்ளன. இதன் மூலமாக நிலம், பொழுது ஆகியவை முதற்பொருளாகவும், வழிபடு தெய்வம், வழிபாட்டுமுறைகள், வாழ்க்கைமுறை, விளையும் பொருள்கள் ஆகியவை கருப்பொருளாகவும், காதல் வாழ்வு, அதன் வழியாகத்தோன்றும் பல்வேறு உணர்வு நிலைகள் ஆகியவை உரிப்பொருளாகவும் பாகுபடுத்தி விளக்கப்பட்டுள்ளன.

ஐவகை நிலங்கள்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை, சங்ககாலப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரைச் சாரும்.

சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சிச்சிறப்பு, போர்த்திறம், கொடைத்திறம் முதலானவற்றைப் பற்றிப் பதிற்றுப்பத்து விரிவாக விளக்குகிறது. இசைப்பாடலாகிய பரிபாடல், பாண்டியர்களின் தலைநகரமாகிய மதுரையின் சிறப்பையும், வையை ஆற்றின் சிறப்பையும், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை வழிபட்ட முறைகளையும் பாடுகிறது.

பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களுக்கு இலக்கணமாக,

"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"
(தொல். பொருள். புறத்திணையியல் 30)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தம்மைப் போன்று வறுமையில் வாடும் பிறரும் வளம் பெற்று வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகின்ற பெருமனம் படைத்தவர்களாகப் புலவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை ஆற்றுப்படை நூல்கள் புலப்படுத்துகின்றன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும் நிலவளம், காதலின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன. நெடுநல்வாடை காதலையும், வீரத்தையும் ஒருசேரப் பேசுகிறது. மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்பைக் கூறுகிறது. அதில் கூறப்பட்டுள்ள நிலையாமை குறித்த கருத்துகள்கூட, பாண்டிய மன்னன், காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகளின் நினைவூட்டலாகவே அமைந்துள்ளன. சோழநாடு, தரைவழி வணிகத்தாலும் கடல் வழி வணிகத்தாலும் வளம் பெற்றிருந்ததனை 'முட்டாச் சிறப்பின் பட்டினம்' என்று பட்டினப்பாலைச் சொற்றொடர் குறிப்பிட்டுச் சொல்கிறது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், தமிழர் ஆட்சிமுறை, ஆடல், பாடல், கலைவளம் மற்றும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகரங்களின் சிறப்புகள், வணிகச்சிறப்பு, சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், தனிமனித ஒழுக்கம், நீதி வழங்கும் முறைமை ஆகியவை பற்றி விரிவாகப்பேசும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

மணிமேகலை, சமய அறக் கருத்துகளையும் வாழ்வியல் நெறிகளையும்

எடுத்துரைக்கின்றது. பல்வேறு குற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்வதன் மூலமே குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பது, மணிமேகலையின் மையக் கருத்தாகும். பசியைப் பிணியாக உருவகம் செய்து, அதைப் போக்கவேண்டிய அவசியத்தையும் கூறுகின்ற புரட்சிக்காப்பியம் மணிமேகலையாகும்.

வெளிநாட்டினரின் குறிப்புகள்

தமிழகத்தில் வணிகம் செய்ய வந்த வெளிநாட்டவரான யவனர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், புனிதப்பயணம் மேற்கொண்டவர்கள் போன்றவர்களின் குறிப்புகளில், தமிழகம் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை அறிய முடிகிறது.

- பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்' என்னும் நூலின் பதிப்புரையில், கிரேக்க மக்கள் நாகரிக சமூகத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே, எகிப்தும் பண்டைய இந்தியாவும் நெடுங்காலமாக வணிகத் தொடர்பு கொண்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது.
- ரோமாபுரி அரசன் அகஸ்டஸின் சமக்காலத்தவரான ஸ்டிராபோ (Strabo) என்பவர் எழுதிய 'பூகோள நூல்', பிளினி எழுதிய உயிரியல் நூல், தாலமி எழுதிய பூகோள நூல் ஆகியவை பண்டைய தமிழகத்தின் கடல் வணிகம் பற்றிக் குறிப்பிடுகின்றன.
- சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்கும் இடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரேக்கத்திலிருந்தும் வணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் என்ற நூல் கூறுகின்றது.
- கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கர்கள், தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இதனால் பல தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியில் இடம் பெற்றிருந்தன.
- 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் 'அரிஸா' என்றும், கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச்சொல் 'கார்ப்பியன்' என்றும், இஞ்சிவேர் சின்ஞிபேராஸ் என்றும், பிப்பாலி பெர்ப்பெரியாகவும் உருமாற்றம் அடைந்தன.
- சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற துகிம் (மயில்தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்), பிற மதிப்புயர்ந்த பொருள்களின் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை.
- தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாயின.
- அயல்நாடுகளுக்குப் புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டைநாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தது. அவற்றுள், தமிழகத்து வேட்டைநாய்கள், தரத்தில் மேலானவை எனப் போற்றப்பட்டன.
- சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான தொண்டியைத் 'திண்டிஸ்' என்றும், முசிறியை 'முஸிரிஸ்' என்றும், பொற்காட்டைப் 'பகரி' என்றும், குமரியைக் 'கொமாரி' என்றும் ரோமர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
- தமிழகத்தின் கீழைக்கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் 'கொல்சாய்' என்றும், நாகப்பட்டினத்தை 'நிகாமா' என்றும், காவிரிப்பூம்பட்டினத்தைக் 'கமரா' என்றும், புதுச்சேரியைப் 'பொதுகே' என்றும், மரக்காணத்தைச் 'சோபட்மா' என்றும், மசூலிப்பட்டினத்தை 'மசோலியா' என்றும் அந்நூல்கள் குறிப்பிடுகின்றன.
- ஹிப்பாகிரேட்டஸ் என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் கி.மு. (பொ.ஆ.மு.) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். இவர் மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிட்டுள்ளார்.

XI Ethics_Lesson 1 Folder.indd 4 13-12-2021 10:38:40

- பண்டைய தமிழகத்திலிருந்து மஸ்லின் துணியும், ஏலக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்களும் ஏற்றுமதியாயின.

தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

தொல்பொருள் சான்றுகள்

தமிழக வரலாற்றை அறிய தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கிடைத்துள்ள பொருள்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அவை, மூன்று வகைப்படும்.

- கல்வெட்டுகளும் பட்டயங்களும்
- நாணயங்கள்
- நினைவுச்சின்னங்கள்

கல்வெட்டுகளும் பட்டயங்களும்

பண்டைய தமிழகத்தின் கோயில்களில் உள்ள கற்சுவர்கள், கோயில் மண்டபத்துக் கற்றூண்கள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை எழுத்துருக்களாகப் பொறித்து வைத்துள்ளனர். இவற்றையே கல்வெட்டு என்பர். பெரும்பாலும் மன்னர்களின் ஆணைகள், அவர்களின் சாதனைகள் போன்றவை கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

திருப்பரங்குன்றம், நாகமலை, ஆனைமலை, கீழக்குயில்குடி ஆகிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் சங்க காலத்தவை என குறிப்பிடப்படுகின்றது.

பல்லவர்காலக் கல்வெட்டுகள் குகைகள், இரதங்கள், கோயில்கள், கற்பாறைகள், தூண்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவற்றில் மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, திருச்சி, பல்லாவரம், மாமல்லபுரம், தளவானூர் போன்ற இடங்களில் கிடைத்துள்ளவைக் குறிப்பிடத்தக்கன. காஞ்சி கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில், பல்லவர்கால வரலாற்றை அறியமுடிகிறது.



சோழர் காலக் கல்வெட்டு

பராந்தகச் சோழனின் உத்திரமேரூர்க் கல்வெட்டு, சோழர்கால கிராம ஆட்சிமுறையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இக்கல்வெட்டில் கிராம உறுப்பினர்களின் தகுதிகள், தேர்ந்தெடுக்கப்படும்முறை ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. தஞ்சை, திருவொற்றியூர், மேலப்பழுவூர், சிதம்பரம், திருவாரூர், மதுரை, கன்னியாகுமரி போன்ற இடங்களில் காணப்படும் கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் மக்களின் பண்பாடு, அரசியல், வாழ்க்கைமுறை, நீதி, சமூக உறவு, பொருளாதாரநிலை போன்றவற்றை எடுத்துரைக்கின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

குடவோலை முறை

கிராம ஊராட்சி சபை உறுப்பினரை தேர்ந்தெடுக்க, சோழர் காலத்தில் குடவோலை தேர்தல் முறை பயன்படுத்தபட்டது. இத்தேர்தலில் குற்ற மற்றோரையும் தகுதியுள்ளோரையும் நிற்கச் செய்வார்கள். அவர்களின் பெயர்களை ஓலையில் எழுதி மக்கள் எதிரில் அவற்றைக் குடத்தில் இட்டுக் குலுக்குவார்கள். சிறுபிள்ளையைக் கொண்டு ஓர் ஓலையை எடுக்கச் செய்து அதில் வரும் பெயருடைய நபரையே தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கொண்டு போட்டிப் பூசலின்றி தேர்தல் நடந்தது. இதனை, தற்கால தேர்தல் முறைக்கு முன்னோடியாகக் கருதலாம்.

XI Ethics_Lesson 1 Folder.indd 5 13-12-2021 10:38:40

பொன், செம்பு ஆகிய உலோகத்தகடுகளின் மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்குப் 'பட்டயங்கள்' என்று பெயர். பட்டயங்களும், கல்வெட்டுகளைப் போன்றே காலத்தையும் ஆட்சி முறையையும் அறிய உதவுகின்றன. பட்டயங்கள் அரசனின் பெயர், அவனது காலம், பட்டயம் அளிக்கப்படும் நோக்கம் முதலியன பற்றிக் கூறுவதால், வரலாற்றை அறிய அவை பெரிதும் துணைபுரிகின்றன.

பட்டயங்கள்

அவை பிராகிருதமொழியிலும் வடமொழியிலும் தமிழிலும் காணப்படுகின்றன. வேள்விக்குடிப் பட்டயம், தளவாய்புரச்செப்பேடு, சின்னமனூர்ச் சாசனம், சிவகாசிச் செப்பேடுகள் முதலிய பாண்டியர்காலப் பட்டயங்களும், திருவாலங்காட்டுப் பட்டயங்கள், கரந்தைச் செப்பேடுகள், அன்பில் பட்டயங்கள், லெய்டன் பட்டயங்கள் போன்ற சோழர்காலப் பட்டயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

மன்னர்கள் கொடையாக வழங்கிய இறையிலி நிலங்களையும் அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களைப் பற்றியும் கல்வெட்டுகளும் பட்டயங்களும் கூறுகின்றன. இவை பிராமி, பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

நாணயங்கள்

சங்க காலத்தில் செப்பு நாணயங்கள் வழக்கில் இருந்தன. அவை சதுர வடிவமானவை. நாணயத்தின் ஒருபுறத்தில் யானையும், மறுபுறத்தில் இரட்டை மீன்களும் காணப்பட்டன. யவனர்கள் தமிழகத்தில் மதுரை, புகார் ஆகிய இடங்களிலிருந்து, தங்க நாணயங்களை வெளியிட்டனர். அவை, அவர்களுடைய புழக்கத்திற்கே பயன்பட்டன. பல்லவர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் இரட்டை மீன், கப்பல், நந்தி போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன.

பழங்கால நாணயங்கள்

முதலாம் இராஜராஜன் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில், புலியும் அதனருகில் இரட்டை மீன் கொண்ட வடிவங்களும் காணப்படுகின்றன. இதனால், அவன் பாண்டியர்களை அடக்கி வலிமை பெற்றவனாக வாழ்ந்தான் என்பது வெளிப்படுகிறது. இரண்டாம் வரகுணனின் தங்க நாணயம், கிரந்த எழுத்தில் அவனுடைய பெயருடன் காணப்படுகின்றது. நாணயங்கள் வாயிலாக, வணிகத்தில் பண்டமாற்று முறையோடு பணப்பரிமாற்றமும் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நிலவி வந்துள்ளதை அறிய முடிகிறது.

வேலூர் கோட்டை

வேலூர் கோட்டை – அகழி

நினைவுச் சின்னங்கள்

தமிழகத்தில் காணப்படும் குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை வரலாற்றை அறிய உதவிபுரிகின்றன. மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டுக் கல்வெட்டில், அழியக்கூடிய பொருள்களான மரம், செங்கல், மண், சுண்ணாம்பு கொண்டு பல கோயில்கள், சங்ககாலத்திலும் அதனைத் தொடர்ந்து களப்பிரர் காலத்திலும் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், பல்லவரது காலம் முதற்கொண்டு கோயில்கள் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டதால் அவை இன்றும் நிலைத்து நின்று,தமிழரின்பண்பாட்டைவெளிப்படுத்துகின்றன. திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம் போன்ற இடங்களில் காணப்படும் குகைக் கோயில்களும், கற்களால் அமைக்கப்பட்ட இரதங்களும் குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோயில், மேலும் தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருவொற்றியூர், லால்குடி, திருவாரூர், மதுரை, வேலூர், இராமேஸ்வரம் மற்றும் சுசீந்திரம் போன்ற இடங்களில் காணப்படும் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

பிற ஆதாரங்கள்

முதுமக்கள் தாழிகளில் இடம்பெற்றிருந்த பல்வகைப் பொருள்கள், இறந்தவர்களுக்காகச் செய்யப்பட்ட சடங்குகளுக்கான சான்றுகளாக உள்ளன. வீரம், கொடை, புலமை முதலியவற்றில் சிறந்தவர்களை நினைவுகூரும் பொருட்டு நடப்பட்ட கற்பதுகைகளும் நடுகற்களும் தமிழ்ப் பண்பாட்டின் தொல்பொருள் சின்னங்களாக விளங்குகின்றன.

முதுமக்கள் தாழி

இவை தவிர குகைகள், இரதங்கள், கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் போன்றவை தமிழகப் பண்பாட்டையும், வரலாற்றையும் அறிவதற்குத் துணைபுரிகின்றன.

பஞ்ச பாண்டவ ரதங்கள்

திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமல்லபுரம், சித்தன்னவாசல் போன்ற இடங்களில் குகைக்கோயில்கள் உள்ளன. மாமல்லபுர ஒற்றைக்கல் இரதங்கள், தமிழகத்தின் சிறப்பான சிற்பக்கலைக்கு அடையாளமாகத் திகழ்கின்றன. சமண முனிவர்களின் வாழ்விடங்களாகக் குகைகள் இருந்துள்ளன. தமிழகத்தின் நிலப்பரப்பு முழுவதும் பரந்து கிடக்கும் கோயில்களில் காணக்கிடைக்கின்ற சிற்பங்களும் ஓவியங்களும் கட்டடங்களும் தமிழர்தம் கலைச் சிறப்புகளைப் பறைசாற்றுவனவாக உள்ளன.

நிலவியல் கூறுகள்

பழங்காலத் தமிழகம் வடக்கே வேங்கடம்முதல் தெற்கே குமரிவரை பரவியிருந்தது என்பதனை 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும்நல்லுலகத்து' என்றதொல்காப்பியப் பாயிரம் உறுதி செய்கிறது. மொழியின் அடிப்படையில் இந்நாடு 'தமிழ்கூறும் நல்லுலகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் வழங்கலாயிற்று.

பண்டைய தமிழகம், மலைகளாகவும் காடுகளாகவும் சமவெளிகளாகவும் கடலை ஒட்டிய நிலப்பகுதிகளாகவும் பரந்து விரிந்து காணப்பட்டன. இவற்றைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றும் குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலத்தை பாலை என்றும் இலக்கியங்கள் பகுத்தன.

பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு போன்ற அரசியல் பிரிவுகளுக்கு இங்குள்ள இயற்கை அமைப்பே காரணமாக இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இரு கடற்கரை ஓரங்களிலும் அமைந்து, தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஒன்றாக இணைகின்றன. இவ்விரு தொடர்களிடையே சமவெளி ஒன்று அமைந்துள்ளது. மேற்குத் தொடருக்கு மேற்கிலும் கிழக்குத் தொடருக்குக் கீழ்ப்புறத்திலும் சமவெளிகள் உள்ளன. நீலகிரிக்குத் தெற்கிலும் சமவெளிகள் உள்ளன. இவை அன்றி, பல குன்றுகளை அடுத்தும் சமவெளிகள் அமைந்துள்ளன. இச்சமவெளியில் வாழ்ந்த மக்கள் தனித்தனியாகவே வாழ்ந்துள்ளனர்.

பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு ஆகிய நாடுகள் இவ்வாறு அமைந்தவையே ஆகும். இவையன்றிக் குறுநில மன்னர்களின் அரசுகளும் தனியரசுகளாகவே இயங்கிவந்தன. பழந்தமிழர் ஒன்றுபட்டு வாழாமல் தனித்தனி அரசியல் சமூகங்களாகப் பிரிந்து வாழ்ந்ததற்கு நாட்டின் இயற்கை அமைப்பே காரணம் என்றால் மிகையாகாது. நாட்டின் பல இடங்களில் மலைகளும் குன்றுகளும் குறுக்கிட்டதால், சங்க காலத்திலும் அதற்கு முன்பும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பாகுபாடுகள் ஏற்பட்டு, அவற்றிற்கேற்ப மக்களின் ஒழுக்கமும் பண்பாடும் வாழ்க்கை முறைகளும் அமையலாயின.

மாண்புகள்

சங்க இலக்கியங்களில், மன்னர்களுக்கும் மக்களுக்கும் உரிய ஒழுக்கங்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

நெறிபிறழாத போர்முறை, மக்கள் நிலையறிந்து வரி விதித்தல், நேர்மையாகப் பொருளீட்டல், சான்றோர்களை மதித்தல், அவர்தம் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றுதல் முதலியன அரசர்களுக்குரிய மாண்புகளாகக் கருதப்பட்டன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் நெறிபிறழ்ந்தாலும் சான்றோர்கள், மன்னர்களை இடித்துரைத்து வழிப்படுத்தும் வாய்ப்பும் இருந்தது.

தனிமனித வாழ்வியல் நெறிமுறைகளும் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. இவ்விலக்கியங்களில் ஆண்களுக்குரிய நெறிகளும், பெண்களுக்குரிய நெறிகளும் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளன. 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்ற குறுந்தொகைத் தொடர், ஆண்களின் நிலையையும் அவர்கள் தங்களின் வாழ்விடங்களுக்குரிய தொழில்களைச் செய்தனர் என்பதையும் விளக்குகின்றது. பெண்களுக்கு உயரிய பண்பாகக் கற்பொழுக்கம் கருதப்பட்டது. மக்கட்பேறு, விருந்தோம்பல், பெரியோரை மதித்தல் முதலியன குடும்ப வாழ்க்கைக்குரிய அடிப்படைப் பண்புகளாக வரையறுக்கப்பட்டன.

முச்சங்கங்கள்

பாண்டிய மன்னர்கள் தமிழை வளர்ப்பதற்காகப் புலவர் பலரையும் ஒருங்கிணைத்துத் தமிழ்ச்சங்கங்களை நிறுவினர். இவை, கால அடிப்படையில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

XI Ethics_Lesson 1 Folder.indd 8 13-12-2021 10:38:42



தமிழகத்தில் சமண சமயத்தைச் சார்ந்த துறவிகள், சங்கம் ஏற்படுத்திக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தார்கள். அச்சங்கங்களைப் போலவே, அதற்கு முந்திய காலத்திலும் சங்கம் இருந்திருக்க வேண்டும் என்றும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவை அச்சங்கங்களைச் சார்ந்த புலவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதினர்.

பழந்தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்றும், மதுரையிலும் கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்தபிறகு, மூன்றாம் தமிழ்ச்சங்கம், மதுரையில் பாண்டியர்களின் ஆதரவோடு அமைக்கப்பட்டது என்றும், எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மூன்றாம் தமிழ்ச்சங்ககால நூல்கள் என்றும் கூறுகின்றனர். எனவே, அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடுகின்றனர்.

மதுரையில், புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்து வந்தார்கள் என்பதற்கும் பாண்டிய மன்னர்கள், அவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதற்கும் சங்கப் பாடல்களில் சான்றுகள் உள்ளன. பாண்டியரைப் போலவே, சோழ மன்னர்களும் சேர மன்னர்களும் சிற்றரசர்களும் வள்ளல்களும் புலவர்களுக்கு ஆதரவளித்து வந்தார்கள் என்பதும் தெரிய வருகிறது. அவர்களின் உதவியும் ஆதரவும் பெற்ற புலவர்கள், தம் உள்ளத்து உணர்வுகளைப் பாடியதோடு மட்டுமல்லாமல் அவர்களின் நாடுகளையும் ஆட்சிச் சிறப்புகளையும் வாயாரப் புகழ்ந்து பாடினார்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும், சங்கங்களைப் பற்றிய வரலாறு, நக்கீரர் எழுதிய இறையனார் களவியல் உரையிலும் கூறப்பட்டுள்ளது.

அகத்திணை - புறத்திணை

தமிழர்கள், தம்வாழ்க்கையை 'அகம்' எனவும் 'புறம்' எனவும் இரு கூறாகப் பிரித்தனர். இதனை, அன்பின் வழிப்பட்டது 'அகவாழ்வு' எனவும், வீரத்தின் வெளிப்பாடு 'புறவாழ்வு' எனவும் கூறுவர்.

அகத்திணை விளக்கம்

உருவத்தாலும், அகவையாலும், அறிவாலும் ஒத்த தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழ்வதே அகவாழ்வாகும். தலைவனும், தலைவியும் தாம்துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த முடியாததே அகவாழ்வாகும். இதுவே அகத்திணையாகும்.

அகத்திணை ஐந்து வகைப்படும். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும். பொருந்தாக் காதலைப் பெருந்திணை எனவும், ஒருதலைக் காதலைக் 'கைக்கிளை' எனவும் புற ஒழுக்கத்தை ஏழு திணைகளாகவும் கூறுவர். அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகளைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது.

உரிப்பொருளான காதலைக் கற்பனை செய்து பாடும்போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, பூ, மரம் முதலான கருப்பொருள்களைப் பின்னணியாக அமைத்துப் பாடும் மரபு, நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ளது.

ஐந்திணைக்கான முதற்பொருளும் உரிப்பொருளும்

திணை	நிலம்	பொழுது		உரிப்பொருள்
		சிறுபொழுது	பெரும்பொழுது	
குறிஞ்சி	மலையும் மலை சார்ந்த இடமும்	யாமம்	கூதிர், முன்பனி	புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
முல்லை	காடும் காடு சார்ந்த இடமும்	மாலை	கார்	இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
மருதம்	வயலும் வயல் சார்ந்த இடமும்	வைகறை	கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்	ஊடலும் ஊடல் நிமித்தமும்
நெய்தல்	கடலும் கடல் சார்ந்த இடமும்	எற்பாடு	கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்	இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
பாலை	மணலும் மணல் சார்ந்த இடமும்	நண்பகல்	இளவேனில், முதுவேனில், பின்பனி	பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

புறத்திணை விளக்கம்

புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை எனப்படும். தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழு எனப் பகுக்க, புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுப் புறத்திணைகள் போருக்கான காரணங்களையும் போர் நடைபெறும் முறைகளையும் கூறுகின்றன. மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவது 'பாடாண்திணை' ஆகும். மேற்கண்ட ஒன்பது திணைகளில் கூறாதனவற்றைப் 'பொதுவியல் திணையில்' அடக்கிக் கூறுவர்.

விருந்தோம்பல்

'விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (தொல்.பொருள்.540) என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'விருந்து' என்னும் சொல் 'புதியது' என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய 'விருந்தினர்' என்ற சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று (குறள் 82)

என்னும் குறட்பா இக்கூற்றை விளக்குகிறது. இளங்கோவடிகள் 'தொல்லோர் சிறப்பின்' என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், தமிழரின் தொன்மையான பழக்கம் விருந்தோம்பல் என்பதை அறியலாம்.

XI Ethics_Lesson 1 Folder.indd 10 13-12-2021 10:38:42

விருந்தோம்பல்

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல். அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர், அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர் என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

…… …… …… … …… …… …… …கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்
செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நல்நாட்டு (அகம் 311, 9 – 12)

விருந்தினர் இரவில் காலம் கழித்து வரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர். இரவில் வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு நெய் கலந்த இறைச்சியைச் சமைத்துக் கொடுப்பது அன்றைய வழக்கமாகும். பசி என்று வந்தவர்களை வெளியே நிற்க வைத்துவிட்டுத் தாம் மட்டும் உணவு உண்பதை விரும்ப மாட்டார்கள். இதனையே, விருந்தோம்பல் முறை என்று தமிழர்கள் வகுத்திருந்தனர். விருந்தினரிடம் முகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தமக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசுவைப் போல அன்புகாட்டி நெகிழச் செய்வர்; விருந்தினர் மனம் மகிழும்படி விண்மீன்கள் போன்ற ஒளிவீசும் கிண்ணங்களில் பல வகையான உணவினைப் படைப்பர்.

தமிழர்கள், தமது வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவளித்த பிறகே, தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாள் போன்றே இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பினர் என்பதை ஔவையார் பாடல் மூலம் அறியலாம். ஆயர்கள், மாடு மேய்க்கப் புறப்படும்போது உணவினை மூங்கில் குழாயில் இட்டு, மாட்டின் கழுத்தில் கட்டுவர். காட்டுவழியே செல்லும்போது, அவ்வழியாகப் பசியோடு வருபவர்களுக்குத் தாம் வைத்திருக்கும் உணவினைப் பகிர்ந்து கொடுப்பர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளை 'மடைநூல்' குறிப்பிடுகிறது. உணவுப் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படை, பெருங்கதை, மணிமேகலை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. காலத்திற்கும், நிலத்துக்கும் ஏற்ற உணவுகளை அந்நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

வள்ளன்மை

பெற்ற பெருவளத்தைத் தக்கோர்க்குப் பகிர்ந்தளிப்பதே வள்ளன்மையாகும். இப்பண்பு, அரசர்கள் பின்பற்ற வேண்டிய பண்புகளுள் தலையாயது எனக் கருதப்பட்டது. கல்வி, தறுகண், இசை, கொடை ஆகிய பெருமிதப் பண்புகளுள் ஒன்றாக வள்ளல் தன்மை விளங்குகிறது.

சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் குறுநில மன்னர்களாகிய கடையெழு வள்ளல்களும் வாரி வழங்கும் வள்ளல்தன்மை கொண்டவர்களாக விளங்கினர் என்பதை இலக்கியங்கள் பெருமிதத்துடன் கூறுகின்றன.

XI Ethics_Lesson 1 Folder.indd 11 13-12-2021 10:38:42

பேகன்

பாரி

கடையெழு வள்ளல்கள்

குறுநில மன்னர்கள்	ஆட்சி செய்த பகுதி	வள்ளல் தன்மை
பேகன்	பழனிமலை	மயிலுக்குப் போர்வை தந்தவர்
பாரி	பறம்புமலை	முல்லைக் கொடி படர்வதற்குத் தம் தேரையே தந்தவர்
திருமுடிக்காரி	மலையமா நாடு	குதிரைகளைப் பரிசாக வழங்கியவர்.
ஆய் அண்டிரன்	பொதிய மலை	நீல நாகத்தின் உடையை இறைவனுக்குப் போர்த்தி மகிழ்ந்தவர்.
அதியமான்	தகடூர்	அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவர்.
நள்ளி	கண்டீர மலை	மலைவாழ் மக்களுக்கு அனைத்துப் பொருள்களையும் வழங்கியவர்.
வல்வில் ஓரி	கொல்லிமலை	யாழ் மீட்டும் பாணர்களுக்குப் பரிசு வழங்கியவர்.

இந்தியப் பண்பாட்டிற்கு தமிழகத்தின் கொடை

தமிழர்கள் மிகச் சிறந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் உடையவர்கள். இதனை உலக வரலாற்று ஆசிரியர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கின்றனர். தமிழர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை அளவிடற்கரியது.

மொழிக்கொடை

மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் மிக உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்ததை அறிகிறோம். வடநாட்டு மொழிகள் பலவற்றிலும், தென்னாட்டு மொழிகள் அனைத்திலும் தமிழ்ச்சொற்களை இன்றும் காணமுடிகிறது. இந்தியாவிற்கு வெளியே கடல்கடந்த நாடுகளிலெல்லாம், இந்திய நாகரிகத்தோடு பரவியுள்ள மொழி தமிழ்மொழியே

XI Ethics_Lesson 1 Folder.indd 12 13-12-2021 10:38:43

www.tnschoolbooks.in

என்பது உலகறிந்த உண்மை. வேதகாலத்திலேயே சமஸ்கிருதத்தில் தமிழ்ச் சொற்கள் கலந்திருந்தன என்பதையும் அறியமுடிகிறது.

திருக்கோயில்கள்

சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளை எடுத்துகாட்டும் அழகிய சின்னங்கள் தமிழகத்தின் வானுயர்ந்த திருக்கோயில்களாகும். திருக்கோயில்கள் பழங்காலத்தில் பண்பாட்டு மையங்களாகவும் கலைக் கூடங்களாகவும் திகழ்ந்தன. இக்கோயிலில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலைகள் நிறைந்துள்ளன.

பாண்டிய, பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்கள் காலத்தில் இக்கலைகள் பெரிதும் போற்றப்பட்டு எண்ணற்ற கோயில்கள் எழுந்தன. இவையனைத்தும் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கிய கொடை எனலாம். இதே அமைப்பில் வடஇந்தியாவில் பலகோயில்கள் எழுந்துள்ளதையும் காணலாம். தமிழகக் கலைப் பாரம்பரியம் உலகமே வியந்து பாராட்டும் வகையில் அமையப்பெற்றுள்ளது. சமயங்களைச் சார்ந்த பள்ளிகளும், கோயில்களும், குடைவரைக் கோயில்களையும் தமிழகமெங்கும் காணமுடிகிறது. திருச்சி, தஞ்சை, திருவானைக்காவல், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், தென்காசி, காஞ்சி, சுசீந்தரம், திருவரங்கம், திருக்கழுக்குன்றம், குடந்தை, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் மிகச்சிறப்பு வாய்ந்த இந்து சமயக்கோயில்களைக் காணலாம்.

கோயில்களின் சிறப்பு

மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்த கோயில்களில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சிகள் கோயில்களில் நடைபெற்றதால், கோயில்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்கின்றன.

மனிதன் தன் நிலையில் உயர, சமுதாயப் பணி செய்ய, தியாக உணர்வு பெற பக்தியும், அன்பும் அவசியம் என உணர்ந்தவர்கள் சிறந்த வழிபாட்டுமுறையைப் பின்பற்றினர்.

வயது என்பது உயிரோடு கூடிய உடலுக்கு உண்டு என்றும் ஆன்மாவிற்கு இல்லை என்றும் ஆன்மா தான் எதிலிருந்து வந்ததோ அதிலே சேர முயன்று வருதலை '**லயமாகுதல்**' என்பர். இவ்விடங்கள் பெரும்பாலும் கோயிலாகவே இருந்தன. ஆதலால் கோயில்கள், ஆன்மா லயமாகுமிடங்களாகத் திகழ்கின்றன. எனவே கோயில்களை ஆலயங்கள் எனவும் அழைத்தனர்.

கோயில்களில் கலைகள் வளர்ந்து சிறந்ததாலும் மக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்ததாலும் கோயில்கள் நுண்கலைகள் வளருகின்ற இடமாகத் திகழ்கின்றன. தேவார, திருவாசகப் பாடல்கள் சிவன் கோயில்களிலும், நாலாயிரத்திவ்விய பிரபந்தம் வைணவக் கோயில்களிலும் பாடப்பெற்றன. கோயில் திருமுறைகள் வளருமிடமாக இருந்தன.

மழை, புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மக்களுக்குப் புகலிடமாகத் திகழ்ந்தவை திருக்கோயில்களாகும். மேலும் திருமணம், விழாக்கள் போன்றவை கோயில்களின் மண்டபங்களில் நடைபெற்று வந்தன. எனவே கோயில்கள் சமுதாய புகலிடமாகவும், ஊர்ப்பணி மன்றங்களாகவும் இருந்தன என்பதை அறியமுடிகிறது.

தமிழர் வாழ்வு கோயிலோடு இணைந்ததாகவே அமைந்திருந்தது. ஔவையார், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இக்கோயில்கள் வாயிலாக ஆன்மிகம் வளர்ந்து மக்களிடையே ஒற்றுமை ஓங்கி, மனித நேயம் மலரும் இடமாகத் திருக்கோயில்கள் திகழ்ந்தன என்பதை அறிகிறோம்.

சிற்பம்

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இறைவன் இறைவி திருமேனிகள், தூண்களில் வடிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சுதை சிற்பங்கள் அனைத்தும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டவையாகும். புராண, இதிகாசக் கதைக்காட்சிகளை விளக்கும் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. பஞ்ச உலோகங்களால் வடிவமைக்கப்பட்ட இறைவன்

XI Ethics_Lesson 1 Folder.indd 13 13-12-2021 10:38:44

திருமேனிகள் இன்றும் தமிழ்நாட்டில் இருந்து உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பப்படுவதைக் காணும்போது, பண்டைத் தமிழர் சிற்பக்கலை நுணுக்கங்களை வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ள மிகப் பெரிய பொக்கிஷமாகும் என்பதை அறிய முடிகிறது.

ஓவியம்

மொழி தோன்றுவதற்கு முன்பே ஓவியம் தோன்றியது எனலாம். ஓவிய எழுத்துக்கள் இன்றும் மொழி எழுத்துகளாகப் பயன்படுத்தப்படுவதை ஜப்பான், சீன மொழிகளில் காணலாம். பண்டைத் தமிழர்கள் கற்பாறைகளிலும் கோயில்களிலும் ஓவியங்களை வரைந்து வளர்த்தனர். வண்ணம் தீட்டப்பெற்ற ஓவியங்கள் கோயில் சுவற்றிலும், மேல் கூரை விதானங்களிலும் வரைந்திருந்தனர். இதன் வாயிலாக இதிகாச, புராணக்காட்சிகள் ஓவியங்களாக விளக்கப்பட்டுள்ளன. தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராச சோழனின் வரலாற்று நாடகக்காட்சிகள் இன்றும் இருப்பதைக் காண முடிகிறது. இவ்வண்ணக் கலவைகள் காலவெள்ளத்தால் அழியா வண்ணமும், மாறா வண்ணமும் தீட்டப்பெற்றிருக்கும் விந்தை இன்றும் போற்றுதற்குரியது.

நாட்டியம்

பண்டைத் தமிழர்கள் நாட்டியக் கலையில் சிறந்து விளங்கினர். நாட்டியம் என்பது இசையோடு கூடிய கூத்து ஆகும். சிலப்பதிகாரம் கூத்து வகைள் பற்றி இயம்புகிறது. கட்புலனாகும் இன்பத்தைத் தருவது ஆடற்கலை. உடல்சோர்வு,மனச்சோர்வையும் நீக்கும் வடிகால் ஆடலும், பாடலும் என்றால் மிகையாகாது. பண்டைக்காலத்தே ஆடல்நிகழ்வதற்கு அரங்குகள் இருந்தன. மரநிழல்களிலும் தெருக்களிலும், கோயில் முற்றத்திலும், மாடமாளிகைகளிலும், மண்டபங்களிலும் மகளிர் சிலம்பொலிக்க ஆடினர். “கை வழிக்கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே” ஆடலின் நுட்பமாகும்.

ஆடவல்ல நடனமகள் ‘விறலி’ என்றழைக்கப்பட்டாள். நடன மகன் ‘கூத்தன்’ என்றழைக்கப்பட்டான். வள்ளிக் கூத்து, முருகனை வழிபட்டு ஆடும் ‘குன்றக்குரவை’, திருமாலை வழிபட்டு ஆடும் ‘ஆய்ச்சியர் குரவை’ பெண்கள் கைகோத்தாடும் குரவைக் கூத்து, துணுங்கைக் கூத்து, குணலைக் கூத்து போன்றவை இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகளாகும். சிவன் ஆடுகின்ற கூத்து ‘தாண்டவம்’ எனப்படும். சைவப்பெருமக்கள் இறைவனை ஆடும் கடவுளாக, அம்பலக் கூத்தனாக, ஆடல் வல்லானாக, நடராசனாகப் போற்றி வணங்கினர். வைணவப் பெருமக்களும் திருமாலை குழலூதிக் கோபியருடன் ஆடும் கண்ணனாகப் போற்றினர்.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் நடனமாந்தர்கள் பலர் நாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். இவர்கள் இறைவனின் திருவிளையாடற் காட்சிகளை நாட்டியமாடி மக்களை பக்திப் பரவசப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. இந்நடன மாந்தர்களின் நடனக்காட்சிகள் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இறைவனையும் ஆடல் அரசனாகப் பார்த்தது நம் தமிழர் சமுதாயம். காலைத் தூக்கி நின்றாடும் நடராசர் திருமேனி நடனக்கலைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியப் பெருநாட்டிற்கு தமிழகப் பரதக்கலை ஒரு சிறந்த கொடை என்றால் மிகையாகாது.

விழாக்கள்

தமிழ் மக்கள் உழைப்பையே செல்வமாக கொண்டு வாழ்ந்தனர். திரை கடலோடியும் திரவியம் தேடிப் பொருள்வளம் பெருக்கினர். மகிழ்ச்சி நிறைந்த மக்கள் வாழ்வில் விழாக்களுக்குப் பஞ்சமில்லை. தம்நிலத் தெய்வங்களை வணங்கி ஆண்டுதோறும் விழாக்கள் கொண்டாடினர். உயிர்த்தொழிலாம் உழவுத்தொழில் செய்து மகிழ்ந்தனர். பயிர் வளர்வதற்கும் மழைக்கும் காரணமான சூரியனை வணங்கி பொங்கல் விழா எடுத்தனர்.

தமிழர் பொங்கல் விழா வட இந்தியாவில் மகரசங்கராந்தியாகக் கொண்டாடப்படுகிறது. இந்திய பெருநாட்டுக்குத் தமிழரது வழிபாட்டுமுறையே வழிகாட்டியாக இருந்தது. வேளாண்மை செழிக்க உதவிய காவிரியாற்றுக்கு ஆடிமாதம் 18-ஆம் நாள் ஆடிப்பெருக்காக கொண்டாடி நாடும் வீடும் சிறக்க அருளுமாறு வேண்டி வழிபடுகின்றனர்.

கிராமிய விளையாட்டு

பண்டையத் தமிழர்களிடையே வீரமும் விளையாட்டும் இணைந்தே இருந்தன. மற்போரும், விற்போரும் வீர விளையாட்டாகவே திகழ்ந்தன. இது தவிர பெண் குழந்தைகளுக்கு அம்மானை, ஊசல் போன்றவையும், ஆண் குழந்தைகளுக்கு சிற்றில், சிறுபறை, சிறுதேர் போன்றவை விளையாட்டாக இருந்ததை அறியமுடிகிறது. தமிழர் கூடிச் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் ஒற்றுமையும், கூடி வாழும் ஆர்வமும் பெருகி நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்த்தது எனலாம்.

ஜல்லிக்கட்டு

பண்டையத் தமிழரின் வீரவிளையாட்டில் ஜல்லிக்கட்டும் ஒன்று. இதை சங்க காலத்தில் 'ஏறுதழுவல்' என்பர். அடக்கமுடியாத காளைகளை அடக்கிப் பரிசாகப் பெண்களை மணப்பர் பண்டைத் தமிழர்கள். இவ்விழாவே தற்போதும் காணும் பொங்கலன்று தமிழகத்தில் ஜல்லிக்கட்டாக நடைபெறுகிறது.

இந்திர விழா

மருத நிலக்கடவுள் இந்திரன். இந்திரனை வழிபட்ட மக்கள், இந்திரன் கேளிக்கைகளில் மகிழ்ந்திருப்பதைப் போலவே தாங்களும், மகிழ்ந்திருக்க விரும்பி, வசந்த காலத்தின் – முழு நிலா நாளை இந்திர விழாவாகக் கொண்டாடி மகிழ்வர். இந்நாளில் பொருள் படைத்தோர், உணவும், பொருளும் அளித்து மகிழ்வர். பல மேடைகளில் இசையும், கூத்தும் நடைபெறும். இவ்விழா சங்ககாலத்தில் சிறந்திருந்தது என்பதை சிலப்பதிகாரம் வாயிலாக அறிகிறோம்.

பிற கொடைகள்

- **திருக்குறள்:** உலகப்பொதுமறையாம் திருக்குறள் தமிழர்களின் கொடையாகும்.
- **மருத்துவம்:** சித்த மருத்துவம் என்னும் மூலிகை மருத்துவத்தை உலகிற்கு வழங்கியவர்கள் தமிழர்கள்.
- **இசை:** தமிழிசை தமிழர்களின் பண்பட்ட உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- **கப்பல் கட்டுமானம்:** பன்னெடுங்காலத்திற்கு முன்னரே கப்பல் கட்டுமானத்தையும், தொழில் நுட்பத்தையும் அறிந்திருந்தனர்.
- **விருந்தோம்பல்:** பழந்தமிழர் விருந்தினரை வரவேற்று உபசரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.
- **நட்பு:** பழந்தமிழ் நட்பினை உயிரினும் மேலானதாய் மதித்துப் போற்றினர். உணர்ச்சியொத்து பழகுதலே நட்பு என்றனர்.
- **காதல்:** தமிழர் காதல் என்னும் சொல்லை அன்பு செலுத்துதல் என்ற நிலைகளில் பயன்படுத்தினர்.
- **வீரம்:** பண்டைத் தமிழரின் வாழ்வு முறையே, அவர்களது வீரம் செறிந்த வாழ்வு முறை எனலாம்.
- **மானம்:** "மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்" என்று தமிழர்கள் மானத்தை உயிரினும் மேலானதாக போற்றினர்.
- **கற்பு:** கடவுள் நெறிக்கு மேலானதாக பெண்கள் கற்பு நெறியில் வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றனர். இக்கற்புடைமையே தமிழரின் உயரிய ஒழுக்க நெறியாகும்.
- **பரதம்:** தமிழ்நாட்டின் மிகத் தொன்மையான கலை பரத நாட்டியமாகும். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தற்போதும் சிறப்புற்று விளங்குகிறது. நாட்டிய கலைஞரின் முகபாவனையில் நவரசங்களின் வெளிப் பாட்டைக் கொண்டுவருவதைக் காணலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

ஹஸ்தம்

பரத நாட்டியத்தில் ஒரு முக்கிய கூறான கை அசைவுகளை சமஸ்கிருதத்தில் ஹஸ்தம் என அழைப்பர். கை என்பதன் சமஸ்கிருத சொல்லே ஹஸ்தம் எனப்படுகிறது. இதை தமிழில் முத்திரை என்பர். பரத நாட்டியத்தில் அடவு, அபிநயம் இரண்டிற்கும் முக்கியமானது முத்திரைகளாகும். கைவிரல்களின் பல்வேறு நிலைகளாலும் அசைவுகளினாலும் பொருள் படவும், அழகிற்காகவும் அபிநயத்தையே கைமுத்திரை அல்லது ஹஸ்தம் எனலாம். பரதத்தில் அபிநயத்திற்காக பயன்படும் கை அசைவுகளை ஒற்றைக்கை (இணையாக்கை) இரட்டைக்கை (இணைந்தகை) என இரண்டாக பயன்படுத்துகின்றனர். இவைத் தவிர அபூர்வ முத்திரைகளும் உண்டு.

XI Ethics_Lesson 1 Folder.indd 15 13-12-2021 10:38:44

www.tnschoolbooks.in

- **மண்டபங்கள்:** நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், இசைத்தூண்கள் போன்றவை தமிழர்களின் கொடையாகும்.

இவ்வாறு பண்டையத் தமிழர்கள், இந்தியப் பெருநாட்டிற்கு வழங்கிய அளவற்ற பண்பாட்டுக் கொடையை அறிய முடிகிறது.

நிறைவுரை

சங்க இலக்கியங்கள் அகவாழ்க்கையை அன்பின் ஐந்திணையாகப் பகுத்துக் காண்கின்றன. தமிழரின் வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் தமிழர் வாழ்வியலின் ஆட்சிமுறை, வணிகச் சிறப்பு, சமய நம்பிக்கை, தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றை விரிவாகக் கூறும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.

வெளிநாட்டவர்களின் குறிப்புகளிலிருந்து தமிழர்கள், மேலை நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பல சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய தனிமனித வாழ்வியல் நெறிகள் பகுத்துக் கூறப்பட்டுள்ளன. தமிழரின் விருந்தோம்பல் பண்பையும் கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மையையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளமையை அறிய முடிகிறது.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. 'பண்பாடு' என்ற சொல்லைத் தமிழில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் --------

அ) இளங்கோவடிகள் ஆ) டி.கே. சிதம்பரநாதனார்
இ) தொல்காப்பியர் ஈ) வ.உ.சிதம்பரனார்

2. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணையைக் கண்டறிக.

நிலம்	**–**	**சிறுபொழுது**
அ) குறிஞ்சி	-	யாமம்
ஆ) முல்லை	-	மாலை
இ) மருதம்	-	வைகறை
ஈ) பாலை	-	எற்பாடு

3. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) பாரி	-	முல்லைக்குத் தேர் ஈந்தவர்
ஆ) பேகன்	-	ஔவைக்கு நெல்லிக்கனி அளித்தவர்
இ) ஆய் அண்டிரன்	-	மயிலுக்குப் போர்வை தந்தவர்
ஈ) அதியமான்	-	நீல நாகத்தின் ஆடையை இறைவனுக்கு அணிவித்தவர்

4. பொருத்துக

அ) தொண்டி	- 1. முஸிறிஸ்
ஆ) முசிறி	- 2. கொமாரி
இ) பொற்காடு	- 3. திண்டிஸ்
ஈ) குமரி	- 4. பகரி

XI Ethics_Lesson 1 Folder.indd 16 13-12-2021 10:38:44

அ) அ-3 ஆ-2 இ-1 ஈ-4 ஆ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2
இ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3 ஈ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1

5. கி.மு.(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்க மருத்துவர்
அ) ஜி.யு. போப் ஆ) ஸ்டிராபோ
இ) அகஸ்டின் ஈ) ஹிப்பாகிரேட்டஸ்

6. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்'- இப்பாடலடி இடம்பெற்றுள்ள நூல் -----
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) அகநானூறு

7. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
கூற்று: ''உலகம் என்பது, உயர்ந்தோர் மேற்றே'' எனத் தொல்காப்பியம் கூறுகிறது.
காரணம்: நல்ல வழிமுறைகளைப் பின்பற்றிப் பண்பாட்டில் சிறந்து விளங்குபவர்களே உயர்ந்தவர்கள்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

8. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை
அ) 5 ஆ) 7 இ) 9 ஈ)10

9. பொன், செம்பு ஆகிய உலோகங்கள் மீது பொறிக்கப்படுகின்ற எழுத்துகள் --------------
அ) ஓலைச்சுவடிகள் ஆ) பட்டயங்கள் இ) செப்பேடுகள் ஈ) சாசனங்கள்

10. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
1) தொல்காப்பியம் கூறும் புறத்திணைகளின் எண்ணிக்கை பன்னிரண்டு.
2) புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை.
3) மன்னனின் வீரம், கொடை, புகழ் முதலியவற்றைச் சிறப்பித்துப்பாடுவது வாகைத்திணை
4) பொருந்தாக் காதலைப் பெருந்திணை என்று கூறுவர்.
அ) 2, 4 சரி ஆ) 1, 3சரி இ) 2, 3சரி ஈ) அனைத்தும் சரி

11. சோழர்காலக் கிராம ஆட்சிமுறையைப் பற்றி அறிய உதவும் கல்வெட்டு
அ) மண்டகப்பட்டு ஆ) தளவானூர் இ) மாமண்டூர் ஈ) உத்திரமேரூர்

குறுவினா

1. பண்பாட்டை வெளிப்படுத்தும் கூறுகள் யாவை?
2. அன்பின் ஐந்திணை – குறிப்பு வரைக.
3. தொல்பொருள் சான்றுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
4. பழந்தமிழகத்தின் நிலவியல் கூறுகள் யாவை?
5. புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைகள் யாவை?
6. கல்வெட்டு என்றால் என்ன?
7. பட்டயங்கள் – குறிப்பு வரைக.
8. அகத்திணைகள் என்றால் என்ன?
9. இலக்கியங்களில் காணப்படும் கூத்து வகைகள் யாவை?

XI Ethics_Lesson 1 Folder.indd 17 13-12-2021 10:38:44

சிறுவினா

1. சிலப்பதிகாரம் எவ்வாறு வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது?
2. பண்பாடு சொற்பொருள் விளக்கம் தருக.
3. பண்டைய தமிழரின் வணிகத்தை அறிய உதவும் சான்றுகள் யாவை?
4. தமிழகம் எந்தெந்த நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்தது?
5. கடையெழு வள்ளல்கள் யாவர்?
6. சங்ககால மன்னர்களின் மாண்புகளாகக் கருதப்படுவன யாவை?
7. வள்ளன்மை – குறிப்புவரைக.

நெடுவினா

1. பண்டைய தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பினை இலக்கியச் சான்றுகளின் வழி விளக்குக.
2. தமிழகப் பண்பாட்டினை அறிய வெளிநாட்டவரின் குறிப்புகள் எங்ஙனம் உதவுகின்றன என்பதை விளக்குக.
3. தமிழரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குக.
4. தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடி கல்வெட்டுகளும் பட்டயங்களும் என்பதை நிறுவுக.
5. முச்சங்கங்கள் பற்றி விவரிக்க.
6. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் கொடைகள் யாவை?

XI Ethics_Lesson 1 Folder.indd 18 13-12-2021 10:38:44

இணையச்செயல்பாடு

தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு அறிவோமா !

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- திரையின் இடப்பக்கத்தில் பண்பாடு ஒரு விளக்கம், மொழியும் பண்பாடும், பண்பாட்டு வரலாற்றுச் சான்றுகள், தமிழர் பண்பாட்டு அடிப்படைகள் போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தேவையானதைத் தேர்வு செய்து அதன் விளக்கங்களை அறிக.

  எடுத்துக்காட்டாக, தமிழர் பண்பாட்டு அடிப்படைகள் என்பதைத் தேர்வு செய்து, கீழ்ப்பகுதியில் உள்ள பாடஅமைப்பைச் சொடுக்கியதும் தமிழரின் புகழ், வீரம், விருந்தோம்பல் போன்றவை தோன்றும். அவற்றை அறிந்துகொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :




தமிழ்ப் பண்பாடு இணையப்பக்கத்தின் உரலி

http://www.tamilvu.org/ta/courses-degree-c031-c0311-html-c03114l5-17073#451

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இணையச்செயல்பாடு

தொல்பொருள் சான்றுகள்

கல்லில் புதைந்திருக்கும்
வரலாற்றைக் கண்டறிவோமா!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamildigitallibrary என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- பழங்கால வட்டெழுத்து முறைகளும் அவை இடம்பெற்றுள்ள கல்வெட்டுகளும் திரையில் தோன்றும்.
- கல்வெட்டு உள்ள இடங்களைச் சொடுக்கி, அவற்றின் வரலாற்றைத் தெரிந்து கொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :





தொல்பொருள் சான்றுகள் இணையப்பக்கத்தின் உரலி

http://tamildigitallibrary.in/inscriptions-listing?id=jZY9lup2kZl6TuXGlZQdjZh8&cat_id=jZY9lup2kZl6TuXGlZQdjZp1

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

XI Ethics_Lesson 1 Folder.indd 20 13-12-2021 10:38:47

அலகு
2

சிந்துவெளி நாகரிகம்

B2RUI

கற்றல் நோக்கங்கள்

- சிந்துவெளி மற்றும் ஹரப்பா நாகரிகங்கள் பற்றி அறிதல்.
- சிந்துவெளி நாகரிகத்தின் சமயம் மற்றும் வழிபாட்டு முறையைத் தெரிந்து கொள்ளுதல்.
- சிந்துவெளி மக்களின் வாழ்க்கை முறையினை அறிந்துகொள்ளுதல்
- தமிழர் பண்பாட்டு கூறுகள் சிந்துவெளி மக்களால் பின்பற்றப்பட்டுள்ளதைப் புரிந்துகொள்ளுதல்.
- தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் இடையே உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

தற்கால மனித சமூகம், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, மிக உயரிய வாழ்க்கை நிலையை அடைந்திருக்கிறது. இச்சமூகம் கடந்துவந்த பல்வேறு காலச் சூழல்களை அறிந்துகொள்ள, தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. அவ்வகையில் சிந்துவெளிப் பகுதியின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு முடிவுகள், சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன.

இந்நாகரிகம், உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாகரிக நகர அமைப்பு, கட்டடக்கலை, சமூகம், சமயம், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைப் பல அகழாய்வு சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் தோன்றிய பழைமையான நாகரிகம், 'சிந்துவெளி நாகரிகம்'. இந்நாகரிகம், சிந்துநதிக்கரையில் செழித்து வளர்ந்த 'நகர நாகரிகம்' ஆகும். இது, சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தமையால் 'சிந்துவெளி நாகரிகம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு வாழ்ந்தவர்கள் இந்தியாவின் பழமையான குடிமக்களே என்ற கருத்தொற்றுமை நிலவுகிறது. சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமையான இந்நகர நாகரிகம், முதன்முதலில் 1921 இல் கண்டறியப்பட்டது. பழைய பஞ்சாபின் மாண்ட்கொமரி மாவட்டத்தில் (பாகிஸ்தான்) ராவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட (1920) தொல்பொருள்சின்னம் 'ஹரப்பா' எனப்படுவதாகும். 1922 ஆம் ஆண்டு, சிந்து மாகாணத்தில் (பாகிஸ்தான்) லர்க்கானா மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இச்சின்னத்தை 'மொகஞ்சதாரோ' என்பர்.

சர் ஜான் மார்ஷல்

இந்த அகழ்வாய்வினை மேற்கொண்ட தொல்லியலாளர் 'சர் ஜான் மார்ஷல்'. இவர் தொல்பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய திராவிட நாகரிகத்துடன் சிந்துவெளி நாகரிகத்தை ஒப்பிடுகிறார். இவரின் கூற்றுப்படி, இந்த நாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்டதாக உள்ளது எனவும், இதன் காலம் கி.மு. (பொ.ஆ.மு.) 3250 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 2750 வரை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

லோத்தல் துறைமுகம்

மேலும் சாகுந்தாரோ, கோட்டிஜி, லோத்தல், காளிபங்கன் போன்ற இடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழாய்வுகள், தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமிடையே தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் மிகப்பழைமையான நகர நாகரிகம் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

சான்றுகள்

மக்கள் பயன்படுத்திய முத்திரைகள், மட்பாண்டங்கள், நீர் அருந்தும் குவளைகள், மோதிரங்கள், சுடுமண் பொம்மைகள், மணிகள், உலோக வளையல்கள், இரத்தினக்கற்கள் மற்றும் கட்டடச் சிதைவுகள் போன்றவை சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவை அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினை உலகிற்கு அறிவிக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.



அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள ஆலூர், ஆதூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல், தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற

XI Ethics_Lesson 2 Folder.indd 22 13-12-2021 10:40:01

பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

குடிமக்கள்

திராவிடர்கள், மத்தியத் தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் சிந்துவெளிப்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், இந்நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் யார் என்பது இன்னும் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இவர்கள் திராவிடர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர். டி. பானர்ஜீ, ஹீராசு பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும். மேலும், சிந்துவெளியில் பேசப்பட்டு வந்த மொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

திராவிடர்கள் யார்?

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள்(கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திராவிட தேசம்' என்றும், தமிழ் மன்னர்களை 'திரமிள ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே 'தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

உங்களுக்குத் தெரியுமா?

கீழடி தொல்லியல் களம் என்பது, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும். இந்த அகழாய்வு மையம், தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12கி.மீ. தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

நகர அமைப்பும் கட்டடங்களும்

சிந்துவெளியில் மையஅரசு இருந்தமைக்கான சான்றுகள் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளன. இதற்குப் பல தூண்களைத் தாங்கும் மன்றம், பொதுக்கூடம் முதலியவை முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இங்கு

XI Ethics_Lesson 2 Folder.indd 23 13-12-2021 10:40:01

வாழ்ந்த மக்கள், வணிகத்தில் சிறந்து விளங்கினர். மேலும், இவர்கள் பெரும்பொருள் சேர்த்து மாட மாளிகைகளில் வாழ்ந்தனர்.

நகர அமைப்பு

நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும், சுகாதார வசதி கொண்டனவாகவும் அமைக்கப்பட்டிருந்தன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன. பெரிய தெருக்கள் 33 அடி அகலமும், சிறிய தெருக்கள் 9 அடிமுதல் 12 அடிவரை அகலம் கொண்டதாகவும் இருந்தன. பெரிய தெருக்களில் மக்கள் நடந்துசெல்லும் நடைபாதையும் இருந்தது. மூன்று வண்டிகள் ஒரே வரிசையில் செல்லும்வகையில் பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அனைத்து வீடுகளிலும் கிணறுகளும், குளியலறைகளும் இருந்தன. அக்குளியலறைகள், கழிவுநீர் செல்வதற்கு ஏற்ற வகையில் தெருவின் அருகிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்க்கும்போது, பாபிலோனிய நகரங்களை விஞ்சிய சிறந்த நகரமைப்பைச் சிந்துவெளி மக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

கட்டடக்கலை

சிந்துவெளியில் ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றின் உள்ளே மன்னரின் மாளிகைகளும், பெரிய நீராடும் குளங்களும், நெற்களஞ்சியங்களும் மேடான சாலைகளும் இருந்தன. மேற்குத் திசையில் மேடான நிலத்தில் கோட்டையும், கிழக்கே குடியிருப்புப் பகுதியும் அமைந்திருந்தன.

கட்டடக்கலை

ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்டசெங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன. கிணற்றுச்சுவர், சாக்கடைச்சுவர் போன்ற வளைந்த சுவர்களைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களில், செங்கற்களை இணைப்பதற்கு ஒரு வகையான சாந்தைப் பயன்படுத்தி உள்ளனர். பண்டைய தமிழ்மக்கள் பயன்படுத்திய செங்கற்களின் தன்மையும், அளவும் சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கற்களோடு ஒத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நீச்சல் குளம்

சிந்துவெளியில் கிடைத்துள்ள கட்டடங்களில் தலைசிறந்தது, மொகஞ்சதாரோவிலுள்ள ‘பொதுக்குளியல் குளமாகும்’. இக்குளத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், புதிய நீரை உள்ளே கொண்டுவரவும், செங்கற்களால் கட்டப்பட்ட நீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளத்தின் தரைப்பகுதி நீரை உறிஞ்சாமல் இருப்பதற்காக, ‘நீலக்கீல்’ (Bitumen) என்ற பசையால் பூசப்பட்டிருந்தது. மக்கள், குளித்தபின்பு உடையை மாற்றிக்கொள்வதற்குக் குளத்தின் மேல் ஓரங்களில் பல அறைகள் இருந்தன.

XI Ethics_Lesson 2 Folder.indd 24 13-12-2021 10:40:02

நீச்சல் குளம்

குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. நீச்சல் குளத்திற்குள் சென்றுவர நுழைவாயில்கள் இருந்தன. நீச்சல் குளத்தின் தென்மேற்கு மூலையில் நீராவிப் பயன்பாட்டிற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

தானியக்களஞ்சியம்

சிந்துவெளி மக்களின் முக்கியத்தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் எதிர்காலத் தேவையை முன்னிட்டு உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்திருந்தனர். இதற்கு ஹரப்பாவில் இருக்கும் தானியக்களஞ்சியமே சான்றாகும். இது 168 அடி நீளமும், 135 அடி அகலமும் உடையது. இதன் சுவர்கள் 52 அடி உயரமும், 9 அடி கனமும் உடையவை. இவை இரண்டு வரிசைகளாகக் கட்டப்பட்டு இருந்தன. இவ்விரண்டு வரிசைகளுக்கிடையே உள்ள தூரம் 23 அடியாகும். இவ்விரு நெடுஞ்சுவர்களுள் ஒவ்வொரு வரிசையிலும் ஆறு மண்டபங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டபத்திலும் மூன்று பெருஞ்சுவர்கள் எழுப்பப்பட்டன. அதில் நான்கு அறைகள் இருந்தன. இம்மண்டபத்தின் தரைப்பகுதி மரப்பலகையால் ஆனது. பல அறைகள் கொண்ட இத்தானியக்களஞ்சியத்தில் உணவு தானியங்கள் மட்டுமே சேமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தானியக்களஞ்சியம்

சமுதாய நிலை

சிந்துவெளியில் பல்வேறு தொழில் செய்வோர் இருந்தனர். அவர்களுள், கட்டடம் கட்டுவோர், நெசவாளர், சிற்பி, ஓவியர், தட்டார், தச்சர் முதலிய கைவினைஞர்கள் இருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வீட்டு வேலைக்காரர்கள், கூடை முடைவோர், விவசாயம் செய்வோர், மீன் பிடிப்போர் இங்கு வாழ்ந்துள்ளனர். மேலும், சிந்துவெளி மக்கள் விவசாயம் மற்றும் வாணிகம் செய்து வசதியுடன் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

பெண்களின் நிலை

சிந்துவெளியில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்பட்டனர். இவர்கள், அழகு சாதனப்பொருள்களைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக வெண்கலத்தால் ஆன முகம் பார்க்கும் கண்ணாடிகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் போன்ற பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன. மேலும், இப்பெண்கள் காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, கழுத்துமணிகள் போன்ற பல அணிகலன்களையும் அணிந்திருந்தனர்.

அணிகலன்கள்

இவையனைத்தும் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களால் செய்யப்பட்டிருந்தன. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மேற்கூறிய அணிகலன்களைத் தொன்றுதொட்டுத் தமிழகப் பெண்கள் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவை, சிந்துவெளி மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

உணவு வகைகள்

சிந்துவெளி மக்கள் சிறந்த நகர வாழ்க்கையை மேற்கொண்டனர். நகரத்தில் அரசனும், அதிகாரிகளும், பலவகைத் தொழிலாளர்களும், கலைஞர்களும் வாழ்ந்தனர். கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம், பால், இறைச்சி வகைகளை மக்கள் உண்டனர். நீர்வளம் மிக்க சிந்துவெளியில் தானிய வகைகளும், பட்டாணி முதலிய பருப்பு வகைகளும், முலாம்பழம் முதலிய பழ வகைகளும், ஆடைக்கேற்ற பருத்தி வகைகளும் பயிராயின. ஆடு, மாடு, பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சியும், ஆமை, மீன் முதலியனவும் அவர்களுக்குக் கிடைத்தன. எஞ்சிய உணவுத் தானியங்களையும், இறைச்சி வகைகளையும் பதப்படுத்தி வைத்து அவர்கள் உண்டனர். இங்குக் கிடைத்துள்ள மாவு அரைக்கும் இயந்திரங்கள் அம்மி, ஆட்டுக்கல், உரல், எண்ணெய்ச் சட்டி, இட்டிலிச் சட்டி மற்றும் பிற பொருள்களையும் கொண்டு இவர்களின் உணவு வகைகளை நம்மால் அறிய முடிகிறது. இவர்கள் மரப்பலகை, மண்சிப்பி, வெண்கலக்கிண்ணி போன்றவற்றை உண்கலங்களாகப் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது.

உடைகள்

சிந்துவெளி மக்கள் பருத்தி, கம்பளி, நார்ப்பட்டு ஆகியவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். மேலாடை, கீழாடை என முழு ஆடைகளையே அணிந்தனர். பருத்தி ஆடைகள் பெரும்பாலும் வண்ணங்களுடனும் பூ வேலைப்பாடுகளுடனும் இருந்தன. கம்பளி ஆடைகள் தடித்திருந்தன. நார்ப்பட்டாடை உடலோடு ஒட்டி, ஒளி ஊடுருவுமாறு இருந்தது. கழுத்துப் பட்டையுடைய சட்டைகளையும், பொத்தான் தைத்த சட்டைகளையும் இவர்கள் அணிந்திருந்தனர்.

ஆண், பெண் இருபாலரும் மங்கோலியரைப் போல் தலையில் முண்டாசுக் கட்டிக்கொண்டனர். வட்டுடை அணிந்தவருமுண்டு. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஆண், பெண் உருவங்களைக்கொண்டே நாம் அவர்கள் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைப்பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

நகர நாகரிகம்

சிந்துவெளி நாகரிகத்தில் நகர வாழ்க்கையின் பல்வேறு கூறுகள் பொதிந்துள்ளன. ஷில்டே என்ற அறிஞர் நகர வாழ்க்கையின் கூறுகளாக, அதிக மக்கள் தொகை, பல்வேறு தொழில் புரிவோர், வணிகர்கள், பணியாளர்கள், குடியிருப்புகள், பொதுக்கட்டடங்கள், எழுத்துக்குறியீடுகள், கலை வடிவங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார். நகரில் வணிகர்கள் பெருவாரியாக வாழ்ந்தனர். நகரங்களுக்கு இடையேயான உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்நகரங்கள் பல தொழில்களின் மையங்களாக இருந்தமையால், ஏற்றுமதிக்கான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இங்குப் பல நகரங்களில், நகராட்சிமுறை பயன்பாட்டில் இருந்தது. இதிலிருந்து, மையஅரசு இருந்திருக்க வேண்டும் எனத் தெளிவாகிறது. மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில், சிந்துவெளி நாகரிகம் 'நகர நாகரிகம்' என்பதும் புலனாகிறது.

XI Ethics_Lesson 2 Folder.indd 26 13-12-2021 10:40:06

பொழுதுபோக்கு

மொகஞ்சதாரோவில் கிடைக்கப் பெற்ற விளையாட்டுப் பொருள்களில், கோலிகளே அதிகமாகக் கிடைத்துள்ளன. பகடைக்காய், சொக்கட்டான், சதுரங்கம் ஆடுவது அவர்களுடைய சாதாரண பொழுதுபோக்காகும். சதுரங்க அட்டை மரத்தாலும், சதுரங்கக்காய்கள் களிமண்ணாலும் செய்யப்பட்டு இருந்தன. சிறுவர்கள், களிமண்ணில் பொம்மைகள் செய்து விளையாடினர்.

சுடுமண் விளையாட்டு பொம்மைகள்

இத்தகைய விளையாட்டுகள், தொன்றுதொட்டுத் தமிழகத்திலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆகவே, சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறியலாம். மேலும், சிந்துவெளி மக்கள் இசையிலும், நாட்டியத்திலும் அதிக ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இவர்கள் காளைச்சண்டை, கோழிச்சண்டை, வேட்டையாடுதல், பறவை வளர்ப்பு போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். கோழிச்சண்டை விளையாட்டு, தமிழகப் பண்பாட்டிலிருந்து சிந்துவெளி மக்களின் பண்பாட்டிற்குப் பரவியுள்ளதை காணலாம்.

மருத்துவம்

சிந்துவெளி மக்கள் கண், காது, தொண்டை, தோல் தொடர்பான நோய்களுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைச் செய்வதற்குக் கட்டில் (cuttle) என்ற ஒரு வகையான மீனின் எலும்புகளைப் பயன்படுத்தினர். மான், காண்டாமிருகத்தின் எலும்புகள், பவளங்கள், வேப்பந்தழைகள் போன்றவை மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தமிழகத்தில், இன்றும் மருத்துவத்திற்கு வேப்பந்தழை பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

இறந்த உடலை அடக்கம் செய்தல்

சிந்துவெளி மக்கள் இறந்த உடலை அடக்கம் செய்வதில் மூன்று வகையான வழிமுறைகளைப் பின்பற்றினர். முதலாவதாக, முழு உடலையும் புதைப்பது. இரண்டாவதாக, எரிந்த உடலின் எஞ்சிய பாகங்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் சேர்த்து தாழிகளில் வைத்துப் புதைப்பது. இத்தாழிகள், வீடுகளிலோ வீட்டின் அருகிலோ புதைக்கப்பட்டன. இறுதியாக, இறந்த உடல்களை ஊருக்குப் புறத்தே திறந்த வெளியில் பறவைகளும், விலங்குகளும் உண்ணும்படி வைத்தனர். எஞ்சிய எலும்புகளை மட்டும் எடுத்துப் பின்னர், மண்தாழிகளில் வைத்து அவற்றுடன் வேறு குடுவைகளில் இறந்தவர் பயன்படுத்திய சில பொருள்களையும் சேர்த்துப் புதைத்தனர். இறந்த உடலை புதைக்கும்போது, அவர்களுக்குப் பிடித்த உணவுப்பொருள்களை வைத்து புதைப்பதும் வழக்கத்தில் இருந்தது. இப்பழக்கம், தமிழகத்தின் பெரும்பகுதிகளில் வழக்கத்தில் இருந்தது என்பது, பல ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற தாழிகள் அத்திரப்பாக்கம், அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், திருகாம்புலியூர், தாமிரபரணி ஆற்றங்கரை போன்ற பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்தின் வடக்கிலும், தக்காணத்தின் தெற்கிலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவை, தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி மக்களுக்கும் உள்ள தொடர்பினை உறுதி செய்கின்றன.

இறந்தவர்களை வடக்கு தெற்காகப் புதைக்கும் வழக்கம் சிந்துவெளிக்கும் பண்டைய தமிழகத்திற்கும் பொதுவான நடைமுறையாக இருந்தது. உருண்டை வடிவம் கொண்ட (Globular) ஈமத்தாழிகள், சிந்துவெளியிலும் தமிழகத்திலும் பயன்படுத்தப்பட்டன. இன அடிப்படையிலும் தொழில்நுட்ப அடிப்படையிலும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழகப் பண்பாட்டிற்கும் இருந்த தொடர்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

XI Ethics_Lesson 2 Folder.indd 27 13-12-2021 10:40:06

பொருளாதார வாழ்க்கை முறை

சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் தோன்றியதால், அங்குள்ள மக்கள் நீர்வழிப்பயணம் மேற்கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டனர். இவர்கள் உள்நாட்டில் காஷ்மீர், மைசூர், நீலகிரிமலை, கிழக்கு இந்தியா, மேற்கு ஆசியா, மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் வணிகம் செய்தனர். மேலும், இவர்கள் சுமேரியா, எகிப்து போன்ற வெளிநாடுகளிலும் வணிகத்தில் ஈடுபட்டுப் பொருளீட்டிச் சிறப்பாக வாழ்ந்தனர் என அறிய முடிகிறது.

விவசாயம்

சிந்துவெளி மக்களின் முதன்மைத் தொழிலாக வேளாண்மை இருந்தது. இவர்கள் கோதுமை, பார்லி, நெல், எள், காய்கறிகள் போன்ற பயிர்களைப் பயிரிட்டனர். இவர்களுக்கு உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் பழக்கமும் இருந்தது. அதற்குச் சிறந்த உதாரணமாக 'தானியக்களஞ்சியம்' திகழ்கிறது. அகழ்வாராய்ச்சியின் போது சிதைந்து கிடந்த பல கால்வாய்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வசதியும் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது. இவர்கள், நிலத்தை இரு வழியாக உழுததற்கான அடையாளங்கள் காளிபங்கனில் காணப்படுகின்றன. வேளாண்மைக்குத் திமிலுடன் இருக்கும் காளைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஒட்டகங்களும் எருமைகளும், வேளாண்மைக்குப் பயன்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான நீர், சிந்துநதியிலிருந்து பெறப்பட்டது. அகழாய்வின்போது, கண்டெடுக்கப்பட்ட கலப்பைகளும், அரிவாள்களும் சிந்துவெளி மக்கள் வேளாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதை வெளிப்படுத்துகிறது.

வீட்டுவிலங்குகள்

சிந்துவெளி மக்களிடையே கால்நடை வளர்ப்பு மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அவர்கள் தமது வீடுகளில் பசு, செம்மறியாடு, வெள்ளாடு, எருமை, எருது, நாய், பன்றி, ஒட்டகம் போன்ற விலங்குகளை வளர்த்து வந்தனர். இதனால், இவர்களின் பொருளாதாரம் மேம்பட்டது. வீட்டைப் பாதுகாக்கவும், வேட்டைக்காகவும் நாயை பயன்படுத்தினர். மேலும் பூனை, மான், மயில், வாத்து, கிளி போன்றவற்றையும் வளர்த்தனர். ஆனால், இவர்கள் குதிரையை அறிந்திருந்தார்களா என்பதுபற்றி இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை.

வேட்டையாடுதல்

சிந்துவெளி மக்கள் பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தேவைக்காகவும் வேட்டையாடுவதில் ஈடுபட்டனர். அவர்கள் யானை, காண்டாமிருகம், கரடி, மான், சிறுத்தை போன்ற விலங்குகளை வேட்டையாடியதாகச் சான்றுகள் மூலம் அறிகிறோம்.

மேற்கண்ட விலங்குகளின் உருவங்கள் பொறித்த பல முத்திரைகள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள், விலங்குகளின் தோல், முடி, எலும்பு ஆகியவற்றை விற்று வணிகம் செய்தனர். வேட்டைக்குக் கோடரி, ஈட்டி, குத்துவாள், மழு, தண்டு, கவண், அம்பு, வில், போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர். இவை, செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்டிருந்தன.

உலோகங்களும் தாதுப் பொருள்களும்

சிந்துவெளி மக்கள் தங்கம், பித்தளை, வெள்ளி போன்ற உலோகங்களைப் பயன்படுத்தினர். பெரும்பாலான உலோகப் பொருள்கள் செம்பு மற்றும் வெண்கலத்தால் செய்யப்பட்டவை என்பது அகழாய்வின் மூலம் தெரிகிறது. போர்க்கருவிகள் செய்வது, இவர்களின் முதன்மைத்தொழிலாகும்.

சிந்துவெளி மக்களின் கருவிகள்

கோடரி, ஈட்டி, வில், அம்பு, கதாயுதம், கவண், கத்தி போன்ற ஆயுதங்களைப் போரில் பயன்படுத்தினர். ஈட்டிமுனை மிகக்கூர்மையானதாகவும், அகலமானதாகவும் இருந்தது. சில வகையான கத்திகள் இருபக்கமும் நன்கு தீட்டப்பட்டிருந்தன. வீடுகளுக்குத் தேவையான பாத்திரங்கள் மண், கற்கள், தந்தம், செம்பு, பித்தளை ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தன. ஆனாலும், இவர்கள் இரும்பின் பயனை அறிந்திருக்கவில்லை.

வணிகம்

பொதுவாக ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் வணிக மையங்களாக இருந்தன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திற்கு நிலவழி மற்றும் நீர்வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தினர். வணிகம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. சிந்துவெளி மக்கள் வணிகத்திற்காக மற்ற இடங்களுக்குச் சென்று வர மாட்டுவண்டியை அதிகமாகப் பயன்படுத்தினர்.

தென்பாரசீகம், ஈராக், சுமேரியா, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுடன் தரைவழி வணிகம் செய்யும் பொருட்டு, ஏறத்தாழ 3000-கல் தொலைவுவரை பயணம் மேற்கொண்டதாக அறிய முடிகிறது. தரைவழிப் போக்குவரத்திற்கு எருதுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், நீர்வழிப் போக்குவரத்தும் வழக்கத்திலிருந்தது. அது சிந்துஆற்றின் வழியே நடைபெற்றது. பண்டைய சிந்துவெளி மக்கள் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு, பல நாடுகளுடன் வணிகம் செய்தனர். படகுப் போக்குவரத்தின் மூலம் உள்நாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக புரோச், காம்பே துறைமுகங்கள் வணிகத்தில் சிறப்புற்று இருந்தன என்பதை அறிய முடிகிறது.

அளவீடுகள்

சிந்துவெளி மக்கள் வணிகத்தில் ஒரே சீரான எடைக்கற்களையும் அளவீடுகளையும் பயன்படுத்தினர். 'ஹரப்பா' மக்கள் அளக்கும் கலையை அறிந்திருந்தனர். நீளத்தை அளக்க அடிமுறையைப் பயன்படுத்தினர். அதற்குச் சான்றாக, அளவைக் குறிகள் இடப்பட்ட குச்சிகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் நீளத்தை அளக்க அடி முறையானது தொன்றுதொட்டு வழக்கத்தில் இருப்பதை நாம் அறிய முடிகிறது. இவர்கள் நிலத்தை அளக்க வெண்கல அளவுகோலைப் பயன்படுத்தி உள்ளனர். இதிலிருந்து, சிந்துவெளி மக்கள் அளக்கப் பயன்படுத்திய அளவீட்டு முறைக்கும் தமிழர்கள் பயன்படுத்தும் அளவீட்டு முறைக்கும் தொடர்பு இருப்பதை நாம் அறியலாம்.

சமயம் மற்றும் வழிபாடு

சிந்துவெளி மக்கள், சமய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அங்குக் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், வடிவங்களைக் கொண்டு அவர்களின் சமயத்தைப்பற்றி அறிய முடிகிறது. இவர்கள் இயற்கைப் படைப்பாற்றலின் உருவமாகப் பெண்களைக் கருதி, அவர்களைத் தெய்வமாக வழிபட்டனர்.

தாய்த்தெய்வ வழிபாடு

தாய்த்தெய்வ வழிபாடு, சிந்துவெளி மக்களின் முக்கிய வழிபாடாகும். ஹரப்பாவில் பெண் உருவம் பொறித்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தாய்த்தெய்வ வழிபாடு

இதுவே, பிறகு சக்தி வழிபாடாக மாறியது. இன்றும், தமிழகத்தில் பெண்களைத் தெய்வமாக வழிபடும் மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

XI Ethics_Lesson 2 Folder.indd 29 13-12-2021 10:40:07

(எகா) பார்வதி, காளி போன்ற தெய்வங்கள் தமிழகத்தில் இன்றும் வணங்கப்படுவதைக் காணலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

பண்டைய திராவிட மக்களுள் பெரும் பகுதியினர், தாய்த்தெய்வ உரிமை, தாய் முறை போன்றவற்றைக் கடைப்பிடித்தனர். இவற்றின் காரணமாக திராவிட மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு பெருவழக்காக இருந்தது என சமூகவியல் அறிஞர்கள் கூறுவர்.

பசுபதி வழிபாடு

ஹரப்பாவில் கிடைத்த முத்திரைகளில் அமர்ந்த நிலையிலுள்ள மகாயோகியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று முகங்களை கொண்ட கடவுள், யோக நிலையில் அமர்ந்திருப்பது போலவும், அதனைச்சுற்றி யானை, புலி ஆகியவற்றின் உருவங்கள் வலப்புறமாகவும், காண்டாமிருகம், எருமை ஆகியவற்றின் உருவங்கள் இடப்புறமாகவும் அமைந்துள்ளன.

பசுபதி வழிபாடு

வரலாற்று ஆய்வாளர்கள் கூற்றுப்படி, இது சிவனுக்குரிய “திருமுகம்” (மூன்றுமுகம்), பசுபதி(விலங்குகளின் கடவுள்), யோகேசுவரன் (யோகிகளின் கடவுள்) போன்ற பல்வேறு வடிவங்களை உணர்த்துவதாக இவ்வழிபாடுகள் உள்ளன.

விலங்கு வழிபாடு

சிந்துவெளி மக்கள் விலங்குகளைத் தெய்வமாக வழிபட்டனர். தமிழகப் பண்பாட்டில் பண்டைய காலம் முதல் இன்றுவரை பசு, எருது, புலி, பறவை போன்ற விலங்குகள் சமயச் சின்னங்களாக இருந்து வருவதைக் காணலாம். இது சிந்துவெளி நாகரிகத்திற்கும் திராவிடப் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

நீர் வழிபாடு

ஹரப்பா, மொகஞ்சதாரோ நகர மக்கள் ஆற்றங்கரையின் அருகிலேயே வசித்ததன் காரணமாக, நீரைக் கடவுளாகக் கருதி வழிபட்டனர். இவர்கள், மொகஞ்சதாரோவில் உள்ள பெரிய நீச்சல் குளத்தில் நீராடுதல் என்ற வழக்கம் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இங்கு வாயில் சிறுமீன்களை வைத்துள்ள முதலைகள், ஆமை போன்ற உருவங்கள் ஆறுகளுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ளதை முத்திரைகள் மூலம் காணமுடிகிறது. ஆகவே, சிந்துவெளி மக்கள் ஆற்றுவணக்கம் (அ) ஆற்றுவழிபாடு செய்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தமிழகத்தில் வழிபடுவதற்கு முன் நீராடும் வழக்கம் இருப்பதை இன்றும் காணலாம். மேலும், நீர்நிலைகளைத் தெய்வமாக வணங்குவதும் தமிழர்களிடையே உள்ள பண்பாடாகும்.

மர வழிபாடு

சிந்துவெளி மக்களிடம் மரங்களை வழிபடும் வழக்கமும் இருந்தது என்பதை ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் வாயிலாக அறியலாம். இவற்றில், அரசமரமே முதன்மையாக உள்ளது. மரத்தடியில் மேடை அமைத்தலும் விழாக்கள் நடத்துதலும் வழக்கமாகும். மரங்களை ஆண் கடவுளாகவும், பெண் கடவுளாகவும் கருதி வழிபட்டனர். இன்றும், தமிழகத்தின் வழிபாட்டுத் தலங்களில் வேப்பமரத்தை பெண் கடவுளாகவும், அரசமரத்தை ஆண் கடவுளாகவும் வணங்குவது வழக்கமாகவுள்ளது.

XI Ethics_Lesson 2 Folder.indd 30 13-12-2021 10:40:07

சூரியன் மற்றும் நெருப்பு வழிபாடு

சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் சூரியன், பாம்பு உருவங்கள் காணப்படுகின்றன. ஆகவே, இவர்கள் சூரியனையும் நெருப்பையும் கடவுளாகக் கருதிவழிபட்டனர் எனலாம். இன்றும், தமிழகத்தில் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான திருவண்ணாமலை அக்னித்தலமாகவும்(நெருப்பு), சிவனின் வடிவமாகவும் வணங்கப்படுகிறது. மேலும், சிந்துவெளி மக்களிடையே காணப்படும் பாம்பு வழிபாடு, லிங்க வழிபாடு போன்றவை தமிழகப் பண்பாட்டோடு பொருந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலைகள்

சிந்துவெளி மக்கள் நுண்கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் பயன்படுத்திய முத்திரைகளில் காணப்படும் உருவங்கள், பானைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், சுடுமண் பொம்மைகள், அணிகலன்கள், வெண்கலத்தாலான நடனப்பெண்ணின் உருவம், யோகி சிற்பம் ஆகியவை சிந்துவெளி மக்களின் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.



நடன மாதுவின் சிலை

எழுத்துகள்

சிந்துவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள 'சித்திர எழுத்துகள்' சிந்துவெளி மக்களின் மொழிக்குரிய எழுத்துகளாகும். இந்த எழுத்துகள் இடமிருந்து வலமாக ஒரு வரியும், வலமிருந்து இடமாக மற்றொரு வரியாகவும் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தின் கீழ்வாலை, குளிர்சுனை, புறக்கல், ஆலம்பாடி, செத்தவாரை, நேகனூர்பட்டி ஆகிய இடங்களில் காணப்படும் எழுத்துகள், சிந்துவெளியிலுள்ள எழுத்துகளோடு தொடர்புடைய தொல்தமிழ் எழுத்துகளாகும். வடபிராமி எழுத்துகளும், தென்பிராமி எழுத்துகளும் சிந்துவெளி எழுத்துகளிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

சிந்துவெளி எழுத்துக்கள்

சிந்துவெளி நாகரிக மக்களின் பேச்சு மொழி, எழுத்துக்கள் தொடர்பாக இன்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களுக்கும், திராவிட எழுத்துக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்று ஹீராசு பாதிரியார், ஐராவதம் மகாதேவன், பாலகிருஷ்ணன் போன்ற வரலாற்றாய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தென்பிராமி எழுத்துகள், சிந்துவெளி எழுத்துகளிலிருந்து திராவிடரால் வளர்க்கப்பட்ட நேரான வளர்ச்சியுடைய எழுத்துகள் ஆகும். அவற்றின் ஒருமைப்பாட்டைத் திருநெல்வேலியில் கிடைத்த மட்பாண்டங்கள் மீதுள்ள எழுத்துக்குறிகளையும், நீலகிரியில் உள்ள கல்வெட்டுகளையும் கொண்டு அறியலாம். சிந்துவெளி எழுத்துகளைக் கொண்ட மொழி, திராவிட மொழி என்பதும், தமிழ் ஒரு தென் திராவிட மொழி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



சிந்துவெளி எழுத்துகள்

உங்களுக்குத் தெரியுமா?

உலக மொழிகள் எவற்றிலும் இல்லாத சிறப்பு தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. எழுத்துகளின் ஒலிப்பு முறையான ழ,ன,ள,ற,ண ஆகிய எழுத்துகள் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்றன.

முத்திரைகள்

சிந்துவெளி மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த கலைபடைப்புகளாகத் திகழ்வன முத்திரைகளாகும். அகழ்வாராய்ச்சியில், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை திமிலுடன் இருக்கும் காளை, எருமை, புலி, காண்டாமிருகம், வெள்ளாடு, யானை போன்ற விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகளாகும். பல முத்திரைகள் எழுத்துக்குறியீடுகளைக் கொண்டுள்ளன. ஆகவே, இவை சிந்துவெளி மக்களின் வரலாற்றை அறிய உதவும் இன்றியமையாத சான்றுகளாகத் திகழ்கின்றன.

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு

சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு குறித்தும், அதற்கான சான்றுகள் குறித்தும் வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. இதுசார்ந்த பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய, வளர்ந்த, பண்பட்ட நகர நாகரிகமானது, திடீரென அழிந்திருக்க முடியாது. இருந்தாலும், இது பின்வரும் காரணங்களால் அழிந்திருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர்.

சிந்துவெளி முத்திரைகள்

- சிந்துவெளி நாகரிகம் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம்.
- அங்குக் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் அடிப்படையில் பார்த்தால் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு அழிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.
- வரலாற்று ஆசிரியர் கிருஷ்ணா ரெட்டி என்பாரின் கூற்றுப்படி ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு நகரங்கள் மிகப்பெரிய வணிகத்தலங்களாக இருந்துள்ளன. இங்குப் பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு, நகரங்களை விட்டு மக்கள் வெளியேறி இருக்கலாம்.
- சிந்துநதி தன்போக்கை மாற்றிக் கொண்டதால், கடுமையான வறட்சி ஏற்பட்டு மக்கள் அந்நகரங்களிலிருந்து வெளியேறி இருக்கலாம்.
- மொகஞ்சதரோவில் கிடைத்துள்ள மண்டை ஓடுகளில் காணப்பட்டுள்ள வெட்டுக்

www.tnschoolbooks.in

காயங்களின் அடிப்படையிலும் பெரும்பான்மையினரின் கருத்துப்படி, ஆரியர் படையெடுப்பினால் இந்நாகரிகம் முற்றிலும் அழிந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை

பழைமையும் பெருமையும் வாய்ந்த சிந்துவெளி நாகரிகம், இந்திய பண்பாட்டிற்குப் பின்வரும் கொடைகளை வழங்கியுள்ளது அவையாவன;

- சிந்துவெளி காலத்தில் தோன்றிய நகரங்களின் வடிவமைப்பு மேம்பட்டதாகவும் மற்ற நகர வடிவமைப்பிற்கு முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளது.
- கட்டடக் கலையில் சுட்ட செங்கற்கள், சுண்ணாம்பைப் பயன்படுத்தியதில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர்.
- நகரம் மாசடைவதைத் தடுக்க சுண்ணாம்புக் கால்வாய்கள், நகரின் ஒதுக்குப்புறமாக அமைக்கப்பட்டிருந்தன.
- தூய்மை மற்றும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்பட்டது.
- கவின்கலைகள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன.
- சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழியே தென்னிந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இடங்கள்

- ஹரப்பா – ராவி நதியோரம் மேற்கு வங்காளம் (தற்போதைய பாகிஸ்தான்)
- மொகஞ்சதாரோ – சிந்து நதியோரம் மேற்கு பஞ்சாப் (தற்போதைய பாகிஸ்தான்)
- ரூபார் – சட்லெஜ் நதியோரம், பஞ்சாப்
- லோத்தல் – சட்லெஜ் நதியோரம், குஜராத்
- காலிபங்கன் – காகர் நதி தென் கரையோரம் இராஜஸ்தான்
- சாகுந்தாரோ – சரஸ்வதி நதியோரம், இராஜஸ்தான்
- தோல்வீரா – கபீர் மாவட்டம், குஜராத்
- கோட்டிஜி – சிந்து மாகாணம்
- பனவாலி – ஹரியானா
- சுர்கோட்டா – குஜராத்

நிறைவுரை

சிந்துவெளிப் பகுதியில், தொல்லியலாளர்கள் பலர் ஆய்வு மேற்கொண்டிருந்த போதிலும் சர். ஜான் மார்ஷல் அவர்கள் மேற்கொண்ட அகழாய்வில்தான் இந்நாகரிகம் பற்றிய முழுமையான விவரங்கள் உலகிற்குத் தெரியவந்தன. இந்நாகரிகம் தமிழர்களின் நாகரிகமே என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் உணர முடிகிறது. தற்கால நகர அமைப்பிற்கு, இந்நாகரிகம் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. நீச்சல்குளம், தானியக்களஞ்சியம்,

உங்களுக்குத் தெரியுமா?

லோத்தல்

குஜராத்திலுள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது S.R. ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் '**லோத்தல்**' ஆகும். இவ்விடமானது சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்த துறைமுகமாகும். இது உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எகிப்து, மெசபடோமியா உள்ளிட்ட நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன.

XI Ethics_Lesson 2 Folder.indd 33 13-12-2021 10:40:08

பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சிந்துவெளி மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், இவர்கள் பலநாடுகளுடன் வாணிகத் தொடர்புகொண்டிருந்தமைபெருமைக்குரியதாகும். இவர்கள், இறந்த உடல்களை எவ்வாறு அடக்கம் செய்தார்கள் என்பதையும் சான்றுகளுடன் காண முடிகிறது.

மதிப்பீடு

RCAM2

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. சிந்துவெளி நாகரிகம் குறித்து அகழாய்வு மேற்கொண்ட தொல்லியலாளர்
   அ) டாக்டர். ஸ்மித் ஆ) சர். ஜான்மார்ஷல்
   இ) ஷில்டே ஈ) கே. எம். முன்ஷி

2. சிந்துவெளி மக்கள் தோல்நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்திய பொருள் ------
   அ) கட்டில் என்னும் மீனின் எலும்பு ஆ) மானின் எலும்பு
   இ) காண்டாமிருகத்தின் எலும்பு ஈ) குதிரையின் எலும்பு

3. கங்காதேவி எழுதிய நூலின் பெயர்
   அ) மதுராவிஜயம் ஆ) அர்த்தசாத்திரம் இ) சாகுந்தலம் ஈ) இண்டிகா

4. பொருத்துக
   அ) நீலக்கீல் – 1. ஹரப்பா
   ஆ) கட்டில் – 2. குதிரை
   இ) தானியக்களஞ்சியம் – 3. பசை
   ஈ) அறியாத விலங்கு – 4. மீன்எலும்பு

   அ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1
   இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-1 ஆ-2 இ-4 ஈ-3

5. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
   கூற்று : ஹரப்பா மக்கள் அளக்கும் கருவியை அறிந்திருந்தனர்.
   காரணம் : அளவைக்குறிகள் இடப்பட்ட குச்சிகள் அங்குக் கிடைத்துள்ளன.
   அ) காரணம்சரி , கூற்றுதவறு ஆ) காரணம்தவறு, கூற்றுசரி
   இ) காரணம், கூற்று இரண்டும்சரி ஈ) காரணம், கூற்று இரண்டும்தவறு

6. பசுபதி என்றச் சொல்லில் இருந்து பெறப்படும் பொருள்
   அ) பெண்கடவுள் ஆ) யோகிகளின்கடவுள்
   இ) விலங்குகளின்கடவுள் ஈ) இயற்கைகடவுள்

7. பின்வரும் கூற்றுகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
   1. சித்திர எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டவை.
   2. சித்திர எழுத்துகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டவை.

3. சித்திர எழுத்துகள் மேலிருந்து கீழாக எழுதப்பட்டவை.
4. சித்திர எழுத்துகள் கீழிருந்து மேலாக எழுதப்பட்டவை.

அ) 1ம், 3ம்சரி ஆ) 1ம், 2ம்சரி இ) 1ம், 4ம்சரி ஈ) 3ம், 4ம்சரி

8. சிந்துவெளி நாகரிகம் கண்டுப்பிடிக்கப்பட்ட ஆண்டு
அ) 1924 ஆ) 1930 இ) 1921 ஈ) 1923

9. சிந்துவெளி மக்கள் தரைவழிப் போக்குவரத்திற்கு பயன்படுத்திய விலங்கு
அ) பசு ஆ) குதிரை இ) யானை ஈ) எருது

10. சிந்துவெளி மக்கள் இம்மரத்தைப் முதன்மை தெய்வமாககருதி வழிபட்டனர் ----
அ) அரச மரம் ஆ) வேப்ப மரம் இ) வன்னி மரம் ஈ) ஆல மரம்

குறுவினா

1. சிந்துவெளி மக்கள் திராவிடர்களாகத் தாம் இருக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்த அறிஞர்கள் யாவர்?
2. சிந்துவெளி மக்களின் தரைவழி வணிகம் எந்தெந்த நாடுகளுடன் நடைபெற்றது என்பதைக் கூறுக.
3. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கல்லின் அளவீடு யாது?
4. சிந்துவெளி முத்திரைகளில் இடம்பெற்றுள்ள விலங்குகள் யாவை?
5. சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?
6. சிந்துவெளி மக்களின் அணிகலன்களைக் குறிப்பிடுக.

சிறுவினா

1. சிந்துவெளி மக்களின் பொழுதுபோக்குகள் யாவை?
3. தாய்த் தெய்வவழிபாடு – குறிப்புவரைக.
4. தானியக் களஞ்சியம் – குறிப்புவரைக.
5. தமிழகத்தில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை?
6. சிந்துவெளி மக்களின் வீட்டுவிலங்குகள் யாவை?

நெடுவினா

1. சிந்துவெளி மக்களின் சமுதாய நிலையை விவரிக்க.
2. இந்தியப்பண்பாட்டு வளர்ச்சிக்குச் சிந்துவெளி நாகரிகத்தின் கொடை யாது?
3. சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்களை விளக்குக.

அலகு
3

தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

B5ACT

கற்றல் நோக்கங்கள்

- சங்ககாலம் ஒரு வாழ்வியல் பொற்காலம் என அறிந்து கொள்ளுதல்.
- சங்க இலக்கியங்கள்வழி வாழ்வியல் விழுமியங்களை அறிதல்.
- உலகப் பொதுமறையான திருக்குறள் மூலம் வாழ்வின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழ் இலக்கியங்களின்வழி வாழ்வியலில் பெண்களின் நிலையை அறிதல்.
- தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- இதிகாசங்கள் மற்றும் காப்பியங்களில் கூறப்பட்ட வாழ்வியல் அறநெறிகளைப் புரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

புதிய கற்காலத்தில் பண்பட்ட வாழ்வைத் தொடங்கிய மனித சமுதாயம், நாளடைவில் பல வளர்ச்சிகளைக் கண்டது. இதில், குறிப்பாக மக்களின் நாகரிகமும் பண்பாடும் மேம்பட்டன. இதற்கு அடிப்படையாக, இலக்கியங்களும் அவற்றில் உள்ள விழுமியங்களும் காரணங்களாக அமைந்தன. இவற்றைப் பற்றி அறிவது நமது கடமையாகும். தமிழர்களின் விழுமியங்களான காதல், நட்பு, உதவி, வாய்மை, விருந்தோம்பல், வீரம், கொடை முதலானவை வழியே வெளிப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் இப்பகுதியில் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சியின் ஊற்றுக் கண்களாகத் திருக்குறள், நன்னூல், நாலடியார், ஐம்பெருங்காப்பியங்கள், கம்பராமாயணம் மற்றும் வில்லிபாரதம் முதலான நூல்கள் அமைந்துள்ளன. தமிழர் பண்பாடும் நாகரிகமும் உலகளவில் சிறப்புப் பெற்றமைக்கு இந்நூல்களில் சொல்லப்பட்டுள்ள உயர்வான அறநெறிக் கருத்துகளே காரணங்களாக அமைந்துள்ளன என்பதை இப்பாடத்தில் விரிவாகக் காண்போம்.

மனித நாகரிகத்தின் வளர்ச்சி

நிலையான இருப்பிடமின்றி நாடோடிகளாகத் திரிந்த மனித இனம், தாம் வாழ்ந்த இடத்திற்கு அருகிலேயே விலங்குகளை வளர்த்து, நிலங்களை உழுது, பயிரிடும் வேளாண் சமூகமாக உருமாறியது. வேட்டைச்சமூகமாகத் திகழ்ந்தபோதும், வேளாண் சமூகமாக மாற்றம் பெற்றபோதும் மனித இனம் குடும்பமாகவும் சமூகமாகவும் சேர்ந்து வாழத்தொடங்கியது. அதற்கேற்பப் பல அகப்புற மாற்றங்களை அது சந்திக்க வேண்டியிருந்தது.

இத்தகைய மாற்றங்களுக்கேற்ப மனிதன் தன்னைச் சுற்றியுள்ள புறச்சூழல்களை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேய்ச்சல் நிலங்களைத் தேடிப்போவதற்கு மாறாக நிலையான குடியிருப்பை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான்; உணவுக்காக விளைநிலங்களை உருவாக்கினான். ஆற்றங்கரை ஓரங்களிலும் சமவெளிப்பகுதிகளிலும் கிராமங்களாகவும் நகரங்களாகவும் அமைந்த குடியிருப்புகள்

XI Ethics_Lesson 3 Folder.indd 36 13-12-2021 10:40:53

நாளடைவில் நாடுகளாக வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சிக்கு மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு உற்பத்திக் கருவிகள் உறுதுணையாக இருந்தன.

சக்கரம், படகு போன்ற கருவிகள் நிலத்திலும் நீரிலும் மனிதனின் போக்குவரத்திற்குப் பயன்பட்டன. இப்போக்குவரத்துக் கருவிகள் கிராமம், நகர், நாடுகளுக்கிடையேயான உற்பத்திப் பொருளைப் பரிமாற்றம் செய்யும் வணிகத்தை வளரச்செய்தன. இவ்வாறாகப் புறநிலையில் வேட்டைச் சமூகத்திலிருந்து வேளாண் சமூகமாகவும், வணிகச் சமூகமாகவும் மாற்றம் பெறுவதற்கு மனிதஇனம் தனக்குள்ளாகவே உறவுநிலைகளை மேம்படுத்திக்கொண்டது. அதே நேரத்தில் ஒன்றுபட்டு வாழ, பல்வேறு நெறிமுறைகளையும் அது உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

புறவளர்ச்சிக்கு உற்பத்திக் கருவிகள் எவ்வளவு முதன்மையானவையோ அது போலவே உறவு மேம்பாட்டிற்கு மனிதர்கள் தமக்குள் வகுத்துக்கொண்ட நெறிமுறைகள் தவிர்க்க முடியாதவையாக விளங்கின. பல்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்துகொண்டிருந்த மனித இனம், ஒன்று சேர்ந்து வாழ உதவிய இந்நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டே குடும்பம், சமூகம், நாடு போன்ற நிறுவனங்கள் தோன்றின. இந்நிறுவனங்களைச் செழுமைப்படுத்துவதற்குத் தனிமனிதன், குடும்பத்தினர், சமூகத்தினர் அதற்குத் தலைமை தாங்கிய தலைவர்கள் ஆகியோர் தமது விருப்பு வெறுப்புகளை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இந்நெறிமுறைகளுக்குத் தன்னல மறுப்பும் பொதுநல விருப்புமே அடிப்படையாக இருந்தன. இத்தகைய விழுமியங்களைப் பேணிக்காத்துச் செழுமைப்படுத்துவதன் மூலமே மனித இனம் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழமுடியும் என்ற சூழல் உருவானது.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ் இலக்கியங்கள் தொன்றுதொட்டு அறம் – அன்பு – அருள் – அடக்கம் – அமைதி – அறிவு – ஆற்றல் – உண்மை – உழைப்பு – நேர்மை – நாணயம் – உயர்வு – ஒழுக்கம் – இரக்கம் – ஈகை – வீரம் – தீரம் – காதல் – கடமை – நீதி – நெறி முதலானவற்றை உள்ளடக்கியதாகும்.

மக்கள் தம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழிமுறைகளையும் விழுமியங்களையும் ஏற்படுத்திக்கொண்டனர். இவ்விழுமியங்களை, அடிப்படையானவை; மாற்றத்திற்கு உட்பட்டவை; மனித இனம் முழுமைக்கும் பொதுவானவை; குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் உரியவை என வகுத்துக் கொண்டனர். இத்தகைய விழுமியங்களைக் காலந்தோறும் தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

காதல்

சங்க இலக்கியங்கள், தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் காதல் உணர்வை உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றுகின்றன. தொல்காப்பியம், “மனமொத்த இருவருக்கிடையே தோன்றும் காதல், நிலைபேறு உடையதாக அமையும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

> “பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”
>
> (தொல்: பொருளதிகாரம்: 269)

எனப் பத்துப் பொருத்தங்களாக அது விரித்துக் கூறுகிறது. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் காதல் வயப்படும்போது 'செம்புலப் பெயல் நீர்போல' அன்புடைய நெஞ்சங்கள் கலந்தவர்களாக இருந்துள்ளனர் எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

மருத நிலத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. வண்டு அம்மலரிலிருந்து தேனை எடுக்கிறது. அத்தேனை யாராலும் தொட முடியாத குறிஞ்சி நில மலைஉச்சியில், ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரத்தில் தேனடையாக வைத்துப் பாதுகாக்கிறது. அதுபோலத் தலைவியின் அன்பைப் பாதுகாத்து வைப்பவன் தலைவன். மருத நிலத்தில் வாழும் தலைவியின் காதலைக் குறிஞ்சி நிலத் தலைவன் பாதுகாத்து வைக்கும் நெறியை

“நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிவு அறியலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை

(நற்றிணை 1: 1-5)

என்னும் பாடல் உயர்ந்த அன்பின் தூய்மையையும் மேன்மையையும் ஒரு சேரப் புலப்படுத்துகிறது.

நட்பு

உள்ளத்தால் ஒன்றியவர்களுக்கிடையில் தோன்றும் அன்பின் உறவே நட்பாகும். மனித உறவுகளில் மிகவும் பெருமை உடையதாகக் கருதப்படுவது நட்பு. நட்பின் பெருமையைச் சங்க இலக்கியங்கள் போற்றிப் பதிவு செய்துள்ளன. ஒருவருடைய உயர்வுக்கு உழைப்பும், விடா முயற்சியும் காரணமாக இருப்பதுபோல, நல்லோர் நட்பும் காரணமாக அமைகிறது.

நட்பின் இயல்பு குறித்து

உயிர்ஓர் அன்ன செயிர் தீர் நட்பின்

(நற்றிணை 72: 3)

……….. யாக்கைக்கு
உயிர் இயைந்து அன்ன நட்பின்

(அகநானூறு 339: 11-12)

எனச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. எலியைப்போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக்கொள்வதினும் புலியைப்போன்ற வலிமையும் முயற்சியும் உடையவருடன் நட்புக் கொள்வதே சாலச் சிறந்தது என்பதனை,

புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மை யோடு
இயைந்த வைகல் உளவா கியரோ

(புறநானூறு 190: 10-12)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே

(மதுரைக் காஞ்சி – 196 -197)

பெறற்கரிய பெரும்பேறு கிடைப்பதாக இருந்தாலும் பொய்மை கலந்த நட்புப் பழியொடு முடியும். எனவே, வாய்மை நிறைந்த நட்பே தூய்மையானது, சிறந்தது, தகுதியானது என்கிறார் மாங்குடி மருதனார்.



அதியமான்–ஔவையார்

அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த அதியமான், கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து உயிர்விட்ட பிசிராந்தையார், பாரியின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட கபிலர் போன்றோரை நட்பிற்கு இலக்கணங்களாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

உதவி

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

“பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன்”.

(கலித்தொகை,139:2-3)

என்று, பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

உண்மையான செல்வம் என்பது, 'பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம் என்பதுவே (நற்றிணை.210:7-9)

உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார் (கலித்தொகை 34). உதவும் பண்பு, வாழ்வியல் நெறியாகத் திகழ்ந்தது என்பதனை இப்பாடலால் அறியமுடிகிறது.

வாய்மை

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்பதனை,

பொய்யாச் செந்நா (புறநானூறு 168:19)

பொய்படுபு அறியா வயங்குசெந் நாவின்
(பதிற்றுப்பத்து. 58: 9)

என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

'பிழையா நன்மொழி' என்று வாய்மையையும், 'பொய்பொதி கொடுஞ்சொல்' என்று பொய்மையையும் நற்றிணை குறிப்பிடுகிறது. (நற்றிணை. 200).

நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே
(நற்றிணை 289: 2-3)

நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே
(பதிற்றுப்பத்து .63:6-7)

நிலம் பெயரினும் நின்சொற் பெயரல் (புறம்.3:14) முதலான பாடல் அடிகளில் நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

விருந்தோம்பல்

விருந்தோம்பல், இல்லறத்தாரின் தலையாய கடமையாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாது வரவேற்று உபசரிப்பது தமிழர்களின் உயரிய பண்பாகும். இதனை,

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே
(நற்றிணை 142: 9-11)

என்று நற்றிணை பாராட்டுகிறது. அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கும் வழங்கி மகிழ்வர். ஏதுமில்லா நிலையில் விதைத் தினையை உரலில் இட்டு, இடித்து, உணவளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 333). விருந்தினருக்கு உணவளிக்க, வரகினைக் கடனாகப் பெற்று வருவதை ஒரு சங்கப்பாடல் காட்டுகிறது (புறம் 327).

உணவிடுவதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறம் 316). விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்புவதாலும் ஒரு தலைவிக்கு ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நற். 380). விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை 'விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை' (புறம் 266). எனப் பெருங்குன்றூர்க்கிழார் கூறுகிறார். தமிழர்களின் வீட்டுவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, அவர்தம் விருந்தோம்பல் பண்புக்குச் சிறந்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

பெண்களின் நிலை

விருந்தோம்பலும் கற்பொழுக்கமும் பெரியோரைப் பேணுதலும் நன்மக்கட்பேறும் இல்லற வாழ்வின் கடமைகளாகும். தன்மகன் மார்பில் விழுப்புண்பட்டு இறந்துகிடப்பதைக் கண்ட தாய், அவனைப் பெற்ற நாளிலும் பெரிதும் உவந்தாள். மற்றொரு தாயோ, 'நின் மகன் யாண்டுளன்' எனத் தன்னிடம் வினவிய பெண்ணிடம் என் மகன் எங்கு இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. புலியிருந்து தங்கிச் சென்ற

கற்குகைபோல, அவனை ஈன்ற வயிறு மட்டும் இங்கு உள்ளது. அவனைக் காண வேண்டுமானல், போர்க்களத்தில்தான் பார்க்க முடியும் (புறநானூறு 86: 2-6) என்று கூறினாள்.

மக்கட் பேற்றையும் சமூகக் கடமையாகவே சங்க கால மகளிர் கருதினர். மக்கட் பேறே உயர்ந்த பேறு என்பதை,

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழும் நாளே
(புறநானூறு 188: 6-7)

என்னும் பாடல் கூறுகிறது.

சங்க காலத்தில் ஔவையார், நச்செள்ளையார், நன்முல்லையார், ஆதிமந்தியார், நப்பசலையார், முடத்தாமக்கண்ணியார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார், பொன்முடியார் முதலான பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து சங்ககால மகளிர் கல்வி நிலையிலும் மேம்பட்டு விளங்கினர் என்பதை அறியமுடிகிறது. பெண்கள் பொதுவாழ்க்கையிலும் பங்கேற்றனர் என்பதனை அதியமான் நெடுமான் அஞ்சிக்காகத் தொண்டைமானிடம் ஔவை தூது சென்றதிலிருந்து அறிய முடிகிறது. பாடினி, விறலி முதலானோர் ஆடல் பாடல் கலைகளில் சிறந்து விளங்கினர்.

சங்க காலம் ஒரு வாழ்வியல் பொற்காலம்

சங்க காலம் பொற்காலமாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் இருப்பினும் “எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே” (புறம் 187) என்ற ஔவையின் பாடல், 'நாட்டை மேன்மைக்கு உரியதாக மாற்றுவது, அரசனின் மாண்புகளே' என்பதை உணர்த்துகின்றது. சங்ககால மன்னர்கள் கல்வி, வீரம், கொடை, நட்பு, சான்றோரைப் புரத்தல் போன்ற மாண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

வீரம்

சங்க காலத்தில் ஒருவருக்கொருவர் நாட்டு எல்லைகளைக் காப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் போர்புரிதல் தவிர்க்க முடியாததாக விளங்கியது. போருக்குத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லவேண்டிய கடமை மன்னனுக்கு இருந்தது. விழுப்புண் தாங்கிப் புறப்புண் நாணும் பண்புடையவர்களாக அரசர்கள் விளங்கினார்கள்.

ஆவும் ஆனியிற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்புக் கடிவிடுதும் நும்மரண் சேர்மின்
(புறநானூறு 9: 1-5)

அறப்போர் முறை

என்னும் பாடல் வாயிலாகப் பசுக்களும், பார்ப்பனரும், பெண்களும், நோயுற்றவர்களும், மக்கட்பேறு இல்லாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு போர் தொடங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தினர் என்ற செய்தி புலப்படுகிறது. வீரம் செறிந்த போரிலும் அறநெறி காத்தவர் தமிழர் என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

காவல் மரம்

பழந்தமிழ் வேந்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மரத்தைத் தம் வெற்றியைச் சிறப்பிக்கும் மரமாகப் போற்றி வந்துள்ளனர். அம்மரம் இரவு பகலாக வீரரால் காவல் காக்கப்படுவதால், அதற்குக் 'கடிமரம்' எனப் பெயர். அம்மரத்தை வெட்டுப்படாமல் பாதுகாப்பது மானமுடைய வேந்தர்க்கு மறப்பண்பாகும். வேங்கை, புன்னை, வேம்பு முதலிய மரங்களைக் காவல் மரங்களெனப் போற்றி வந்துள்ளனர். வேந்தன் ஒருவன், பகை மன்னனை வெற்றிகொண்டதற்கு அடையாளமாக, அவன் நாட்டுக் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது மரபு.

கொடை

வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். இவ்வள்ளல் தன்மையைப் பாடாண்திணைப் பாடல்கள் விளக்குகின்றன. இவர்களுள் கடையெழு வள்ளல்கள் குறுநில மன்னர்களாயினும், வரையாது பொருள் வழங்கும் இயல்பினர். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை 'வான்மீன் பல பூப்பினும் ஆனாது மன்னே' என முடமோசியார் என்னும் புலவர் புகழ்கிறார்.

அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர், பாணன், பாடினி, கூத்தர், விறலி போன்றோர்க்குப் பொருள் கொடுப்பதோடு நின்றுவிடாமல், உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்து மகிழ்ந்தனர். மன்னர்களின் இத்தகைய விருந்தோம்பல், புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இதனைச் சங்க இலக்கியம்,

……மாசுஇல்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்
…., ……, ………, ………,
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
…., ……, ……… ………,
இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்

(சிறுபாணாற்றுப்படை: 235 – 245)

என்று விவரிக்கிறது.

இதைப் போலப் பதிற்றுப்பத்தில், சேர மன்னர்களது வள்ளல் தன்மையும், விருந்தோம்பல் பண்பும் பெரிதும் பேசப்படுகின்றன. ஆற்றுப்படை நூல்கள், அரசர்களின் வள்ளல்தன்மையைப் பாடுவதற்காகவே உருவாக்கப்பட்டன. மன்னரின் வள்ளல் தன்மை அந்நாட்டு மக்களிடமும் இருந்ததை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன.

அறநெறி போற்றல்

அரசர்கள், புலவர்களைப் பரிசில் பெறுவோராக மட்டும் கருதவில்லை. அறநெறிகூறி வழிநடத்தும் தகுதி உடையவர்களாகவும் கருதினர். இதனைப் பகைநாட்டு மன்னனின் புதல்வர்களை, யானையைக்கொண்டு இடறச் செய்யும் வேளையில், புலவர் சொல்கேட்டு நிறுத்திவிடுதல், புலவரின் அறிவுரைக்கேற்ப வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளுதல், போரைத் தவிர்த்தல், பகைநாட்டு ஒற்றன் எனக் கருதி ஒரு புலவரைக் கழுவேற்றும் வேளையில், மற்றொரு புலவர் சொல்கேட்டு அதை நிறுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள், அக்கால மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கும் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
………, …………, ………, …………

(புறநானூறு 55: 10)

நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே

(புறநானூறு 18: 28-30)

எனப் புறநானூற்றில் புலவர்கள் பாடியுள்ளனர். இதனால், அரசர்கள் அறநெறியையே முதன்மையாகக்கொண்டு அரசாள வேண்டும்

XI Ethics_Lesson 3 Folder.indd 41 13-12-2021 10:40:54

என்பதும், உழவு செழித்து, உணவு பெருக, நீர்நிலைகளை அமைத்துத் தர வேண்டியது அவர்களின் கடமை என்பதும் உணர்த்தப்பட்டன.

ஏழைப் பெண்ணின் மானம் காக்கத் தன் கையையே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியன், அடைக்கலம் புகுந்த புறாவினைக் காக்கத் தன்னையே தராசுத் தட்டில் ஏற்றிய சிபி மன்னன், கன்றிழந்த ஆவின் கண்ணீருக்கு நீதி வழங்கத் தன்மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதிச்சோழன் போன்ற அரசர்களின் செயல்கள் நீதிக்குமுன் அனைவரும்சமம்;நீதிவழங்கும்போது தாம், தமர், பிறர் என்ற பாகுபாடு கருதாமல் நீதி வழங்கி, அறநெறி வழுவாது, ஆட்சி புரிய வேண்டும் என்ற விதிமுறைக்குக் கட்டுப்பட்டு அரசாட்சி நடத்தினர் என்பதைப் புலப்படுத்துகிறது.

பாண்டியன்

வானம் பொய்ப்பினும், விளைச்சல் குறையினும், எதிர்பாராத இடையூறுகள் தோன்றினும் அரசன் நல்லாட்சி செலுத்தாததே காரணம் எனக் கருதுவது அன்றைய மரபு. இப்பழிச் சொல்லுக்கு அஞ்சி, நல்லாட்சி செலுத்தும் பொறுப்பு மன்னனுக்கு இருந்தது.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.

(புறநானூறு 35 :27-29)

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகிறது.

பிறர்க்கென வாழ்தல்

சங்கத்தமிழர், பரந்த மனப்பான்மை உடையவராய்த் திகழ்ந்தனர். தந்நலம் கருதாது, பிறர்நலம் பேணும் பெற்றியுடையவராய் விளங்கினர். அனைவரையும் தம் உறவினராகக் கருதும் அவர்தம் மனப்பாங்கை,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எனப் பாடிய பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல்அடி உணர்த்துகிறது. இப்பாடல், கால எல்லை, நில எல்லைகளைக் கடந்து இன்றும் வாழ்கிறது.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

(புறநானூறு 195: 6-7)

உண்டால் அம்மஇவ் உலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன்தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே

(புறநானூறு 182)

என்ற புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல், சங்ககால மக்களுக்குத் தேவையான பல்வேறு விழுமியங்களை எடுத்துச் சொல்கின்றன. சங்கப் புலவர்கள் அறக்கருத்துகளைப்போதனைகளாகச் சொல்லவில்லை. எளிய சொற்களால் இனிய முறையில் இலக்கியங்களாகப் படைத்தளித்துள்ளனர். எண்ணற்ற போர்கள், அவற்றின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள், கைம்பெண்களின் கையறுநிலை, புலவர்கள்

XI Ethics_Lesson 3 Folder.indd 42 13-12-2021 10:40:55

சித்திரிக்கும் வறுமைநிலை ஆகிய இன்னல்கள் பலவும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றையும் எதிர்கொண்டு சிறந்த விழுமியங்களோடு வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்தியமையே, சங்க இலக்கியங்களின் சிறப்பாகும்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண்கீழ்க்கணக்கு என்பது, பதினெட்டு நூல்களைக் குறிக்கும். அவற்றுள் பதினொரு நூல்கள், அறக்கருத்துகளைக் கூறுவதனால் அறநூல்கள் எனப்படுகின்றன. ஏனையவற்றில் ஆறு நூல்கள் அகப்பொருள் சார்ந்தும், ஒரு நூல் மட்டும் புறப்பொருள் சார்ந்தும் அமைந்துள்ளன.

'நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு''

என்னும் வெண்பா, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பட்டியலிடுகிறது.

திருக்குறள் காட்டும் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திருக்குறள், சிறந்த அறநூலாகும். உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளை வள்ளுவம் கூறுகிறது. இந்தத்தன்மையால்தான், திருக்குறள் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொறாமை, பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகிய நான்கனையும் தீயதெனக் கருதிப் புறந்தள்ளி வாழ்வதே அறம் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (குறள் 35)

இல்லறத்தில் வாழ்பவர்கள் இவ்வறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால், அவ்வாழ்க்கை துறவறத்தினும் சிறந்தது என்பதனை,

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் 48)

என்கிறார். இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் முதன்மையானது விருந்தோம்பல் பண்பாகும்.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (குறள் 84)

நல்ல முக மலர்ச்சியோடு விருந்தினர்களைப் பேணுபவர்கள் இல்லத்தில் செல்வம் நிறைந்திருக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

தீயவழியில் செல்லாமல் மனத்தை நேர் வழிப்படுத்துவதே அறிவு என்பதும், மன்னுயிரின் துன்பத்தைத் தன்னுயிர்த் துன்பமாகக் கருதுவதே அறிவுடைமை என்பதும் வள்ளுவரின் கருத்தாகும். கல்வியின் பெருமையைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடுகிறார். நல்லனவற்றைப் படிக்க வேண்டும். படித்ததை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். அப்படிப்பட்ட கல்வியைப் பெறுபவனுக்கு எல்லா ஊரும் அவன் ஊரே, எல்லா நாடும் அவன் நாடே என்பதனை பின்வரும் குறள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (குறள் 397)

செல்வம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அச்செல்வத்தை அறவழியிலேயே சேர்க்க வேண்டும். பண்புடையவரிடம் சேர்ந்த செல்வம், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும், ஊருணியில் நீர்நிறைந்தது போலவும், மருத்துவப் பயன் நிறைந்த மரம் பலருக்கும் பயன்படுவது போலவும் பயன்தரும் என்கிறார்.

அதுபோலவே பண்பில்லாத கொடிய மனம் படைத்தவர் செல்வம், நல்ல பாலானது தான் வைக்கப்பெற்ற பாத்திரத்தால் திரிந்து நஞ்சாவதுபோல மற்றவர்களுக்குக் கேடு விளைவிக்கும் என்கிறார். இங்குச் செல்வத்திற்கென்று தனி இயல்பு கிடையாது, அதனைப் பெற்றிருப்பவரின் இயல்புக்கேற்ப அதன் பயன்பாடு அமைகிறது என்கிறார்.

XI Ethics_Lesson 3 Folder.indd 43 13-12-2021 10:40:55

நல்லவர்களுடைய வறுமை, அவர்களுக்கு மட்டுமே மிகுந்த துன்பத்தைத் தரும்; ஆனால், தீயவர்களிடம் இருக்கின்ற செல்வமோ மற்றவர்களுக்கும் பல மடங்கு தீமைகளை விளைவிக்கும்.

செல்வம் தவறான இடத்தில் சேர்வதையும் நல்லவர்கள் அல்லல்படுவதையும் காட்டி, வள்ளுவர் இது இப்படித்தான் இருக்கும் என அமைதி அடையவில்லை; மாறாக,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப் படும். (குறள் 169)

என்று கூறி அது முறையாக எண்ணிப் பார்த்துக் களையப்பட வேண்டும் என்கிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகுஇயற்றி யான் (குறள் 1062)

என்ற குறள் மூலம் பலர் நோக, சிலர் வாழும் ஏற்றஇறக்கம் கொண்ட வாழ்வை வழங்குவது இறை விருப்பம் என்றால், அந்த இறைவனே தேவையில்லை என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான குரலாகவே இக்குறட்பா விளங்குகிறது.

ஒரு நாட்டின் வளத்தைப் பெருக்குவது அரசின் கடமை. அதற்கான வழிவகையாகப் பொருளை இயற்றல், ஈட்டல், காத்தல் அதனைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளைத் திறம்பட செயல்படுத்த வேண்டும் என்கிறார். அரசன் முறைசெய்து காப்பாற்ற வேண்டும். இடித்துரைத்துத் திருத்தும் சான்றோர்களைத் தக்க துணையாகக் கொள்ள வேண்டும். அரசன் முறைதவறி ஆட்சி நடத்தினால் அவன் நாடு கெடும்; வானம் பொய்த்துவிடும்; மக்களை அச்சுறுத்தி, அளவுக்கு அதிகமாக வரிவிதிப்பது அறநெறியாகாது என்கிறார்.

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, இனியவைகூறல், செய்ந்நன்றி அறிதல் போன்ற நற்பண்புகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று கூறும் திருவள்ளுவர், இத்தகைய வாழ்க்கையைத் தெய்வத்தன்மை பொருந்தியது என்கிறார். இதனை,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

என்ற குறள்வழி அறிய முடிகிறது.

நாலடியார் கூறும் அறம்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதிநூல், 'நாலடியார்' ஆகும். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி, நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடைய நூல் என்பதை விளக்கும். இந்நூல் சமண முனிவர்கள் பலரால் பாடப்பட்டுப் 'பதுமனார்' என்பவரால் தொகுக்கப்பட்டது. திருக்குறளில் உள்ள கருத்துகள் பலவற்றை நாலடியாரில் காணலாம். துறவறத்தைப் பாராட்டிப் பேசுதல், உலக இன்பத்தை வெறுத்தல், ஊழ்வினை, மறுபிறப்பு, புலால் உண்ணாமை, உயிர்க்கொலை புரியாமை முதலிய சமண சமயக் கொள்கைகளை நாலடியார் வலியுறுத்திக் கூறுகிறது.

அறிவும் ஒழுக்கமும்

வாழ்க்கை நிலையில்லாதது, செல்வமும் நிலையில்லாதது. எனவே, அறச்செயல்களைக் காலம், இடம் கருதாமல் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும். கரும்பின் சாற்றைப்போல மற்றவர்க்குப் பயன்படும்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். செல்வத்தை நல்வழியில் சேர்க்க வேண்டும். அச்செல்வத்தைப் பலருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். கற்றறிந்தவர்களுடைய நட்பு, அடிக்கரும்பை உண்பது போலாகும், நற்பண்பும் அன்பும் இல்லாதவர் நட்பு, நுனிக்கரும்பை உண்பது போலாகும்.

களர் நிலத்திலே விளைந்தாலும் உப்பை, நல்ல விளைநிலத்தில் பிறந்த நெல்லுக்கு இணையாகவே கருதுவர். பிறப்பைக்கொண்டு மட்டும் ஒருவரை உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ கருதிவிடக்கூடாது. எங்குப் பிறந்தவராயினும் கற்றறிந்தவரே சிறந்தவர். அறிவும் ஒழுக்கமுமே மக்களுக்கு மதிப்பைத் தருவன என்ற சிறந்த கொள்கைகளை நாலடியார் எடுத்துரைக்கின்றது.

XI Ethics_Lesson 3 Folder.indd 44 13-12-2021 10:40:55

களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரை
தலைநிலத்து வைக்கப் படும்.

(நாலடியார் 133)

அறிவுத்தெளிவில்லாதவர்களுடைய நட்பைவிட, அவர்களின் பகையே நல்லது. எவ்வகை மருந்தினாலும் தீர்க்க முடியாத நோய் கொடுமையானது. ஒருவரிடம் இல்லாத பெருமைகளைக் கூறிப் புகழ்வதைவிட, அவரைப் பழித்தலே நல்லது போன்ற எளிய கருத்துகள் வாயிலாக நாலடியார் மனிதர்களின் மனத்தைப் பண்படுத்துகிறது.

பிற்கால அறநூல்கள்

திருக்குறள் முதலான அறநூல்களுக்குப் பின்னரும், அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் பல நூல்கள் தோன்றியுள்ளன. ஔவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகியன அறம் உரைக்கும் நூல்கள். அவரைத் தொடர்ந்து, பலர் நீதிநூல்களை இயற்றியுள்ளனர். வெற்றிவேற்கை, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம், நீதி வெண்பா முதலானவை அவற்றுள் சிலவாகும். ஔவையாரைப் பின்பற்றிப் பலர் ஆத்திசூடி இயற்றியுள்ளனர். பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் புதிய ஆத்திசூடிகள், மாணாக்கர்களுக்குப் பாடமாகவும் பயிற்று விக்கப்படுகின்றன.

நன்னூல் கூறும் அறம்

தொல்காப்பியத்தின் வழிநூலாக விளங்கும் இலக்கணநூல், நன்னூல். பவணந்தி முனிவரால் இயற்றப்பெற்ற இந்நூலில் எழுத்து, சொல் என இரு அதிகாரங்கள் உள்ளன. இந்நூலின் பொதுப்பாயிரம், நூலைப்பற்றியும் நல்லாசிரியர், நல்லாசிரியர் ஆகாதவர், நல்ல மாணாக்கர், நன்மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள் பற்றியும் கூறியுள்ளது. மேலும் ஆசிரியர், நூலை மாணாக்கர்க்குக் கற்பித்தல், மாணாக்கர் கற்றுக்கொள்ளல் ஆகியன குறித்தும் விளக்கியுள்ளது.

நல்லாசிரியர் இயல்புகள்

ஆசிரியர் என்பவர், அருட்குணம் உடையவராகவும், பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவராகவும், தாம் கற்றதை மாணாக்கருக்கு எளிதாகப் புரியும்வண்ணம் எடுத்துச் சொல்லும் சொல்வன்மை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் ஆகாதவர் இயல்புகள்

மாணவர் எளிதில் உணரும் வண்ணம் பாடத்தை விரித்துரைக்கும் திறமையில்லாதவர், இழிவான பண்புகள் உடையோர், மாணவரின் கற்றல் திறனைக்கண்டு பொறாமைப்படுபவர், பொருளாசை மிக்கோர், தவறாக வழி நடத்துபவர், மாணவர் மனத்தில் அச்ச உணர்ச்சியை உண்டாக்குபவர் போன்றோர் ஆசிரியர் ஆகும் பண்பில்லாதவர்கள்.

நன்மாணாக்கர் இயல்புகள்

- அல்லதை நீக்கி நல்லதை நாடும் இயல்புடையோர், ஆசிரியர் கூறுவதை மனத்தில் நிறுத்தி, மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து சிந்திப்பவர் ஆகியோர் தலைமாணாக்கர்.

- தாம் கற்றுக் கொண்டதையே திருப்பிச் சொல்லும் இயல்புடையோர் இடை மாணாக்கர்

- கற்றவற்றை மறந்துவிடுபவர், கற்பதில் முழுமையாகக் கவனம் செலுத்தாமல் மனம் அலை பாய்ந்து கொண்டிருப்பவர், ஆசிரியரை வருத்திப் பாடம் கேட்கும் இயல்புடையவர், கற்பனவற்றில் உள்ள நற்கருத்துகளை மறந்துவிட்டுத் தீய கருத்துகளைப் பற்றிக்கொள்பவர் ஆகியோர் கடை மாணாக்கர்.

மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள்

கள் உண்பவன், சோம்பேறி, செருக்கு உடையவன், காமம் கொண்டவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடு உடையவன், சினங்கொள்பவன், மிகுநேரம் உறங்குபவன், அறிவுநுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளம் படைத்தவன்,

XI Ethics_Lesson 3 Folder.indd 45 13-12-2021 10:40:55

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாதவன், தீயசெயல் புரிபவன், பொய் பேசுபவன் ஆகியோரை மாணாக்கர் ஆகாதவர்கள் என நன்னூல் குறிப்பிடுகிறது.

ஆசிரியர் மாணாக்கர் உறவு

நெருப்பில் குளிர் காய்வதுபோல ஆசிரியர் மாணாக்கர் உறவு என்பது, அகலாமலும் அணுகாமலும் இருத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தல் பணி சிறக்க இத்தகைய உறவு முறையே சிறப்பானது என்பது நன்னூலார் கருத்தாகும்.

நூலின் மாண்பு

அறியாமை நீக்கி, அறிவை வளர்த்து மனிதரின் மனக்கோணலை நீக்குவதையே நூலின் மாண்பாக நன்னூலார் கருதுகிறார். (பொதுப்பாயிரம் – 25)

கற்றல் முறைமை

ஒரு முறைக்குப் பலமுறை படித்தாலே முழு அறிவு கிடைக்கும் என்பதே நன்னூல் கருத்தாகும். "ஆசிரியர் கூறுவதை அப்படியே உள்வாங்கிக் கொண்டால் கால்பகுதி அறிவே கிடைக்கும். உடன் பயில்வோருடன் அதுபற்றி உரையாடினால் கால்பகுதியும், உடன் பயிலும் மாணக்கருக்கும் கற்றோர் நிறைந்த அவையிலும் விரித்து உரைக்கும்போது மீதி அரைப்பகுதியுமாக அறிவு நிறைவுடையும்" என முழு அறிவு பெறுவதற்கான நெறிமுறைகளை நன்னூல் எடுத்துரைக்கிறது.

நூலில் தாம் கற்றறிந்தவற்றில் உள்ள கற்பனையையும் நடைமுறையையும் ஆய்ந்து தெளிதல், படித்தவற்றைப் பலமுறை சிந்தித்தல், கேட்டறிந்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்தல், ஆசிரியருடன் அதைப் பகிர்தல், கல்வியில் விருப்பமுள்ள மாணவருடன் பழகுதல், ஐயப்பாடுகளைக் கூடிப்பேசிக் களைந்து கொள்ளுதல் போன்றவற்றைத் திறம்படக் கற்றலுக்கான வழிவகைகளாக நன்னூல் கூறுகிறது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

காப்பிய மரபில், முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும் சிலப்பதிகாரம், தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளது. சிலப்பதிகாரத்தின் தலைமை மாந்தர்களான கோவலனும் கண்ணகியும், பூம்புகார் நகரத்தில் பெருவணிகக் குடும்பத்தில் பிறந்தவர்கள். கோவலன் பல கலைகளைக் கற்றவன், உயர் பண்புடன் திகழ்ந்தவன்.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண்குழந்தைக்குப் பெயர் சூட்டும் தருணத்தில், 'ஒரு சமயம் என் மூதாதையர் ஒருவர் நடுக்கடலில் சென்றபோது மரக்கலம் உடைந்து அலைகடலில் தவிக்க, மணிபல்லவத்தீவில் வாழும் பெண் தெய்வம் கரை சேர்த்தது. ஆதலால், என் முன்னோரைக் காப்பாற்றிய 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாக மணிமேகலை என்னும் பெயரை என் மகளுக்குச் சூட்டுக' எனக் கோவலன் கூறினான். இக்கூற்று கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன் என்பதைப் புலப்படுத்துகிறது.

யானையிடமிருந்து முதியவரைக் காத்த கோவலன்

கோவலன் யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவனாகவும், பிரிந்த கணவன் மனைவியைப் பெரும்பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வனாகவும், தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த 'இல்லோர் செம்மலாகவும்' மாடல மறையோனால் புகழப்படுகிறான். இத்தகைய மேம்பட்ட

XI Ethics_Lesson 3 Folder.indd 46 13-12-2021 10:40:55

பண்புகளை உடைய கோவலன், காதல் மனைவி கண்ணகியை மறந்து, மாதவி என்ற கணிகையோடு வாழ்கிறான். முன்னோர் தந்த செல்வம் அனைத்தையும் இழந்த பின்பு, கண்ணகியோடும் அவள் காற்சிலம்போடும் புதிய வாழ்வு தேடிப் பூம்புகாரை விட்டுப் புறப்படுகிறான்.

மதுரை மாநகரில் மாதரியிடம் அடைக்கலம் புகுந்து காற்சிலம்பை விற்கச் செல்லும் வேளையில், கோவலன் தன் தவறை உணர்ந்து கண்ணகியிடம் வருந்தி, "கற்கள் நிறைந்த கானகத்தில் நடந்துவரும் துன்பத்தை உனக்குக் கொடுத்தேன். பெற்றோர்களுக்கும் துன்பத்தைக் கொடுத்தேன்; பொழுதைப் பயனின்றிக்கழிப்பவர்களோடும்,காமுகர்களோடும் கூடித்திரிந்து பிறர் பழிச்சொல்லுக்கும் ஆளானேன்; நல்லோர் கூறிய அறநெறி துறந்த எனக்கு நற்கதி உண்டா? பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமையையும் ஆற்றவில்லை. உனக்கும் துன்பம் செய்தேன்" என்று புலம்புகிறான். மேலும் பரத்தமை தவிர பயனில பேசுவோருடன் பழகிப் பொழுதை வீணே கழித்துக் குன்றமன்ன வான்பொருள் தொலைத்துவிட்டதையும் கூறி வருந்துகிறான். இதனால், அவனைப் 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' எனக் கண்ணகியும் குற்றம் சாட்டுகிறாள்.

கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு, களவுப்பழி சுமந்து, அவன் உயிரிழக்கக் காரணமாக அமைகிறது. நற்குடிப் பிறப்போ, பெருஞ்செல்வமோ ஒழுக்கம் பிறழ்ந்தவனைக் காப்பாற்ற உதவாது என்பதைப் புலப்படுத்துவதாகக் கோவலனின் வாக்குமூலம் அமைகிறது. கோவலனின் ஒழுக்கப் பிறழ்வு அவன் இல்லறத்தைச் சிதைக்கிறது; பெற்றோரைத் துறவுக்குத் தள்ளுகிறது; மாதவியைத் தீக்குளிக்கச் செய்கிறது; கவுந்தியடிகளை வடக்கிருந்து உயிர்விடச் செய்கிறது, பாண்டியனைக் கொன்று மதுரையைத் தீக்கிரையாக்குகிறது. தனிமனித ஒழுக்கக் கேடு சமுதாயத்தைச் சீர்குலைக்கும் என்பதை கோவலனின் பாத்திரப்படைப்பு வாயிலாக இளங்கோவடிகள் வெளிப்படுத்துகிறார்.

அரசநீதி

சிலம்பு, பல கருத்துகளைக் கூறினாலும் வழக்குரை காதை மூலம் தமிழ் மன்னர்களின் நீதி வழுவாத அறச்சிறப்பினைப் பதிவுசெய்கிறது. அரசிக்குரிய பொற்சிலம்பினைத் திருடினான் என்று குற்றம் சுமத்தப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டான். இச்செய்தி அறிந்த கண்ணகி, பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதைச் சான்றுடன் மெய்ப்பித்தாள். பாண்டியன் தன் தவற்றை உணர்ந்து,

பாண்டிய மன்னனிடம் நீதி கேட்கும் கண்ணகி

'யானோ அரசன் யானே கள்வன்" எனக்கூறி உயிர்விட்டான். இச்செய்தியைச் செவிவழியாகக் கேள்விப்பட்ட சேரமன்னன், 'பாண்டிய மன்னன், தனது வளைந்துவிட்ட தனது செங்கோலை உயிரைத் துறந்து நேராக்கினான்' என்று கூறுகிறான். இதிலிருந்து, தமிழ் மன்னர்களின் நீதி தவறாத ஆட்சிமுறை புலப்படுகிறது.

மழை பொய்த்தாலோ, குடிமக்கள் தவறிழைத்தாலோ, மன்னனையே பழிப்பர், குடிமக்களைப் பசி, பிணி ஆகியவற்றினின்று பாதுகாத்தலும், கொடுங்கோலன் என்ற பழிச் சொல்லுக்கு அஞ்சியும் மன்னர்கள் ஆட்சி நடத்த வேண்டியிருந்தது என்பதை,

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்

XI Ethics_Lesson 3 Folder.indd 47 13-12-2021 10:40:55

www.tnschoolbooks.in

உங்களுக்குத் தெரியுமா?

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில், (அடைக்கலக் காதை 76- 85) கற்பனையாக ஒரு காட்சியை அமைக்கிறார். அஃது என்னவென்று தெரியுமா? அது சதுக்கபூதம் என்பதுதான். அதில், பூதம் ஒன்று அறவழியிலிருந்து விலகுபவரைத் தண்டிக்குமாம். யாரையெல்லாம் தண்டிக்கும்?

கூடாவொழுக்கத்தில் ஒழுகும் போலித்துறவியர், தீநெறியில் ஒழுகும் பெண்டிர், பிறர் மனை நயப்போர், பொய்ச்சான்று பகர்வோர், புறங்கூறுவோர் ஆகியோரைக் கண்டால், பாசத்தாற் (பாசக்கயிறு) கட்டி, நான்கு காதம் சுற்றளவுவரை கேட்குமளவு கடுங்குரல் எழுப்பி, நிலத்தில் புடைத்து, உண்டுவிடும்.

ஒருமுறை, வறியோன் ஒருவன் உண்மையறியாது கற்புடைய மங்கையைப்பற்றி, அவள் கணவனிடம் பொய்ச்சான்று கூறிவிட்டான். அதுகண்ட பூதம், அவனைப் புடைத்து உண்பதற்காகக் கயிற்றில் பிடித்து வைத்திருந்தது. அந்நிலையில் அவன் தாய் அழுது, புரண்டு தன் மகனை விட்டுவிடுமாறும் அதற்குப் பதிலாகத் தன் உயிரை எடுத்துக்கொள்ளுமாறும் வேண்டினாள். அதற்குப் பூதமானது, 'நரகன் உயிருக்குப் பதில், நல்ல உயிரைக்கொண்டு மேலான கதியை இழக்கும் தன்மை எனக்கு இல்லை, உன் எண்ணத்தைக் கைவிடு' என்று கூறிய பூதம், பொய்சாட்சி பகன்றவனைப் புடைத்து உண்டது.

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை"

(சிலம்பு, அடைக்கலக்காதை, 84,)

இந்தச் செய்தி கற்பனையாக இருந்தாலும், அறவழியிலிருந்து விலகாமல் மக்களை நெறிப்படுத்துகிறது.

துன்பம் அல்லது தொழுதகவு இல்.
(சிலப்பதிகாரம்–வஞ்சிக்காண்டம்- காட்சிக்காதை,100-104)

என்ற சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன.

மணிமேகலை, அரசன் நீதி வழங்கும் முறையைப் பற்றிப் பேசுகிறது. மணிமேகலையைப் பின்தொடர்ந்த உதயகுமாரன், காயசண்டிகையின் கணவன் காஞ்சனனால் கொல்லப்படுகிறான். இதைக் கேட்ட உதயகுமாரனின் தந்தை, "அரசனது காவல் இல்லாமையால் மாமுனிவர் தவமும் மகளிர் கற்பும் இல்லையாகும், கன்றை இழந்த பசுவின் துயரத்தைப் போக்க, தன்மகனைத் தேர்க்காலில் இட்டு முறைசெய்த மனுநீதிச் சோழனின் மரபில் ஒரு தீவினையாளன் தோன்றினான் என்னும் இச்செய்தி, பிற வேந்தரின் காதில் புகுவதற்கு முன்பு உதயகுமாரன் உடலை ஈமத்தீயில் ஏற்றி விடுக" என்கிறான்.

மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்குவதே அறம் என்பதனை,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்
(மணிமேகலை, ஆபுத்திரனோடு
மணிபல்லவமடைந்த காதை: 227- 230)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. உலகில் நடைபெறும் பல குற்றச் செயல்களுக்குப் பசிப்பிணியே காரணம் என்பதை உணர்ந்து அதைப்போக்குவதன் மூலம் குற்றச்செயல்களைத் தடுக்கமுடியும் என்பது, மணிமேகலையின் மையப்பொருளாகும். அரசனுக்கு நிகரான செல்வச்செழிப்பு மிக்க கோவலன் ஒழுக்கக்கேட்டினால் தானும் அழிந்து தன் சுற்றத்தையும் அழிக்கிறான். 'கணிகைமகள்' எனச் சோழ மன்னனால் குறிக்கப் பெற்ற மணிமேகலை, ஒழுக்கத்தின் உயர்வினால்

XI Ethics_Lesson 3 Folder.indd 48 13-12-2021 10:40:56

தன்னையும் வென்று, நாட்டையும் நல்வழிப்படுத்திச் சான்றோர் போற்றும் காப்பியத் தலைவி என்னும் உயர்நிலையை அடைகிறாள்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி (குறள் 137)

என்ற குறளுக்கு இலக்கணமாக இவ்விரு காப்பியங்களும் திகழ்கின்றன.

சீவக சிந்தாமணி

தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம் சீவக சிந்தாமணி. இது சமண சமயக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுகிறது. திருத்தக்கதேவர் ஒரு சோலையில் நடந்த காட்சியின் மூலம் 'நிலையாமை' என்னும் கருத்தை விளக்குகிறார். கடுவன் ஒன்று பெண் குரங்கிற்குப் பலாப்பழத்தை நகத்தால் கீறிப் பிளந்து, நல்ல சுவைமிக்க சுளையைக் கொடுத்தது. அதனை மந்தி வாங்கியது. அந்நேரத்தில் இரண்டு குரங்குகளையும் அடித்துத் துரத்திவிட்டுத் தோட்டக்காரன் பலாப் பழத்தைப் பறித்துக்கொண்டான்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட சீவகன், தன் தந்தை சச்சந்தனிடம் இருந்து கட்டியங்காரன் தங்களது நாட்டைப் பறித்துக் கொண்டதையும் அவனிடமிருந்து தான் தனது நாட்டை மீட்டதையும் நினைவுகூர்கிறான். மெலியவனிடமிருந்து வலியவன் நாட்டைக் கைப்பற்றுதல் தொடர்ந்து நடப்பதும் அரச அதிகாரமோ செல்வமோ நிலையானதல்ல என்ற எண்ணமும் அச்சமயத்தில் அவனுக்கு ஏற்பட்டு அரச பதவியைத் துறந்து விடுகிறான்.

அரசன், அமைச்சரைப் பலமுறை ஆராய்ந்து தெளிய வேண்டும்; பகையை வெல்லக் கருதினோன் உரிய காலமும் இடமும் வாய்க்கும்வரை தன் எண்ணத்தை வெளிப்படுத்தாமல் காத்திருக்க வேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம்வரின் அதைப் போக்க முயல வேண்டும்; தான் வருந்தும்படி நேரினும் தனக்குப்பகையல்லாதவரைச்சிறிதும்வருத்துதல் கூடாது; தாய் தந்தை சொல்லை மதித்து நடத்தல் வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருள் உடையவனாக இருத்தல் வேண்டும்; பாத்திரம் அறிந்து தானம் செய்தல் வேண்டும்; தீயவழிச் செல்வோரைக் காணின், இரங்கி உடனே அவரை நல்வழிப்படுத்த முயல வேண்டும் போன்ற அறச்செயல்களை விளக்கும் காப்பியமாகச் சீவக சிந்தாமணி திகழ்கிறது.

வளையாபதி, குண்டலகேசி

பொய் கூறாதீர்; புறங் கூறாதீர்; யாரையும் இகழ்ந்து பேசாதீர்; தீயவற்றைப் பேசி உடல் வளர்க்காதீர்; உயிர்க்கொலை செய்து அதன் ஊனை உண்டு உங்கள் உயிரை வளர்க்க எண்ணாதீர்; கள்வருடன் நட்புக் கொள்ளாதீர்; களவு கொள்ளாதீர்" எனப் பல அறங்களை வளையாபதி தொகுத்துக் கூறுகிறது.

இளமையும் நிலையானது அன்று; அனுபவிக்கும் இன்பமும் நிலையானது அன்று; செல்வமும் நிலையானது அன்று; நாள்தோறும் துன்ப வெள்ளமே மிகுதியாக உள்ளது. அதனால், இளமையும் இன்பமும் செல்வமும் நம்மிடம் உள்ளது எனக்கருத வேண்டா. உழவர்கள், தாம் விளைவித்த விளைச்சலில் ஒரு பகுதியை விதையாகச் சேமிப்பதுபோல மறுபிறவிக்கு நாள்தோறும் அறம் செய்ய வேண்டும். வாழ்க்கை நிலையில்லாதது, எனவே, அறம் ஒன்றே நிலைத்து நிற்கும் என்பதே வளையாபதி காட்டும் அறமாகும்.

நாம், தாயாரின் வயிற்றில் கருவாகி இருந்த நிலை முதற்கொண்டு பருவங்கள் பலவற்றைக் கடந்து மூப்படைகிறோம்; இறுதியில் இறக்கப்போகிறோம் என வாழ்வின் நிலையாமை குறித்து

பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
நாளும் நாள் சாகின்றோ மால்
நமக்கு நாம் அழாதது என்னோ

(குண்டலகேசி -9)

என்ற குண்டலகேசி காப்பியப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

கம்பராமாயணம்

சோழப்பேரரசு எழுச்சிபெற்ற காலத்தில் தோன்றிய காப்பியம் கம்பராமாயணம். தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரனைய மகனைப் பிரியும் தந்தை தசரதன், தந்தை சொல் தவறாமல் அரச பதவியைத் துறந்து காட்டுக்குச் செல்லும் இராமன், முறை தவறிக் கிடைத்த அரசபதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடும் இளவலாகிய பரதன், நட்பிற்காக உயிரையும் துறப்பேன் என்று சொல்லும் குகன், விருந்தோம்பலுக்கு இலக்கணமாகத் திகழும் சபரி, பிரிவினும் பெருங்காடு சுடுமோ? எனக் கணவனைத் தொடரும் சீதை; அண்ணனைப் பாதுகாப்பதே தனது இலக்கு என வாழும் பாசமிக்க இளவல் இலக்குவன்; கொண்ட பணியை முடிக்க, கடலாயினும் மலையாயினும் எதையும் கடக்கத் தயாராகும் தொண்டுள்ளம் கொண்ட அனுமன் முதலான நற்பண்பாளர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. .

இராமனுக்கு விருந்து படைக்கும் சபரி

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண்இல்
கேள்வி ஆகும் முதல் திண்பணை போக்கி,
அருந்தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

(கம்பராமாயணம்: பாலகாண்டம் (நகரப்படலம் : 75)

இங்குக் கல்வி என்னும் வித்து, முளைத்து மேலெழுகிறது; எண்ணற்ற பல நூல் கேள்வியாகிய கிளைகளைப் பரவச் செய்கிறது; அரிய தவமாகிய இலைகளோடு தழைக்கிறது; பல உயிர்களிடத்தும் செலுத்தும் அன்பாகிய அரும்புகளோடு அம்மரம் முகிழ்க்கிறது; அறச்செயல்களாகிய மலர்களோடு விளங்குகிறது; இன்ப அனுபவம் என்ற பழங்கள் பழுத்த மரமே அயோத்தி மாநகர் எனச் சிறப்பிக்கப்படுகிறது. கல்வியால் அடக்கம் - அடக்கத்தால் நல்வாழ்வு - நல்வாழ்வால் பொருள் - நல்வழியில் பெற்ற அப்பொருளால் அறம் - அவ்வறத்தால் இன்ப அனுபவம் கிடைக்கும், கல்வியே அனைத்து அறத்திற்கும் அடிப்படை என்பது கம்பனின் உறுதிப்பாடு. இவ்வளவு சிறப்பு மிக்க அயோத்தி மாநகரில் பிறந்த இராமன் நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தவன்.

இராமாயணத்தில் இராவணன், பல நல்ல குணங்களைப் பெற்றவனாகக் காட்டப்படுகிறான். அவன் இசையில் வல்லவன், சிறந்த சிவபக்தன், தோள் வலிமை உடையவன், எட்டுத்திக்கு யானைகளுடன் போரிட்டு மார்பில் விழுப்புண் பெற்று வெற்றி கண்டவன், அதோடு தன் தமையன் செய்த தவற்றையும் இடித்துரைக்கத் தயங்காத துணிவு மிக்கவனாகச் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிரையும் துறக்கத் துணிந்த கும்பகர்ணனையும், தந்தை சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் போரில் ஈடுபடும் இந்திரஜித்து, மேகநாதன் போன்ற வீரமிக்க புதல்வர்கள் முதலானாவர்களையும் தனது சுற்றமாகக் கொண்டவன்.

செல்வ வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் நாடும் கொற்றமும் சுற்றமும் உடைய அவன், கெட்டு ஒழியப் பிறன்மனை நயத்தலாகிய அறமற்ற செயலே காரணமாகிறது.

வில்லிபாரதம் காட்டும் அறம்

இந்திய மொழிகள் அனைத்திலும் காணப்படும் இதிகாசங்களுள் ஒன்று மகாபாரதம். வடமொழியில் வியாசர் இயற்றிய பாரதத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற மொழிகளில் பாரதக் கதைகள் இயற்றப்பட்டன. தமிழில் வழங்கப்படும் பாரதக் கதைகளில் வில்லிபுத்தூரார் பாரதமும் ஒன்று.

போட்டி, பொறாமை, சூது போன்ற அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர் தோல்வி அடைவர்; அதற்கு மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் நிற்போர் அறவழியில் வெற்றி பெறுவர். நன்மை வெல்லும்; தீமை தோற்கும் என்பதே இதன் மையக்கருத்து. உறவினர்க்கு இடையே ஏற்படும் பொறாமைப் பண்பானது, வஞ்சகம், துரோகம் போன்ற இழி செயல்களுக்கு இட்டுச் சென்று போரில் ஈடுபட வைக்கிறது. அதுவே அழிவிற்குக் காரணமாக அமைகிறது. இதனை,

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் (குறள் 168)

என்ற திருக்குறள் உணர்த்துகிறது.

எத்தனையோ இடர்ப்பாடுகள் வந்தபொழுதும் தருமன், அறத்தின் மீது மாறாப்பற்றையும், ஒற்றுமையின் வலிமையையும் நிலைநிறுத்துகிறான். பாண்டவர்கள் ஐவரும் வெவ்வேறு சூழல்களில் பிறந்தனர். இருப்பினும் சிறுவயது முதலே ஒற்றுமையாக வளர்ந்தனர். பலராலும் போற்றப்படும் நற்பண்புகள் உடையவர்களாகத் திகழ்ந்தனர். பீமனது வலிமையாலும், அருச்சுனனது வில்லாற்றலாலும் வெற்றி பல கண்டனர். இதனால் பொறாமை கொண்ட துரியோதனின் சூழ்ச்சியால் சூதாட்டத்தில் தோற்றனர். அதனால், வனவாசத்திலும் மறைவாசத்திலும் துன்பப்பட்டனர். போர்க்களத்தில் தம் புதல்வர்களை இழந்தனர். இத்தகைய சூழல்களிலும் ஒற்றுமையாக இருந்து இறுதியில் வெற்றி பெற்றனர்.

பஞ்சபாண்டவர்கள்

திருதராட்டிரனின் நூறு புதல்வர்களும் கௌரவர்கள் ஆவர். அவர்களுள் மூத்தவன் துரியோதனன். தன் தீயகுணங்களால் துன்பத்திற்கு ஆளாகிறான். "தீங்கொரு வடிவமாம் திறன் சுயோதனன்" என்று துரியோதனனை வில்லிபுத்தூரார் அறிமுகப்படுத்துகிறார். துரியோதனன் பாண்டவர்களிடம் சிறுவயது முதலே பகைமையை வளர்க்கிறான். இவன் பேராசையால் நாட்டைப் பாண்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. துரியோதனன், சூழ்ச்சி, வஞ்சம், பெண்மையை இழிவுபடுத்துதல், பெரியவர்களை அவமதித்தல் ஆகிய தீய குணங்களைப் பெற்றிருந்தான். எனவே, அழிவைச் சந்தித்தான். துரியோதனன், விதுரன் உள்ளிட்ட சான்றோர்களின் அறிவுரைகளையும் தருமன், பீமனின் இடித்துரைகளையும் புறக்கணித்தான். பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், விதுரர் முதலிய சான்றோர்கள் போர்க்களத்தில் துரியோதனன் பக்கம் நின்றனர். இருப்பினும் சகுனியின் கூடா நட்பின் காரணமாக அறமல்லாச் செயல்களில் ஈடுபட்டதனால் இறுதியில் தோல்வியையும் மரணத்தையும் தழுவினான்.

வில்லிபாரதம், 'பொறுமை' என்னும் அறத்தைத் தருமன் மூலமாக வெளிப்படுத்துகிறது. நடுநிலைமையாக அறவழியில் செல்லக்கூடிய பொய்மை கூறாத பண்புள்ளவனாகத் தருமன் திகழ்கிறான். அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டதாகப் பொய் உரைக்கும்படி கண்ணன் தருமனிடம் கூறுகிறான். இதை மறுக்கும் தருமன் இல்வாழ்க்கைத் துணை, சான்றோர்கள்,

நெருங்கிய உறவினர்கள், அன்பு, நிலையான புகழ், மிகுந்த செல்வம், திறமை, அறிவு இவற்றால் கிடைக்கும் பொருட்கள், தவம், புண்ணியம் ஆகியன பொய் உரைப்பதால் அழிந்துவிடும் என்று கூறுகிறான் (பாடல் 3687).

கண்ணன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது செல்கிறான். அப்பொழுது விதுரனின் மாளிகையில் தங்குகிறான். அதற்கான காரணத்தைத் துரியோதனன் வினவ கண்ணன்,

……………… மதி அமைச்சர்
ஆய் அரசு அழிப்பினும்
குரவர் நல் உரை மறுக்கினும் பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும்
அவருடன் அழன்று பொர உன்னினும்
இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்
இவர்களே நரகில் எய்துவார்.

(வில்லிபாரதம் 2445)

என்று கூறுகிறான். "நல்லறிவுடைய அமைச்சராய் இருந்து அரசாட்சியை வேண்டுமென்றே கெடுத்தலும், சான்றோர் மொழியைப் புறக்கணித்தலும், பிறர் செய்த உதவியை மறத்தலும், ஒருவர் வாழும் வீட்டில் உணவு உண்டு, அவருடனே சினந்து போர் செய்ய நினைத்தலும் ஆகிய இந்நான்கு செயல்களையும் செய்பவர்கள் சூரிய சந்திரன் உள்ளவரை துன்பம் அனுபவிப்பர்" என்று அவன் கூறும் விளக்கம் எக்காலத்திற்கும் பொருந்தும் அறமாகும்.

சூதாட அழைத்த துரியோதனனுக்கு மறுமொழியாகத் தருமன் சினம் கொள்ளுதல், மற்றவரின் குற்றங்களை எடுத்துக் கூறித் தூற்றுதல், ஒருவரிடம் முதலில் நட்புக் கொண்டு பின்பு அவரிடம் ஐயம் கொள்ளுதல், மிகக் கொடுமையான செயலான சூதாடுதலை விரும்புதல், கூறிய உறுதிமொழியிலிருந்து தவறுதல் ஆகியன தீமை பயக்கும் எனக் கூறுகிறான். இதன் மூலம் சூதாடுவது பல தீயசெயல்களுக்கு நிகரானது என்பது தெளிவாகிறது. (பாடல் 1103).

பார்த்தசாரதி

பாரதப் போரில் நெறிமுறைகளை மீறி, பாண்டவர்களின் புதல்வர்களைக் கொன்ற அசுவத்தாமனிடம் துரியோதனன், "பாலர் மகுடம் துணிந்தது இன்று என்ன வீரியம், என்ன நினைத்து இச்செயலைச் செய்தாய், எங்கள் குலக்கொழுந்துகளைக் கொன்று விட்டாய். எங்களுக்குத் தலைமுறை இல்லாமல் போயிற்று மற்றும் இது அறச் செயலும் அல்ல" என்று கடிந்து கொள்கிறான். இதன் மூலம் போர்க்களத்திலும் அறம் பிறழா நெறிமுறை வலியுறுத்தப்படுகிறது (பாடல் 4301,4302)

இவ்வாறு வில்லிபுத்தூரார் தம் காப்பியத்தில் கதை மாந்தர்கள், அவர்களின் கூற்றுகள் வாயிலாக அறக்கருத்துகளைக் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

காப்பியங்களிலும் இதிகாசங்களிலும் பல்வேறு பண்புகளின் உருவங்களாகப் பல பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. தாய்மைக்கு விசையை, மாதவி, குந்தி; கற்பிற்குக் கண்ணகி, சீதை, பாஞ்சாலி; தந்தை பாசத்திற்குத் தசரதன்; பொறுமைக்குத் தருமன், இராமன்; நட்பிற்குக் குகன், கர்ணன், தொண்டிற்கு இலக்குவன், அனுமன்; ஈகைக்குக் கர்ணன்; நீதி வழுவா அரசாட்சிக்குப் பாண்டியன்; தியாகத்திற்குப் பீஷ்மர், பரதன்; விவேகத்திற்கு விதுரன் முதலான பாத்திரங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

www.tnschoolbooks.in

குகன்

கூடா நட்பிற்குக் கூனி, சகுனி, கட்டியங்காரன்; ஒழுக்கப் பிறழ்விற்குக் கோவலன், இராவணன்; பொறாமைக்குத் துரியோதனன், சூர்ப்பணகை, காந்தாரி; வழி தவறிய மகனை நல்வழிப்படுத்தத் தவறிய திருதராட்டிரன்; பெண்மையை இழிவுபடுத்திய துச்சாதனன் போன்றோர் தீமையின் உருவகங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

இலக்கியங்கள் அறக்கருத்துகளைப் பெரும்பாலும் நேரடியாகப் பேசாமல் கதை மாந்தர்கள் மூலமோ, நிகழ்ச்சிப் போக்கிலோ உணர்த்திச் செல்கின்றன. இதன் காரணமாகவே இலக்கியங்களும் அவை கூறும் நெறிமுறைகளும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுவிடுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் முடியாட்சியே நிலவிவந்தது. நாட்டையாளும் மன்னனே, தவறு செய்பவர்களைத் தண்டிக்கவும் செய்தான். மன்னன் தண்டித்தாலும், நீதி வழங்குவதெற்கென அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதை இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அறங்கூறு அவையம் – பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி,492.

அறன்நிலை திரியா அன்பின் அவையம் – புறநானூறு, 71.

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து

அறங்கெட அறியா தாங்கு– நற்றிணை, 400

அறங்கெழு நல்லவை– அகம், 93.

முறையுடை அரசன் செங்கோல் அவையத்து - குறுந்தொகை, 276.

அரைசுகோல் கோடினும் அறங்கூறு அவையம் - சிலம்பு 5 :135

அறநூல்களை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கியமையை 'அறங்கூறு அவையம்' என்னும் சொல்லாட்சி வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

நிறைவுரை

சங்க இலக்கியங்கள் மனமொத்த தலைவன் தலைவிக்கு இடையே தோன்றும் மேன்மையான அன்பை, உயர்ந்த இடத்தில் வைத்துத் போற்றுவதைத் தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மனித உறவுகளில் மிகவும் பெருமையுடையதாக நட்பு போற்றப்படுகிறது. மக்கள் வாய்மையைச் சிறந்த அறமாகக் கொண்டிருந்தனர் என்பதையும், மன்னர்கள் கொடை வள்ளல்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் அறியமுடிகிறது. உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளைத் திருக்குறள் எடுத்து இயம்புகிறது.

சிலப்பதிகாரம், மன்னர்களின் நீதிநெறி வழுவாத சிறப்பினைப் பதிவு செய்கிறது. அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர், தோல்வியையே அடைவர் என்றும், மாறாகச் சான்றோர் வகுத்த நெறியில் இருப்பவர், வாழ்க்கையில் அறவழியில் வெற்றி பெறுவர் என்றும் வில்லிபாரதத்தின் மூலம் அறிய முடிகிறது.

XI Ethics_Lesson 3 Folder.indd 53 13-12-2021 10:40:57

www.tnschoolbooks.in

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வாய்மையை பிழையாநன்மொழி' என்று குறிப்பிடும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   அ) குறுந்தொகை ஆ) நற்றிணை
   இ) அகநானூறு ஈ) புறநானூறு

2. சங்ககால பெண்பாற் புலவர் வரிசையில் இடம் பெறாதவரைத் தேர்ந்தெடுக்க.
   அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார்
   இ) காரைக்கால்அம்மையார் ஈ) நப்பசலையார்

DWQ85

3. ஆற்றுப்படை நூல்கள் இயற்றப்பட்டதன் குறிக்கோள்
   அ) அரசர்களின் போர் தன்மையைப் பற்றி பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   ஆ) பாணர்களைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   இ) பாடினிகளைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.
   ஈ) அரசர்களின் வள்ளல் தன்மையைப் பற்றிப் பாடுவதற்கு இயற்றப்பட்டது.

4. 'கோவலன் செய்ந்நன்றி மறவாப் பண்பினன்' என்பதை எக்கூற்று புலப்படுத்துகிறது?
   அ) யானையிடமிருந்து முதியவரைக் காத்த கருணை மறவன்.
   ஆ) கணவனுக்கும் மனைவிக்கும் பெரும் பொருள் கொடுத்து இல்லற வாழ்வில் இணைத்து வைத்த செல்லாச் செல்வன்.
   இ) 'மணிமேகலா' என்ற தெய்வத்தின் நினைவாகத் தன்மகளுக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டியவன்.
   ஈ) தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் ஆறுதல் கூறி அரவணைத்த இல்லோர் செம்மல்.

5. பின்வருவனவற்றுள் அக நூல் எது?
   அ) நாலடியார் ஆ) குறுந்தொகை இ) இன்னாநாற்பது ஈ) திருக்குறள்

6. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
   அ) வாக்குத்தவறாமை - 1. சபரி ஆ) செயல்வீரர் - 2. குகன்
   இ) நட்பு - 3. அனுமன் ஈ) விருந்து - 4. தசரதர்

   அ) அ- 3 ஆ-4 இ-1 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1
   இ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4 ஈ) அ-4 ஆ-3 இ-1 ஈ-2

7. பொருந்தாத இணையைச் சுட்டுக.
   அ) தருமன் - பொறுமை ஆ) அர்ச்சுனன் - வில்லாற்றல்
   இ) பீமன் - கொடை ஈ) துரியோதனன் - பொறாமை

8. சரியான விடைக் குறிப்பை தெரிவு செய்க
   அ) பாண்டு - 1. காந்தாரி ஆ) இராமன் - 2. மண்டோதரி
   இ) இராவணன் - 3. சீதை ஈ) திருதராட்டிரன் - 4. குந்தி

   அ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1 ஆ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2
   இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4

9. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணை எது?
   அ) கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் ஆ) ஔவையார் - அதியமான்
   இ) பாரி - கபிலர் ஈ) கூனி - சகுனி

10. தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல்காப்பியம்
    அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி ஈ)சீவகசிந்தாமணி

XI Ethics_Lesson 3 Folder.indd 54 13-12-2021 10:40:57

குறுவினா

1. மனித இனம் வேளாண் சமூகமாக எவ்வாறு வளர்ச்சியடைந்தது?
2. மணிமேகலையில் மையப்பொருளாகக் கூறப்படும் அறக்கருத்துகள் யாவை?
3. தமிழ் மன்னர்களின் நீதிதவறாத ஆட்சி முறை சிறப்பு இரண்டனை கூறுக.
4. வில்லிபாரதத்தின் மையக் கருத்து யாது?
5. துரியோதனனுக்கு மறுமொழியாகத் தருமன் கூறியவை யாவை?
6. பிற்கால அறநூல்கள் யாவை?

சிறுவினா

1. நல்லோர் கூறிய அறநெறி துறந்த எனக்கு நற்கதி உண்டா? எனக் கோவலன் கூறியவை யாவை?
2. சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் பெயர்களைச் சுட்டுக.
3. அறப்போர் முறை – வரையறுக்க.
4. சங்க கால மன்னர்களின் விருந்தோம்பல் பண்புகளைக் கூறுக.
5. மணிமேகலை - பெயர்க்காரணம் கூறுக.
6. “யானோ அரசன் யானே கள்வன்” இது யார் கூறியது? இக் கூற்று உணர்த்தும் செய்தி யாது?
7. வளையாபதியில் கூறப்படும் அறங்கள் யாவை?

நெடுவினா

1. தமிழர்களின் விருந்தோம்பல் பண்பினைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்துக.
2. சங்க கால மன்னர்களின் கொடைத்தன்மையை விவரிக்க.
3. மனித மனங்களைப் பண்படுத்த நாலடியார் கூறும் அறக்கருத்துகள் யாவை?
4. சீவகசிந்தாமணியில் கூறப்படும் அறக்கருத்துகளை விளக்குக.
5. கோவலன் மேம்பட்ட பண்புடையவன் என்பதைச் சான்றுடன் விவரி?

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாட்டில் நிகழ்ந்த போர்களில் பேர் தெரியாப் பெருவீரர் பலர் உண்டு. அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்வோமா?

பாலாற்று வென்றான் : பாலாற்றங்கரையில் வெம்போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைப் 'பாலாற்று வென்றான்' எனப் பாராட்டினர். வடஆர்க்காட்டு ஆரணி வட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும் பாலாற்று வென்றான் என்னும் பெயருடைய ஊர்கள் உள்ளன.

செய்யாற்று வென்றான்: செய்யாற்றங்கரையில் வென்ற வீரனுக்குச் 'செய்யாற்று வென்றான்' எனப் பேருண்டு. வடஆர்க்காட்டுச் செய்யாற்று வட்டத்திலும் தென் ஆர்க்காட்டு விழுப்புர வட்டத்திலும் செய்யாற்று வென்றான் என்னும் பெயருடைய ஊர்கள் உள்ளன.

சரந்தாங்கி: சரமாரி பொழியும் போர்க்களத்தில் சஞ்சலமின்றி நின்று போர் புரிந்தனர் தமிழ்நாட்டு மெய்வீரர். மாற்றார் வில்லினின்று எழுந்து வந்த அம்புகளை மலைபோன்ற தன் நெஞ்சிலே தாங்கி நிலைகுலையாமல் நின்றான் ஒரு வீரன். அவ்வீரத்தைக் கண்டு வியந்தவர்கள், 'சரந்தாங்கி' என்று சிறப்புப் பெயர் அளித்துச் சீராட்டினர். அறந்தாங்கிய சீலன் பெயர் தஞ்சை நாட்டிலே ஓர் ஊருக்கு அமைந்ததுபோல சரந்தாங்கிய வீரன் பெயர், பாண்டி நாட்டு நிலக்கோட்டை வட்டத்தில் ஓர் ஊரின் பெயராக உள்ளது. (சரம் – அம்பு)

அலகு 4

தமிழர் கலைகள்

கற்றல் நோக்கங்கள்

- தமிழர் கலைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- கோயில் அமைப்பின் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளுதல்
- சிற்பக் கலையின் வகைகளை அறிந்து கொள்ளுதல்.
- ஓவியங்களின் வாயிலாகப் பழங்காலச் செய்திகளைப் புரிந்து கொள்ளுதல்.
- இசைத்தமிழின் பெருமைகளை அறியச் செய்தல்.
- நடனக் கலையின் சிறப்புகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- தமிழகக் கோயில் கலை நுட்பங்களையும் தொழில் நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளுதல்.
- தமிழர்களின் வீரவிளையாட்டுகளைத் தெரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

மனித நாகரிகத்தின் வளர்ச்சி நிலையே கலைகளின் வெளிப்பாடுகள். தமிழர் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த, கலைகள் வாயில்களாக அமைந்தன. தொடக்க நிலையில், அவர்கள் மேற்கொண்ட ஒவ்வொரு தொழிலுமே கலையாக உருவெடுத்தது. மணிமேகலைக் காப்பியம், கலைகளை அறுபத்து நான்கு எனக் குறிப்பிட்டுள்ளது.

இப்பாடப்பகுதியில், கலைகள் பற்றிய அறிமுகம், அழகுக் கலைகளின் வகைகள், காலந்தோறும் தோன்றிய புதிய கலைகள், அவற்றைத் தமிழர்கள் போற்றி வளர்த்த முறைகள் முதலான செய்திகள் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

கலைகள் ஒரு நாட்டின் பன்முகப் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. மக்களின் பழக்கவழக்கம், வாழ்வியல் முறை மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும் விதமாகக் கலைகள் அமைகின்றன. தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன இதை 'ஆய கலைகள் அறுபத்து நான்கனையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' என்ற கம்பரின் கூற்று தெரிவிக்கின்றது. மனிதனின் வாழ்விற்குப் பயன்படும் அனைத்துமே கலைகள். இவை பொதுக் கலைகள், அழகுக் கலைகள் என இரண்டு வகைப்படும். காட்சி இன்பம், கேள்வி இன்பம் தருவன அழகுக்கலைகள். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என அழகுக்கலைகளை ஐந்தாகப் வகைப்படுத்தித் தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி கூறியுள்ளார்.

கட்டடக் கலை (Architecture)

தமிழகத்தில் உள்ள வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை தமிழகக் கட்டட கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் கோயில்களே காலத்தைக் கடந்து தமிழரின் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழகுற அமைப்பதற்கான 'மனை நூல்கள்'

XI Ethics_Lesson 4 Folder.indd 56 13-12-2021 10:41:42

இருந்தன. இதனை 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

மரக்கட்டடங்கள்

பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம். மரக்கட்டடங்கள் இயற்கையினால் அழிந்துவிடும் தன்மை உடையன. இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும். அதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன. மரக்கட்டடங்களோடு களிமண் கட்டடங்களும் தோன்றின. களிமண் கட்டடங்களின் மேற்கூரைகள் மரத்தால் வேயப்பட்டு இருந்தன. பின்னர், மரக்கட்டடங்களும் களிமண் கட்டடங்களும் சுடுமண்ணால் கட்டப்பட்ட உயர்ந்த கட்டடங்களாக மாறின.



சிதம்பரம் நடராஜர் கோயில் பொன் கூரை

செங்கல் கட்டடங்கள்

சங்க காலத்தில் இருந்தே சுட்ட செங்கற்களால் ஆன கட்டடங்களைத் தமிழகத்தில் காணலாம். செங்கற் கோயில்கள் மரக் கோயில்களைவிட உறுதியாகவும் நீடித்த தன்மை உடையனவாகவும் விளங்கின. கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இருந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.

அரியலூர் செங்கற்கோயில்

குடைவரைக் கோயில்கள்

மண்டகப்பட்டு குடைவரைக் கோயில்

பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும். இவை கருவறை, முன் மண்டபம், தூண்கள் என்ற அமைப்பைக் கொண்டிருந்தன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் கி.பி.(பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன், முதல் குடைவரைக் கோயிலை அமைத்தான். முற்காலப் பாண்டியர்கள் அமைத்த முதல் குடைவரைக் கோயில் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் ஆகும். குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தன. எனவே 'மண்டபக் கோயில்கள்' என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் 'பாறைக் கோயில்கள்' என்றும் அழைக்கப்பட்டன.

மாமல்லபுரம்

ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கற் கோயில்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவற்றை அமைக்க, பாறைகளை மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மாமல்லபுரத்தின் மகிசாசுரமர்த்தினி கோயிலின் முன் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாமல் உள்ள ஒற்றைக்கல் கோயில் இதற்குச் சான்றாகும்.

கற்றளிகள்

கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் 'கற்றளிகள்' என்று பெயர். கி.பி ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனமலை ஆகிய ஊர்களில் காணப்படும் கற்றளிகள் காலத்தால் முந்தியவை. கி.பி.(பொ.ஆ.) எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கட்டடங்களில், பெரும்பான்மை கற்றளிகளாகவே இருந்தன. பிற்காலச் சோழர்கள் செங்கற்களால் ஆன பழைய கோயில்களைக் கற்றளிகளாக மாற்றினர்.

மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்

திராவிடக் கட்டடக்கலை

இந்தியக் கோயில் கட்டடக்கலை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று வகைப்படும். சிகரத்தின் அமைப்பானது நான்கு பக்கங்களைக் கொண்டு சதுரமாக அமைந்திருந்தால் அந்த விமானம் 'நாகரம்' எனப்படும். இதுவே, வட இந்திய கட்டடக்கலையாகும். சிகரம் வட்டவடிவமாக இருப்பின் அந்த விமானம் 'வேசரம்' எனப்படும். இவை, இந்தியாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள பௌத்த சமயக் கட்டடக் கலையாகும். சிகரமானது எட்டுப்பட்டை அமைப்புடன் இருந்தால் அந்த விமானம் 'திராவிடம்' எனப்படும். திராவிடம் என்பது தென்னிந்தியக் கோயில் கட்டடக் கலை ஆகும். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே குமரி வரை திராவிடக்கலை பரவியுள்ளது.

பூரி ஜெகநாதர் கோயில்

மேலும், இக்கட்டடக்கலை இலங்கை, பர்மா, மலேசியா, கம்போடியா போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது. தமிழகக் கட்டடக் கலையை பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர, நாயக்கர் ஆகியோரின் காலக்கட்டத்தவை எனத் தனித்தனியாக வகைப்படுத்தலாம்.

விமானம்

திருவதிகை கோயில் விமானம்

XI Ethics_Lesson 4 Folder.indd 58 13-12-2021 10:41:43

www.tnschoolbooks.in

இந்துக் கோயில்களில் கர்ப்பக்கிரகம் என்னும் கருவறையின் மீது அமைக்கப்படும் பிரமிடு போன்ற கட்டடக்கலையை விமானம் என்பர். விமானத்தைப் பொதுவாக ‘ஷடங்க விமானம்’ என்பர். ஷடங்க விமானம் என்பது, ஆறு உறுப்புகளைக் குறிக்கும். அவை மனித உடலின் உறுப்புகளுடன் ஒப்புமையுடையவையாகும்.



கோயில் விமானம்

1. அதிட்டானம் - பாதம்
2. பித்தி - கால்
3. பிரஸ்தரம் - தோள்
4. கண்டம் - கழுத்து
5. சிகரம் - தலை
6. ஸ்தூபி - மகுடம்

விமானத்தின் மீது பெரும்பாலும் ஒரேயொரு கலசம் மட்டும் இடம்பெற்றிருக்கும். இவ்விமானங்கள் சோழர் காலத்தில்தான் மிக உயரமானவையாக அமைக்கப்பட்டன.

கோபுரம்

கோயில் உறுப்புகளில் மிக முக்கியமானதும் அழகுடையதுமாக விளங்குவது கோபுரம். ‘கோபுர தரிசனம் கோடி புண்ணியம்’ என்பர். இக்கோபுரம் சுற்றுப்புறச் சுவரில் ஊடறுத்துச் செல்லும் நுழைவாயிலின் மேல் கட்டப்பட்டதாகும். கோபுரத்தின் உச்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட கலசங்கள் இடம்பெற்றிருக்கும்.

சாரங்கபாணி கோயில் கோபுரம் – கும்பகோணம்

கோயில்களில் கோபுரம் அமைத்தல் பல்லவர் காலத்தில் தொடங்கி, விஜயநகர மன்னர்கள் காலத்தில் மிகவும் உன்னத நிலையை அடைந்தது எனலாம்.

இராஜசிம்மன் காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயிலில்தான் முதன்முதலாகச் சிறுகோபுரம் அமைக்கப்பட்டது. பல்லவர்களும், சோழர்களும் விமானத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் விமானங்களைச் சிறியனவாகவும், கோபுரங்களைப் பெரியனவாகவும் அமைத்தனர். கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில்தான் மிக உயர்ந்த கோபுரங்களை அமைக்கத் தொடங்கினார். இவர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற இடங்களில் பெரிய கோபுரங்களை அமைத்தார். பிற்காலத்தில் இவை ‘இராஜ கோபுரம்’ என்று அழைக்கப்பட்டன.

பல்லவர் காலக் கட்டடக்கலை

பல்லவர்கள், காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழகத்தை முந்நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். இவர்கள் மரம், சுதை, உலோகம், செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்கள் இன்றிக் காலத்தால் அழிக்க இயலாத குடைவரைக் கோயில்களை உருவாக்கினர்.

XI Ethics_Lesson 4 Folder.indd 59 13-12-2021 10:41:43

சாளுவன்குப்பம் – புலிக்குகை

மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், வல்லம், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய பகுதிகளில் பழைமையான பல்லவர் காலத்துக் கோயில்கள் உள்ளன. இவற்றில் மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் மிகவும் தொன்மையானவை. மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. 'சாளுவன் குப்பத்தில்' உள்ள குகைக்கோயிலில் வெளிமுகப்பு முழுவதும் யாளியின் முகம் செதுக்கப்பட்டுள்ளது. இது குகைக்கோயில்களின் அமைப்பிலேயே வியக்கத்தகு வடிவை உடையது. இப்பகுதி, தற்காலத்தில் 'புலிக்குகை' என்று அழைக்கப்படுகிறது.

கைலாசநாதர் கோயில் – காஞ்சிபுரம்

பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் அமைத்ததோடு அன்றிக் கட்டுமானக் கோயில்களையும் எழுப்பியுள்ளனர். இவற்றுள், அழகும் தொன்மையும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் கோயில். இது ராஜசிம்மனால் கட்டப்பட்டது.

பாண்டியர் காலக் கோயில்கள்

பல்லவர்கள், தமிழகத்தின் வட பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில், தென் பகுதியைப் பாண்டியர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். செழியன்சேந்தன் காலம் முதல் வீரபாண்டியன் காலம்வரை அவர்கள் தோற்றுவித்த குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்றளிகள், கட்டடக் கோயில்கள் ஆகியன பாண்டியர்கள் காலக் கட்டடக் கலைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

தமிழகத்தில் பாண்டியர்களின் குடைவரைக் கோயில்கள் சிற்பங்கள் மிகுந்து அழகுடன் காணப்படுகின்றன. பிள்ளையார்பட்டி, மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குன்றக்குடி, திருமயம், குடுமியான்மலை, சித்தன்னவாசல், மகிபாலன்பட்டி, பிரான்மலை, அழகிய பாண்டியபுரம், மூவரைவென்றான் போன்ற ஊர்களில் பாண்டியர்கள் காலக் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.

வெட்டுவான் கோயில் – கழுகுமலை

கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில்' பாண்டியரது ஒற்றைக் கற்றளிக்குச் சான்றாகும். இது மலையின் மேலிருந்து கீழ்நோக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இது 'தென்னகத்து எல்லோரா' என்று அழைக்கப்படுகிறது. திருப்பத்தூர் திருக்கற்றளிநாதர் கோயில் பாண்டியர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

சோழர்காலக் கோயில்கள்

தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம் பொற்காலமாகும். விஜயாலயசோழன் முதல் மூன்றாம் இராஜராஜசோழன் வரையிலான மன்னர்கள், அழகு வாய்ந்த எண்ணற்ற கோயில்களை எழுப்பினர். செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களை எல்லாம் கருங்கற்களாலான கோயில்களாக மாற்றி அமைத்தனர். விஜயாலயசோழனால் கட்டப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலைக் கோயில் தனித்தன்மை வாய்ந்தது. இக்கோயிலின் வெளிச்சுவர் சதுர வடிவிலும் உட்சுவர் வட்ட வடிவிலும் உள்ளது.

நார்த்தாமலைக் கோயில்

'ஆதித்தசோழன்' காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினார். இக்கோயில்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. 'பராந்தகசோழன்' எழுப்பிய பிரம்மபுரீசுவரர் கோயில், எறும்பூர் கடம்பவனேசுவரர் கோயில் ஆகியன சோழர் காலக் கட்டடக்கலையின் எழிலையும் எளிமையையும் விளக்குவன. சோழர் காலக் கட்டடக் கலையில் 'செம்பியன்மாதேவியின்' பங்கு குறிப்பிடத்தக்கது. இவர் பாடல் பெற்ற பல தலங்களைக் கற்றளிகளாக மாற்றியமைத்துப் பெரும் பொருள்களை வழங்கினார். இராஜராஜசோழன் எழுப்பிய தஞ்சைப் பெரியகோயில் 'தென்னகத்தின் மேரு' என அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது. இக்கோயிலே தமிழகக் கட்டடக் கலையின் மணிமகுடமாக விளங்குகின்றது. தஞ்சையின் சுற்று வட்டாரப் பகுதிகளில் கருங்கற்களே இல்லாத நிலையில் முற்றிலும் கருங்கற்களைக் கொண்டே 216 அடி உயரமும் 13 அடுக்குகளையும் கொண்ட விமானத்தை அமைத்து 'இராஜராஜேசுவரம்' எனப் பெயரிட்டார் இராஜராஜன். இதன் முதல் வாசல் 'கேரளாந்தகன் திருவாசல்' என்றும், இரண்டாம் வாசல் 'இராஜராஜன் திருவாசல்' என்றும் அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலின் உச்சியில் உள்ள எண்கோண வடிவிலான சிகரம் 80 டன் எடை கொண்டது. இதனை, 1987ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (The United Nations Educational, Scientific and Cultural Organisation – UNESCO) உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

தஞ்சைப் பெரிய கோயில்

உங்களுக்குத் தெரியுமா?

மிக உயரமான விமானத்தை உடைய தமிழகக் கோயில்கள்:

தஞ்சைப் பெரிய கோயில் – 216 அடி உயரம்- முதலாம் இராஜராஜ சோழன்

கங்கை கொண்ட சோழபுரம் – 170 அடி உயரம் – முதலாம் இராஜேந்திர சோழன்

திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயில் - 126 அடி உயரம் – மூன்றாம் குலோத்துங்க சோழன்

கங்கை கொண்ட சோழபுரம்

இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம் கோயிலை அமைத்தார். இது 170 அடி உயரம் கொண்டது. இக்கோயில் சிற்பக் களஞ்சியமாக விளங்குகின்றது.

விஜயநகரப் பேரரசர் காலம் மற்றும் நாயக்கர் காலம்

விஜயநகரப் பேரரசின் காலத்தில் தமிழகக் கட்டடக்கலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. சோழர், பாண்டியர் காலக் கட்டடக்கலையின் தொடர்ச்சியாகவே விஜயநகரப் பேரரசுக் காலக் கட்டடக்கலை விளங்குகிறது. ஆனால் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகள் இக்காலக் கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகளாகும். இக்கோயில்களில், விமானங்கள் சிறியதாகவும், கோபுரங்கள் உயரமாகவும் உள்ளன. திருவண்ணாமலை, மதுரை, இராமேசுவரம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில் கோபுரங்கள் இக்காலத்தவையாகும்.

ஜலகண்டேஸ்வரர் கோயில் – வேலூர்

நாயக்கர் காலக் கட்டடக்கலை விஜயநகரக் காலக் கட்டடக்கலையைப் பின்பற்றியே எழுந்தது.

மதுரை நாயக்கர் மஹால்

நூறுகால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்புதல் இவர்களின் தனிச் சிறப்பு. திருமலை நாயக்கர் மகால், இராமேசுவரம் இராமநாதசாமி கோயில் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில் புது மண்டபம், திருச்சி மலைமீது கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் ஆகியன இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தமிழர் கட்டடக்கலையின் நெடிய வரலாறு தமிழர் தம் பழைமையையும் வளமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

திருவரங்கம் குதிரை மண்டபம்

உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்தில் ஆயிரங்கால் மண்டபங்கள் அமைந்துள்ள கோயில்களில் குறிப்பிடத்தக்கவை:

மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோயில்

சிற்பக்கலை (Sculpture)

சங்ககாலம்

நடுகற்கள், சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு முதலானவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'நடுகல்' என்பது, போரில் வீரமரணமடைந்த அல்லது மக்களுக்காக உயிர் துறந்த வீரனின் பெயரும் பெருமையும் எழுதி நட்டுவைத்து வழிபடும் கல் ஆகும். இது 'வீரக்கல்' அல்லது 'நினைவுக்கல்' என்றும் அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்த நடுகல் வழிபடும் முறை, பிற்காலத்தில் வீரர்களின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் முறையாக வளர்ந்தது. தெய்வங்களுக்குச் சுதை உருவங்கள் செய்து வழிபட்டனர். இதுவே, கல்லில் சிற்பம் செய்யும் கலையாக வளர்ச்சி பெற்றது. விழாக்காலங்களில் களிமண்ணால் விலங்குகள் மற்றும் மனிதர்களின் உருவங்களைச் செய்து வைத்து வழிபடுவது கதிரை எடுப்பு, உருவாரம் எனப்படும். கல்லினால் செய்யப்படுவது கற்சிற்பங்கள் எனவும் உலோகத்தினால் செய்யப்படுவது படிம உருவங்கள் என்றும் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் மரச்சிற்பங்கள் அமைக்கப்பட்டதைப் பரிபாடல் மூலம் அறியலாம் கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் அக்காலச் சுடுமண் ஓடுகளும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சுதைச்சிற்பங்களை இந்திர விழாவில் கூடிய மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என மணிமேகலை காப்பியம் எடுத்துரைக்கின்றது. சிற்பக் கலைஞர்களை 'மண்ணீட்டாளர்' என அழைக்கும் வழக்கம் இருந்ததை மணிமேகலையின் (28:37) மூலம் அறியலாம். கி.பி.(பொ.ஆ.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி.(பொ.ஆ.) பத்தாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்த சமண சமயங்கள் பரவி இருந்தன. தொடக்க காலத்தில் பௌத்தர்கள் பாதபீடிகை, தருமச்சக்கரம் முதலியவற்றை வைத்து வணங்கினர். பின்னரே புத்தர் திரு உருவங்களை வணங்கும் முறை தோன்றியது. சமண சமயத்தில் அருகப்பெருமானின் உருவத்தையும் தீர்த்தங்கரர்களின் உருவங்களையும் வணங்கினர்.

உங்களுக்குத் தெரியுமா?

"சுதை என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு முதலியவற்றைக் கலந்து அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது" என அ. தட்சிணாமூர்த்தி குறிப்பிடுகிறார்.

சிற்பங்கள்

இயற்கை உருவங்களையும் கற்பனை உருவங்களையும் வடிப்பது சிற்பக்கலை எனப்படும். கல், சுதை (சுண்ணாம்புக் காரை), மரம், மெழுகு, அரக்கு, தந்தம், உலோகம் ஆகியவற்றால் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. இவற்றைப் புடைப்புச்சிற்பங்கள், தனிச்சிற்பங்கள் என வகைப்படுத்துவர். கல், மரம், சுவர், பலகை போன்றவற்றில் புடைப்பாக உருவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்படும் சிற்பம் புடைப்புச்சிற்பம் எனப்படும். ஓர் உருவத்தின் முன்புறமும் பின்புறமும் முழுவடிவமாக வடித்தல் தனிச்சிற்பம் எனப்படும்.

XI Ethics_Lesson 4 Folder.indd 63 13-12-2021 10:41:45

சுவர் புடைப்புச் சிற்பம்

உங்களுக்குத் தெரியுமா?

தமிழகத்தில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலையைப் பயிற்றுவிக்கும் அரசு கல்லூரி மாமல்லபுரத்தில் உள்ளது.

தனி உருவச் சிற்பம் – புத்தர்

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, கோயில்களை அடிப்படையாகக்கொண்டுவளர்த்தெடுக்கப்பட்டது. தொடக்ககாலச் சிற்பங்கள் மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்டவை. இப்பொழுதும் அத்தகைய சிற்பங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக சுந்தர வரதராஜப்பெருமாள் கோயிலில் உள்ள கடவுள் உருவங்கள் மரத்தால் செய்யப்பட்டவையாக உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டவதூதப் பெருமாள் முதலிய உருவங்கள் சுதையினால் செய்யப்பட்டவை. கல்லினால் சிற்பம் அமைக்கும் முறை பல்லவர் காலத்திலும், உலோகத்தினால் சிற்பம் அமைக்கும் முறை பிற்காலச் சோழர் காலத்திலும் பின்பற்றப்பட்டன.

பிரதிமைகள்

தனிப்பட்ட ஒருவரின் உருவஅமைப்பை உள்ளது உள்ளவாறே அமைப்பது பிரதிமைகள் எனப்படும்.பிரதிமைஉருவங்களில்பழைமையானது பல்லவ அரசர் உருவங்கள் ஆகும். உலோகங்களினால் பிரதிமைகள் அமைக்கும் வழக்கம் சோழர் காலத்தில் தோன்றியது.

உலோகப் பிரதிமை

பல்லவர் காலம்

பல்லவர் காலம், கோயில் சிற்பக்கலையின் தொடக்க காலம் எனலாம். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களில் உள்ள துவாரபாலகர்கள் என்று அழைக்கப்படும் வாயிற்காவலர்களின் உருவங்கள் புடைப்புச்சிற்பங்களாக உள்ளன. இவையே தமிழகத்தில் காணப்படும் முதல் கற்சிற்பங்களாகும். இவர் காலத்தில் வாயிற்காவலர்களின் சிற்பங்கள் மட்டுமே கற்களால் உருவாக்கப்பட்டவை. கருவறையில் உள்ள சிற்பங்கள் மரத்தாலோ சுதையாலோ

செய்யப்பட்டிருந்தன. பல்லவர் காலத்தில் கடவுள் போலவே அரசன் அரசி உருவங்களையும் உயரமாகச் செதுக்கும் வழக்கம் இருந்தது.

பல்லவர்காலச் சிற்பம்

மாமல்லபுரத்தில் கோவர்த்தன மலை மண்டபத்தின் அருகில் 96 அடி அகலமும் 43 அடி உயரமும் கொண்ட பாறை உள்ளது. இப்பாறையின் இடையில் இயற்கையாகவே கீழ் நோக்கிய பள்ளம் காணப்படுகிறது. சிற்பிகள் இந்த இயற்கையான வடிவமைப்பைப் பயன்படுத்தித் தம் கற்பனையையும் கலந்து 'பகீரதன் தவம்' என்ற சிற்பத்தொகுதியாக வடிவமைத்துள்ளனர். கங்கை பூமிக்கு வர பகீரதன் சிவபெருமானை நோக்கித் தவமிருக்கும் காட்சியும், அந்தத் தவத்தின் பயனாகக் கங்கை பூமிக்கு வரும் நிகழ்வையும் அப்பாறைப் பகுதியில் வடிவமைத்துள்ளனர். இவர்கள் காலத்தில் புராணச்செய்திகளைச் சிற்பங்களாக வடிவமைத்துள்ளனர். நாமக்கல்லில் உள்ள மலைக்கோட்டையின் இருபுறமும் மகேந்திரவர்மன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. மலையின் கிழக்குப் பகுதியில் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலும், மேற்குப் பகுதியில் நரசிம்மப் பெருமாள் கோயிலும் உள்ளன. ஒரே மலையில் இரண்டு குடைவரைக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பு அம்சமாகும். இதன் சிற்பங்கள் நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடியவை. இங்கு திருமாலின் பத்து அவதாரங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் காலத்து ஒற்றைக்கல் இரதங்கள், கோயில் சிற்பங்கள் போன்றவை தனித்துவமானவையாக உள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

ஆந்திராவில் உள்ள அனந்தப்பூர் மாவட்டத்தில் லெபாஷி என்ற ஊரிலுள்ள நந்தி சிற்பம் ஒரே கல்லால் வடிக்கப்பட்டது. இதுவே, உலகின் மிகப்பெரிய நந்தியாகும்.

சோழர் காலம்

பல்லவர் காலச்சிற்பங்களின் வளர்ச்சியுற்ற நிலையே சோழர் காலச் சிற்பங்களாக இருந்தன. பல்லவர் காலத்தில் தாழ்ந்த புடைப்புச்சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தவை, சோழர் காலத்தில் உயர்ந்த புடைப்புச்சிற்பங்களாகவும் முழு உருவச்சிற்பங்களாகவும் அமைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இச்சிற்பக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் மட்டுமன்றி கஜுராகோ, உதயபுரி, புவனேஷ்வர் ஆகிய பகுதிகளிலும் சிற்பக்கலை வளர்ந்த நிலையில் இருந்தது. உயரமான மகுடங்கள், மெல்லிய நெடிய உடலமைப்பு போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பாகும். பிற்காலச் சோழர்களின் சிற்பங்களில் அணிகலன்களும் அலங்காரங்களும் மிகுந்து காணப்பட்டன. மேலும், வட்டமான முக அமைப்பும் சற்று தடித்தும் குட்டையானதுமான உடல் அமைப்புகளுடனும் சிற்பங்கள் காணப்பட்டன.

இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பிரகதீசுவரர் கோயிலின் தெற்கு நோக்கிய வாயிலின் கீழ்ப்புறம் புத்தரின் சிற்பமும் இக்கோயிலின் விமானத்தின் வலப்பக்கம் சமணர் உருவங்களும் உள்ளன. இக்கோயிலின் நந்தி சிற்பம் இந்தியாவில் உள்ள நந்திச் சிற்பங்களில் இரண்டாவது பெரிய சிற்பமாகும்.

சண்டேச அனுகிரக மூர்த்தி

இதன் உயரம் 12 அடி, நீளம் 19.5 அடி, அகலம் 8.25 அடியாகும். இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் கோயிலில் நாயன்மார்களின் வாழ்க்கையைக் குறிக்கும் 90 சிற்பங்கள் உள்ளன.

தஞ்சாவூர் நந்தி

செப்புத் திருமேனிகள்

தமிழர்கள் உலகத்திற்கு வழங்கிய நன்கொடை, செப்புத்திருமேனிகள். சங்க காலத்திலும் உலோகச் சிற்பங்கள் இருந்திருக்கலாம் என்ற செய்தியை மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். இருப்பினும் சோழர் காலமே உலோகச் சிற்பங்கள் அல்லது செப்புத்திருமேனிகளின் பொற்காலம்.

விஜயாலயன், பராந்தகன், செம்பியன் மாதேவி, முதலாம் இராஜராஜன் ஆகியோரது காலத்தில் செப்புத்திருமேனிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சோழர் காலச் செப்புத் திருமேனிகளுள் நடராஜர் சிலை உலகப்புகழ் வாய்ந்தது. சோழ அரசர்களும் அவர்களது குடும்பத்தாரும் கோயில்களுக்குச் செப்புத் திருமேனிகளைக் கொடையாகக் கொடுத்த செய்திகளைக்கல்வெட்டுகளிலும்செப்பேடுகளிலும் காணலாம். பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக்கலை என்பது, சோழர் காலச் சிற்பக்கலையின் தொடர்ச்சியாகவே இருந்தது. இவர்கள் கோயில்களின் வெளிப்புறச் சுவர்களையும் சிற்பங்களையும் செம்மைப் படுத்துவதிலும் கவனம் செலுத்தினர்.

நடராஜர் உலோகத் திருமேனி

விஜயநகர மற்றும் நாயக்கர் காலம்

விஜயநகர மன்னர்கள் கட்டடக்கலையில் கொண்டிருந்த ஆர்வம் சிற்பக்கலையிலும் வெளிப்பட்டது. கோபுரங்களிலும், கோயில் விமானங்களிலும் ஏராளமான சிற்பங்களை

அமைத்தனர். உயர்ந்த தூண்களையுடைய மண்டபங்கள் அமைத்தல், மண்டபங்களின் தூண்களில் யாளி, குதிரை, மனித உருவங்கள், புராணத் தொன்மங்களை விளக்கும் சிற்பங்கள் போன்றவை விஜயநகர நாயக்கர் காலச்சிற்பங்களின் தனித்தன்மை. இவர்கள் காலச் சிற்பங்கள் இரும்பில் வார்த்தது போன்ற உறுதி உடையவை. விசயநகரச் சிற்பங்கள் மூக்குக் கூர்மையானதாகவும் வயிறு வட்டமானதாகவும் இருக்கும். மனித உருவச் சிற்பங்களில் அணிகலன்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகே கோயில்களில் சிற்பங்கள் அதிக அளவில் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. வேட்டையாடுதல், கோலாட்டம், பாம்பாட்டி நடனம் போன்ற சிற்பங்களைக் கோயில்களில் இடம்பெறச் செய்தல் இவர்கள் கால வழக்கமாக இருந்தது. இத்தகைய சிற்பங்களை மதுரை மீனாட்சியம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் போன்ற இடங்களில் காணலாம். தற்காலத்தில் மெழுகு, மணல், கண்ணாடி போன்றவற்றினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

ஓவியக்கலை (Painting)

கட்டடக்கலையும் சிற்பக்கலையும் போன்றே ஓவியக்கலையும் கண்ணால் கண்டு மகிழத்தகுந்த கலையாகும். அழகினைப் பாராட்ட, புலவர்கள் ஓவியத்தை உவமையாகக் கூறுவர். ஓவியக்கலை தொன்மையான வரலாற்றினை உடையது. இயற்கையோடு கலந்து வாழ்ந்த மக்கள், தாங்கள் கண்ட காட்சியினையும் வேட்டைக் காட்சிகளையும் வரைந்து மகிழ்ந்தனர். தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களின் மேல், எழுத்துகளும் பல உருவங்களும் காணப்படுகின்றன. தொடக்க காலத்தில் ஓவிய எழுத்துகளே வழக்கில் இருந்தன.

'ஒவ்வு' என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றியதே ஓவியம். ஒவ்வு என்பதற்கு ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருத்தல் என்று பொருள். இச்சொல்லிலிருந்து தோன்றிய ஓவு, ஒவ்வு போன்ற சொற்கள் ஓவியத்தைக் குறிக்கின்றன. தான்கண்ட காட்சியை அப்படியே வரைவது காட்சி ஓவியம், மனத்தில் கற்பனை செய்ததை வரைதல் கற்பனை ஓவியம் ஆகும். தொல் பழங்கால மனிதர் சொற்களை அறியும் முன்பே தம் எண்ணங்களைக் காட்சிகளாக உணர்த்தக் கற்றுக்கொண்டனர். தமக்கு மகிழ்வளித்த வேட்டைக் காட்சிகளையும் பிறவற்றையும் ஓவியங்களாகக் குகைகளில் தீட்டியுள்ளனர். பச்சிலைச்சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகியனவற்றைக் கொண்டு அவ்வோவியங்களுக்கு வண்ணம் தீட்டினர்.

ஓவியத்தை வட்டிகைச் செய்தி, சித்திரச் செய்தி என்றும் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பழங்காலத்தில் சுவர் ஓவியங்களே பெரிதும் காணப்பட்டன. அதனால்தான் "சுவர் இல்லாமல் சித்திரம் இல்லை", சுவரை வைத்தல்லவா சித்திரம் வரைய வேண்டும் என்ற பழமொழிகள் தோன்றின. வளைந்தகோடு, கோணக்கோடு, நேர்க்கோடு ஆகியவற்றைக் கொண்டு ஓவியங்கள் எழுதப்பட்டன. இவ்வாறான கோட்டோவியங்களுக்குப் 'புனையா ஓவியம்' என்று பெயர். இதனை 'வரி வடிவ ஓவியம்' என்றும் அழைப்பர். மடலேறுதலின் பொழுது பனை ஓலையில் வரைந்த கோடுகளால் ஆன ஓவியம் வரிவடிவ ஓவியமாகும். நெடுநல்வாடையில் முதன்முதலாக வரிவடிவ ஓவியம் பற்றிய செய்தி கிடைக்கின்றது. புனையா ஓவியத்தில் பலவித வண்ணங்களைப் புனைந்து அமைக்கும் ஓவியம், 'முழுஓவியம்' எனப்படும். ஓவியம் வரைவோரை ஓவியன், கண்ணுள்வினைஞர், கைவினைஞர், ஓவியவல்லோன், ஓவியப்புலவன் என்றும் அழைப்பர்.

காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய பகுதிகளில் நடந்த அகழாய்வுகளில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின் மீது காணப்படும் புடைப்பு ஓவியங்களைக் கொண்டு தொன்மைக்கால மக்களின் ஓவியத் திறனை உணரலாம். கீழடியில்

நடத்தப்பட்ட அகழாய்வில் கருப்பு சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன.

மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் பிரதிமை என அழைக்கப்படுகின்றன. தெய்வ வடிவங்களைக் காட்டும் ஓவியங்கள் படிமை எனப்படுகின்றன. அரண்மனைகள், மாளிகைகள், கோயில்கள், பெரிய வீடுகள் போன்றவற்றின் சுவர்களில் சித்திரங்கள் வரையப்பட்டன. மேலும் வெண்மையான சுதை பூசப்பட்ட சுவர்களில் சிவப்பு அல்லது கருப்பு வண்ணத்தால் கோட்டோவியங்கள் வரையப்பட்டன. இவற்றின் மேல் பல வண்ணங்கள் தீட்டும் வழக்கம் இருந்தது. தொல்காப்பியத்தில் ஓவியம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு நடுகல் வைக்கப்பட்டது. நடுகல்லில் அவ்வீரனின் உருவத்தைச் செதுக்கும் முன்பே ஓவியமாக வரைந்து கொள்வர். அவ்வோவியத்தைப் பார்த்துக் கல்லில் செதுக்குவர். எழுத்து என்ற சொல்லுக்கு 'ஓவியம்' என்றே பொருள் கொள்வர்

பண்டைய தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்காகத் தங்கள் அரண்மனைகளிலும் கோயில்களிலும் 'ஓவியமாடம்' என்ற தனிப்பகுதியை அமைத்தனர். இச்செய்தியினை இலக்கியங்கள் மூலம் அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அரண்மனையில் சித்திர மண்டபம் இருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார். சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் கலைகள் தழைத்து ஓங்கின. பனமலை, காஞ்சிபுரம், திருமலைபுரம் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஓவியங்கள் பல்லவர் காலக் கலைத் திறனைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தஞ்சையில் வரையப்பட்டுள்ள சிவபெருமான், நாட்டியமாடும் பெண்கள், சேரமான் பெருமாள் நாயனார், இராஜராஜன், கருவூர்த்தேவர் ஓவியங்கள் சோழர் காலத்தவை ஆகும். விஜயநகர நாயக்கர் காலத்து ஓவியங்களைத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் காணமுடிகின்றது.

பாறை ஓவியங்கள்

தமிழகத்தில் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்கள், இந்நிலப்பகுதியின் தொன்மையைக் குறிக்கும் சான்றுகளாக அமைகின்றன. இவை மக்களின் கலைஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ள உறுதுணையாக உள்ளன. மலைப்பாறைகளைக் குடைந்து அமைத்த குகைச்சுவர்களின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்குகைகளின் சுவர்கள் கரடு முரடாக இருந்தபடியால் உமி, சாணம், களிமண் முதலான பொருள்களைக் கொண்டு பதப்படுத்திய சுதையைச் சுவர்களின் மேல் பூசினார்கள். பின்னர் அச்சுதைப் பூச்சின் மேல் ஓவியங்கள் வரையப்பட்டன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத்தான். அக்குகைக்கோயில் சுவர்களில் சித்திரங்களை எழுதுவித்தான். அவனே ஓவியக் கலையைப் பயின்றவன் என்பதை "சித்திரக்காரப்புலி" என்ற அவன் பட்டப்பெயரின் மூலம் அறியலாம். தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மல்லபாடியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பாறைஓவியம் முக்கியமான ஒரு கண்டுபிடிப்பாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சித்தன்னவாசல் குகை ஓவியங்கள்

சித்தன்னவாசல் குகை ஓவியம்

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலில் அமைந்துள்ள குகை ஓவியங்கள் புகழ் வாய்ந்தவை. இவை கி.பி.(பொ.ஆ.)

XI Ethics_Lesson 4 Folder.indd 68 13-12-2021 10:41:46

7 மற்றும் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் காலத்து ஓவியங்கள். இவ்வோவியங்கள் மூலிகைகளால் ஆன வண்ணங்களைக் கொண்டவை. சித்தன்னவாசலின் ஏழடிப்பட்டம் பகுதியின் மேல்கூரைப் பகுதியிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

சுவர் ஓவியங்கள்

இலக்கியங்கள், சுவர் ஓவியங்களைப் பற்றிப் பெரிதும் பேசுகின்றன. உதயணனின் பள்ளியறைச் சுவர் ஓவியம் பற்றியும், கோப்பெருந்தேவியின் பள்ளியறைச் சுவர் ஓவியங்கள் பற்றியும் இலக்கியங்களில் காணலாம். பாண்டியன் நன்மாறன், தனது சித்திர மாடத்தில் இருந்த பொழுது உயிர் துறந்தமையால் "பாண்டியன் சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன்" என அழைக்கப்பட்டதைப் புறநானூற்றில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகின்றார். நக்கீரரும் தமது நெடுநல்வாடையில் பாண்டியனின் சித்திரமாடத்தைப் பற்றிக் கூறுகிறார். திருப்பரங்குன்ற கோயில் மண்டபத்தில் "எழு தொழில் அம்பலம்" என்ற பெயரில் ஓவியச்சாலை இருந்த செய்தியினைப் பரிபாடலின் மூலம் அறியலாம். இரதி, காமன், பூனை வடிவம் கொண்ட இந்திரன், அகலிகை, கௌதம முனிவர் முதலான ஓவியங்கள் இங்குக் காணப்பட்ட செய்தியினை இலக்கியங்களில் காணலாம். இந்த "எழு தொழில் அம்பலம்" பிற்காலத்தில் அழிந்தது. உதயணனின் பள்ளியறைச் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்த காட்சியைப் பெருங்கதையில் காணலாம். திருச்சி மாவட்டத்தின் திருவெறும்பூர் கோயிலில் காணப்பட்ட சித்திரக்கூடம் பற்றிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இவை மட்டுமன்றிச் செல்வந்தர் வீட்டின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. புத்த தவச்சாலைகள் மற்றும் கோவலனின் தந்தை மாசாத்துவான் தவமியற்றிய சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தியினை மணிமேகலை கூறுகின்றது.

தஞ்சாவூர் சுவர் ஓவியம்

துகிலோவியம்

'படம்' என்ற சொல் 'படாம்' என்ற சொல்லில் இருந்து தோன்றியது. படாம் என்பதற்குத் துணி என்று பொருள். பழங்காலத்தில் துணிகளில் ஓவியங்களை வரைந்தார்கள். அவற்றிற்குச் சித்திரப்படாம், சித்திரத்திரை என்று பெயர். சித்திரம் எழுதும் கோலுக்குத் துகிலிகை என்று பெயர். மணிமேகலையில், சீத்தலைச் சாத்தனார் காவிரிப்பூம்பட்டினத்து உவவனம் என்னும் சோலையின் காட்சி சித்திரப்படாம் போன்று அழகுடன் காணப்பட்டது என்கிறார். தக்க நாட்டிலே ஆங்காங்கே தாமரைப் பூக்களும் தாமரை இலைகளும் அடர்ந்த குளங்களும் காணப்படும் காட்சியினைத் திருத்தக்கதேவர் வருணிக்கும் பொழுது, துணியில் எழுதிய தாமரைக்குளத்தின் காட்சியைப் போலக் காணப்படுகிறது என்கிறார். இளங்கோவடிகள் ஓவியம் வரையப்பட்ட துணியை 'ஓவியஎழினி' என்கிறார். பலகைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. அவ்வாறு ஓவியம் வரையப்பட்ட பலகை 'வட்டிகைப்பலகை' எனப்பட்டது.



துகிலோவியம்

தஞ்சாவூர் ஓவியங்கள்

சோழர் காலத்தில் தஞ்சாவூர் ஓவியங்கள் தோற்றம் பெற்றன. மராட்டிய மன்னன் சரபோஜியின் காலத்தில் தஞ்சாவூரில் இது வளரச்சி பெற்றது. இவ்வோவியங்கள் தமிழகத்தின் புவிசார் குறியீடுகளில் ஒன்றாகும். இவ்வகை ஓவியங்கள் பெரிய மரச்சட்டத்தின் நடுவே அமைந்திருக்கும். இச்சட்டமும் ஓவியத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. கடவுளின் உருவங்கள் கித்தானின் பெரும் பகுதியை நிறைத்திருக்கும். மற்ற உருவங்கள் சிறிதாக அதன் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும். இதில் காணப்படும் ஓவியங்களின் உருவங்கள் உருண்டையாகவும் பருமனான அமைப்புடனும் காணப்படுகின்றன. இதன் உருவ அமைப்புகளில் பெண்தன்மை மிகுந்துநளினத்துடன் காணப்படும்.

இவ்வோவியங்கள் நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய வண்ணங்களில் மைய ஓவியம் அமைந்திருக்கும். கரும்பச்சை, சிவப்பு, அடர்நீலம் போன்ற வண்ணங்களைப் பின்புலமாகக் கொண்டு காணப்படும். அடர்த்தியான கோடுகள் ஓவியத்தைத் தெளிவாகக் காட்டும் விதமாக அமைந்திருக்கும். இவ்வுருவக்கோடுகள் வண்ணங்களுக்கான எல்லையாகவும் அமையும்.

பழங்கால மக்கள், அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீது ஓவியம் வரைந்து மகிழ்ந்திருந்தனர். அன்றாடம் பயன்படுத்தும்

தஞ்சாவூர் ஓவியம்

பாத்திரங்கள், கேடயம், கட்டில், வாள் போன்றவற்றில் ஓவியங்களை வரைந்தனர். தமிழின் நாற்கவிகளில் சித்திரகவியும் ஒன்றாகும். சித்திரகவி போலவே சித்திரநதி, சித்திரசபை, சித்திரதடாகம் எனப் பெயர் சூட்டியதில் இருந்து ஓவியத்திற்குத் தமிழர்கள் அளித்த முக்கியத்துவத்தை அறியலாம். தற்காலத்தில் எண்ணெய் ஓவியம், வண்ணக்கோல் ஓவியம், செயற்கை வண்ணக் கூழ்ம ஓவியம், நீர் வண்ண ஓவியம், மை ஓவியம், பூச்சு ஓவியம், சூடான மெழுகு ஓவியம், நீரில் கரையும் எண்ணெய் ஓவியங்கள் போன்ற ஓவியங்கள் காணப்படுகின்றன.

தமிழர்களின் மிகத் தொன்மைகளுள் ஒன்று ஓவியம். எழுத்தால் உணர்த்தப்பட இயலாத இடைவெளிகளை ஓவியங்கள் நிரப்பின. காலந்தோறும் ஓவியக் கலையிலும் வளர்ச்சிப்படி நிலைகள் உருவாகின. பாறை ஓவியங்களில் தொடங்கி இன்று பல்வேறு நாடுகளின் ஓவிய நுட்பங்களை உள்வாங்கிப் படிநிலை மாற்றம் பெற்று வளர்ந்துள்ளன.

இசைக் கலை (Music)

இயற்றப்பட்ட செய்யுளை உரிய ஓசையோடு இசைப்பதால் இதற்கு இசை என்று பெயர். எனவே, இசை என்னும் சொல்

காரணப்பெயர் ஆகும். இவ்விசைக்கு அடிப்படையானவை ஓசை என்று கூறுவர்.

'ஏழிசையேழ் நரம்பின் ஓசையை' என்ற திருப்பதிகத்தொடர் மூலம் இசை ஏழு என்பதையும் இவை தனித்தனி நரம்புகளில் இசைக்கப்பட்டன என்பதையும் அறியலாம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு இசைகள் ஆகும். ஏழிசைகளுள் தாரம் என்னும் இசையே, இசை வளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

மிடற்றினால் குரலும் நாவினால் துத்தமும் அண்ணத்தால் கைக்கிளையும் சிரத்தால் உழையும் நெற்றியால் இளியும் நெஞ்சால் விளரியும் மூக்கால் தாரமும் தோன்றுவதாக இசை இலக்கண நூல்கள் கூறுகின்றன. இவ்விசைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை 'ஆரோசை' எனவும் தாழ்ந்து செல்லும் இசைநிரலை 'அமரோசை' எனவும் சேக்கிழார் கூறுகிறார். ஆரோசை, அமரோசை ஆகியவற்றை இக்காலத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பர்.

இசைக்கருவிகள்

இசைக்கு உரிய கருவிகளைத் தோல்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்துவர்.



தோல்கருவிகள்

பண்டைய நாளில் வாழ்ந்த இசைக் கலைஞர்கள் குழலையும் யாழையும் கொண்டே ஏழிசைத் திறங்களை இசைத்துள்ளனர். இவை தனிச் சிறப்புடையனவாகக் கருதப்பட்டதைக் 'குழலினிது யாழினிது என்ப' என்ற வள்ளுவரின் தொடர் மூலம் அறியலாம்.

இசைக் கலைஞர்கள் துளைக்கருவிகளில் தொன்மையானது குழலே ஆகும். இது புல் வகையாகிய மூங்கிலில் செய்யப்பட்டதால் வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைக்கப்பட்டது.

துளைக்கருவிகள்

முற்காலத்தில் மூங்கிலிலும் சந்தனம், கருங்காலி, செங்காலி ஆகிய மரங்களிலும் வெண்கலத்திலும் செய்யப்பட்டது. 'வேய்ங்குழல்' முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக் கருவியாக விளங்கியது.

நரம்புக்கருவி

வில் நாணின் ஓசையைக் கேட்டு, அதன் இசை நுட்பத்தை உணர்ந்து, நாணின் நீளத்தைக் கூட்டியும் குறைத்தும் பல்வேறு இசை ஒலிகளை உருவாக்கினர். இவ்வாறு இசைகளைத் தரும் வில் பலவற்றை ஒன்றாக இணைத்து அமைக்கப்பட்ட நரம்புக்கருவியே, 'வில்யாழ்' ஆகும்.

நரம்புக்கருவி

ஆநிரைகளை மேய்க்கும் ஒருவன் குமிழமரக் கொம்புகளை வில்லாக வளைத்து அதில் மரல்நாரினை நரம்பாகக் கட்டி வில்யாழ் அமைத்துக் குறிஞ்சிப் பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இந்த வில்யாழை அடிப்படையாகக் கொண்டு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவையும் பெருங்கலம் என்னும் ஆதியாழும் அமைக்கப்பெற்றன.

தொல்காப்பியர் கூறும் தோல் இசைக் கருவிகளில் ஒன்று பறை. இது தோல் இசைக் கருவிகளின் தாயாகவும் கருதப்படுகிறது.

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சிறுபறை, பெரும்பறை, நாழிகைப்பறை எனத்தோல் கருவிகள் முப்பது உள்ளதாக அடியார்க்கு நல்லார் உரை கூறுகிறது. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட தோல் கருவி மத்தளம் ஆகும்.

இசைக்கும்போது மத்தளத்தை முதற்கருவியாகக் கொள்வர். இடையிடையே வாசிக்கச் சலிகை என்னும் கருவியைப் பயன்படுத்துவர். அதனால், இக்கருவியை இடைக்கருவி என்றும் சொல்வர்.

முதலாம் இராஜராஜசோழன் கட்டிய இராசராசேச்சுரக் கோயிலில் உடுக்கை வாசிப்பவரும், கெட்டிமேளம் வாசிப்பவரும் இருந்தனர் எனத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இசை நூல்கள்

இறையனார் களவியல் உரை மூலம் முதுநாரை, முதுகுருகு ஆகிய நூல்கள் இருந்தன என்பதை அறியமுடிகிறது. இந்நூலின் உரைப்பாயிரம் சிற்றிசை, பேரிசை ஆகிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இந்திரகாளியம் முதலான நூல்களைப் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இசை நுணுக்கம் என்னும் நூல் சயந்தன் என்னும் பாண்டிய இளவரசனால் இயற்றப்பட்டது என்று கூறியுள்ளார்.

யாப்பருங்கலக்காரிகை உரைப்பாயிரத்தில், குலோத்துங்கன் இசைநூல் என்ற நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இசை தொடர்பான பல நூல்களின் பெயர் கிடைத்த போதும் அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூல் தற்போது நமக்குக் கிடைத்துள்ளது. ப. சுந்தரேசனார் என்பவர் இந்நூலை உரையோடு வெளியிட்டுள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா?

இசைத்தூண்கள்

தமிழகத்தில் திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, செண்பகநல்லூர், மதுரை, தாடிக்கொம்பு, அழகர் கோயில், கிருஷ்ணாபுரம், தென்காசி, குற்றாலம், சுசீந்திரம், களக்காடு போன்ற இடங்களில் இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

இசைக் கலைஞர்கள்

பாணர், பாடினி ஆகியோர் வாய்ப்பாட்டிலும் இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களாக

விளங்கினர். பாணர் என்பவர், ஆண் இசைக்கலைஞர்; பாடினி என்பவள், பெண் இசைக்கலைஞர் ஆவர்; இவ்விசைக் கலைஞர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என வகைப்படுத்தப்பட்டனர்.

துளைக்கருவி வாசிப்போர், தோல்கருவி வாசிப்போர், நரம்புக்கருவி இசைப்போர், கண்டத்தால் பாடுவோர் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை கூறுகிறது.

இசைப்பாணர்கள் வாய்ப்பாட்டுப் பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். யாழ் என்னும் இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர்களை 'யாழ்ப்பாணர்' என அழைத்தனர். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய இலக்கியங்களில் யாழ்ப்பாணர் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. மண்டை எனப்படும் ஓட்டினைக் கையில் ஏந்திப் பாடியவர்கள், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர்.

இக்கலைஞர்கள் திருவிழாக்களிலும் அவைக்களத்திலும் பாடிப் பிறரை மகிழ்வித்தனர். தலைமக்களுக்கு இடையே தூதுவர்களாகவும் இருந்துள்ளனர்.

சங்க இலக்கியமும் இசையும்

சங்ககாலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு இசைக்குப் பெயர்கள் சொல்லப்பட்டன. குறிஞ்சி நிலத்திற்குக் குறிஞ்சிப்பண், முல்லை நிலத்திற்குச் சாதாரி, பாலைக்குப் பஞ்சுரப்பண், நெய்தலுக்குச் செவ்வழிப்பண், மருதத்திற்கு மருதப்பண் என ஐவகைப் பண்கள் இசைக்கப்பட்டன.

மலைச்சாரல் பகுதியில் விளைந்திருந்த தினைப்பயிரை உண்ணவந்த காட்டு யானை, அப்பயிரைக் காவல் காத்த பெண் இசைத்த குறிஞ்சிப்பண்ணைக் கேட்டுப் பயிரை உண்ணாமல் இசையில் மெய் மறந்து நின்றதை அகநானூறு கூறுகின்றது.

போரில் புண்பட்ட வீரரைப் பேய்களிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப்பண் பாடப்பட்டதாகப் புறநானூறு கூறுகிறது. யாழ் என்னும் இசைக் கருவிகளால் கலைஞர்கள் மருதப்பண்ணைப் பாடிப் பொழுது விடிந்ததாக மதுரைக்காஞ்சி கூறுகிறது. மேலும் அது ஆகுளி, முழவு என்னும் கருவிகளைக் கொண்டு செவ்வழிப்பண்ணை மாலைநேரத்தில் இசைத்தனர் என்பதையும் சுட்டுகிறது. இச்செவ்வழிப் பண்ணைக் கேட்டுத் தலைவனைப் பிரிந்த தலைவி மிகவும் வருத்தம் கொண்டாள் என்ற செய்தியும் உண்டு.

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களைத் தவிர காமரம், நைவளம் போன்ற பண்களும் சங்க காலத்தில் இருந்துள்ளன. வண்டின் ஓசைபோல் இருப்பது காமரம் என்று அழைக்கப்பட்டமைக்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.

பரிபாடலில் வெறியாட்டப்பாடல், வள்ளைப்பாடல் முதலிய இசைப்பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பாடலை இசைப்பதற்குரிய பண்ணும் இசை வகுத்த இசைக் கருவிகள் போன்ற தகவல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சிலம்பும் இசையும்

இசை ஆசிரியன், மத்தளம் இசைக்கும் தண்ணுமை ஆசிரியன், வேய்ங்குழல் ஊதுவோன், யாழ் ஆசிரியன் எனப் பலரும் மாதவி நாடக அரங்கில் ஆடும் ஆடலுக்குத் துணை நின்றார்கள் எனச் சிலம்பு கூறுகிறது.

இசையின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல்நடை, வாரம், கூடை, திரள் என இசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மந்த நடையாகத் தாழ்ந்து செல்லும் முறையில் இசைக்கப்படுவது முதல்நடை. முடுகிச் செல்லும் விரைந்த நடை உடையது திரள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இசை நடையை உடையது வாரம். சொற் செறிவும் இசைச் செறிவும் உடையது கூடை ஆகும்.

அரங்கேற்றுக்காதை, ஆய்ச்சியர்குரவை, கானல்வரி, வேனிற்காதை, கடலாடுகாதை, புறஞ்சேரியிறுத்தகாதை முதலிய பகுதிகள் இசைக்குறிப்புகள் நிரம்பியவை. மேலும் யாழ் அமைப்பு, யாழ் இசையின் அமைப்பு முதலியனவும் கூறப்பட்டுள்ளன. மேலும், பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் இசை பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

பக்தி இயக்கமும் இசையும்

செய்யுளைப் பண் அமைப்போடு, படைப்பாளனே படைப்பது ஒருவகை. செய்யுளை எழுதிப் பின் வேறொருவர் பண்ணிசைப்பது மற்றொரு வகை. தேவாரம் முதல்வகையைச் சேர்ந்தது என்பர். மாணிக்கவாசகர் தேவாரங்களைப் 'பண் சுமந்த பாடல்' என்று கூறுகிறார். எனவே, இறைவனின் அருளைச் சொற்களாக்கி இசைப்படுத்தியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் எனலாம்.

ஆநிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்ட பொழுது காலையில் மேய்ச்சலுக்குப் போவதும் மாலையில் வீடு திரும்புவதும் வழக்கம். ஒருநாள் மாலைநேரம் வந்தவுடன் ஆநிரைகளும் எருமைகளும் வந்துவிட்டன. ஓர் எருமை மட்டும் காணவில்லை. தேடிப் பார்க்கிறார். கண்ணுக்குப் புலப்படவில்லை. எனினும், அவ்வெருமையின் கனைப்பொலி மட்டும் கேட்கிறது. கனைப்பொலியைக் கேட்ட அவர், தன்கையில் இருந்த வேய்ங்குழலை எடுத்து ஊதி இசையை எழுப்பினார். அவ்விசையைக் கேட்ட அந்த எருமை இசை எழுப்பப்பட்ட இடத்திற்கு வந்து, மற்ற மாடுகளோடு சேர்ந்து வீடு அடைந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

திருநாவுக்கரசர் திருவதிகை என்னும் ஊருக்குச் சென்று இறைத்தொண்டு புரிந்து வந்தார். அவ்வூரில் உள்ள சிவபெருமானை வணங்கச் சுந்தரர் ஒருமுறை செல்கிறார். திருநாவுக்கரசர் வந்துசென்ற அவ்வூரைத் தாம் காலால் மிதிக்கக்கூடாது என எண்ணிய சுந்தரர் ஊருக்குள் போகாமல் ஊருக்கு வெளியே உள்ள 'சித்தவடமடத்தில்' தங்கி உறங்குகிறார். அப்போது சுந்தரர் தலைமீது சிவபெருமான் தன் பாதங்களை வைத்து அருள்புரிந்தார். சிவனின் இந்த அருளை எண்ணித் 'தம்மானையறியாத' என்னும் பதிகத்தைப் பாடினார் என்பது வரலாறு. இப்பதிகம் கொல்லிக் கௌவாணம் என்னும் பண்ணில் அமைந்ததாகும்.

பின்னொரு தருணத்தில் திருவாரூரில் உள்ள சிவபெருமானைப் பற்றிப் பாடிய பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்ததாகும். கொல்லிக் கௌவாணம், கொல்லிப்பண் ஆகிய இவ்விரு பண்களும் நள்ளிரவில் பாடப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார். இவை பழங்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பண்களோடு தொடர்புடையன.

இப்பாடல்களும் இவற்றின் பண் அமைப்புகளும் மறையும் நிலையில் இருந்தன. அப்போது திருமுறைகண்டசோழன் யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினியைக் கொண்டு அப்பாடல்களின் பழைய பண் அமைப்புகளுக்குப் புத்துயிர் அளித்தான். சில புதிய பண்களும் தோற்றுவிக்கப்பட்டன. இச்செய்தியைத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. இப்பண்களைக் கோவிலில் பாட ஓதுவார் என்னும் இசைக் கலைஞர்களையும் நியமித்தவனும் இம்மன்னனே. இவ்வோதுவார்களின் பணி இன்றும் தொடர்கிறது.

முதலாம் மகேந்திரவர்மன் இசை, நாடகம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லவனாக இருந்துள்ளான். இம்மன்னனால் பொறிக்கப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டின் முடிவில் 'எட்டிற்கும் ஏழிற்கும் இவையுரிய' என்ற தொடர் உள்ளது. இத்தொடர் 'சங்கீரணம்' என்னும் இசையைப் பற்றிக் குறிப்பதாகும். தேவாரங்களில் காணப்படாத 'சாளரபாணி' என்ற பண் திருவிசைப்பாவில் உள்ளது.

ஆனால், தேவாரங்களுக்குப் பண் வகுக்கப்பட்ட காலத்தில் நிலவிய இசையும் சேக்கிழார் காலத்தில் நிலவிய இசையும் 'சாரங்கதேவர்' குறிக்கும் தேவாரப் பண்களின் இசையும் இடைக்காலத்தில் தோன்றிய 'இசைமரபு' என்கிறார் வெள்ளைவாரணர்.

கீர்த்தனைகள் என்ற இசைப்பாடல் வடிவம் பிற்காலத்தில் தோன்றின. கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலியோரால் எழுதப்பட்ட கீர்த்தனைகள் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

பண்டைய காலந்தொட்டே தமிழர்களின் வாழ்வியலோடு கலந்து இசைக்கலை வளர்ந்து வந்துள்ளது. சங்க காலத்துப் பாணர்களும், பாடினிகளும், விறலியரும் இசையை வளர்த்து வந்துள்ளனர். ஐவகை நிலப்பிரிவிற்கு யாழ், பண், பறை முதலியன அமைந்திருந்தன. சங்கம் மருவிய காலத்துத் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள். களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவினர். அற இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றின. இவை பெரும்பான்மையும் வெண்பா யாப்பிலேயே அமைந்தன. ஆனால் சங்க காலத்தில் வெண்பா யாப்பு வழக்கில் இல்லை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலியவற்றில் இசைக்கருவிகள் பற்றிச் செய்திகள் காணக்கிடைக்கின்றன. சோழர்காலக் காப்பியங்களும் நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்களும் தமிழோடு இசையையும் சுமந்து வந்து நால்வர் இசை மரபை உருவாக்கியது. இன்று பண்ணோடு இசைக்கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

நடனக்கலை (Dance)

நடனக்கலை, ஆடல்கலை, கூத்துக்கலை என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சில கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. அவை, வேலன் ஆடும் வெறிக்கூத்து, வீரர்கள் ஆடும் கருங்கூத்து, பெண்கள் ஆடும் வள்ளிக் கூத்து, இளையவீரனின் வெற்றியைப்பாராட்டி இருபாலரும் ஆடும் கழனிலைக் கூத்து போன்றவையாகும்.

நடன மரச்சிற்பம்

சங்க காலத்தில் கூத்துக்கலையை வளர்த்தவர்கள் கூத்தர்கள் எனப்பட்டனர். கூத்தர் இனப் பெண்கள் விறலி, ஆடுமகள், ஆடுகளமகள் என்றும் கூத்தர் இன ஆண்கள் கூத்தன், ஆடுமகன், ஆடுகளமகன் என்றும் அழைக்கப்பட்டனர். பண்டைய அரசர்கள் கூத்தர்களைப் பாராட்டிப் பரிசளித்தனர். அரசர்கள் விறலியர்க்குப் பரிசளித்த செய்தியினைச் கோவூர்க்கிழார், மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறும் நாடக மகளிர் என்னும் தொடர் நடன மகளிர், கூத்த மகளிர், விறலியர் என்னும் பொருளையே அளிப்பதாக மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார்.

நடனம் கற்கும் பெண் தனது 7 ஆம் வயது முதல் 12 ஆம் வயது வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடனக்கலைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். நடனக்கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் தலைக்கோல் ஆசான் என்று அழைக்கப்பட்டார். இவர், வேத்தியல், பொதுவியல் என இருவகைக் கூத்துகளிலும் சிறந்தவராக இருத்தல் வேண்டும்.

அடியார்க்குநல்லார் கருத்துப்படி கூத்து நான்கு வகைப்படும். அவை, சொக்கம், மெய்க்கூத்து, அபிநயம், நாடகம் என்பன. இதில் சொக்கம் என்பது இசையுடன் கூடிய தூய நடனம்.

XI Ethics_Lesson 4 Folder.indd 75 13-12-2021 10:41:49

www.tnschoolbooks.in

மெய்க்கூத்து என்பது இசையுடன் கூடிய அகம் சார்ந்த நடனம். அபிநயம் என்பது இசையுடன் கலந்த பாடலுக்கு ஏற்ற நடனம். நாடகம் என்பது இசையுடன் கதை தழுவி வரும் பாட்டிற்கான நடனம். ஆடல் என்பது எல்லா வகைக் கூத்துகளையும் குறிக்கும் என்கிறார் அடியார்க்குநல்லார்.

ஆடல் வகைகள்

பதினோராடல்கள்

- **நின்றாடல் (6)**
  - அல்லியம்
  - கொடுகொட்டி
  - குடைக்கூத்து
  - குடக்கூத்து
  - பாண்டரங்கம்
  - மல்லியம்
- **வீழ்ந்தாடல் (5)**
  - துடி
  - கடையம்
  - பேடு
  - மரக்கால்
  - பாவை

சிலப்பதிகாரத்தில் மாதவி பதினோரு வகை ஆடல்களை ஆடினாள். அவையாவன; 1. அல்லியம் 2. கொடுகொட்டி 3. குடைக்கூத்து 4. குடக்கூத்து 5. பாண்டரங்கம் 6. மல்லியம் 7. துடி 8. கடையம் 9. பேடு 10. மரக்கால் 11. பாவை என இவை தெய்வங்களால் ஆடப்பெறுவதால் 'தெய்வவிருத்தி' என்றும் அழைக்கப்படுகின்றன.

முத்திரைகள்

அகக்கூத்து, புறக்கூத்து எனக் கூத்து இரண்டு வகைப்படும். இருவகைக் கூத்துகளுமே ஆடல் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். நடனத்தின் பொழுது ஒரு கையினால் காட்டப்படும் முத்திரைகளும், இரு கைகளினால் காட்டப்படும் முத்திரைகளும் கூறப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை எனப் பகுக்கப்பட்டுள்ளன. பிண்டி, பிணையல் இரண்டும் புறக்கூத்தில் காட்டப்படுவன. எழிற்கை, தொழிற்கை இரண்டும் அகக்கூத்தில் காட்டப்படுவன. இவற்றில் பிண்டி ஒரு கையால் காட்டப்படும் முத்திரை. இது 24 வகையாக அமையும். பிணையல் இரண்டு கைகளாலும் காட்டப்படுவது. இது 13 வகையாக உள்ளது.

நடன நூல்கள்

நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து', 'வந்த முறையின் வழிமுறை வழாமல்' என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து சிலப்பதிகாரக் காலத்திற்கு முன் நாட்டிய நூல்கள் இருந்தமை

அல்லியம்	:	கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல்
கொடுகொட்டி	:	சிவபெருமான் முப்புரத்தை எரித்த பொழுது வெற்றியில் கைகொட்டி ஆடிய ஆடல்
குடைக்கூத்து	:	முருகன் அவுணரை வென்ற போதுஆடிய ஆடல்
குடக்கூத்து	:	கண்ணன் தன் பேரனான அநிருத்தனை அசுரரிடமிருந்து மீட்பதற்காகக் குடத்தை வைத்துக் கொண்டு ஆடிய ஆடல்.
பாண்டரங்கம்	:	சிவபெருமான் முப்புரத்தை எரித்த பின்னர் நான்முகன் காணும்படி ஆடிய ஆடல்
மல்லியம்	:	கண்ணன் வாணன் என்னும் அசுரருடன் போர் செய்ததைக் காட்டும் கூத்து.
துடி	:	சூரபதுமனை வென்ற பிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடியதைக் கூறும் கூத்து.
கடையம்	:	இந்திரன் மனைவி அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியது. இது உழத்திக்கூத்து என்றும் அழைக்கப்படுகிறது.
பேடு	:	காமன் தன்மகனான அநிருத்தனை சிறை மீட்பதற்காக வாணனுடைய சோ என்னும் நகரத்தில் பேடியுருவம் கொண்டு ஆடியது.
மரக்கால்	:	கொற்றவை தன்னை எதிர்த்து பாம்பு, தேளாக வந்த அசுரரைக் கொல்வதற்காக ஆடிய ஆடல்.
பாவை	:	அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல்.

XI Ethics_Lesson 4 Folder.indd 76 13-12-2021 10:41:49

உங்களுக்குத் தெரியுமா?

வேத்தியல், பொதுவியல் எனக் கூத்து இரு வகைப்படும். வேத்தியல் கூத்து வசைக்கூத்து, வரிக்கூத்து, சாந்திக்கூத்து, இயல்புக்கூத்து, ஆரியம் என்று பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

பொதுவியல் கூத்து புகழ்க்கூத்து, வரிச்சாந்திக் கூத்து, வினோதக்கூத்து, தேசியக்கூத்து, தமிழ்க்கூத்து என்று பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

தெளிவாகின்றது. பதினோரு வகையான ஆடல்களும் அவற்றின் உறுப்புகளும் பாடல்களும் யாப்பருங்கலம் நூலின் உரையில் கூறப்பட்டுள்ளன. பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்தநூல் ஆகியன கூத்து பற்றிய நூல்கள் ஆகும். இவற்றில் பரதமும் அகத்தியமும் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்தன. இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை.

குரவைக்கூத்து

மகளிரால் ஆடப்படுவது குரவைக்கூத்து. ஏழு முதல் ஒன்பது பேர் வட்டமாக நின்று கைகோத்து ஆடுவது. இது குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என இரு வகைப்படும். குன்றக்குரவை என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மகளிர் முருகனுக்காக ஆடும் ஆடல். ஆய்ச்சியர் குரவை முல்லை நிலத்தில் வாழும் மகளிர் திருமாலுக்காக ஆடும் ஆடல்.

பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் நடனக்கலை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. முதலாம் மகேந்திரவர்மன் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற தனது நூலில் சிவபெருமானின் தாண்டவங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ராஜசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சிவபெருமான் ஆடியதாகக் கூறப்படும் பதாகை நடனம், லதாவிருச்சிக நடனம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியன சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் கூத்தன் கூத்தியர் உருவங்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தவரான சுந்தரர், நடன மாதரான பரவை நாச்சியாரை மணந்துகொண்ட செய்தியை இலக்கியங்களில் காணலாம். தில்லையில் உள்ள சிவபெருமான், 'கூத்தப்பெருமான்' என நாயன்மார்களால் பாடப்பட்டார். பல்லவர் காலத்தில் நடனமாதர் மாணிக்கத்தார், கணிகையர் எனப்பட்டனர். அக்காலத்தில் காஞ்சிபுரம் முக்தீச்சுரர் கோயிலில் மட்டும் 42 நடன மாதர் இருந்தனர் என்ற செய்தியினை ஆவணங்கள் தெரிவிக்கின்றன. பல்லவர் காலத்தில் நடனம் வகித்த இடத்தை இவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

சோழர் காலம்

சோழர் காலம் கலைகளின் வளர்ச்சியால் பொற்காலமாகத் திகழ்ந்தது. சைவ வைணவ சமயங்கள் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றன. கோயில்கள் பெரும்பான்மை கற்கோயில்களாக

நடனம்

மாற்றப்பட்டன. கோயில்களில் நடனம் உட்பட அனைத்துக் கலைகளும் வளர்க்கப்பட்டன. கோயில் கருவறைகளின் அடிப்பகுதியில்கூட, நடன வகைகள் செதுக்கப்பட்டிருந்தன. இதற்கு சிதம்பரம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் சான்று. இவர்கள் காலச் சிற்பங்களில் கூத்தியர் மட்டும் தனித்து நடனம் ஆடும்படியான சிற்பங்களைப் பெரிதும் காணலாம்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கருவறையின் புறச்சுவரில் நடன மாதர்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவ்வோவியத்தில் நடனப் பெண்களின் கூந்தல் ஒப்பனை, உடை, இசைக்கருவிகள், முகப்பொலிவு, உருவ அமைப்பு ஆகியன நடனப் பெண்கள் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுகின்றன. இராஜராஜ சோழன், தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் நிகழ்த்துவதற்காகப் பதியிலார் எனப்படும் நடனத்தில் சிறந்த பெண்களை நாடெங்கிலும் இருந்து தேர்ந்தெடுத்து வரச் செய்தான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளித்தான். இச்செய்தியினைத் தஞ்சைக் கல்வெட்டில் காணலாம். திருவிடை மருதூருக்கு அருகில் உள்ள காமரசவள்ளி என்னும் ஊரில், சிறப்பாகச் சாக்கைக் கூத்தாடும் ஒருவருக்கு ‘சாக்கை மாராயன்’ என இராசேந்திரன் பட்டம் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

பிற்காலம்

நாயக்கர் காலத்தில் கர்நாடக இசைவடிவம் தமிழகத்தில் வளரத் தொடங்கியது. இக்காலத்தில் வடமொழி நடன நூல்கள் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டன.

மகாபாரத சூடாமணி, அபிநயதர்ப்பணம், அபிநயதர்ப்பண விலாசம், பரவராக தாளம், சுத்தானந்தப் பிரகாசம், ஆதிமூல பாரதம், பரத சாத்திரம், பரத சேனாபதியம் முதலிய மொழிபெயர்க்கப்பட்ட நடன நூல்களை மா. இராசாணிக்கனார் பட்டியலிடுகின்றார்.

பரத நாட்டியம்

தமிழர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வரும் கலை பரதநாட்டியம். இசைப்பாட்டிற்கேற்ப அபிநயம் காட்டிப் பாவகம் தோன்ற ஆடப்படுவது. இதற்குக் கைக்குறியீடுகள் இன்றியமையாதன. இவை, இளங்கோவடிகள் கூறுவதைப் போன்றே ஒரு கை முத்திரை, இருகை முத்திரை என இரண்டு வகைப்படுகின்றது. ஒருகை முத்திரை இணையா வினைக்கை என்றும், பிண்டிக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இருகை முத்திரை இணைக்கை, இரட்டைக்கை, பிணைக்கை என்றும் அழைக்கப்படுகின்றது. இம்முத்திரைகள் பரதத்திற்கு உயிர் போன்றவை. இம்முத்திரைகளைப் புரிந்துகொள்ளாமல் பரதத்தைச் சுவைத்து இன்புறுவது கடினமாகும். இவ்வாறு காலந்தோறும் தமிழகத்தில் நடனக்கலை தழைத்து வந்துள்ளது.

மனித இனம் நாடோடியாக வாழ்ந்த காலத்திலிருந்தே தங்களின் உணர்வுகளை நடனத்துடன் வெளிப்படுத்தி உள்ளனர். முற்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த நடனக்கலை பற்றிய செய்திகளை இலக்கியம், சிற்பம், ஓவியங்கள் மூலம் அறியலாம். தமிழர்களின் தொன்மைக் கலையான பரதம் பல வகையான முத்திரைகளையும் பாவங்களையும் உள்ளடக்கியது. இஃது உலகின் அதிக

மக்களால் விரும்பிப் போற்றப்படும் கலையாகவும் உள்ளது.

நாட்டுப்புறக் கலைகள் (Folk Arts)

நாட்டுப்புற விளையாட்டுகள் என்பது, நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று. இவை நாட்டுப்புற மரபில் சிறப்பிடம் பெறுபவை. போலச் செய்தல், உடல்திறம் காணல், அறிவு வெளிப்பாடு, சமூக உறவு, வாழ்க்கைப் பயிற்சி, சிந்தனை ஆற்றல் முதலியவற்றை உள்ளடக்கிய இவ்விளையாட்டுகள் பண்பாட்டை வெளிப்படுத்துவன ஆகும். உடல்வலிமை, மனவலிமை ஆகியவற்றை நிலைநாட்டுவதே இவற்றின் முதன்மை நோக்கம். மரபு அடிப்படையிலும் இவ்விளையாட்டுகள் விளையாடப்பட்டுள்ளன. ஏறுதழுவுதல், ஓட்டப்போட்டிகள் முதலியன மரபு சார்ந்தவை. மரபு சார்ந்து ஆடப்படும் இவ்விளையாட்டுகள் வீரத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தமிழக விளையாட்டுகள்

விளையாட்டு என்பது விரும்பியாடும் ஆட்டு. விளை - விருப்பம், ஆட்டு - ஆட்டம். தமிழர் மரபில் சிறப்பிடம் பெறுபவை விளையாட்டுகள். கெடவரல், பண்ணை ஆகிய இரண்டு வகையான விளையாட்டுகள் பற்றி கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல். உரி 21) எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. சிறுமிகளை விலங்குகளிடம் இருந்து காப்பது போல நடித்து விளையாடுவது கெடவரல் என்றும் உழவர்கள் பயிர் செய்வது போல நடித்து விளையாடுவது பண்ணை விளையாட்டு என்றும் தேவநேயப்பாவாணர் கூறுகின்றார். மகிழ்தலை நோக்கமாகக் கொண்டது விளையாட்டு. எண்வகை மெய்ப்பாட்டில் ஒன்றான உவகை, நான்கு வழிகளில் தோன்றும் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே
(தொல். மெய்ப்பாட்டியல் – 255)

தமிழக விளையாட்டுகள் அனைத்துமே இரண்டு குழுவாகப் பிரிந்து விளையாடும் பொதுத் தன்மையைப் பெற்று இருக்கும். விளையாட்டின் வெற்றி தோல்வியின் காரணமாக யாரும் பிறருக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது. விளையாட்டில் பிறருக்கு ஏற்படும் துன்பத்தையும், எதிர் அணியாக இருப்பினும் தம் துன்பம் போல் கருதுதல் வேண்டும். இது தமிழக விளையாட்டுகளுக்கான பொது விதியாகும்.

பிள்ளைத்தமிழ், குழந்தைகளுக்கான பத்துப் பருவங்களைக் கூறுகின்றது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படுகிறது. முதல் ஏழு பருவங்கள், ஆண்பால் பிள்ளைத் தமிழுக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்கள் விளையாட்டுகள் பற்றிக் கூறுகின்றது. சிற்றில், ஊசல் என்பன பெண்கள் விளையாடும் விளையாட்டுகள் ஆகும். சிறார்கள் சிறு வீடு கட்டி விளையாடுவது சிற்றில்; தெருவில் பறையடித்து விளையாடுவது சிறுபறை; சிறு தேர் செய்து விளையாடுவது சிறுதேர் ஆகும். பெண்கள் இல்லத்தில் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மட்டுமே பெண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்டுள்ளன. அம்மானை என்பது, சிறுமிகள் வட்டமாக அமர்ந்து பாடல் பாடி விளையாடுவது. கழங்கு என்பது, சிறுமிகள் கல் வைத்து விளையாடும் விளையாட்டாகும். ஊசல் என்பது, சிறுமிகள் பாடல் பாடிக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதாகும்.

பிள்ளைத் தமிழ் கூறுவதைப் போலவே தமிழக நாட்டுப்புற விளையாட்டுகளையும் ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெரும்பாலும் ஆண்கள் விளையாடுவன வீர விளையாட்டுகளாகவே உள்ளன.

வீர விளையாட்டுகள்

விளையாட்டு என்பதை உவகைச் சுவையில் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, விளையாட்டு என்பது, மகிழ்ச்சியைத் தரும் செயல் ஆகும்.

வீர விளையாட்டு, உயிரை ஈடாக வைத்து ஆடப்படுகிறது. நாட்டுப்புற வீரவிளையாட்டாக ஏறுதழுவல், சிலம்பாட்டம், சடுகுடு, இளவட்டக்கல், உரிமரம் ஏறுதல் எனப் பல விளையாட்டுகளைச் சுட்டலாம்.

இவ்வகை விளையாட்டுகள் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் என இரண்டாகப் பிரிப்பர். முதல் வகைக்கு ஏறுதழுவலையும் பாரிவேட்டையும் சான்றாகச் சுட்டலாம். சிலம்பாட்டம், புலிவேடம் முதலியவை இரண்டாம் வகைக்குச் சான்றுகளாகும்.

மன எழுச்சி, குறிக்கோளை அடைதல், தன்னிலை நிறுத்துதல், குழு மனப்பாங்கு, நட்புறவு, உடல் நலம் பேணுதல் போன்ற பண்புகளை விளையாட்டுகள் வளர்க்கின்றன. அவற்றை நம் முன்னோர்கள் உணர்ந்து வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகளாக நம் வீர விளையாட்டுகள் உள்ளன.

ஏறுதழுவுதல்

மஞ்சுவிரட்டு அல்லது ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்விளையாட்டு, பண்டைக் காலம் முதல் உள்ளது என்பதை அறியலாம். வீரத்தை வெளிப்படுத்தும் இவ்விளையாட்டுகளுள் இது முதன்மையாகக் கருதப்படுகிறது.

ஏறுதழுவுதல்

காளையின் கொட்டேறி என்னும் திமிலைப் பிடித்து அடக்குவது சங்க கால முறை. கொம்பைப் பிடித்து முறுக்கி அடக்குவதும் உண்டு. நாணயங்கள் அடங்கிய பையைக் காளையின் கொம்பில் வைத்துக் கட்டிவிடும் பழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. நாணயத்தைச் சல்லி என்று கூறுவர். அதனால் இவ்விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் அழைப்பர்.

வாடி வாசல், திட்டி வாசல் முதலான பகுதிகளைக் கொண்ட இவ்விளையாட்டு வேலி மஞ்சுவிரட்டு, வாடிவாசல் மஞ்சுவிரட்டு, வடம் மஞ்சுவிரட்டு என வட்டாரத்திற்கு ஏற்றாற்போல் நடத்தப்படுகின்றது.

சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும் இவ்விளையாட்டைக் கருதுகின்றனர். அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள், மழையின்மை முதலிய குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு விடுகிறோம் என்ற வேண்டுதலின் அடிப்படையிலும் இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது.

XI Ethics_Lesson 4 Folder.indd 80 13-12-2021 10:41:50

இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளையைச் சல்லிமாடு என்றழைப்பர். இக்காளையைக் கன்றுப் பருவத்திலிருந்தே சிறு துண்டினைக் காட்டிப் பாய்ச்சலுக்குப் பழக்குவர். இச்செயல் 'உர்ரி காட்டுதல்' என்று அழைக்கப்படுகிறது.

ஏறுதழுவல் விளையாட்டுக்குக் காளையைப் பலவகைகளில் ஒப்பனை செய்வர். கால், கழுத்து முதலிய பகுதிகளில் சலங்கைகள் கட்டப்படும். நெற்றியில் காசுமாலையும் கொம்பில் சிறுவளையமும் அணியப்படும். திமில் பகுதியில் வண்ணப் பொட்டு இட்டும் ஒப்பனை செய்யப்படும். இவ்வாறு ஒப்பனை செய்யப்பட்ட காளையின் கொம்பில் கட்டப்பட்டிருக்கும் சல்லிக்கட்டுத் துணியை மீட்பவரே வெற்றி பெற்றவராவர்.

சிலம்பாட்டம்

தமிழர்களுடைய நாட்டுப்புறக் கலைகளில் சிலம்பாட்டமும் ஒன்றாகும். சிலம்பு என்னும் சொல் பலபொருள் குறித்த ஒரு சொல்லாக உள்ளது. இங்கு இச்சொல் கம்புகளைக் குறித்து நிற்கிறது. கம்புகளை அடித்து ஒலியெழுப்பும் விளையாட்டுக்குச் சிலம்பு எனப் பெயர். கம்புகளின் ஒலியைத் தவிர இரும்பு ஆயுதங்களின் ஒலியும் இவ்வாட்டத்தின்போது எழுப்பப்படும்.



சிலம்பாட்டம்

நேர்த்தியாகக் கம்புகளைச் சுழற்றினால்தான் எதிரியை வீழ்த்த இயலும் என்பதால் போர் முறைகளுக்கு உரிய சில விதி முறைகளும் சிலம்பாட்டத்தில் இடம்பெற்றுள்ளன. உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்டது சிலம்பாட்டம். நடசாரி என்று கூறப்படும் ஓலைப் பட்டயச் செய்தியில் சிலம்பாட்டத்தின் தோற்றம் பற்றிக் கதையாகக் கூறப்பட்டுள்ளது.

கம்பை வேகமாகச் சுழற்றுவதிலும் முன்பின் திரும்பி ஆடுவதிலும் கலை நயத்தைப் புகுத்தி உருவெடுக்கிறது இச்சிலம்பாட்டம். இவ்வாட்டத்தில் பலவிதமான சுவடுமுறைகள் கையாளப்படுகின்றன. உடலிலுள்ள வர்ம நாடிகளை நோக்கி அடிக்கும் சுவடுமுறைக்கு தட்டுவர்மச் சுவடு என்று பெயர்.

இதில் அடிச்சுப்பிரிவு, பூட்டுப்பிரிவு ஆகிய விளையாட்டு முறைகளும் உள்ளன. ஒருவர் இடம் பார்த்து அடிப்பதும், அவ்வடியை இன்னொருவர் தடுப்பதும் அடிச்சுப்பிரிவு ஆகும். ஒருவர் கைகொண்டு அடுத்தவரைப் பூட்டிப் பிடிப்பதும் அப்பூட்டிலிருந்து பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் பூட்டுப்பிரிவாகும்.

குமரி மாவட்டத்தில் சிலம்பாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விழாக்களில் சிலம்பாட்டம் ஆடி மகிழ்வர். அப்பகுதியில் சிலம்படி ஆசான்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். தமிழரின் வீரத்திற்கும் நுட்பமான செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது இச்சிலம்பாட்டம் ஆகும்.

சடுகுடு

சடுகுடு

பசுவைக் கவர்ந்து வருவதும், கவர்ந்து வந்த பசுக்களை மீட்டு வருவதுமான வெட்சி, கரந்தை

XI Ethics_Lesson 4 Folder.indd 81 13-12-2021 10:41:50

ஆகிய திணைகளில் வரும் போர் முறையின் தொடர்ச்சியாகச் சடுகுடுவைக் குறிப்பர். இவ்விளையாட்டு, பாண்டிய நாட்டில் குட்டி என்றும் சோழ நாட்டில் பளிச்சப்பிளான், பலீன் சடுகுடு என்றும் தென் சோழ நாட்டில் சடுகுடு என்றும் அழைக்கப்படுகிறது.

மூச்சுப் பிடித்துக் கொண்டு பாடிச் சென்று மீள்வதும், பாடி வருபவரைப் பலரும் சூழ்ந்து பிடிப்பதும் பிடிபட்டவர் தம்மை விடுவித்துக்கொள்வதும் இவ்விளையாட்டின் திறம் ஆகும். மூச்சுப்பிடிப்பதைப் பாட்டம் என்று அழைப்பர். பாடிச் செல்பவரைக் கொம்பு சுற்றிப் பாடுபவன் என்று சொல்வது உண்டு. பாடிச் செல்லும்போது தனி வீரமும், பிடிக்கும்போது கூட்டு வீரமும் உடையது இவ்விளையாட்டு. கபடி என்று இக்காலத்தில் அழைக்கப்படுகிறது.

பிடிபட்டவரை விலக்காமலே பிடிபட்டவரின் எண்ணிக்கையை மட்டும் ஆட்ட இறுதியில் கணக்கில் கொள்ளும் ஆட்டத்தைச் சஞ்சீவி ஆட்டம் என்றும் பிடிபட்டவரைக் கடைசிவரை சேர்க்காமல் ஆட்டத்தை முடித்துக்கொள்வதை ஆடாது ஒழியும் ஆட்டம் என்றும், கூறுவர்.

இவ்விளையாட்டில் இடைக்கோடு மட்டும் போட்டு விளையாடும் பழக்கம் பாண்டிய நாட்டில் உள்ளது. பின்கோடு, பக்கக்கோடு, நடுகோடு முதலான அரங்க அமைப்பில் விளையாடும் பழக்கம் கொங்கு நாட்டில் காணப்படுகிறது.

பட்டான் பட்டான் என் தம்பி
படையிலே பட்டான் என் தம்பி
நெத்தி மேலே குண்டு வச்சு நேரே வாடா
என் தம்பி
என் தம்பி என் தம்பி....
பட்டாருக்காய் படையெடுத்து வாரேன்
துட்டாளெல்லாம் தூரப்போ தூரப்போ...

எனப் பாடிச் செல்லும் சடுகுடு பாடல்கள் நிறைய உள்ளன.

இளவட்டக்கல்

பண்டைய மனிதன் குகைகளில் வாழ்ந்தபோது கல்லைத் தூக்குதல், நகர்த்துதல் முதலிய பழக்கங்கள் நாளடைவில் வாழ்க்கையோடு இணைந்த பழக்கங்களாக மாறியிருக்கலாம். பின் நாகரிக வளர்ச்சியில் உடல்திறனை வெளிப்படுத்தும் விளையாட்டாக அவை மாறியிருக்கலாம் என்பர்.

இளவட்டக்கல்

இவ்விளையாட்டு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக ஆடப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் வீரத்தை வெளிப்படுத்தும் ஆட்டமாக மாறியிருக்கிறது. திருவிழாக்களின்போது ஊர்ப்பொது இடத்தில் இது நடத்தப்படும்.

இவ்விளையாட்டில் கலந்துகொள்பவர் இளவட்டக் கல்லைத் தலைக்குமேல் தூக்கிப் பிடித்துப் பின் கீழே போட வேண்டும். அப்படிச் செய்பவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர். இப்போட்டிக்குக் கிராமத்துப் பெரியவர்கள் நடுவராக இருப்பர்.

மணமகனாக வருபவருக்குப் பொன், பொருள் போன்ற ஆடம்பரப் பொருள்களைவிட உடல் திறன் இன்றியமையாதது என்பதை இவ்விளையாட்டு வெளிப்படுத்துகிறது எனலாம்.

உரிமரம் ஏறுதல்

பட்டை உரிக்கப்பட்ட மரத்தையே உரிமரம் என்பர். இவ்வுரிமரத்தில் ஏறி விளையாடுவதே

www.tnschoolbooks.in

உரிமரம் ஏறுதல் என்று அழைக்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்கு எல்லா மரங்களையும் பயன்படுத்துவது இல்லை. கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும் உதியமரத்தை மட்டுமே பயன்படுத்துவர். பட்டை உரிக்கப்பட்ட மரம் வழுவழுப்பாக இருக்கும். ஏற்கெனவே வழுவழுப்பாக இருக்கும் அம்மரத்தில் விளக்கெண்ணெய் தடவப்பட்டு மேலும் வழுவழுப்பானதாக மாற்றப்படும். இவ்வாறு மாற்றப்பட்ட மரத்தின் உச்சியில் பரிசுப் பொருளையும் கட்டி நட்டுவிடுவர். இம்மரத்தில் ஏறி உச்சியில் இருக்கும் பரிசுப் பொருளைக் கைப்பற்றுபவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

உரிமரம் ஏறுதல்

செங்குத்தான பாறைகள்மீது ஏறுதல், வழுக்குப்பாறைமேல் ஏறுதல் முதலிய பயிற்சிகளை உடையவர்கள், மலைவாழ் மக்கள் ஆவர். இவர்கள் சமவெளிப் பகுதியில் வாழ நேர்ந்தபோது இப்பயிற்சிகள் அவசியமில்லாமல் போகவே விழாக்காலங்களில் உடல்திறனை வெளிப்படுத்தும் வீர விளையாட்டாக இது மாறியது. இவ்விளையாட்டு மதுரை மாவட்டத்தில் பரவலாக விளையாடப்படுகிறது. தற்போது பெரிய இரும்புக் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் விளையாட்டுகளும் வீர விளையாட்டுகளாகவே கருதப்படுகின்றன. கட்ட விளையாட்டு, பதினைந்தாம் புலி, நட்சத்திர விளையாட்டு, திரிகுத்து, பொம்மைசீட்டு, மூணு கட்டை, பானை உடைத்தல், உறிப்பானை விளையாட்டு போன்றவை இவ்விளையாட்டுகள் ஆகும்.

கில்லி

இவ்விளையாட்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டில் ஒன்றாகும். இதைச் சிறுவர்களும், ஆடவர்களும் விளையாடுவர். இது கில்லி, புல்லுக்குச்சி, கில்லிதாண்டு, சில்லாங்குச்சி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிறிய குச்சி கில்லி எனவும் பெரிய குச்சி தாண்டல் எனவும் கூறப்படும். இவ்விளையட்டில் குறைந்தது இருவர் இருப்பர். விளையாடுவோர் அதிகமாக இருப்பின் அணியாகப் பிரிந்து விளையாடுவர்.

இவ்விளையாட்டில் இரண்டு குச்சிகள் பயன்படுத்தப்படும். ஒரு முழம் நீளத்தில் ஒரு குச்சியும் ஒரு சாண் நீளத்தில் மற்றொரு குச்சியும் இருக்கும். சிறிய குச்சியின் இரண்டு முனையும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். பெரிய குச்சியின் ஒரு முனை மட்டும் கூர்மையாக்கப்பட்டிருக்கும். நிலத்தில் இரண்டு விரல் இடை அளவிற்குச் சிறிய பள்ளம் பறிக்கப்படும். அப்பள்ளத்தின் நடுவில் குறுக்காகக் கில்லி வைக்கப்படும். இவ்வாறு வைத்த குச்சியைப் பெரிய குச்சியைக் கொண்டு தள்ளிவிடுவர். தள்ளிவிடப்படும் கில்லியை எதிர் அணியினர் எவரும் பிடித்துவிட்டால், கில்லி தள்ளுபவர் விளையாட்டில் தோற்றவராவர் அல்லது கில்லி வைக்கப்பட்ட குழியிலிருந்து தாண்டி மிதிக்கும் தொலைவில், கில்லி விழுந்திருந்தாலும் விளையாட்டில் தோற்றதாகக் கருதப்படும். கில்லி விழுந்த இடத்திலிருந்து எதிர் அணியினர் கில்லியைப் பறிக்கப்பட்ட குழியை நோக்கி எறிவர். அந்தக் கில்லி குழியில் விழுந்தாலும் எதிர் அணியினர் தோற்றவர் ஆவர். இதன் பின்பு கில்லி மூன்று முறை அடிக்கப்படும். அதன் தொலைவு கில்லிக் குழியிலிருந்து தாண்டலால் அளவிடப்படும். அதுவே அவ்வணியினர் எடுக்கும் புள்ளிகளாகும்.

இவ்விளையாட்டை விளையாடப் பரந்த திடல் வேண்டும். மேலும், இதுபோன்ற பலவிளையாட்டுகளை விளையாடி மகிழ்ந்தார்கள். அவை, கோலி, பேந்தா, அஞ்சல குஞ்சம், நொண்டி விளையாட்டு, சில்லி, தாயம், பரமபதம், ஆடுபுலியாட்டம், பூப்பறித்தல், பாண்டியாட்டம், அச்சாங்கல், கண்ணாம்மூச்சி, பல்லாங்குழி போன்றவையாகும்.

XI Ethics_Lesson 4 Folder.indd 83 13-12-2021 10:41:50

பச்சைக்குதிரை

இவ்விளையாட்டு, சிறுவர்கள் ஒத்த பருவத்தினரோடு நிலா வெளிச்சத்தில் விளையாடும் விளையாட்டாகும். இதன் முதல்படி பிறருடைய காலைத் தாண்டுவதில் தொடங்கும். அதனால், இந்த விளையாட்டைக் கால்தாண்டி விளையாட்டு என்று அழைப்பர். குனிந்து இருப்பவர் படிப்படியாகத் தம்நிலையை உயர்த்துவதால், தாண்ட வேண்டிய உயரம் கூடிக் கொண்டேபோகும்.

பச்சைக்குதிரை

கால் தாண்டல்

ஒரு கால் பாதம், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கால் பாதம், இரண்டு பாத உயரத்தின் மேல் ஒரு சாண், இரண்டு பாத உயரத்தின் மேல் இரண்டு சாண் எனக் கால் தாண்ட வேண்டிய உயரம் உயர்ந்து கொண்டே போகும்.

ஆள்தாண்டல்

கால் தாண்டலுக்குப் பின் ஆள்தாண்டல் நடைபெறும். இதில் குனிந்துகொண்டு நிற்பவரை, அவர் முதுகில் கையை ஊன்றித் தாண்ட வேண்டும். குனிந்து கொண்டு நிற்பவர் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு குனிந்திருக்க வேண்டும். தலையை உயர்த்தினால் தலையைத் தட்டிக் குனியச்செய்வர். தாண்டுபவர் தம் இருகால்களையும் அகற்றி ஒரு கால் அவரது தலையையும் மற்றொரு கால் அவரது இடுப்பையும் தாண்டி வருமாறு தாண்டுவர். தாண்டுபவர் ஓடிவந்து தாண்ட இயலாது.

கால் கட்டை விரலைப் பிடித்துக் கொண்டு நிற்றல். கணுக்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல் (கரண்டை), முழங்காலைப் பிடித்துக் கொண்டு நிற்றல்(மோளி), தொடையைப் பிடித்துக் கொண்டு நிற்றல், கைகளைக் கட்டிக் கொண்டு அல்லது கும்பிட்டுக் கொண்டு குனிந்து நிற்றல் என ஆள் தாண்டியின் உயரம் படிப்படியாக உயரும்.

குனிதல்

தாண்டுபவர், தாம் தாண்டி முடிந்த பின்னர், பிறர் தாண்டுவதற்காக முறைப்படி அனுமதிக்க வேண்டும்.

தவறியவர்

ஒருவர் எந்த நிலையில் தாண்ட இயலவில்லையோ, அந்த நிலையிலிருந்து தாண்டும் வாய்ப்பை இழப்பார். எனினும், அவர் பிறர் தாண்டுவதற்குக் குதிரை ஆகி நிற்க வேண்டும்.

நிறைவுரை

தமிழகத்தில் அறுபத்து நான்கு முதன்மைக் கலைகள் இருந்தன என்பதை 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்ற கம்பரின் கூற்றின் மூலமாக அறிய முடிகிறது. இக்கலைகளுள் ஐந்தனை மட்டும் அழகு கலைகள் அல்லது நுண்கலைகள் என்பர். பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களே தமிழகக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்ந்தன என்பதை அறியமுடிகிறது.

தமிழகத்தில் மிக உயரமான விமானம் சோழர் காலத்திலும், மிக உயர்ந்த கோபுரம், விஜயநகர காலத்திலும், நாயக்கர் காலத்திலும் கட்டப்பட்டுள்ளன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

சிற்பக் கலையின் வகைகளையும், சிற்பங்கள் வடிக்கப் பயன்படுத்திய பொருள்களையும் அறியமுடிகிறது. சுதைச் சிற்பங்கள் முதலில் தோன்றின என்பதையும் பல்லவர் காலத்தில் நளினத்துடன் கூடிய அழகிய சிற்பங்களும், நாயக்கர் காலத்தில் யானை, குதிரை போன்ற புராணத் தொன்மங்களும் வடிக்கப்பட்டுள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

பழங்கால ஓவியங்களையும், ஓவியத்தின் சிறப்புகளையும் அவர்கள் பயன்படுத்திய

வண்ணங்களையும் காலந்தோறும் ஓவியக்கலையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளையும் காண முடிகிறது.

மனித வாழ்க்கையில், இசை இரண்டறக் கலந்துள்ளது என்பதையும் இசைக்கருவிகளின் வகைகளையும், இசை நூல்களின் வகைகளையும், இசைத்தூண்கள் பற்றியும் தமிழர் கலைகள் வாயிலாகக் கண்டறிய முடிகிறது. நாட்டுப்புறக் கலைகளுள் நாட்டுப்புற விளையாட்டுகளின் பழைமையையும் பெருமையையும் அறிய முடிகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

பண்ணாங்குழி

நெல் குத்தும் பண்ணைபோல் வட்டமான பள்ளம் அல்லது குழி வெட்டி, அதில் கற்களை இட்டு ஆடும் ஆட்டம், பண்ணாங்குழி. பண்ணை என்பது, பள்ளம். பண்ணை பறித்தல் என்பது, குழி தோண்டுதல்.

பண்ணாங்குழி என்பதைப் பல்லாங்குழி, பள்ளாங்குழி, பன்னாங்குழி என்னும் பெயர்களால் வழங்குகின்றனர். பெரும்பாலும் பதினான்கு குழிகளை வைத்து ஆடுவதால் பதினாங்குழி, பன்னாங்குழி எனத் திரிந்ததாகக் கூறுவர். பன்னான்கு என்பதே இலக்கிய வழக்காக இருப்பதனால், பண்ணாங்குழி அல்லது பள்ளாங்குழி என்பதே திருந்திய வடிவமாகும். இவ்விளையாட்டை இருவர் ஆடுவர். நிலத்தில் சமமான இரு படுக்கை வரிசையாகத் தோண்டப்பட்ட குழிகளுள் கழற்சிக்காய்/ புளியங்கொட்டை/ கூழாங்கற்கள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை ஐந்தைந்தாய் இட்டு விளையாடுவர்.

–தமிழ்நாட்டு விளையாட்டுகள், ஞா. தேவநேயன், 1952.

மதிப்பீடு

MWZKH

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. "ஆயகலைகள்அறுபத்துநான்கனையும் ஏயஉணர்விக்கும் என்அம்மை" என்று கூறியவர்----

   அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சாத்தனார் ஈ) திருத்தக்கதேவர்

2. கீழ்க்காணும் கலைகளுள் நுண்கலை அல்லாதது எது?

   அ) கட்டடக்கலை ஆ) சிற்பக்கலை இ) பரதக்கலை ஈ) ஓவியக்கலை

3. "நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்" என்று கூறியவர் ------

   அ) புகழேந்தி ஆ) இளங்கோவடிகள் இ) சாத்தனார் ஈ) நாதகுத்தனார்

4. பழங்காலத்தில் கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டவை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கோயில் அமைந்துள்ள இடம்

   அ) திருபுவனம் ஆ) தாராசுரம் இ) சிதம்பரம் ஈ) கும்பகோணம்

XI Ethics_Lesson 4 Folder.indd 85 13-12-2021 10:41:51

5. முதன்முதலில் மகேந்திரவர்மனால் அமைக்கப்பெற்ற குடைவரைக்கோயில் ---------------

அ) மாமண்டூர் ஆ) மண்டகப்பட்டு இ) திருச்சி ஈ) வல்லம்

6. பின்வருவனவற்றுள் இந்தியக் கோவில் கட்டடக்கலை பாணியைச் சாராதது எது?

அ) நாகரம் ஆ) வேசரம் இ) காந்தாரக்கலை ஈ) திராவிடம்

7. கீழ்க்காண்பனவற்றுள் சரியான விடைக்குறிப்பைத் தெரிவு செய்க

அ) சிற்பக்கலைஞர் - 1. துகிலிகை

ஆ) வாயிற்காவலர்கள் - 2. மண்ணீட்டாளர்கள்

இ) சித்திரம் எழுதும் கோல் - 3. புனையாஓவியம்

ஈ) கோட்டோவியம் - 4. துவாரபாலகர்கள்

அ) அ-2 ஆ-4 இ-1 ஈ-3 ஆ) அ-4 ஆ-2 இ-3 ஈ-1

இ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 ஈ) அ-1 ஆ-3 இ-2 ஈ-4

8. கீழ்க்காண்பனவற்றுள் பல்லவர்காலக் குடைவரைக் கோவில் இடம்பெறாத ஊர் எது?

அ) வல்லம் ஆ) மாமண்டூர் இ) பல்லாவரம் ஈ)பிள்ளையார்பட்டி

9. 'தென்னகத்து எல்லோரா' என அழைக்கப்படும் கோவில் அமைந்துள்ள இடம் ------

அ) திருமயம் ஆ) கழுகுமலை இ) திருப்பரங்குன்றம் ஈ) குன்றக்குடி

10. 'தென்னகத்துமேரு' என அழைக்கப்படும் கோவிலைக் கட்டியவர் ----------

அ) ராஜேந்திரசோழன் ஆ) ராஜராஜசோழன் இ) குலோத்துங்கன் ஈ) விஜயாலயசோழன்

11. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணை எது?

அ) சோழர்கள் - தஞ்சாவூர் ஆ) பல்லவர்கள் - காஞ்சிபுரம்

இ) பாண்டியர்கள் - மதுரை ஈ) நாயக்கர் - புதுக்கோட்டை

12. கீழ்க்காண்பனவற்றுள் சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

1) முதலாம் இராஜராஜசோழன் - கங்கைகொண்டசோழபுரம்

2) முதலாம் இராஜேந்திரசோழன் - பிரகதீஸ்வர்கோவில்

3) மூன்றாம் குலோத்துங்கன் - திருபுவனம்கம்கரேஸ்வர்கோவில்

4) விஜயாலயசோழன் - நார்த்தாமலை கோவில்

அ) 1, 3 சரியானவை ஆ) 3, 4 சரியானவை இ) 1, 2 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

13. முல்லை நிலத்தவரின் முதன்மை இசைக்கருவி

அ) மத்தளம் ஆ) வேய்ங்குழல் இ) யாழ் ஈ) உருமி

14. கீழ்வருவனவற்றுள் பொருந்தாததைக் கண்டறிக.

அ) ஓவியவல்லோன் ஆ) கைவினைஞர்

இ) கண்ணுள்வினைஞர் ஈ) வட்டிகைச்செய்தி

XI Ethics_Lesson 4 Folder.indd 86 13-12-2021 10:41:51

15. ஏழிசைகளுள் ---------------- என்னும் இசையே இசைவளர்ச்சிக்கு ஆதாரமானது என்பர்.

அ) குரல் ஆ) துத்தம் இ) விளரி ஈ) தாரம்

16. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) பாண்டரங்கம் - முருகன் அவுணரை வென்றபோது ஆடிய ஆடல்.

ஆ) அல்லியம் - சிவபெருமான் முப்புரத்தை எரித்தபின்னர் நான்முகன் காணும்படி ஆடியஆடல்

இ) குடைக்கூத்து - கண்ணன் யானையின் தந்தத்தை ஒடித்ததைக் காட்டும் ஆடல்

ஈ) துடி - சூரபதுமனை வென்றபிறகு கடலினை மேடையாகக் கொண்டு முருகன் ஆடிய ஆடல்

17. சிற்பக்கலையின் தோற்றுவாயாகக் கருதப்படுபவை

அ) கற்றளிகள் ஆ) குடைவரைகள் இ) நடுகற்கள் ஈ) மண்டபங்கள்

18. தமிழகத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்படாத இடம்

அ) தாராசுரம் ஆ) அரிக்காமேடு இ) கொற்கை ஈ) உறையூர்

19. தமிழகத்தில் மிகஉயர்ந்த விமானத்தை உடைய கோவில் ----------

அ) கங்கைகொண்டசோழபுரம் ஆ) தஞ்சைப் பெரியகோயில்

இ) திருவில்லிபுத்தூர்ஆண்டாள்கோயில் ஈ) திருவரங்கம் அரங்காநாதர்கோயில்

20. கோவிலில் விமானம் என்பது

அ) அர்த்தமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

ஆ) கருவறையின் மீது கட்டப்படும் அமைப்பு

இ) மகாமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

ஈ) முகமண்டபத்தின் மீது கட்டப்படும் அமைப்பு

21. கற்றளி என்பது

அ) செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

ஆ) கருங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

இ) செங்கற்கள் மற்றும் கருங்கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

ஈ) பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

22. இந்தியாவில் ஒரேகல்லால் ஆன மிகப்பெரிய நந்தியின் சிற்பம் அமைந்துள்ள இடம்

அ) கங்கைகொண்டசோழபுரம் ஆ) திருவதிகை

இ) லெபாக்ஷி ஈ) தஞ்சைப்பெரியகோவில்

XI Ethics_Lesson 4 Folder.indd 87 13-12-2021 10:41:51

குறுவினா

1. ஓவியம் - சொற்பொருள் விளக்கம் தருக.
2. புனையாஓவியம் என்றால் என்ன?
3. இசைக்கருவிகளின் வகைகள் யாவை?
4. சங்கஇலக்கியங்கள் கூறும் ஐவகைப்பண்கள் யாவை?
5. பதினோர்ஆடல் வகையில் விழுந்தாடும் வகையை பட்டியலிடுக.
6. ஜல்லிக்கட்டு – சொற்பொருள் விளக்கம் தருக.
7. தமிழகத்தில் அகழாய்வு நடைபெற்ற இடங்கள் யாவை?

சிறுவினா

1. அழகுக்கலைகளை மயிலை சீனி. வேங்கடசாமி எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?
2. இந்தியக்கோவில் கட்டடக்கலையை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
3. பாண்டியர்காலக் குடைவரைக் கோவில்கள் காணப்படும் இடங்கள் யாவை?
4. நாயக்கர் காலக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
5. சுதை என்பதற்கு அ. தட்சிணாமூர்த்தி தரும் விளக்கம் யாது?
6. பிரதிமைகள் – வரையறு.
7. சித்தன்னவாசல் ஓவியங்கள் குறிப்புத் தருக.
8. தஞ்சாவூர் ஓவியத்தின் சிறப்புகள் யாவை?
9. குரவைக்கூத்து – குறிப்புத்தருக.
10. மா. இராசமாணிக்கனார் பட்டியலிடும் மொழிபெயர்க்கப்பட்ட நடனநூல்கள் யாவை?
11. நாட்டுப்புற விளையாட்டாக எவற்றை எல்லாம் சுட்டலாம்?
12. இசைநூல்கள் பற்றி அடியார்க்கு நல்லார் கூறுவன யாவை?
13. இளவட்டக்கல் பற்றி நீவிர் அறிவன யாவை?
14. உரிமரம் ஏறுதல் – குறிப்பு வரைக.
15. பல்லவர்காலச் சிற்பத்திற்கும் சோழர்காலச் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

நெடுவினா

1. சோழர்காலக் கோவில் கட்டடக் கலைக்கும், விஜய நகரக் கட்டடக் கலைக்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆய்க.
2. தஞ்சாவூர் ஓவியங்கள் இன்றளவும் போற்றுப்படுவதற்கான காரணங்களை விளக்குக.
3. நின்றாடலில் இடம்பெற்றுள்ள ஆடல்வகைகளை விளக்குக.
4. பழந்தமிழர் வீரவிளையாட்டுகளில் ஏறுதழுவுதலின் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
5. இசைக்கருவிகளை வகைப்படுத்தி உதாரணத்துடன் விளக்குக.
6. சிலப்பதிகாரம் கூறும் பதினோரு வகை ஆடல்களின் பெயர் - விளக்கம் தருக.

www.tnschoolbooks.in

இணையச்செயல்பாடு

கலைகள்



நம் பண்பாட்டின் தனிச்சிறப்புமிக்க கலைகளை அறிவோமா!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- பழங்காலக் கட்டடக்கலை, பிற்காலக் கட்டடக்கலை, பல்லவர், சோழர் கோவிற்கலை போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தேவையானதைத் தேர்வுசெய்து அதன் சிறப்புகளை அறிக.
- எடுத்துக்காட்டாக, கோவிற்கட்டடக்கலை நுட்பங்கள் என்பதைத் தேர்வு செய்து, கீழ்ப்பகுதியில் உள்ள பாடஅமைப்பைச் சொடுக்கியதும் நிலஅமைப்பு, கோபுரம், ஆலயவடிவம் போன்றவைத். தோன்றும் அவற்றை அறிந்துகொள்க.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :





கலைகள் இணையப்பக்கத்தின் உரலி

http://www.tamilvu.org/ta/courses-degree-d051-d0511-html-d0511ind-21912

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

XI Ethics_Lesson 4 Folder.indd 89 13-12-2021 10:41:52

அலகு
5

திருவிழாக்கள்

GNP8K

கற்றல் நோக்கங்கள்

- திருவிழாக்கள் கொண்டாடப்படுவதற்கான காரணத்தை அறிதல்.
- திருவிழாக்கள் சமூக ஒற்றுமைக்கான வழி என்பதை அறிந்து கொள்ளுதல்.
- திருவிழாக்கள் மூலமாகப் பண்பாட்டுக் கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- இயற்கை சார்ந்த திருவிழாக்களின் வழி நம் முன்னோர் மரபைப் பின்பற்றுதல்.
- பிற சமயத் திருவிழாக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

விழாக்கள் என்பவை, சமுதாயத்தின் கூட்டுச் செயல்பாட்டையும் வளத்தையும் காட்டும் குறியீடுகள். தமிழரின் விழாக்கள் பலவகையாகக் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள் பண்பாட்டு மரபுகளையும் பாரம்பரிய அடையாளங்களையும் விளக்கும் வகையில் உள்ளன. இப்பகுதியின் வாயிலாக, விழாக்கள் மக்களின் அறநெறிவாழ்வுக்கு உதவுகின்றன என்பதை அறியலாம் .

திருவிழா என்பது, மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடும் நிகழ்வே ஆகும். திருவிழாக்கள் பல்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடப்பட்டாலும் மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே முதல் நோக்கமாகும். இவ்விழாக்களை இயற்கை சார்ந்தவை, இனம் சார்ந்தவை, சமயம் சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

மக்கள், பருவகால மாறுபாடுகளுக்கு ஏற்ப விழாக்களைக் கொண்டாடினர். இவ்விழாக்கள் இயற்கை சார்ந்தவை. ஓர் இனத்தின் அடையாளம் மற்றும் வழிபாட்டு நெறிமுறைகளுடன் கொண்டாடப்படும் விழாக்கள், இனம் சார்ந்தவை. கோயில்களில் நாள்தோறும் வழிபாடுகள் நடந்தாலும் ஆண்டிற்கு ஒரு முறை சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வழிபாடே ‘திருவிழா’ என்று அழைக்கப்படும். கோயில் சார்ந்த விழாக்கள் அனைத்து மக்களுக்கும் பொதுவானவையாகும். திருவிழாக்கள், சமுதாயத்தின் பண்பாட்டையும் மரபையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, விழாக்கள் ஒருமைப்பாட்டு உணர்வினை வளர்ப்பதற்கும், வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கும் பயன்படுகின்றன. ஆகவே, விழாக்களின் சிறப்புகளைத் தெரிந்து கொள்வதும் இன்றியமையாததாகிறது.

திருவிழாக்களைப் பொதுவாகச் சிறியவர் முதல் பெரியவர் வரை ஆர்வத்துடன் வரவேற்கின்றனர். திருவிழாக்கள் ஓர் இடத்தில் வாழும் மக்களின் நாகரிகம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவை, மதம் சார்ந்தவையாகவோ, ஏதேனும் நிகழ்ச்சிகளை நினைவுகூர்வனவாகவோ, இயற்கைக்கு நன்றி செலுத்துவனவாகவோ கொண்டாடப்படுகின்றன. இந்நாள்களில்,

வெளியூரில் இருப்பவர்கள் கூட, தங்கள் சொந்த ஊருக்கு வந்து, உறவினர் மற்றும் நண்பர்களுடன் விழாக்களைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஐந்திணை விழாக்கள்

சங்ககாலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் வழிபடு தெய்வங்களும் திருவிழாக்களும் சிறப்பான முறையில் அமைந்திருந்தன என அறிகிறோம்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

(தொல். பொருள். அகம்)

எனத் தொல்காப்பியர் பாலை நிலம் தவிர நால்வகை நிலத்துக்குரிய தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பாலைநில மக்கள் 'கொற்றவையைத்' தெய்வமாக வழிபடுகின்றனர்.

குறிஞ்சி நில விழா

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் ஆகும். குறிஞ்சி நிலக் கடவுள் சேயோன், முருகன், வேலன் எனப் பல பெயர்களில் அறியப்படுகிறார். இந்நிலப்பகுதியில் வேலன்வெறியாட்டு விழா நடைபெற்ற செய்தியினைத் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் வழி அறிகின்றோம். குறிஞ்சி நிலப் பெண்களின் நோயினைத் தீர்ப்பதற்காகப் பராய்க்கடனாக நிகழ்த்தப்பட்டது. வேலன்வெறியாட்டின் பொழுது குறிஞ்சி நிலத்தவர் பல வகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்துகொண்டு, கையில் வேலை ஏந்தி தன்மீது முருகக் கடவுள் ஏறியது போல ஆடுவர். இவ்விழா நடைபெறும் இடம் 'வெறியாடுகளம்' எனப்படும்; அங்குச் சேவல் கொடி நடப்பட்டிருக்கும். பல வகையான நறுமணப்புகைகள் எழுப்பப்படும். பலவகையான இசைக்கருவிகள் இசைக்கப்படும் என இவ்விழாவைப் பற்றிப் பரிபாடல் கூறுகின்றது. இவ்விழாவின் போது, குறிஞ்சி நில மக்கள் தொண்டகப்பறை இசைக்க நடனமாடுவர். இதுவே, 'குன்றக் குரவைக் கூத்து' எனப்பட்டது.

முல்லை நில விழா

காடும் காடு சார்ந்த நிலப்பகுதியும் முல்லை நிலம் ஆகும். முல்லை நிலக்கடவுள் 'மாயோன்' ஆவார். இந்நில மக்களின் முக்கியத் தொழில் கால்நடை வளர்ப்பு ஆகும். முல்லைநில மக்கள் பால் சுரக்கும் மரமான வேப்ப மரத்தைத் தாய்த் தெய்வமாக உருவகித்து வழிபட்டதை அகநானூறு (309) கூறியுள்ளது. இந்நிலப் பகுதியின் உடைமையான கால்நடைகளை எயினர்களிடமிருந்தும் வேடர்களிடமிருந்தும் வழிதவறாமலும் காப்பவர் கருப்பசாமி; இருண்ட கானகத்திற்கு உரியவர், கரிய நிறம் உடையவர் என்ற பொருளில் இப்பெயர் பயன்படுத்தப்பட்டது. இவர் மாயோன் எனவும் அழைக்கப்பட்டார். இதையே 'மாயோன் மேய காடுறை உலகம்' என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ஆயர் குல மக்களுக்கும் ஆநிரைகளுக்கும் துன்பம் நேராமல் காக்கும்படி திருமாலைக் (மாயோனை) குரவைக் கூத்தாடி வழிபட்டனர். இவ்வழிபாடே 'ஆய்ச்சியர் குரவை' ஆகும்.

மருத நில விழா (இந்திர விழா)

மருத நிலத்தில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா 'இந்திரவிழா'. பசி, பிணி, பகை போக்குவதற்காக இந்திரனை மக்கள் வழிபட்டனர். இவ்விழா சாந்திப் பெருவிழா, தீவகச்சாந்தி என்றும் அழைக்கப்பட்டது. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவூரெடுத்த காதையிலும் மணிமேகலையில் விழாவறை காதையிலும் இந்திரவிழா நடைபெற்றமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழா 28 நாள்கள் நடைபெற்றது. சமயக்கணக்கர், காலம் கணிப்போர், சான்றோர்கள், ஐம்பெரும் குழுவினர், எண்பேராயத்தினர் ஆகியோர் ஒன்றுகூடி இந்திரவிழா நடக்கும் நாளை முடிவு செய்வர்.

நால்வகைப் படையினரும் சூழ்ந்து வர 'இந்திரவிழா' நடைபெறும் செய்தியினை முரசு அறைந்து மக்களுக்கு அறிவிப்பர். மக்கள் வீதிகளிலும் கோயில்களிலும் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் வைத்தனர். வாழை, கரும்பு, கமுகு, வஞ்சிக்கொடி, பூங்கொடி முதலானவற்றைக் கொண்டு நகரை அலங்கரித்தனர். வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணல் பரப்பினர். பூதசதுக்கம் முதலான தெய்வங்களுக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளைச் செய்தனர். விழா நாளில் பொது இடங்களில் சான்றோர் நல்லுரை ஆற்றினர். பட்டிமண்டபங்கள் நகரின் பல இடங்களில் ஆங்காங்கே நடைபெற்றன. இவ்வாறு புகார் நகரில் இந்திர விழா நடைபெற்ற செய்தியினைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இந்திர விழா

புகார் நகரில் மட்டுமல்லாமல் மதுரையிலும் இந்திரவிழா நடைபெற்றதாகச் சின்னமனூர்ச் செப்பேடு தெரிவிக்கின்றது. ஐங்குறுநூற்றிலும் (52) இந்திரவிழா பற்றிய செய்திகள் காணக் கிடைக்கின்றன. தொடித்தோட்செம்பியனால் எடுக்கப்பட்ட காமன் விழாவினை இந்திரவிழா, விருந்தாட்டுவிழா ஆகிய பெயர்களில் மணிமேகலை குறிப்பிடுகின்றது.

மருதநில மக்கள் போருக்குச் செல்லும் போது, தங்கள் அரசனை வாழ்த்தி விழாக் கொண்டாடுவர். இவ்விழாவில், தங்கள் வாளை உயர்த்திப் பிடித்துத் 'தண்ணுமை' என்னும் போர்ப்பறை ஒலிக்க ஆடியும் பாடியும் குரவை நிகழ்த்துவர்.

நெய்தல் விழா

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் ஆகும். இந்நிலத்துக்கு உரிய கடவுள் 'வருணன்'. இந்நில மக்களால் கொண்டாடப்படும் விழா, முந்நீர் விழா, நாவாய் விழா என சங்கஇலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் இவ்விழாவினைக் கொண்டாடிய செய்தியினையும், கரிகாலனின் முன்னோர் நாவாய்த் திருவிழா கொண்டாடிய செய்தியினையும் புறநானூற்று(36) உரையின் மூலம் அறிய முடிகிறது.

வருணன் - மேகம், மழை, கடல், ஆறு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டமையால் இவர் நீர்க்கடவுளாக அறியப்பட்டார். இவரை, உலகம் முழுவதும் பரந்து இருப்பவர், உலகத்தையே ஆள்பவர் என்றும் கூறுவர். நெய்தல் நில மக்கள் முத்துகளையும், வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகச் செலுத்தி, தங்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர்.

பாலை நில விழா

குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்த நிலம் பாலை எனப்பட்டது. கொற்றம் என்றால் வெற்றி. இந்நிலமக்கள், வெற்றியைத் தருபவள் என்ற பொருளில் 'கொற்றவை' என்னும் பெண்தெய்வத்தை வழிபட்டனர்.

சிலப்பதிகாரத்தில் சாலினி என்ற தெய்வம் ஏறப்பட்ட பெண்ணிற்குக் கொற்றவையின் கோலம் புனையப்பட்டது. இவ்வாறு கொற்றவையைப் போல அலங்கரிக்கப்பட்ட சாலினியை, மான்மீது அமரச்செய்து உலாவரச் செய்தனர். அவ்வாறு உலா வரும்போது பல்வேறு காணிக்கைப்

XI Ethics_Lesson 5 Folder.indd 92 12-12-2021 22:55:59

பொருள்களுடன் பெண்கள் பின்தொடர்ந்தனர். வழிப்பறியின் போது கொட்டும் பறை; சூறையாடும்போது ஊதப்படும் கொம்பு, புல்லாங்குழல் போன்றவை அச்சமயத்தில் இசைக்கப்பட்டன. இவ்வாறு பாலை நில மக்கள் தங்கள் நிலக்கடவுளான கொற்றவைக்கு விழா எடுத்தனர்.

நடுகல் வழிபாடு

தமிழர் பண்பாட்டின் உயரிய விழுமியமான வீரத்தை அடிப்படையாகக் கொண்டதே நடுகல் வழிபாடு. இவ்வழிபாட்டு முறையைப் பற்றி அறிய சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. போர்க்களத்தில் விழுப்புண்பட்டு வீரமரணம் அடைந்த வீரனது உடலை அடக்கம் செய்யும் முன், அவன் பயன்படுத்திய போர்க்கருவிகளையும் பொருள்களையும் புதை குழியிலிட்டு அடக்கம் செய்தனர். பிறகு அவ்விடத்தில் ஒரு கல்லை நட்டனர். இது 'நடுகல்' எனப்பட்டது. அக்கல்லின் மீது அவ்வீரனது உருவம், பெயர், வீரம், புகழ், தியாகம் போன்றவற்றைப் பொறித்தனர். மேலும், அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையில் ஆண்டுதோறும் விழா எடுத்து வழிபட்டனர். தற்போதும் கிராமங்கள்தோறும் மக்கள் வழிபடும் காவல் தெய்வங்களை இந்நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாகக் கருதலாம்.

நடுகல்

பத்தினி வழிபாடு

சிலப்பதிகாரத்தில் நாடுகாண்காதையில் (224-225) கண்ணகிக்காகப் பத்தினிக் கோட்டம் அமைக்கப்பட்டதை,

'மேலோர் விளையும் நூல்நெறிமாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்'

என்று குறிப்பிடப்படுவதிலிருந்து பத்தினி வழிபாட்டின் தொன்மையை அறிகிறோம். பத்தினி வழிபாடு என்பது கண்ணகி வழிபாட்டையே குறிப்பிடுகிறது. இவ்வழிபாடு இலங்கையில் வாழும் தமிழர்களால் இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கண்ணகி என்பவள் தமிழகக்காப்பிய வரலாற்றில் முக்கிய இடம்பெற்ற கற்புக்கரசியாகத் திகழ்கிறாள்.

கண்ணகி கோயில்

சிலப்பதிகாரத்தின் காப்பியத் தலைவி, பொய்யான குற்றச்சாட்டின் மூலம் தனது கணவன் கோவலன் கொலைத்தண்டனைக்கு உட்பட்டதை அறிந்து சினமுற்றாள். பாண்டிய அரசன் நெடுஞ்செழியனிடம் வாதிட்டு, தன்கணவன் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்டினாள். அரசனின் பிழையால் சீற்றம் அடைந்த கண்ணகி, தன் கற்பின் வலிமையால் மதுரை நகரையே எரித்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. "கண்ணகி சோழ நாட்டில் பிறந்தாள், பாண்டிய நாட்டில் வீரத்தை நிலை நாட்டினாள், சேரநாட்டில் பத்தினித் தெய்வமாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகிறாள்".

பாவை நோன்பு

மார்கழி மாதத்தில் பெண்கள் பாவை நோன்பு நோற்பர். இது 'மார்கழி நோன்பு' என்றழைக்கப்படும். பாவை நோன்புக் காலத்தில் ஆண்டாள் இயற்றிய 'திருப்பாவை'யையும், மாணிக்கவாசகர் அருளிய 'திருவெம்பாவை'யையும் பாடி இறைவனை வழிபடுவர்.

XI Ethics_Lesson 5 Folder.indd 93 12-12-2021 22:55:59

கன்னிப்பெண்கள், நல்ல கணவன் கிடைக்க வேண்டுமெனவும். மணமான பெண்கள் தங்கள் கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டுமெனவும் விரதம் மேற்கொள்வார்கள். இந்நோன்பு பழங்காலந்தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் மழை பெய்து நாடு செழிக்கவும், மக்கள் வளமுடன் நோய் நொடியின்றி வாழவும், பசு மற்றும் கால்நடைகள் சிறக்கவும் வேண்டி, ஆண்டாளும் மாணிக்கவாசகப் பெருமானும் பாடிய பாடல்களைப் பாடுவார்கள்.

பாவை நோன்பு இருப்பவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, உணவு உண்ணாமல், மலர் சூடாமல், தம்மை அழகுபடுத்திக் கொள்ளாமல், இறைவனை நினைத்து நோன்பு இருந்து, தங்களால் இயன்றளவு தானமும் தருமமும் செய்து அறவழியில் நிற்பர் எனப் பாவை நோன்பு குறித்து திருப்பாவை இரண்டாம் பாடல் கூறுகிறது.

இயற்கை சார்ந்த விழாக்கள்

பொங்கல் திருவிழா

பொங்கல் விழா, உலகில் வாழும் தமிழர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பயிர்கள் செழிக்கவும், விளைச்சல் பெருகவும், கதிரவனே முதன்மைக் காரணமாக விளங்குகிறான். எனவே, உழவர் பெருமக்கள் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகப் பொங்கல் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகை போகி, பொங்கல் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் எனக் கொண்டாடப்பட்டு வருகிறது.

போகிப் பண்டிகை

இப்பண்டிகை, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. பயனற்ற பழைய பொருள்களையும், மனித மனத்தில் உள்ள தேவையற்ற எண்ணங்களையும் போக்குவதே போகிப்பண்டிகையின் நோக்கமாகும்.

இப்பண்டிகை நாளன்று வீட்டைச் சுத்தப்படுத்தி, வீட்டின் தலைவாசல் உள்ளிட்ட நிலைக்கதவுகளுக்கு மஞ்சளும் சந்தனமும் பூசுவர். அன்றைய மாலைப் பொழுதில் வாசற்கூரையில் வேப்பிலை, பூளைப்பூ, ஆவாரம்பூ ஆகியவற்றைக் கொண்டு காப்புக் கட்டுவர்.

பொங்கல் திருநாள்

உழவர் பெருமக்கள் ஆடி மாதத்தில் விதைத்த பயிர்களைத் தை மாதம் அறுவடை செய்வர். முதல் விளைச்சலை கதிரவனுக்குக் காணிக்கையாகப் படைப்பதே பொங்கல் திருவிழா ஆகும். பொங்கல் அன்று பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்துமே புதியனவாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புதிய கற்களாலான அடுப்பு, புதிய மண்பானை, புதிய அகப்பை, தூயபசுஞ் சாணத்தாலான வறட்டி போன்றவற்றைப் பயன்படுத்துவார்கள்.



பொங்கல் திருநாள்

வீட்டு வாசலில் பொங்கலிடும் இடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிடுவார்கள். அன்றலர்ந்த மலர்களையே வழிபாட்டிற்குப் பயன்படுத்துவார்கள். பொங்கல் வைக்கும் பானையை மஞ்சள், குங்குமம், இஞ்சி, மஞ்சள் கொத்து ஆகியவற்றால் அலங்கரிப்பர். புதிதாக அறுவடை செய்த நெல்லின் பச்சரிசியுடன் வெல்லம், கற்கண்டு, நெய், பால், முந்திரி, திராட்சை முதலியவற்றைக் கொண்டு பொங்கல் இடுவர். தங்கள் விளைநிலங்களில் விளைந்த செங்கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, கருணைக்கிழங்கு போன்றவற்றையும் சேர்த்துக் கதிரவனுக்கு வைத்து வழிபடுவார்கள்.

மாட்டுப் பொங்கல்

உழவுக்கும் உழவனுக்கும் உறுதுணையாக இருக்கும் காளைகளுக்கும், பசுக்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மாட்டுப் பொங்கல்

மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளை அலங்கரித்து அவற்றுக்குப் பொங்கலைக் கொடுத்து மகிழ்வர். இதனைத்தொடர்ந்து, மாலையில் மஞ்சுவிரட்டு எனப்படும் 'ஜல்லிக்கட்டு விழா' நடைபெறும். அப்பொழுது, இளைஞர்கள் காளைகளை அடக்கித் தமது வீரத்தை வெளிப்படுத்துவர்.

மஞ்சு விரட்டு

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்"

என்ற சங்க இலக்கியப் பாடல் மூலம் இவ்வீரவிளையாட்டின் தொன்மையை அறியலாம்.

பழங்காலத்தில் கால்நடைகளே நமது செல்வத்தின் அடையாளமாகத் திகழ்ந்தன. 'ஆயிரம் பசுவுடைய கோ நாயகர்' என்ற பட்டப் பெயர்களெல்லாம் புழக்கத்தில் இருந்தன. 'ஏரின் பின்னால் தான் உலகமே சுழல்கின்றது' என்கிறார் வள்ளுவர். அந்த ஏர் முனையை முன்னேந்திச் செல்பவை மாடுகளே. இதன் மூலம் மாடுகளே உழவர்களை உயிர்ப்போடு வைத்துள்ளன என்று கூறினாலும் மிகையாகாது.

காணும் பொங்கல்

காணும் பொங்கல், பகைமையை மறந்து உறவுகளைப் புதுப்பிக்கும் நாளாகும். அன்றைய தினம் மக்கள் தமது உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பெரியவர்களை வணங்கி, வாழ்த்துபெறும் நாளாகும். இவ்விழா நாளில் பட்டிமன்றங்கள் நடத்தியும், பாரம்பரிய விளையாட்டுகள் விளையாடியும் மகிழ்வார்கள்.

காணும் பொங்கல்

இவ்வாறு பண்டைய காலம் முதல் இன்று வரை பொங்கல் திருநாள், தமிழர் திருநாள் என்றும், உழவர் திருநாள் என்றும் சிறப்பான முறையில் உலகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

XI Ethics_Lesson 5 Folder.indd 95 12-12-2021 22:56:02

சித்திரைத் திருவிழா

சித்திரைத் திருவிழா-மதுரை

சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் தமிழகத்தின் மிகப்பெரிய திருவிழா மதுரை சித்திரைத் திருவிழா. சைவ சமய விழாவான மீனாட்சி சுந்தரேசுவரர் திருமணமும், வைணவ சமய விழாவான கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் ஒன்றாக நடைபெறுவது. திருமலை நாயக்கர் காலத்தில் இவ்விரு சமய விழாக்களும் ஒன்றாக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டன. சித்திரை மாதம் வளர்பிறை ஐந்தாம் நாள் இவ்விழா தொடங்கித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறுகிறது.

ஆடிப் பெருக்கு

ஆடி மாதத்தில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையினால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கி வரும். இதனையே 'ஆடிப்பெருக்கு' என்று கூறுவர். காவிரி பாயும் பகுதிகளில் வாழும் மக்கள் காவிரியாற்றை அன்னையாகவும் தெய்வமாகவும் நினைத்து வழிபடுவர்.

ஆடிப் பெருக்கு விழா

அதற்காக வற்றாத நதிகளைத் தங்கள் கடவுளாகப் போற்றி மகிழ்ந்து, வழிபட்டு உழவு வேலையைத் தொடங்குவார்கள். இதன் அடிப்படையிலேயே 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழி உருவானது. இப்பகுதிகளில், ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று "ஆடிப் பெருக்கு" கொண்டாடப்படுகிறது.

மகா மகத்திருவிழா

மாசி மாதத்தில் குரு, சிம்ம ராசியில் இருக்கும்போது, மக நட்சத்திரமும் பௌர்ணர்மியும் சேர்ந்து வரும் நாளே மாசிமகம் ஆகும்.

மகா மகத்திருவிழா–கும்பகோணம்

நவக்கிரகங்களில் குரு ஓர் இராசியில் இருந்து மற்றோர் இராசிக்கு இடம்பெயர ஒரு வருடம் ஆகிறது. இதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் குரு பெயர்ச்சி விழாவும், மாசிமக விழாவும் நடைபெறுகிறது. இதுபோலவே, பன்னிரண்டு இராசிகளையும் குரு கடந்து வர பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும். ஆகவேதான், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம், 'மகாமகம்' என்று அழைக்கப்படுகிறது. அன்றைய தினம் புனித இடங்களில் நீராடுவது மிகவும் சிறப்பானதாகும். எனவே, கும்பகோணம் மகாமகக் குளத்தில் தீர்த்தவாரி அன்று பக்தர்கள் புனித நீராடுகிறார்கள். மேலும், வடநாட்டில் நடைபெறும் 'கும்பமேளா'வைப் போன்று இதனை, 'தென்னகத்தின் கும்பமேளா' என்றும் அழைப்பர்.

www.tnschoolbooks.in

சைவத் திருவிழாக்கள்

சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் சைவர்களாவர். சிவனை வழிபடும் திருவிழாக்கள் சைவத் திருவிழாக்கள் ஆகும்.

மகாசிவராத்திரி

'மகாசிவராத்திரி' விழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருந்து சிவனை வழிபடுவர்.

மகாசிவராத்திரி விழா

அன்று நடைபெறும் நான்கு கால பூஜைகளில் சிவபுராணங்களைப் பாட வேண்டும். மேலும், ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் சிவராத்திரிகளில் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே 'மகா சிவராத்திரியாகும்'.

விநாயகர் சதுர்த்தி

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவை ஆலயங்களிலும் ஆலயமில்லாத இடங்களிலும், வீடுகளிலும் கொண்டாடுவர்.

விநாயகர் சதுர்த்தி விழா

ஆலயமில்லாத இடங்களிலும் தற்காலிகமாகக் களிமண்ணால் விநாயகர் உருவம் செய்து வழிபடுவர். இவ்விழாவை வடஇந்தியாவில் 'கணேஷ்சதுர்த்தி' என்ற பெயரில் கொண்டாடுகின்றனர்.

தீபத்திருவிழா

கார்த்திகை மாதம் முழுநிலவு நாளில் வீடுகளிலும் கோயில்களிலும் விளக்கு ஏற்றி வழிபடுவார்கள். இதுவே, கார்த்திகைத் திருவிழாவாகும். இவ்விழா தொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் திருவண்ணாமலை மலை உச்சியில் தீபம் ஏற்றி இறைவனை ஒளி வடிவில் வழிபடுவர். மேலும், மற்ற சிவத்தலங்களிலும் முருகன் ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

திருவண்ணாமலை தீபம்

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைப் பொருள்களைப் பெரும் ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

ஆதிரைத் திருவிழா

திருவாதிரை என்பது, ஆண்டுதோறும் மார்கழி மாத முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இவ்விழாவினைப் பற்றி மாணிக்கவாசகர் திருவாசகத்திலும், சம்பந்தர், நாவுக்கரசர் தேவாரத்திலும் பாடியுள்ளனர். சிதம்பரம், மதுரை, திருவாலங்காடு, உத்திரகோசமங்கை, திருக்கழுக்குன்றம்,

XI Ethics_Lesson 5 Folder.indd 97 12-12-2021 22:56:02

திருமுல்லைவாயில் போன்ற புகழ்பெற்ற சிவத்தலங்களில் திருவாதிரை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருவாதிரை திருநாள்

திருவாதிரையன்று சிவபெருமானுக்குக் 'களி'யைப் படைத்துப் பக்தர்களுக்கும் வழங்குவர். இதனால், 'திருவாதிரைக் களி' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. மேலும், சிதம்பரம் கோயிலில் இறைவனை ஆடல் கோலத்தில் கண்டு வழிபடுவர்.

உங்களுக்குத் தெரியுமா?

சிவபெருமானுக்குரிய ஐந்து சபைகள்:

பொற்சபை
நடராஜர் கோயில் - சிதம்பரம்

வெள்ளிசபை
மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் - மதுரை

இரத்தினசபை
வடவாரண்யேசுவரர் கோயில் - திருவாலங்காடு

தாமிரசபை
நெல்லையப்பர் கோயில் - திருநெல்வேலி

சித்திரசபை
குற்றாலநாதர் கோயில் - குற்றாலம்

வைணவத் திருவிழாக்கள்

திருமாலை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் வைணவர்களாவர். திருமாலை வழிபடும் திருவிழாக்கள் வைணவத் திருவிழாக்கள் ஆகும்.

வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் வளர்பிறை பதினோராம் நாள் 'வைகுண்ட ஏகாதசி' ஆகும். இது வைணவர்கள் மற்றும் திருமாலை வழிபடுபவர்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி அன்று விரதம் இருப்பவர்களுக்கு ஆண்டு முழுவதும் ஏகாதசி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும். திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருவோணம்

திருமாலின் பிறந்தநாளான ஆவணி மாதம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழா திருவோணம் ஆகும். இது, திருமாலுக்கு உகந்த நாளாகக் கருதப்படுவதால் அந்நாளில் மக்கள் பல கோயில்களுக்கும் சென்று திருமாலை வழிபடுவர்.

ஓணம் பண்டிகை

இந்நாளில், மகாபலி மன்னர் வருவதாகக் கருதி மக்கள் வீதிகளிலும் வீட்டின் முற்றத்திலும் பல வண்ணப்பூக்களால் பெரிய கோலங்களைப் போட்டு அவரை வரவேற்பர். இதை "அத்தப்பூ" என்றழைப்பர். இவ்விழாவைப் பற்றிய செய்திகள் மதுரைக்காஞ்சியிலும், தேவாரத்திலும், நாலாயிரத் திவ்வியபிரபந்தத்திலும் இடம் பெற்றுள்ளன.

தீபாவளி

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதம் தேய்பிறை நாளில் அமாவாசைக்கு முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகையே தீபாவளியாகும்.

XI Ethics_Lesson 5 Folder.indd 98 12-12-2021 22:56:03

தீபாவளி என்றால் (தீபம் + ஆவளி) 'தீபங்களின் வரிசை' என்பது பொருள். இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் திருநாளே தீபாவளித் திருநாளாகும். முன்பொரு காலத்தில் நரகாசுரன் தேவர்களையும் மக்களையும் கொடுமை செய்ததாகவும், அவனது கொடுமையை மக்களும் தேவர்களும் பொறுக்க முடியாமல் திருமாலிடம் முறையிட்டதாகவும், திருமால் சக்கராயுதத்தால் நரகாசுரனை வதம் செய்து மக்களையும் தேவர்களையும் காத்ததாகவும் கூறுவர். நரகாசுரன் தான் இறக்கும் தருவாயில் தனது நினைவு நாளை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாகவும் கூறுவர். அந்நாளே, தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா, தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தீபாவளித் திருநாள்

இத்திருநாளன்று மக்கள் அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீடு முழுவதும் விளக்கேற்றிப் பூஜை செய்து, பட்டாசுகள் வெடித்துப் புத்தாடை அணிந்து, இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுகின்றனர். வட இந்தியாவில் இத்திருநாளைத் தீபஒளித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

நவராத்திரி விழா

வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைத் தரும் முப்பெரும் கடவுளாக முறையே மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகியோரைப் போற்றி வணங்கும் விழாவே நவராத்திரி திருவிழாவாகும். நவராத்திரி என்பதற்கு 'ஒன்பது இரவுகள்' என்பது பொருளாகும். இவ்விழா புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பின்வரும் ஒன்பது நாள்களும் கொண்டாடப்படுகிறது. ஒன்பதாவது நாள் நடக்கும் வழிபாடு கலைமகளுக்கு உரியதாகக் கருதி புத்தகங்கள், இசைக்கருவிகள் மற்றும் பல தொழில் சார்ந்த கருவிகளையும் வைத்து வழிபடுவர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கருத்தில் மக்கள் தமது தொழிலைப் போற்றிக் கொண்டாடுவதே இவ்விழாவின் நோக்கமாகும். பத்தாம் நாள் விழாவாக "விஜயதசமி" கொண்டாடப்படுகிறது. விஜயதசமி என்றால் 'வெற்றியைத் தருகின்ற நாள்' என்பது பொருள். அன்று குழந்தைகளுக்குக் கல்வியைத் தொடங்கினால் வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கையாகும். வடநாட்டிலும், தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

நவராத்திரி கொலு

அம்மன் திருவிழா

அம்மன் வழிபாடானது, ஊர்தோறும் நடைபெறும் முக்கிய வழிபாடாகும். மாரி என்றால்

மழை என்று பொருள். கோடைக்காலத்தில் வெப்பத்தின் காரணமாக மக்களுக்கு அம்மை போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்நோய்கள் வராமல் தடுப்பதற்காக மழைதர வேண்டி மாரியம்மனுக்கு விழா எடுத்து வழிபடுகின்றனர்.

தீமிதி திருவிழா

பல நோய்களுக்கு மருந்தாக உள்ள வேப்பமரமே மாரியம்மனுக்கான ‘தல விருட்சமாகும்’. இவ்விழா, காப்புக்கட்டுதல் தொடங்கி ஏழு நாள்முதல், பதினைந்து நாள்வரை நடைபெறும். பூவோடு எடுத்தல், பூவாரி கொட்டுதல், அலகு குத்துதல், சாட்டை அடித்தல், மொட்டை அடித்தல், மாவிளக்கு எடுத்தல், தீமிதித்தல் போன்றவை மாரியம்மன் திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் ஆகும். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பண்ணாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழா, மஞ்சள் நீராட்டுதலுடன் நிறைவடையும். இவ்விழா, கிராமங்கள்தோறும் உள்ள மக்கள் அனைவராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆடிப்பூரம்

அம்மனுக்கு உகந்த திருநாள்களில் ஆடிமாதம் பூர நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் ஆடிப்பூரத்திருநாள் மிகவும் சிறப்புடையது. சிவத் தலங்களில் அம்மனுக்கும், திருவில்லிப்புத்தூரில் ஆண்டாளுக்கும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இந்நாளில், அம்மனுக்கு வளையல்களால் அலங்காரம் செய்து ஆடிக்கூழ் படைத்து இவ்விழாவை மக்கள் கொண்டாடுகின்றனர்.

நாட்டார் திருவிழாக்கள்

நாட்டார் தெய்வங்கள் கிராம மக்களால் வணங்கப்படுபவை ஆகும். இவை சிறுதெய்வங்கள், கிராமதேவதைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நாட்டார் தெய்வ வழிபாடுகள் கிராம மக்களின் பண்பாட்டுடனும் பழக்க வழக்கங்களுடனும் ஒன்றிணைந்தவையாக உள்ளன. பொன்னியம்மன், போத்திராஜா, அண்ணமார், அய்யனார், காத்தவராயன், நாடியம்மன், கருப்பசாமி, சுடலைமாடன், இசக்கியம்மன் போன்ற பல்வேறு நாட்டார் தெய்வங்களை மக்கள் தங்கள் முன்னோர்களாகவே கருதுவர். இவ்விழாக்கள் மூலம் இன்றும் நாட்டுப்புறக்கலைகள் உயிர்த்திருக்க இவ்விழாக்கள் பேருதவி புரிகின்றன.

நாட்டார் சிற்பங்கள்

கந்த விரத விழாக்கள்

தமிழ்க் கடவுளான முருகனை வணங்கும் விழாவே கந்த விரத விழா ஆகும்.

- ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறாம் நாள் சஷ்டியே “கந்த சஷ்டி” விழாவாகும். முருகப் பெருமான் அரக்கனை ஒடுக்கப் போர் புரிந்த நிகழ்வையே கந்த சஷ்டி என்கிறோம்.

கந்த சஷ்டி திருவிழா

XI Ethics_Lesson 5 Folder.indd 100 12-12-2021 22:56:04

- வைகாசி மாதம் முழுநிலவு நாளில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுகிறது. முருகன் ஆலயங்களில் இவ்விழா நடைபெறுகிறது.

- பங்குனி உத்திரம் என்பது, பங்குனி மாதத்தில் முழுநிலவு நாளில் கொண்டாடப்படும் விழாவாகும். இது முருகனின் திருமணநாளாகக் கருதப்படுகிறது.

- ஆடி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்குரிய நாளாகக் கருதி வழிபடுவர். இந்நாளன்று, அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணியில் ஆடிக்கிருத்திகை விழா சிறப்பாகக் கொண்டாப்படுகின்றது.

உங்களுக்குத் தெரியுமா?

முருகனுக்குரிய அறுபடை வீடுகள்:

1. திருப்பரங்குன்றம்
2. திருச்செந்தூர் அல்லது திருச்சீரலைவாய்
3. திருவாவினன்குடி (எ) பழனி
4. திருவேரகம் (எ) சுவாமிமலை
5. திருத்தணி அல்லது குன்றுதோறாடல்
6. பழமுதிர்சோலை

கோயில் சார்ந்த விழாக்கள்

தேர்த்திருவிழாக்கள்

தமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் தெய்வங்களைத் தேரில் அமர வைத்து ஊர்வலமாக அழைத்து வருவது முக்கிய நிகழ்வாகும். ஒவ்வொரு கோயில் திருவிழாவிலும் தேர்த்திருவிழா குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பத்துநாள்கள் நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் நீராட்டிற்கு முதல் நாள் தேரோட்டம் நடைபெறும். முதன்மைத் தெய்வத்திற்குப் பெரிய தேரும், பிற தெய்வங்களுக்குச் சிறிய தேரும் இருக்கும்.

திருவாரூர் தேர்

தேரில் பெரிய கயிறுகள் இணைக்கப்படும். அவற்றை 'வடம்' என்று கூறுவர். இவ்வடத்தைப் பற்றி இழுத்துச் செல்வதை 'வடம் பிடித்தல்' என்பர். கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட முடியாதவர்களான முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கு உதவும் வகையிலும், அனைவரும் ஒன்று கூடி வழிபாடு செய்யவும் இறைவனை வீதி உலாவாக அழைத்து வருவர். இவ்வாறு இறைவன் தன்னை நாடி வந்த அடியவர்களுக்கு அருள் புரிவதோடு, தான் அவர்களை நாடிச் சென்றும் அருள்புரிவார் என்பதைத் தேர்த்திருவிழா உணர்த்துகிறது.

திருவாரூரில் தியாகராசப் பெருமான் கோயில் கொண்டுள்ளார். இக்கோயிலின் தேர் ஆசியாவிலேயே மிக உயரமான தேர் என்ற பெருமைக்கு உரியது. இத்தேர் 96 அடி உயரமும் 360 டன் எடையும் கொண்டது. நான்கு நிலைகளைக் கொண்டதாக உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் இக்கோயிலின் தேர்த் திருவிழா கொண்டாடப்படுகிறது.

கீழை நாடுகளின் லூர்து நகர் என அழைக்கப்படுவது வேளாங்கண்ணி ஆகும். வேளாங்கண்ணிமாதா தேர்த்திருவிழா அனைத்து சமய மக்களும் கலந்து கொள்ளும் ஒரு விழாவாகும்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணக்கதைகளையும், சமுதாயத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளையும் சிற்பங்களாகச் செதுக்கித் தேரை அழகுபடுத்துவர். எனவே, தேர் என்பது நடமாடும் கலைக்கருவூலமாகத் திகழ்கிறது.

தமிழகத்தில் திருவாரூர், பழனி, அவினாசி, திருவில்லிப்புத்தூர், சிதம்பரம், கும்பகோணம், மதுரை, திருவல்லிக்கேணி, திருவரங்கம், திருவண்ணாமலை, திருநெல்வேலி போன்ற இடங்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

கிறித்துவத் திருவிழாக்கள்

கிறிஸ்துமஸ்

மக்கள் நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, இறைத்தூதராக ஏசு பெருமானைக் கருதி வழிபடுவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்ரேல் நாட்டில் பெத்தலகேம்என்னும்ஊரில்மாட்டுத்தொழுவத்தில் ஏசு பெருமான் பிறந்தார்.

ஏசுபெருமான் பிறந்த நாளான டிசம்பர் மாதம் 25 ஆம் நாள் உலக அளவில் கிறிஸ்துமஸ் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

கிறிஸ்துமஸ்

இத்திருநாளில் மக்கள் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடுவர். கிறித்துவர்கள் வீடுகள்தோறும், நட்சத்திர விளக்குகளை அமைத்தும் புத்தாடை அணிந்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்வர்.

புனித வெள்ளி

புனித வெள்ளி (Good Friday) பெரிய வெள்ளி அல்லது ஆண்டவருடைய, திருப்பாடுகளின் வெள்ளி என்றும் கிறித்துவர்கள் இதனை அழைப்பர். ஏசு பெருமானைச் சிலுவையைச் சுமக்கச் செய்து, சவுக்கால் அடித்துக் கடைசியாக அதே சிலுவையில் அவரை அறைந்து கொடுமைப்படுத்தினார்கள். மன்னனின் ஆணைக்குப் பயந்த யூதேயா நாட்டு மக்கள், எதையுமே சொல்லமுடியாமல் வேதனையுடன் கண்ணீர் விட்டனர். ஏசு பெருமான் அடைந்த துன்பங்களையும் சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறந்தமையையும் நினைவுகூரும் நிகழ்வே 'புனித வெள்ளி' ஆகும். ஏசு பெருமான் சிலுவையில் அறையப்பட்ட இந்நாளை கிறித்துவர்கள், நினைவு நாளாகக் கருதி வழிபடுகின்றனர்.

புனித ஞாயிறு

ஏசு பெருமான் இறப்பதற்கு முன்னர் 'நான் மீண்டும் உயிர் பெற்று வருவேன்' எனத் தமது சீடர்களுக்குச் சொல்லிச் சென்றார். சிலுவையில் கொடியவர்களால் உயிருடன் அறையப்பட்ட ஏசு பிரான், மூன்றாம் நாள் உயிர்பெற்று மக்களுக்கு ஆசியும், சீடர்களுக்கு அறிவுரையும் வழங்கி மீண்டும் மறைந்தார். அவர் உயிர்த்தெழுந்த மூன்றாவது நாளைப் 'புனித ஞாயிறு' என்பர்.

இசுலாமியத் திருவிழாக்கள்

மொகரம் பண்டிகை

மொகரம் என்ற மாதம் இசுலாமிய நாள்காட்டியின் (அரபு) மாதங்களில் முதல் மாதமாகும். இது இவர்களின் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இசுலாமிய நாள்காட்டி சந்திர நாள்காட்டியாகும். இம்மாதத்தில் சண்டைகள், புனிதப்போர்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனத் திருக்குரான் கூறுகின்றது. இப்பண்டிகை தியாகத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

ரமலான் (ரம்ஜான்) பண்டிகை

ரமலான் பண்டிகையை ஈகைத் திருநாள், ஈத் பெருநாள் என்றும் அழைப்பர். 'ஈத்' என்னும்

XI Ethics_Lesson 5 Folder.indd 102 12-12-2021 22:56:04

அரபுச் சொல்லிற்குத் 'தடுத்து விடுவது' என்பது பொருள். இந்நோன்பு தங்களைத் தீமைகளில் இருந்து தடுத்துக் காப்பதாகக் இசுலாமியர்கள் கருதுகிறார்கள்.

ரமலான் பண்டிகை

வைகறைப் பொழுதின் தொடக்கத்திலிருந்து பொழுது மறையும் வரை அல்லாவை நினைத்தபடி இசுலாமியர்கள் நோன்பு மேற்கொள்ளுவர்.

இந்நோன்பில் முதல் பத்துநாள்கள் இறையருள் கிடைப்பதற்காகவும், இரண்டாவது பத்துநாள்கள் இறைவனிடத்தில் மன்னிப்பைப் பெறுவதற்காகவும், மூன்றாவது பத்துநாள்கள் நரகத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவும் நோன்பு கடைப்பிடிக்கின்றனர். இந்நோன்பின் இறுதி நாளே ரமலான் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

பக்ரீத் பண்டிகை

இப்பண்டிகை இசுலாமியர்களின் பன்னிரண்டாவது மாதமான "துல்ஹஜ்" என்ற மாதத்தில் வருகின்றது. இசுலாமியர் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது மெக்காவிற்கு "ஹஜ்" பயணம் மேற்கொள்ள வேண்டும். இப்பயணத்தினால், தாம் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த பாலகர் போன்று புனிதமாகவும், தீமை நீங்கியவராகவும் திரும்பிவிடுவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

ஹஜ் பயணம் மேற்கொண்டவர்கள் 'ஹாஜிக்கள்' என அழைக்கப்படுகிறார்கள். ஹாஜிக்கள் அல்லாவின் வீட்டிற்கு விருந்தாளியாகச் செல்கிறார்கள். இப்பயணம் மேற்கொள்ள இயலாதவர்கள் "குர்பானி" கொடுத்துப் பக்ரீத் தொழுகை செய்வார்கள்.

சமணத் திருவிழா
மகாவீர் ஜெயந்தி

மகாவீரர், கி.மு. (பொ.ஆ.மு.) 546 இல் வைசாலி நாட்டில் 'குண்டாகிராமம்' என்னும் இடத்தில் பிறந்தார். அரச குமாரனாகிய இவர் அனைத்தையும் துறந்து நாட்டை விட்டு வெளியேறித் தியானம் செய்து, உயர்நிலையை அடைந்தார். இவர், தாம் கண்டறிந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைத்து நல்வழிப்படுத்தினார். இவர் அன்பு, அமைதி, அகிம்சை போன்ற நற்குணங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். இவரது பிறந்த நாள் 'மகாவீர்ஜெயந்தி'யாகக் கொண்டாடப்படுகின்றது.

மகாவீர் ஜெயந்தி

உங்களுக்குத் தெரியுமா?

(சமண சமயத்தில் 24வது தீர்த்தங்கரர் – மகாவீரர்)

சமண மதத்தில் திகம்பரர், சுவேதம்பரர் என்ற இரு பிரிவுகள் உண்டு.

திகம்பரர் – திசைகளையே ஆடையாக அணிபவர்

சுவேதம்பரர் – வெண்ணிற ஆடை அணிபவர்

XI Ethics_Lesson 5 Folder.indd 103 12-12-2021 22:56:04

பௌத்தத் திருவிழா

புத்தபூர்ணிமா

புத்தபூர்ணிமா வைகாசி மாதம் முழுநிலவு நாளில் உலகில் உள்ள அனைத்து பௌத்தர்களாலும் கொண்டாடப்படுகிறது. வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் முழுநிலவு நன்னாளில் நேபாள நாட்டில் கபிலவஸ்துவிலுள்ள 'லும்பினி' என்னும் கிராமத்தில் அரச குடும்பத்தில் புத்தர் பிறந்தார். மக்கள் நலன் கருதிப் பெற்றோரையும் மனைவியையும் மகனையும் அரசாட்சியையும் துறந்தார்.

புத்தபூர்ணிமா

புத்தரின் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளான பெருந்துறவு, நிருவாண நிலை அடைந்தது, முதல் போதனையை நிகழ்த்தியது, பரிநிருவாண நிலையை அடைந்தது என அனைத்தும் நிகழ்ந்த இந்நாளையே 'புத்த பூர்ணிமா' என்று பௌத்த சமயத்தினர் கொண்டாடி வருகின்றனர். பௌத்தர்கள் புத்தபூர்ணிமா அன்று வெண்ணிற ஆடை அணிந்து பௌத்த சைத்தியங்களுக்குச் சென்று மலர்களைத்தூவி வழிபாடு செய்கின்றனர்.

இவ்விழா பீகாரில் உள்ள புத்த கயாவிலும், உத்திரப்பிரதேசத்தில் உள்ள சாரநாத்திலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்தியா மட்டுமல்லாது நேபாளம், இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட உலக நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

புத்த பெருமானின் இப்புனித நன்னாள் குறித்த செய்தி மணிமேகலை என்ற காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அக்காப்பியத்தில் தீவதிலகை என்பாள், மணிமேகலையிடம் தன்னுடைய வரலாற்றைக் கூறியதோடு ஆபுத்திரனையும் அமுதசுரபியையும் பற்றி எடுத்துரைத்துப் 'பசிப்பிணி போக்கும் அமுதசுரபியானது பௌத்தர்களின் புனிதநன்னாளான புத்தபூர்ணிமா அன்று மணிமேகலையிடம் வந்துசேரும்' என்றும் கூறுகிறாள்.

குருநானக் ஜெயந்தி

குருநானக் பிறந்த நாள் சீக்கியர்களால் 'குருநானக் ஜெயந்தியாகக்' கொண்டாடப்படுகிறது. குருநானக், லாகூருக்கு அருகேயுள்ள 'தால்வண்டி' என்ற கிராமத்தில் பிறந்தார். இளம்வயது முதலே இறையனுபவங்களில் திளைத்திருந்தார். தமது முப்பதாவது வயதில் ஞானம் பெற்றார். தொடக்கத்தில் பல்வேறு அருள்செயல்களை நிகழ்த்தி மக்களை நல்வழிப்படுத்தினார். ஆன்மீகக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். மத ஒற்றுமைக்கு மகத்தான சேவை செய்தார். இவர் அன்புநெறியை வலியுறுத்தினார். இவரது அருளுரைகள் அடங்கிய புனித நூல் 'ஆதிகிரந்தம்' ஆகும்.

குருநானக் ஜெயந்திக்கு இரண்டு நாள்களுக்கு முன்பாகவே குருத்வாராக்களில் தொடர்ந்து நாற்பத்தெட்டு மணி நேரம் புனித நூலான 'ஆதிகிரந்தம்' வாசிக்கப்படும். குருநானக் பிறந்தநாள் அன்று அதிகாலை நான்கு மணி முதலே பக்திப்பாடல்களும், புனித உரைகளும் வாசிக்கப்பட்டு விழா தொடங்கும். அன்றைய நாள் முழுவதும் குருத்வாராக்களில் மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படும். இந்நாளில் உலகெங்கும் உள்ள சீக்கிய குருத்துவாராக்கள் வண்ண வண்ண விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்படும்.

XI Ethics_Lesson 5 Folder.indd 104 12-12-2021 22:56:04

குருநானக் ஜெயந்தி

அமிர்தசரசில் உள்ள பொற்கோயில் சீக்கியர்களின் புனிதத்தலமாகும். பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் இந்த நாளில் சிறப்பு அணிவகுப்புகளும், ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெறும். இறை வழிபாட்டில் கலந்துகொள்ளும் அனைத்துச் சீக்கியர்களும் தமது வழக்கப்படி தலைப்பாகை, வாள், புத்தாடை அணிவார்கள். பின்னர், ஊர்வலம் நடைபெறும். நீண்ட, பட்டை தீட்டப்பட்ட வாள்களை வைத்துக் கொண்டு, அதைச்சுழற்றிப் பல்வேறு வீரதீரச் செயல்களைச் செய்துகொண்டு ஊர்வலமாகச் செல்வார்கள்.

நிறைவுரை

குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பண்டிகைகளும் விழாக்களும் கொண்டாடப்படுகின்றன.

பொது நிகழ்வுகளாக நடைபெறும் விழாக்களின்போது மக்கள் ஒன்றுகூடித் தம்முடைய வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுகிறார்கள். பண்டிகைகளும் விழாக்களும் வாழ்விற்கு இன்றியமையாத மனஅமைதியையும் மனநிறைவையும் தருகின்றன. ஒவ்வொரு பண்டிகையும் மக்களுக்குப் புத்துணர்வைத் தருகின்றது.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வைகுண்ட ஏகாதசி எந்தத் தெய்வத்தோடு தொடர்புடையது?
   அ) முருகன் ஆ) மாயோன் இ) வருணன் ஈ) சிவன்

2. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடு
   அ) மகாமகம் - கும்பகோணம் ஆ) ஆடிப்பெருக்கு - திருச்சி
   இ) தேர்த்திருவிழா - பூம்புகார் ஈ) வைகுண்ட ஏகாதசி - திருவரங்கம்

3. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடு.

அ)	நடுகல் வழிபாடு	- 1. கேரளா
ஆ)	சூரசம்ஹாரம்	- 2. நேபாளம்
இ)	திருவோணம்	- 3. முருகன்
ஈ)	சித்தார்த்தர்	- 4. வீரர் வழிபாடு

   அ) அ-4 ஆ-3 இ-1 ஈ-2 ஆ) அ-1 ஆ-2 இ-4 ஈ-3
   இ) அ-3 ஆ-2 இ-4 ஈ-1 ஈ) அ-3 ஆ-4 இ-2 ஈ-1

XI Ethics_Lesson 5 Folder.indd 105 12-12-2021 22:56:04

4. முப்பெரும் தேவியரைப் போற்றி வணங்கும் விழா

அ) சிவராத்திரி ஆ) நவராத்திரி இ) தீபத்திருவிழா ஈ) இவற்றில் ஏதுமில்லை

5. 'துல்ஹஜ்' என்ற இசுலாமிய மாதத்தில் கொண்டாடப்படும் பண்டிகை

அ) பக்ரீத்பண்டிகை ஆ) மொகரம்

இ) ரம்ஜான்பண்டிகை ஈ) மிலாதுநபி

6. ஏசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்

அ) உயிர்ப்பு பெருவிழா (ஈஸ்டர்) ஆ) பெரியவியாழன் இ) புனிதவெள்ளி ஈ) சாம்பல்புதன்

7. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடு.

அ) மருதநிலம் - 1. வருணன்

ஆ) முல்லைநிலம் - 2. கொற்றவை

இ) பாலைநிலம் - 3. இந்திரன்

ஈ) நெய்தல் - 4. மாயோன்

அ) அ-4 ஆ-3 இ-1 ஈ-2 ஆ) அ-1 ஆ-2 இ-3 ஈ-4

இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1 ஈ) அ-3 ஆ-4 இ-2 ஈ-1

8. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத இணை எது?

அ) சிவராத்திரி - சைவசமயத் திருவிழா

ஆ) திருவோணம் - சைவசமயத் திருவிழா

இ) ஆருத்ராதரிசனம் - சைவசமயத் திருவிழா

ஈ)காமன்பண்டிகை - சைவசமயத் திருவிழா

9. பொருந்தும் இணையைக் கண்டறிக.

அ) மகாவீரர் - திரிபீடகம்

ஆ) புத்தர் - திருக்குறள்

இ) குருநானக் - ஆதிகிரந்தம்

ஈ) முகம்மதுநபி - திரிரத்தினங்கள்

10. தவறான கூற்றைக் கண்டறிக.

அ) பங்குனி உத்திரம் முழுநிலவு நாளில் கொண்டாடப்படுகிறது

ஆ) பங்குனி உத்திரம் முருகனின் திருமணநாளாகக் கருதப்படுகிறது.

இ) பங்குனி உத்திரம் 'முருகனுக்கு உகந்தநாள்' என்பர்

ஈ) பங்குனி உத்திரம் 'இந்திரனுக்கு உகந்தநாள்' என்பர்

XI Ethics_Lesson 5 Folder.indd 106 12-12-2021 22:56:04

குறுவினா

1. தமிழ்நாட்டில் வணங்கப்படும் காவல் தெய்வங்கள் சிலவற்றைப் பட்டியலிடுக.
2. 'அத்தப்பூ' என்றால் என்ன?
3. குன்றக் குரவை கூத்து என்றால் என்ன?
4. சமணசமயத்தின் இருபிரிவுகள் யாவை?
5. கந்தவிரத விழாக்களைக் குறிப்பிடுக.
6. இசுலாம் சமயத்தவர்கள் கொண்டாடும் முக்கிய விழாக்களைக் கூறுக.

சிறுவினா

1. நடுகல்வழிபாடு என்றால் என்ன?
2. ஆதிரைத்திருவிழா - குறிப்பு வரைக.
3. பாவை நோன்பு கொண்டாடப்படும் நோக்கம் யாது?
4. ஆடிப்பெருக்கு – குறிப்புவரைக.
5. தேர்த்திருவிழா பற்றி நீவிர் அறிவன யாவை?
6. மொகரம் – குறிப்பு வரைக.

நெடுவினா

1. நவராத்திரி விழாவின் சிறப்புகளைக் கூறுக.
2. குருநானக் ஜெயந்தியை விவரிக்க.
3. இந்திர விழாவினைப் பற்றி விவரிக்க.
4. திருவிழாக்கள் கொண்டாடப்படுவதன் நோக்கங்கள் யாவை?
5. கிறித்தவ சமய விழாக்களை விளக்குக.
6. ரமலான் நோன்பு மேற்கொள்ளப்படும் விதத்தை விவரிக்க.
7. கந்தவிரத விழாக்களுள் எவையேனும் இரண்டை விளக்குக.

உங்களுக்குத் தெரியுமா?

தசராப்பண்டிகை

தசராப்பண்டிகை விஜயநகரப் பேரசர்களால் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. பெர்ஷியன் தூதுவர் அப்துல் ரஜாக் இந்த பண்டிகையைப் பற்றி தனது Matla–us–Sadain Wa Majama–ul– Bahrain என்ற நூலில் மகாநவமி என்ற பெயரில் தசரா கொண்டாட்டங்கள் நடைபெற்றன என்று குறிப்பிடுகிறார். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மைசூரை ஆண்டு வந்த உடையார் வம்ச அரசர் ராஜஉடையார் இந்த தசராவை ஸ்ரீரங்கப்பட்டினத்தில் கொண்டாட தொடங்கிய நாளில் 3வது கிருஷ்ணராஜ உடையார் காலத்தில் சிறப்பு தர்பார் மைசூரு அரண்மனையில் கூடி அரச குடும்பத்தினரும், அதிகாரிகளும், பொதுமக்களும் இத்தர்பாரில் பங்கு பெற்றனர். இது தொடர்ந்து மகாநவமி அன்று ஒன்பதாவது நாள் அரச உடைவாள் யானையின் மேல் ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இவ்வூர்வலத்தில் யானைகளுடன், ஒட்டகங்களும், குதிரைகளும் இடம் பெறும்.

இக்கொண்டாட்டம் நடைபெறும் பத்து நாள்களும் மைசூர் அரண்மனை வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலிக்கும் விஜயதசமியன்று தசரா ஊர்வலம் தங்க மண்டபத்தில் சாமுண்டேசுவரி தேவி (தங்கமண்டபம் யானையின் மேல் ஏற்றப்பட்டு) எழுந்தருளப்பட்டு பிரதான வீதிகளில் வலம் வரும்.

வன்னி (பன்னி) மரங்களுக்கு பூஜை நடைபெறும். பாண்டவர்கள் தங்களது அஞ்ஞாத வாசத்தின்போது இந்த மரங்களில் தங்களது ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தார்கள் என்பதால் அரசர்கள் இம்மரத்தை வழிபடுவது வழக்கமாயிற்று.

XI Ethics_Lesson 5 Folder.indd 107 12-12-2021 22:56:04

www.tnschoolbooks.in

இணையச்செயல்பாடு

திருவிழாக்கள்

மண்வாசம் மணக்கும் விழாக்களைக் கண்டுகளிப்போமா!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- நூலகம் என்னும் தெரிவுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் பண்பாட்டுக் காட்சியகத்தைத் தெரிவு செய்க.
- திருத்தலங்கள், வரலாற்றுச் சின்னங்கள், கலைகள் போன்ற தெரிவுகளில் திருவிழாக்கள் என்னும் தெரிவைத் தேர்வு செய்து, அதில் இடம்பெற்றிருக்கும் விழாக்கள் குறித்த காணொலிகளின்வழி அவ்விழாக்களின் சிறப்புகளை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :

திருவிழாக்கள் இணையப்பக்கத்தின் உரலி:

http://www.tamilvu.org/ta/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

XI Ethics_Lesson 5 Folder.indd 108 12-12-2021 22:56:06

அலகு 6

தொல்குடி விழுமியங்கள்

EJM5V

கற்றல் நோக்கங்கள்

- தொல்குடி மக்களின் விழுமியங்களை அறியச் செய்தல்.
- மக்கட்பேற்றின் வழியாக தாய்வழி சமூகத்தினை தெரிந்துகொள்ளுதல்.
- தொல்குடி மக்களின் வீரத்தையும் வெற்றியையும் அறிந்து கொள்ளுதல்.
- தொல்குடி மக்கள் பிற உயிர்களின் மீது அன்பு செலுத்திய உயரிய பண்பினைப் புரிந்து கொள்ளுதல்.
- தொல்குடியினர் மூத்தோரை மதித்தலின் முக்கியத்துவத்தை அறியச் செய்தல்.

நுழைவு வாயில்

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இன்றுவரை ஆசியா, ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா ஆகிய ஆறு கண்டங்களிலும் தொல்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் மிகச்சிலரைத் தவிரப் பிறர் எல்லோரையும் போல உலகத்தோடு கலந்துவிட்டனர். இவ்வாறு கலந்துவிட்டவர்களின் பண்பாடுகளிலிருந்தும், ஒழுகலாறுகளிலிருந்தும், மனித சமத்துவம் சார்ந்த விழுமியங்கள் உருப்பெற்றுள்ளன. இத்தொல்குடி விழுமியங்கள், உலகப் பண்பாட்டு வரலாற்றிற்கும், தத்துவ வளர்ச்சிக்கும் மிகுந்த பயன்களை நல்கியுள்ளன.

பெண்களைப் போற்றல், மக்கட்பேற்றைக் கொண்டாடல், வீரத்தையும் வெற்றியையும் விரும்புதல், இயற்கையை வழிபடுதல், விருந்தோம்பல், மூத்தோரை மதித்தல், கூடி உண்ணல், உயிர்களை நேசித்தல், உலகை விரும்பல் ஆகிய விழுமியங்களைத் தொல்குடி விழுமியங்கள் எனலாம்.

தொல்குடி அறிவு என்பது, நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கிக் கண்ணால் கண்ட பொருள்களையும் செயல்களையும் பகுத்தாராய்வதன் விளைவால் உருவானதாகும். கடுமையான உடலுழைப்பின் வழியாக இவ்வறிவை இயல்பாகக் கண்டடைந்தனர். மூங்கிலின் உரசலிலும் கற்களின் உராய்விலும் நெருப்பு மூட்டக் கற்றனர்; மலைகளில் மோதித்திரும்பும் குரல்களைக் கேட்டு எதிரொலியை அறிந்தனர்; நிலத்தைத் தோண்டிக் கிழங்கெடுக்கும் பன்றியிடமிருந்து உழவைக் கண்டுபிடித்தனர். கட்டுமரம் ஏறிக் கடலை வென்றனர்; ஏறு தழுவி உடலை உறுதி செய்தனர்; கீழாநெல்லி, மலைவேம்பு போன்ற மூலிகைகளைத் தின்று நோய் தீர்த்தனர்.

இத்தகைய பட்டறிவு, கூட்டுப்பொறுப்பு ஆகியவற்றின் இணைவில் தோன்றிய விழுமியங்களே, மாபெரும் அறங்களாக அமைந்தன. உலகளாவிய அறக்கருத்துகளின் விதைமுளைகளான இவை இலக்கியச் சான்றுகளுடன் இங்கு விளக்கி உரைக்கப்படுகின்றன.

1. பெண்களைப் போற்றல்

தனிச்சொத்து, தனிக்குடும்பம், அரசு ஆகியவற்றின் தோற்றத்திற்கு முன்னால் பெண்ணே சமூகத்தில் நிகழும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் வழிகாட்டியாக இருந்து

XI Ethics_Lesson 6 Folder.indd 109 13-12-2021 10:42:27

குடிமரபைக் கொண்டுசெலுத்தியவளாகக் கருதப்படுகிறாள். இவ்வாறான பெண் முதன்மைச் சமூகத்தில் போட்டியும் பொறாமையும் பூசலும் போர்களும் குறைந்த அளவில் இருந்தன. தம்மைச் சுற்றி வாழும் அனைவரின் முன்னேற்றத்தையும் நன்மைகளையும் பெண்கள் தலைமையில் உறுதிசெய்தனர். அவர்களின் அறிவுத்திறனும் செயலாற்றலும் சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வழிகாட்டின.

தொல்குடியைத் தொடர்ந்த இனக்குழு வாழ்விலும் பெண்களின் ஆளுமைப் பண்பு நீடித்தது. முதுகுடிப் பெண்களுக்குப் பழஞ்சமூகங்களில் பெருமதிப்பும் சிறப்பும் இருந்தன.

தொல்குடிவாழ்வில் அனைத்து வளமைகளின் அடிப்படையாகப் பெண் கருதப்பட்டாள். வேட்டையாடுவதிலும் வேளாண்மையிலும் உணவைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும், குடித்தலைமை ஏற்பதிலும் மக்கட்பேற்றிலும் பெண் முன்னின்றாள். கலையையும் கல்வியையும் அளிப்பதிலும், உடலைப் பேணுவதிலும், மருத்துவம் பார்ப்பதிலும், பகிர்ந்தளித்தலிலும் வழிநடத்தலிலும், சிக்கல்களை இனங்காண்பதிலும் தீர்ப்பதிலும் பெண்ணே குடித்தலைமை ஏற்றாள். தம்மை வழிநடத்திய இம்முதிய பெண்களைப் போற்றி மதிக்கும் பண்பாடு, தொல்குடிகளிடம் பெரும் விழுமியமாய் விளங்கியது. வாழ்விற்கான கடமைகளை அணிகலன்களாக விரும்பி ஏற்ற பேரறிவுடைய பெண்டிரைச் சங்க இலக்கியம் போற்றியுள்ளதைக் காண்கிறோம். பெண்கள் பகட்டான வாழ்வை விரும்பாமல், எளிமையும் உயர்வும் உள்ள வாழ்வையே விரும்பினர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது நெல்லையும் முல்லையின் அரும்புகளையும் கொண்டு பெரிய காவலையுடைய ஊரின் நன்மைக்காக நற்சொல் கேட்டுநின்ற முதிய பெண்களைப் பற்றி முல்லைப்பாட்டு (7-11) பேசுகிறது. திருமண விழாக்களை முதிய பெண்கள் தலைமையேற்று நடத்தியதை அகநானூறு (பாடல்:86) காட்டுகிறது. முதிய பெண்டிர், பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களில் உள்ள நீரால் மணமக்களை நீராட்டித் திருமணத்தை நிகழ்த்தியதாக, அப்பாடல் தெரிவிக்கிறது.

“நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்”

(பெரும்பாணாற்றுப்படை: 164 – 165)

நெய்யை விற்றுப் பசும்பொன்னை ஈடாகப் பெறாமல், பால் தரும் எருமையையும் நற்பசுவையும் எருமைக்கன்றையும் ஈடாக வாங்கும் பெண்ணைப் பெரும்பாணாற்றுப்படை போற்றுகிறது. இங்குப் பொலிவளிக்கும் பொன்னை விடவும் பயனளிக்கும் பால் மாடுகளையே பெரியதாகக் கருதும் நடைமுறை வாழ்வியல் அறிந்த பெண்ணின் பெருமையைக் காண்கிறோம்.

கூரிய அறிவும் முதுமையும் உடைய பெண்கள் செம்முது பெண்டிர் (நற்றிணை 288), செம்முது பெண்டு (புறநானூறு 276), செம்முது செவிலியர் (அகநானூறு 254), செம்முகச் செவிலியர் (நெடுநல்வாடை 153), முதுசெம் பெண்டிர் (அகநானூறு 86), பெருமுது பெண்டிர் (முல்லைப்பாட்டு 11), முதுவாய்ப் பெண்டிர் (அகநானூறு 22), முதுவாய்ப் பெண்டு (அகநானூறு 63), பேரில் பெண்டு (புறநானூறு 270), தொன்முது பெண்டிர் (மதுரைக்காஞ்சி 409) எனப் பற்பல அடைமொழிகள்வழிப் போற்றப்பட்டுள்ளனர்.

இப்பெண்கள் தலைவனின் வெற்றிக்காகத் தலைவிக்கு வாழ்த்து கூறுவோராகவும், தூது செல்வோராகவும் மகளைத் தேடிச் செல்வோராகவும், குறி சொல்வோராகவும், விரிச்சி கேட்போராகவும், நிமித்தம் பார்ப்போராகவும், அறத்தொடு நிற்போராகவும், மணவினை நிகழ்த்துவோராகவும், நெல்லும் பூவும் தூவி இயற்கையைத் தொழுவோராகவும், பொதுநன்மை பேணுவோராகவும் விளங்கினர். பொதுநன்மை பேணும் பெண்களைப் பொதுசெய் பெண்டிர் என்று அகநானூறு போற்றுகிறது. பிற்காலங்களில் இப்பெருமுது பெண்டிர், ஆண் தலைமைக்கு உட்பட வேண்டியிருந்தது. இந்நிலையிலும் மனையுறை மகளிராகப் புலியை முறத்தால் விரட்டியவராகவும்,

கணவனையும் தந்தையையும் செருக்களத்தில் பறிகொடுத்தபிறகும் அஞ்சாது போருக்குப் புதல்வரை அனுப்பியவராகவும் முதுகுடி மகளிர் அறியப்பட்டனர். இச்சூழலிலும் ஔவையார் போன்ற பெரும் புலமைத் திறத்தார் பீடும் பெருமையும் பெற்றிருந்தனர்.

பாணர்களோடும் பாடினிகளோடும் பிற கலைஞரோடும் கூடித் தொல்குடிப் பெருமைகளைப் தமிழில் ஔவையார் விதந்தோதினார். 'அவனை அவர் பாடியது' என்ற புலமை மரபுக்கேற்பக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாணர் குடியின் பெருமிதத்துடன் ஔவையார் எதிர்கொண்டார். பரிசில் வாழ்வை விடவும், தன்மானம் பெரிது என்று அதியனிடம் ஔவை முழங்குவதைப் புறநானூறு காட்டுகிறது (புறம்: 206).

பரிசில் அளிப்பதைக் காலம் தாழ்த்துவதால் புலவர்கள் இறந்துவிடார் என்றும் அறிவும் புகழும் உடையோர் எங்கு சென்றாலும் உரிய பெருமையுடன் வாழமுடியும் என்றும் ஔவை பாடுகிறார். புலவரை வேந்தர் அவமதிக்கும்போது தணிந்துபோகாமல் அறத்துணிவுடன் பொங்குகிறார். இதை அவர் தனிமனித நலன்களுக்காகப் பாடவில்லை; பாணர் சமூக நன்மைக்காகவே பாடுகிறார்; 'எத்திசை செலினும் அத்திசை சோறே' என்கிறார். இத்தகைய அறச்சீற்றம் தொல்குடிப் பெண்ணின் இயல்பாகும்.

2. மக்கட் பேற்றைக் கொண்டாடல்

தொல்குடிச் சமூகம் மானுட உழைப்பைப் போற்றிய சமூகமாகும். நவீன வேளாண்முறைகளும் இயந்திரங்களும் இல்லாத காலத்தில் மனிதர்களே அனைத்துழைப்புக்கும் பொறுப்பேற்றனர். கூட்டுழைப்பின் மூலமே ஒரு சமூகம் தன்னை உருவாக்கிக்கொள்ளவேண்டிய நிலை அன்றிருந்தது. இந்நிலையில் மக்கட்பேறு என்பது, இன்றியமையாத ஒரு கடமையாகவும் பண்பாடாகவும் பார்க்கப்பட்டது. எந்த இனக்குழுவில் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உருவாகிறார்களோ, அந்த இனக்குழுவே வலிமையும் சிறப்பும் உடையது என்ற கருத்து தொல்குடி விழுமியமாய் இருந்தது. மக்கட்பேற்றை வழங்குபவள் தாய் என்பதால், அதிக மக்களைப் பெறுபவள் இனக்குழு வாழ்வில் தலைமைக்குரியவளாகக் கருதப்பட்டாள். தாயைக் கொண்டே ஒரு குடி தோன்றி வளர்கிறது என்பதால் தாய்க்குக் கட்டுப்பட்டவர்களாக அக்குடியின் அனைத்து உறுப்பினர்களும் அடங்கி வாழ்ந்தனர். இது தொல்குடிப் பண்பாட்டின் மாற்ற முடியாத வழக்கமாக இருந்தது.

மக்கட்பேற்றைக் கொண்டாடுதல் என்பது, அதற்குக் காரணமான பெண்ணையும் சேர்த்துக் கொண்டாடுவதேயாகும். எனவேதான் வேட்டை, உணவுச்சேகரிப்பு, உணவு உற்பத்தி போன்றவற்றைப் பேசும் இடங்களில் எல்லாம் பெண் சிறப்பிக்கப்படுகிறாள். குறிஞ்சித்திணை பேசும் தினைப்புனம் காத்தல், முல்லைத் திணை பேசும் குடும்பத்தைக் காத்தல் போன்றவையும் தாய்வழிச் சமூகத்தின் செயல்பாடுகளேயாகும். இவற்றைப் பெண்களே செய்தனர். தாய்வழி நிற்றல் என்பதே தொல்குடிச் சமூக அமைப்பின் நியதியாக இருந்ததைப் புறநானூறு குறிப்பிடுகிறது. இதனை,

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே,
....
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம்-312)

என்ற பொன்முடியாரின் பாடல்வழி அறிகிறோம். வீரநிலைக்காலச் சமூகத்தில் பெண்ணுக்கான கடமையையும், தாய் சொற்படி வழிநடத்தப்படும் குழந்தைகளுக்கான கடமையையும் இப்பாடல் கூறுகிறது. பெண்ணே போருக்குத் தலைமை ஏற்றாள்; வீரம் என்பதும் அவள் வழியாகவே பிள்ளைகளுக்கு வந்ததாகக் கருதப்பட்டது. ஒரு போர்வீரனைப் போற்றும்போதுகூடத் தாயின் வீரத்தைச் சுட்டிக்காட்டியே அவன் கொண்டாடப்பட்டான்.

"நறுவிரை துறந்த நாறா நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே"(புறம்-270)
செம்முது பெண்டின் காதலஞ்சிறாஅன்"

(புறம்.276)

எனப் பெண் தலைமையேற்ற தாய்வழிச் சமூகத்தின் சிறப்புப் பாடப்பட்டுள்ளது.

XI Ethics_Lesson 6 Folder.indd 111 13-12-2021 10:42:27

3. இயற்கையை வழிபடல்

இயற்கையை வழிபடுவது என்பது தொல்குடி வாழ்வில் முக்கியமான ஒரு செயல்பாடாகும். இயற்கையின் பேராற்றலைக் கண்ட மனிதன், அதை வணங்கத் தொடங்கினான். இடியும் மழையும் மின்னலும் அவனுக்கு அச்சமூட்டின. சூரியன் உதிப்பதும் மறைவதும்கூடப் பெரும் வியப்பைத் தந்தன. வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, நில நடுக்கம் போன்றவற்றால் தம்மோடு இருப்பவர்கள் இல்லாமல் போவதைக் கண்டு தொல்குடியினர் மருண்டனர். விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும், இயற்கையைப் புரிந்துகொள்ளவும் அவர்கள் போராடினர்.

அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் அவ்வப்போது குறுக்கிட்டுப் பதறவைத்த இயற்கை குறித்த பேரச்சம், தொல்குடிகளை உலுக்கியெழுப்பி இயற்கையை வழிபடச் செய்தது. இருட்டை விரட்டும் சூரிய சந்திரச் சுடர்களும் அச்சமூட்டும் விலங்குகளும் பற்றியெரியும் நெருப்பும் பேரலைகளை எழுப்பிய கடலும் உணவு உறையுளுக்கு அடிப்படையாகும் நிலமும் வானைத் தொட்டுவிடும் அளவு உயர்ந்தோங்கிய மலைகளும் தொல்குடி மக்களின் வழிபடு பொருள்களாகின. இயற்கையின் மீதான அச்சமே வழிபாடானது என்பதைப் பரணரின் பாடல்வழி அறியலாம். (நற்றிணை:201) .

அணங்குடை நெடுவரை (அகம்: 22)

சூர்ச்சுனை (அகம்:91)

அறுகுடை முந்நீர் (அகம்:220)

பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை சுணங்கோ (நற்:155)

எனச் சங்க இலக்கியம் இயற்கையைச் சூர் உடனும், அணங்குடனும், சுணங்குடனும் தொடர்புபடுத்துகின்றது. இயற்கை வழிபாடு என்பது, அக்காலத் தொல்குடி வாழ்வின் அடிப்படையான நம்பிக்கையாகும். இயற்கையில் கிடைத்த எல்லாவற்றையும் நன்றியுணர்வுடன் அவர்கள் இயற்கைக்குப் படையலிட்டுள்ளதையும் பார்க்க முடிகின்றது. எங்கிருந்து எடுக்கப்பட்டதோ அதை அதற்கும் கொடுத்து நன்றியுணர்வோடு பார்க்கும் இச்செயல், தொல்குடியின் மிகச்சிறந்த விழுமியமாகக் கூறத்தக்கதாகும்.

தேன் சுவையுடைய கனிகள், மாங்கனி, பலாவின் சுளைகள், கள் போன்றவற்றைக் கொண்டு வான்கோட்டுக் கடவுளைத் தொல்குடிகள் வணங்கினர். (அகம் : 348) திணை நிலங்களுடன் இணைந்து வாழ்ந்தோரின் இந்த இயற்கை வழிபாடே, பின்னாளில் சமய வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. ஐம்பூதத்தால் உருவாக்கப்பட்டது இவ்வுலகம் என்கிற பகுத்தறிவுக் கருத்தும் தொல்குடிமக்களின் இயற்கை வழிபாட்டின் விளைச்சலேயாகும்.

4. வீரத்தையும் வெற்றியையும் விரும்புதல்

ஒருவனை ஒருவன் வெல்வதும், ஒருவனிடம் ஒருவன் தோற்பதும் புதியது இல்லை. அது இந்த உலகத்தின் இயற்கையாகும். தொல்குடிச் சமூகத்தில் வீரன் மதிக்கப்பட்டான்; வெற்றியை வீரமே உருவாக்கியது; வெற்றி அல்லது வீரமரணம் போற்றப்பட்டது; வீரத்தாலும் வெற்றியாலும் பொருளும் புகழும் ஈட்டப்பட்டன.

வேட்டையாடியும் வேளாண்மை செய்தும் வாழ்ந்த தொல்குடி மக்களிடம் வீரம் என்பது தம் இனத்தைக் காப்பது, தம் பொருள்களைக் காப்பது என்ற இயல்புணர்வாகவே இருந்தது. தொல்குடி வாழ்வியலின் பண்புகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கியத்தில் காட்டப்படும் போர்கள், நாட்டைக் காக்கவும் தம் உடைமைகளைக் காக்கவும் தம்மை அண்டி வாழும் மக்களைக் காக்கவும் செய்யப்பட்ட இனக்குழுச் சமூகங்களின் உரிமைப்போர்கள் ஆகும். இதற்கும் முந்தைய தொல்குடி மக்களின் போர்களுள், மாடுகளைக் கவர்ந்து செல்வதும் அவற்றை மீட்பதும் நிலங்களைக் கைப்பற்ற முனைவதுமான உரிமைப்போர்களும் இருந்தன.

XI Ethics_Lesson 6 Folder.indd 112 13-12-2021 10:42:27

உங்களுக்குத் தெரியுமா?

கொடையும் அரசியலும்

சங்ககால வேளிரும் வேந்தரும் கொடை அளிப்பதில் முனைந்து நின்றனர். கொடை, பாணர் கடன் ஆகிய சொற்கள் பரிசு என்ற பொருளில் ஆளப்பெற்றது. பண்டைய நாளைய தொல்குடி வாழ்க்கையிலும், வேளிர் வாழ்க்கையிலும் வேந்தர் வாழ்க்கையிலும் பரிசு இரண்டறக் கலந்து நின்றது. பரிசு, அதனை அளிப்பவனின் செல்வச் செழிப்பை எடுத்துக்காட்டுகின்றது. பரிசைப் பெறுபவனிடம் பரிசு அளிப்பவன் கைம்மாறு எதையும் எதிர்பார்க்கவில்லையானாலும் பரிசு பெற்றவன் கொடையாளிக்கு கைம்மாறு அளிக்கும் நிலைக்குத் தள்ளப் பெறுகின்றான். கிழார், வேளிர், வேந்தர் ஆகியோர் வணிக வளத்தினாலும், பிற வழிகளினாலும் கிடைத்த செல்வத்தைப் பாணர்களுக்கும், புலவர்களுக்கும், குடியிலுள்ளோர்க்கும் அளித்து, அதனால் புகழ் ஈட்டினர். அப்புகழ் அவர்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாகச் செய்தது. கிழார், வேளிர், வேந்தர் ஆகியோர் பாணர்களுக்கும், புலவர்களுக்கும் மட்டுமின்றிச் சமயத்தலைவர்களுக்கும் கொடையளித்தனர்.

தம்மோடு பகையுடைய இனக்குழுவின் ஆநிரையைக் கவர்வது வெட்சி எனவும், தம்மிடமிருந்து பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டுவருவது கரந்தை எனவும் அறியப்படுகிறது. தொல்குடிச் சமூகத்தில் மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டதால், இந்த மாடுபிடிப் போர்கள், முனைப்பான இருப்பிற்கான போர்களாகவே இருந்தன. இத்தகைய போர்களில் துணிவுடையவர்களே வெற்றிபெற்றனர். பெரும்பாலும் போரில் ஈடுபட்ட வீரர்கள் வில்லுடனோ வேலுடனோ அல்லது வாளுடனோ இருந்தமையைச் சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. 'வல்வில் மறவர்', 'நெடுவேல் காளை' போன்ற தொடர்களால் அதை அறிகிறோம். இத்தகைய போர்கள் கூட்டாக நிகழ்த்தப்பட்டன; போரில் வீரம் காட்டியவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

இவ்வாறு தம்மையும், தம்மண்ணையும் காக்கப் போரிட்ட வீரர்களைத் தொல்குடிச் சமூகத்தினர் கொண்டாடினர். அவர்களுக்கு நல்ல உணவையும் கள்ளையும் கொடுத்துக் களைப்பைப் போக்கினர். தொல்குடிச் சமூகத்தால் கொண்டாடப்பட்ட வீரர்கள், தம் கூட்டத்திற்காகத் தம் உயிரையும் கொடுக்கும் விருப்பத்துடன் செயல்பட்டனர். தம்மினத்திற்காக உயிர்விடுதல் என்பது அங்குப் பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது (புறம்: 68). வீரன் மக்களின் நம்பிக்கைக்குரியவனாகப் பார்க்கப்பட்டான், அவனின் வீரம் சிறப்பிக்கப்பட்டது. அவன் பலர்க்கும் நிழலாயிருந்தான்; அவன் நிழலில் தங்கியிருப்பவர்களாக மக்கள் விளங்கினர்; என்றும் இந்த உலகத்தில் நின்று நிலைப்பவனாக அவன் விளங்கினான். [பலர்க்கு நிழலாகி உலகம் மீக்கூறி (புறம்: 223)]

உங்களுக்குத் தெரியுமா?

நடுகல் வழிபாடு

நடுகல் வழிபாட்டில் இரண்டு நிலைகளை இலக்கியங்கள் கூறுகின்றன. 1. நடுகல் எடுத்தல் 2. நடுகல் வழிபாடு. இவை நடுகல் எடுக்கும் முறைகளைப் பற்றியும் நடுகல் வழிபாடு பற்றியும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன பேசுகின்றன.

தொல்காப்பியம் கல் எடுக்கும் நிகழ்வை ஆறு வகையாக வகைப்படுத்தி உள்ளது. அவை, 1. காட்சி 2. கால்கோள் 3. நீர்ப்படை 4. நடுகல் 5. பெரும்படை 6. வாழ்த்து என்பவையாகும்.

காட்சி என்பது கணியன் அல்லது சோதிடனைக் கொண்டு கல்லை அறிந்து எடுத்து வருவதைக் குறிக்கின்றது. குறிப்பிட்ட தன்மையை உடைய கல்லைக் கொண்டு வரவேண்டும் என்ற தீர்மானித்துக்கொண்டு வருவது முதல் இரண்டு நிகழ்வுகள். இரண்டாவது நிலையான நீர்ப்படை என்பது நீராட்டுதல் ஆகும். நீரினால் பொருள்களைப் புனிதமடையச் செய்யலாம் என்று பண்டைய மக்கள் நம்பினர். இதற்குப் பல சக்திகள் உண்டு என்றும் நம்பினர்.

XI Ethics_Lesson 6 Folder.indd 113 13-12-2021 10:42:27

இயற்கையாக நிகழும் மரணத்தைவிடப் பகைவர்களுடன் போர்புரிந்து இறப்பவர் மேலானவராகக் கருதப்பட்டனர் (அகம்:61). இவ்வாறு தம்மினத்திற்காக உயிர்விட்ட வீரன், மக்களால் வணங்கப்பட்டான். இறந்த வீரனைப் புதைத்து அவ்விடத்தில் கற்களை நட்டுவைத்தனர். இந்நடுகற்கள் வழிபடப்பட்டன. இத்தகைய வீரனை வழிபட்டால், வருங்காலப் போர்களில் மாபெரும் வெற்றிகளை அவன் அருள்வான் எனத் தொல்குடி மக்கள் நம்பினர். எனவே வீரர்களைப் புதைத்த இடங்களின்மீது நட்டு வைக்கப்பட்ட நடுகற்களுக்குப் பலிகொடுத்தனர். நடுகற்களை நீரால் கழுவி, நெய்விளக்கு ஏற்றிப் பூவும் புகையும் இட்டு வழிபட்டனர். மக்கள் நடுகற்களைத் தெய்வங்களாகக் கருதி வணங்கினர். போரில் வீரமரணம் அடைந்த வீரனையன்றி வணங்கத்தக்க வேறு தெய்வம் இல்லையென்றும் கருதினர்.

"கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"

(புறம்:335)

என்கிறார் மாங்குடிகிழார். இத்தகைய நடுகற்களை வணங்கும் வழக்கம் தம்மில் தலைமையுடையோரை வணங்குவதாக மாறிப் பின் அது கடவுள் வணக்கமாகவும் வளர்ந்தது. எனவே, உருவ வழிபாடு தோன்ற இந்த நடுகல் வழிபாடே வாயிலாயிற்று எனலாம்.

பெரியபடையும் வீரர்களின் துணிவும் வெற்றியை ஈட்டித்தரும் இருபெரும் ஆற்றல்களாகக் கருதப்பட்டன. பெரிய படையைக் கொண்டவர்கள், தம் படைபற்றிக் கொண்டிருந்த பெருமிதத்தை அடங்காத் தானை (புறம்:71) விறல்கெழு தானை (புறம்:122) போன்ற தொடர்களால் அறிகிறோம். போர் என்பது கூட்டாக செய்யப்படுவது என்பதால், போரின் மூலம் வந்த பொருள்களை அனைவரோடும் பகிர்ந்துகொள்வது என்பதும் தொல்குடி மக்களின் ஒரு வாழ்வியல் விழுமியமாக இருந்தது. இது 'பாதீடு' எனப்பட்டது. போருக்குச் சென்றோருக்குப் போரில் கிடைத்த பொருள்கள் அனைத்தும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

5. விருந்தோம்பல்

தமக்கென எதையும் சேர்த்து வைத்துக்கொள்ளாமல், தேவையுள்ளோர் எவரோடும் தமக்குக் கிடைத்ததைப் பங்கிட்டுப் பொதுவில் வைக்கும் வாழ்வறமே விருந்தோம்பல் எனலாம். விருந்தோம்பல் பண்பாடு, தம்மிடமுள்ளதை அனைவரும் பகிர்ந்துண்டு மகிழ்ந்து வாழும் கூட்டுச்சமூக வாழ்வைக் காட்டுகிறது. தொல்குடி மக்களிடையே விருந்தோம்பல் என்பது, மிகப்பெரியதொரு விழுமியமாகக் கருதப்பட்டது.

தம்மைத்தேடி வந்தவரை உணவிட்டுப் பேணி மகிழ்வித்தல் என்பது, ஒரு தலையாய கடமையாக இருந்தது. இங்கு விருந்து என்பது, தம்மோடு உறவுடையவரைப் பேணல் என்பதோடு முடிவதில்லை; அறிமுகம் இல்லாத புதியவர் என்றாலும் விருந்தோம்புதல் ஒரு பண்பாட்டுச் செயல்பாடாகத் தொல்குடிகளிடம் இடம்பெற்றிருந்தது. உயிர்களை நேசித்தல், சுற்றியுள்ளோரைப் பாதுகாத்தல் என்பன அரிய விழுமியங்கள். வேட்டையாடியும் வேளாண்மை செய்தும் வாழ்ந்த தொல்குடி மக்கள் பசியின் கொடுமையை உணர்ந்திருந்தனர். அதனாலேயே, நீண்ட நெடியவழியில் பயணித்துக் களைத்து வருபவர்க்கு உணவிட்டுக் களைப்பைப் போக்கினர். முல்லைத்திணை மக்கள், மூங்கில் குழாய்களில் கொண்டுசென்ற உணவினைத் தம் வழியில் எதிர்ப்பட்டவர்களின் பசி நீங்கப் பகிர்ந்துண்ட செய்தியை அகநானூற்றுப் பாடல் காட்டுகிறது (அகம் :311).

விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வாழ்நலனுக்காகப் பயிரிட வைத்திருந்த விதைத்தினையை உரலில் இட்டுக் குத்திப் பசி போக்கிய செய்தியைப் புறநானூறு (புறம்: 316) தெரிவிக்கிறது. இவ்வாறு விருந்தினரைப் போற்றுவதைத் தொல்குடி மக்கள் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். வறுமையிலும் விருந்தோம்பல் நடைபெற்றுள்ளது. வறுமையுற்ற ஒருவன் முதல்நாள் தன்னிடம் வந்த விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வீரத்தின் அடையாளமான வாளையே விற்றுப் பசி போக்கிய நிகழ்வைப்

XI Ethics_Lesson 6 Folder.indd 114 13-12-2021 10:42:27

புறநானூறு (புறம்:316) குறிப்பிடுகிறது. எங்கிருந்தோ வரும் விருந்தினருக்கு அவர் மனங்கோணாமல் எவ்வாறு விருந்தளிக்க வேண்டும் என்பதைப் பொருநராற்றுப்படை விளக்குகிறது. நண்பனைப்போல விருந்தினரிடம் உறவு பாராட்டவேண்டும்; இனிய சொற்களைப் பேசவேண்டும்; கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக கன்றிடம் பசு அன்பு காட்டுவதைப்போல, எலும்பே குளிரும்படி அன்பால் நெகிழச் செய்யவேண்டும் என்கிறது (பொருநராற்றுப்படை: 74-78). தொல்குடிச் சமூக அமைப்பில் எத்தகைய உணவாயினும் அதனைப் பிறருடன் பகிர்ந்துண்ணும் உயரிய பண்பையே காணமுடிகிறது.

இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே (182)

எனப் புறநானூறு பேசும் வாழ்வும் தொல்குடி மக்களின் வாழ்வும் வேறுவேறல்ல எனலாம். பின்னாளில் தமிழ் இலக்கியங்களில் வியந்து பேசப்பட்ட கொடை என்னும் ஒரு செயல்பாடு, இந்த விருந்தோம்பலின் ஒரு நீட்சியேயாகும். கொடையில், கொடுத்தவன் பெயரை வியந்து போற்றுவது உண்டு. விருந்தோம்பலில் இவ்வழக்கம் சிறிதுமில்லை. பசி போக்குதல் என்னும் எளிய விழுமியமாகவே விருந்தோம்பல் இருந்துள்ளது. எனவேதான், பெருஞ்செல்வர்களாய் இல்லாத எளிய மக்களும் தம்மைத் தேடி வந்தவருக்கு உணவளித்துத் தம்மிடமுள்ளதைக் கொடுத்துப் பகிர்ந்துண்டும் மகிழ்ந்தும் வாழ்ந்துள்ளனர். புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்த எளிய மக்களின் விருந்தோம்பலை மலைபடுகடாம் (434–443) வியந்துபேசுகிறது.

விருந்தோம்பல் என்பதின் அடிப்படையே பசி போக்கல் என்பதாகத்தான் உள்ளது. அனைத்தையும் அனைவருக்குமானதாகப் பகிர்ந்தளிக்கும் பொதுப்பண்பையே விருந்தோம்பலாகச் சங்கப்பாடல்கள் சிறப்பிக்கின்றன. இது தொல்குடிப் பண்பாட்டில் விளைந்த அரியதொரு விழுமியமாகும்.

6. மூத்தோரை மதித்தல்

தொல்குடிச் சமூகத்தில் மூத்தோர், செல்வமாகக் கருதப்பட்டனர்; அவர்களின் அறிவும் அனுபவமும் அச்சமூகத்திற்குப் பயன்பட்டன. மூத்தோரின் வாய்ச்சொற்களைக் கேட்டுக் கேட்டுத் தமக்குள் சில நியதிகளை அவர்கள் உருவாக்கிக்கொண்டனர். தம் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் காரணமான பெற்றோரைப் போற்றல், சமூகத்தில் தாம் முன்னிலைக்கு வர உதவியவர்களை மதித்தல் என்பதாகப் பழஞ்சமூகங்களில் மூத்தோரை மதிக்கும் பண்பாடு உருக்கொண்டது.

மூத்தோரை மதிக்கும் தொல்குடிப் பண்பாடு என்பது, அவர்களின் அனுபவ வளங்களைத் தமதாக்கிக் கொள்வதாகும். தொல்குடிச் சமூகத்தில் மூத்தோருக்கெனத் தனித்ததொரு இடமிருந்தது. நற்செயல்களை முன்னிருந்து நடத்துகிறவர்களாகவும் நீதி வழங்குபவர்களாகவும் அனுபவ ஆசான்களாகவும் பூசல்களைத் தவிர்ப்போராகவும் மூத்தோர் விளங்கினர். மூத்தோர் வணங்கப்பட்டனர்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் (குறள்:441)

மூத்தோரான அறிவுடையோரின் நட்பை விரும்பி ஏற்கவேண்டும் என்கிறது திருக்குறள். பெரியோரைத் துணையாகக் கொள்வதையும் திருக்குறள் முதன்மைப்படுத்துகிறது. ஆராய்ந்து மூத்தோர் கூறும் தீர்ப்புகள் சரியானவையாக இருக்கும் எனப் பொது மக்கள் நம்பினர். சிறுவனான கரிகால்வளவனின் தீர்ப்பு எப்படி இருக்குமோ என நினைத்தவர்களின் உள்ளக்குறிப்பை உணர்ந்துகொண்ட மன்னன் கரிகாலன், முதியவனாய் வேடம் பூண்டு வந்து தீர்ப்பு வழங்கினான். இதைப் பழமொழிப் பாடலால் (21) அறிகிறோம். சுருங்கக்கூறின், மூத்தோரையும் அவர்களின் வழிகாட்டல்களையும் எந்தச் சமூகம் கொண்டாடுகிறதோ, அந்தச் சமூகமே பெருஞ்சிறப்படைகிறது எனலாம்.

XI Ethics_Lesson 6 Folder.indd 115 13-12-2021 10:42:27

7. உயிர்கள் மீது அன்பு செலுத்துதல்

உயிர்நேயம் என்பது தொல்குடிப் பண்பாடாகும். உயிர்களிடம் இரங்கும் நிலவுடைமையாளரின் உயிர்ப்பரிவு என்பது, பொதுநோக்குடன் அன்பு செய்யும் தொல்குடியினரின் உயிர்நேயத்திலிருந்து கிளைத்ததாகும். இயற்கையோடு இயற்கையாக இயைந்து வாழ்ந்த தொல்குடிச் சமூகத்தில் உயிர்களை நேசித்தல் என்பது எதிர்பார்ப்புகள் ஏதுமற்ற இயல்புணர்வுச் செயல்பாடாகும்; குளம்வெட்டி, காட்டை அழித்து நாடாக்கிய நிலவுடைமையாளருக்குப் பெருமிதம் பேணும் பண்பார்ந்த நடத்தையாகும். மற்ற உயிர்களின் துணையின்றி மனிதன் மட்டும் தனித்தியங்கமுடியாது என்பதை அவன் உணரவேண்டும். இத்தகைய உயிர்நேய உணர்வு, தொல்குடிகளிடம் நிறைந்திருந்தது.

தொல்குடி வேளாண் சமூகத்தில் பல்லுயிர்களின் பங்களிப்பு போற்றப்பட்டது. தம்மோடு இணைந்து, தமக்கான உணவினையும் பிறவற்றையும் பெற்றுத்தரும் உயிர்களின் இன்றியமையாமையை தொல்குடியினர் உணர்ந்திருந்தனர். எனவே அவற்றையும் தம்மைப் போலவே எண்ணினர். தம்மோடு அவற்றையும் இணைத்துக்கொண்டனர். பால்வளம் சுரப்பதையும், எருமைகளின் எண்ணிக்கை பெருகுவதையும் ஐங்குறுநூறு காட்டுகிறது. முதுமையின் காரணமாக மேய்ச்சல் நிலம் தேடிச்செல்ல இயலாத முதிய பசு, அருகிலுள்ள பயிரை மேய்ந்துவிடுகிறது; மக்கள் அதனை அடித்து விரட்டவில்லை, அதன்மீது இரக்கப்பட்டு அதற்குக் கரும்பை உணவாகத் தருகின்றனர். இதனை அகநானூறு (150) காட்டுகிறது.

தொல்குடிச் சமூகத்தில் மாடுகளே செல்வங்கள்; மாடுகளின் உழைப்பால் வரும் பயனைத் துய்ப்பதோடு; அவற்றின் நோயையும் வருத்தத்தையும் உணர்ந்திருந்தனர். தொல்குடி மக்களின் இத்தகைய உயிர்நேயம் நம்மை வியக்கவைக்கிறது. பிறிதின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் களையத் துடிக்கும் தொல்குடிப் பண்பாடு, இன்றும் நாம் பின்பற்ற வேண்டிய உயர்ந்ததொரு விழுமியமாகும். சிறிய உயிர்களே ஆயினும் அவற்றுக்கும் தேவையான உணவினைத் தொல்குடி மக்கள் வழங்கினர். அவர்களின் பார்வையில் உயிர்கள் என்பவை, மனிதர்களைப் போலவே பசியும் வருத்தமும் நோயுமுடையவை. எனவே, எறும்புகளுக்கு உணவிடுவதும், பறவைகளுக்குச் சோறிடுவதுங்கூடத் தொல்குடிகளுக்குத் தவிர்க்கவியலாத கடமைகளாயின. காக்கைக்கும் சோறிட வேண்டிய கடப்பாட்டினை நற்றிணைப் பாடலால் (258) அறிகிறோம்.

வலிமையற்ற சிறுவிலங்குகளையும் மக்கள் பாதுகாத்தனர்; உப்பு வணிகரான உமணர்கள் தம் குழந்தைகள்போலக் கருதிக் குரங்குகளையும் வளர்த்தனர். 'மகாஅர் அன்ன மந்தி' என்ற அடி, தம் குழந்தைகளைப் போலவே குரங்குகளையும் உமணர்கள் எண்ணியமையைக் காட்டுகிறது. இச்செய்தியைச் சிறுபாணாற்றுப்படை (55-61) பதிவு செய்துள்ளது.

இயற்கையோடு இயற்கையாகத் தொல்குடி மக்கள் வாழ்ந்தனர்; அவர்களுக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதமில்லை; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுநோக்கு அவர்களின் உடைமையாயிருந்தது.

8. கூடி உண்ணல்

கூடியுழைப்பதும், கூட்டுழைப்பால் வரும் உணவைப் பொதுவில் வைத்துப் பகிர்ந்துண்பதும் தொல்குடிச் சமூகத்தின் தனிச்சிறப்பாகும். வேட்டையாடலும் வேளாண்மையும் விழாக்களும் தொழில்களும் கூட்டுழைப்பாலேயே சாத்தியமாயின. மிகப்பெரும் உடலுழைப்பால் அன்றாட வாழ்வை அவர்கள் நடத்தினர். எல்லாருக்கும் வேட்டை கிடைப்பதை உறுதிப்படுத்தமுடியாத சூழலில், கிடைத்த உணவைக் கிடைக்காதவருடன் பகிர்ந்துண்டனர். கூட்டுழைப்பும்கூடிஉண்ணலும்கூட்டுப்பொறுப்பும் பிரிக்கமுடியாத அங்கங்களாய்த் தொல்குடி வாழ்வில் படிந்திருந்தன.

XI Ethics_Lesson 6 Folder.indd 116 13-12-2021 10:42:27

கூட்டுழைப்பால் பெற்ற உணவினை எத்தகைய ஏற்றத்தாழ்வுமின்றிச் சமமாகப் பகிர்ந்துண்டனர் என்கின்றார் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார். (பெரும்பாணாற்றுப்படை: 134-138).

கூட்டுழைப்புவழி வரும் உணவைக் கூடியுண்ணும் தொல்குடியின் பொதுமைப்பண்பு, வியக்கவைக்கும் பெருமிதப் பேருணர்வாகும். இந்தப் புராதனப் பொதுவுடைமைப் பேருணர்வுதான், தொல்குடிகளின் அரசியல் அமைப்பைக் குழந்தைக்குரிய எளிமையினும் எளிமையான ஒரு படைப்பாக்குகிறது என்கிறார் ஏங்கல்ஸ். (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, உலகாயதம், தமிழில்: எஸ். தோதாத்ரி, ப.285)

9. உலகை விரும்பல்

தொல்குடிமக்கள் இந்த உலக வாழ்வைப் பெரிதும் விரும்பிப் போற்றினர்; இந்த உலகில் உண்டும் உறங்கியும் உடுத்தும் ஆடியும் பாடியும் கூடியும் கலந்தும் களிப்பதைவிட வேறு இன்பமில்லை என்ற உண்மையைத் தம் வாழ்வுவழி அவர்கள் கண்டறிந்தனர்; இங்குள்ள யாவும் மெய் என்றும், இதைத் தவிர வேறு உண்மை இல்லை என்றும் வாழ்ந்தனர். இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்வுக்கு உவப்பனவற்றை மட்டும் ஏற்று இனியன கண்டு மகிழ்ந்தனர்; உலகியல் இன்பங்களைத் துய்ப்பதில் ஒருபோதும் அவர்கள் அயர்வடையவில்லை; இல்லிருந்து இன்பம் துய்ப்பதன்றிப் பிற செல்வங்கள் எதுவும் பெரிதல்ல என்றுணர்ந்திருந்தனர்.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்கு இழைஒழிய
வாரேன், வாழிய நெஞ்சே

(பட்டினப்பாலை: 218-220)

என்னும் பாடலடிகள் குறையற்ற சிறப்புகள் வாய்ந்த பட்டினத்தையே பரிசாகத் தந்தாலும் பெரிய கூந்தலை உடைய தன் துணைவியைப் பிரிய விரும்பாத தலைவனை நமக்குக் காட்டுகின்றன.

இத்தகைய மகிழ்ச்சியான உலக வாழ்வை விரும்புவதற்கும், நரைதிரையின்றி நெடுநாள் வாழ்வதற்குமான வழியைப் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல் (191) காட்டுகிறது.

இவ்வாறு, உலகை விரும்பிய தொல்குடிமக்கள், வாழ்வின் நன்மைகளைப் பெருக்கிக் கொள்வதற்காகப் போர் செய்வதையும் கூட ஒரு வாழ்வறமாகக் கொண்டிருந்தனர். போர் வெற்றியின் மூலம் கிடைக்கும் புகழ், வாழ்தல் பற்றிய அவர்களின் வேட்கையை வளர்த்தது. போரின் வெற்றிகளைப் பாடி ஆடிக் கொண்டாடினர். இவ்வாறு உலக வாழ்வில் வரும் புகழை விரும்பி ஏற்றலும், வெற்றியைத் துய்த்துக் களிப்பதும் தொல்குடிகளின் இயல்பாகும்.

இவ்வுலகு இனிமையானது என்பதால், புதிதாய் ஓர் உயிர் இவ்வுலகுக்கு வரும்போது தனிப்பெரும் மகிழ்வோடு அதை வரவேற்றுக் கொண்டாடினர். மன்னனான அதியமான் நெடுமான் அஞ்சியும் தனக்கு மகன் பிறந்துள்ள செய்தியைக் கேட்டுத் தன் போர் உடையையும் களையாமல் வந்து சினம் குறையாமல் சிவந்த கண்களால் அவனைக் கண்டு பெருமிதப்பட்டதாகப் பாடுகிறார் ஔவையார்(புறம் : 100).

இவ்வாறு தந்தையின் சிவந்த கண்ணால் உற்றுநோக்கப்பட்ட குழந்தை எதிர்காலத்தில் பெருவீரனாய்த் திகழ்வான் என்பது வீரர் நம்பிக்கையாகும். இத்தகைய வீரர்கள் தம் கூட்டத்திற்காக வாழ்ந்து மடிவதே பிறப்பின் பெரும்பயன் என்ற வாழ்வறத்தைக் கொண்டிருந்தனர்.

புகழ் எனில் உயிரையும் கொடுப்பதும், பழி எனில் உலகமே கொடுக்கப்பட்டாலும் அதை ஏற்க மறுப்பதும் முதுகுடிப் பெருமிதமாக இருந்தது.

XI Ethics_Lesson 6 Folder.indd 117 13-12-2021 10:42:27

நிறைவுரை

தொல்குடி மக்களின் வாழ்வியல் விழுமியங்களே மாபெரும் அறங்களாக அமைந்தமையை இப்பாடப்பகுதி தெளிவுபடுத்தியுள்ளது. அவர்தம் வாழ்வியல் கூறுகளான பெண்களைப் போற்றல், மக்கட்பேறு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, விருந்தோம்பல், மூத்தோரை மதித்தல், உயிர்கள்மீது அன்பு செலுத்துதல், கூடி உண்ணல், உலகை விரும்பல் ஆகியவை இலக்கியச் சான்றுகளின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

பூமி புனிதமானது

1854-இல் அமெரிக்க அதிபராக இருந்த ஃபிராங்க்ளின் பியர்ஸ்க்குச் (1804 – 1869) செவ்விந்தியத் தலைவனான சியட்டில் (1786 – 1866) எழுதிய சூழலியம் பேணும் கடிதத்தின் ஒளிக்கீற்றுகள்.

சியட்டில் ஃபிராங்க்ளின் பியர்ஸ்

“நாங்கள் பூமியின் ஒரு பகுதி; பூமி எங்களுடைய ஒரு பகுதி. வாசனைப்பூக்கள் எங்களுடைய சகோதரிகள்; மானும், குதிரையும், பருந்தும் எங்களுடைய சகோதரர்கள். பாறைச்சிகரங்களும், புல்வெளிகளில் ஊற்றெடுக்கும் சுனைகளும், குதிரையின் உடல் வெப்பமும், மனிதனும் – எல்லாம் ஒரே குடும்பம்.நதிகள் எங்களுடைய சகோதரர்கள். அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. நதிகள் எங்களுடைய படகுகளைச் சுமக்கின்றன. எங்களுடைய குழந்தைகளை ஊட்டி வளர்க்கின்றன. குளத்தின் முகத்தில் வீசும் காற்றின் மெல்லிய ஓசையும், மத்தியான மழையில் கழுவப்பட்டு வரும் அதன் வாசனையும், பைன் மரங்களிடமிருந்து பெற்ற நறுமணமுமே ஒரு செவ்வியந்தியனுக்குப் பிரியமானவை.சுவாசிக்க முதல் மூச்சைத் தந்த காற்றிலிருந்துதான் எங்களுடைய மூதாதை கடைசிப் பெருமூச்சையும் உள்ளிழுத்தார். விலங்குகள் இல்லாமல் என்ன மனிதன்? எல்லா விலங்குகளும் இந்தப் பூமியிலிருந்து போய்விடுமானால், மனிதன் தனிமையில் இறந்துபோவான். விலங்குகளுக்கு நேர்வதுயாவும் தாமதமின்றி மனிதனுக்கும் நேரிடும். எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை. எங்களுடைய உடன்பிறந்தவர்களின் வாழ்க்கையால் வளமாக்கப்பட்டது இந்தப் பூமி என்று உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். பூமிக்கு எது நேர்ந்தாலும், அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். நிலத்தின்மீது துப்பும்போது மனிதன் தனது உடம்பின்மீதே துப்பிக்கொள்கிறான்.

பூமி மனிதனுக்கு உரிமையானதன்று; பூமிக்குரியவன் மனிதன்என்பது எங்களுக்குத் தெரியும். குருதி ஒரு குடும்பத்தை ஐக்கியப்படுத்துவதுபோல எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. பூமிக்கு எது நேர்ந்தாலும் அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். வாழ்க்கை வலையை நெய்தவன் மனிதனல்லன். அவன் அதில் வெறும் கண்ணி. வலைக்குச் செய்வது எதுவாயினும் அதைத் தனக்கேஅவன் செய்துகொள்கிறான்.

அமெரிக்காவின் வாசிங்டன் மாநிலத்தில் உள்ள மேற்குக்கடலோரத் துறைமுகநகரமான சியட்டில் (Seattle), கிங்கவுண்டியின் தலைமையிடம். இந்த நகரம், அமெரிக்கப் பழங்குடியினத் தலைவரான ‘சியட்டில்’ பெயரால் வழங்கப்படுகிறது.

XI Ethics_Lesson 6 Folder.indd 118 13-12-2021 10:42:28

உங்களுக்குத் தெரியுமா?

1926 - 2016

மகாசுவேதா தேவி

காட்டுக்கு வந்துவிட்டால் எல்லாம் மறந்துபோகும். அடிவானில் மறையும் நீலநிறமலைகளைக் கண்டு கனவுகளில் ஆழ்ந்துவிடுவான். இக்கனவுகளில் தன்முன்னோரைக்காண்பான். வெள்ளத்தில் கரைபுரண்டு ஓடும் ஆற்றைக்கடந்துவருகிறார்கள். மின்னலின் பளீர் வெளிச்சத்தில் பளபளக்கும் குமரிக்காட்டின் நாற்புறமும் கறுப்புக்கைகள் நீட்டிச்சொல்கிறார்கள். 'இதெல்லாம் நம்முடையது!' மழைத்தண்ணீர் அவர்கள் முகங்களில் வழிந்து விழுகிறது. ஆற்றுநீர் அவர்களது காலடியில் சரணடைகிறது. குமரிக்காட்டைக் காவல் காக்கும் ஒரு பிரும்மாண்டமான யானை வானத்தை நோக்கித் தும்பிக்கையைத் தூக்கி அவர்களை வரவேற்கிறது. காட்டில் தனியாக இருக்கும்போது அவன் தன்னை மறந்துவிடுவான். அதனால்தான் அவன் சொன்னான், 'இது என்னோட காடு!'

மகாசுவேதா தேவி, காட்டில் உரிமை,
சாகித்திய அக்காதெமி
பரிசுபெற்ற வங்க நாவல்,

தமிழில்: சு. கிருஷ்ணமூர்த்தி

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே' – இப்புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்து

அ) அமிழ்தம் மிகவும் இனிது

ஆ) அமிழ்தம் இந்திரர்க்குரியது

இ) அமிழ்தமாயினும் பகிர்ந்துண்ணும் பண்பு

ஈ) அமிழ்தத்தைத் தனித்துண்ணும் பண்பு

2. சிறுவனான கரிகால் வளவன், முதிய வேடம் பூண்டு தீர்ப்பு வழங்கியதை மக்கள் ஏற்றுக்கொள்ளக் காரணம்

அ) சிறுவனாக இருந்தாலும், கரிகால் வளவன் நாட்டின் அரசன்.

ஆ) அரசனுக்குக் கட்டுப்பட்டு நடப்பது, அக்கால வழக்கம்.

இ) கரிகால் வளவனைத் தவிர வேறு யாரும் தீர்ப்பு வழங்க முன்வரவில்லை.

ஈ) முதியவர்கள் கூறும் தீர்ப்பு, எப்போதும் சரியானதாகவே இருக்கும்.

3. தொல்குடிகள் வாழ்ந்திராத கண்டத்தைத் தேர்ந்தெடுக்க.

அ) வடஅமெரிக்கா ஆ) அண்டார்டிகா இ) ஆஸ்திரேலியா ஈ) ஐரோப்பா

XI Ethics_Lesson 6 Folder.indd 119 13-12-2021 10:42:28

4. 'மூங்கிலின் உரசலிலும் கற்களின் உராய்விலும் நெருப்பு மூட்டக் கற்றனர்'. – இக்கூற்றால் தொல்குடியினரின் ------------ வெளிப்படுகிறது.

அ) பகுத்தறியும் திறன் ஆ) அச்சவுணர்வு

இ) பண்பாட்டுச் சிறப்பு ஈ) இயற்கை வழிபாடு

5. தொல்குடி விழுமியத்துக்குப் பொருந்தாத கூற்றைச் சுட்டுக.

அ) உலகியல் இன்பங்களைத் துய்க்காத வாழ்க்கைநிலை

ஆ) தம்மை நாடி வந்தவருக்கு உணவிட்டு மகிழும் விருந்தோம்பல் பண்பு

இ) இயற்கையாகக் கிடைத்தவற்றை இயற்கைக்கே படையலிடும் நன்றியுணர்வு

ஈ) கூட்டுழைப்பால் விளைந்த பொருளை அனைவருக்கும் பங்கிடும் மாண்பு

6. நரைதிரையின்றி நெடுநாள் வாழ்வதற்கு வழிகாட்டும் சங்கப் புலவர்

அ) பெருங்கௌசிகனார் ஆ) பிசிராந்தையார்

இ) ஔவையார் ஈ) மாங்குடிகிழார்

7. 'நடுகல் வழிபாடு' யாருக்காக உருவாக்கப்பட்டது?

அ) இயற்கையாக மரணமுற்றோர் ஆ) போரில் வீர மரணம் அடைந்தோர்

இ) இயற்கைத் தெய்வங்கள் ஈ) அறிவிற்சிறந்த சான்றோர்

8. விடுபட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

1) இயற்கைமீது அச்சம் – இயற்கை வழிபாடு 2) பசி போக்கல் – விருந்தோம்பல்

3) வீர மரணம் – நடுகல் வழிபாடு 4) உயிர்களை நேசித்தல் – ?

அ) உயிர்நேயம் ஆ) நம்பிக்கை இ) மதித்தல் ஈ) பெருமை

9. 'எத்திசை செலினும் அத்திசை சோறே' – யார் யாரிடம் கூறினார்?

அ) பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் ஆ) ஔவையார் அதியமானிடம்

இ) ஔவையார் பாரியிடம் ஈ) கபிலர் பாரியிடம்

10. தொல்குடியினர் இயற்கையை வழிபடக் காரணங்கள்

1) இடி, மின்னல், மழைமீது ஏற்பட்ட அச்சம்

2) வெள்ளம், காட்டுத்தீ, நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட அழிவு

3) அச்சமூட்டும் விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் எண்ணம்

4) ஆழிப்பேரலையால் காக்கப்படும் உயிர்கள்

அ) 1, 2, 3 சரியானவை ஆ) 1, 3, 4 சரியானவை

இ) 2, 3, 4 சரியானவை ஈ) 1, 2, 4, சரியானவை

குறுவினா

1. தொல்குடி விழுமியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.
2. தொல்குடி மக்களின் பட்டறிவுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
3. இலக்கியங்களில், முதுகுடிப் பெண்கள் என்னென்ன அடைமொழிகளால் குறிப்பிடப்பட்டனர்?
4. 'பரிசில் வாழ்வைவிடத் தன்மானம் பெரிது' என ஔவையார் கூறக் காரணம் என்ன?
5. தாய்வழி நிற்றல் என்பதே தொல்குடிச் சமூக நியதி என்பது குறித்துப் புறநானூறு கூறுவது யாது?
6. நடுகல் வழிபாடு தோன்றக் காரணம் என்ன?
7. 'பாதீடு' – பொருள் விளக்கம் தருக.
8. முல்லைத் திணை மக்களின் விருந்தோம்பல் பண்பு குறித்து அகநானூறு கூறுவது யாது?
9. தொல்குடிச் சமூகத்தில், மூத்தோரின் செயல்களாகக் குறிப்பிடப்படுவன யாவை?
10. முதிய வேடம் பூண்டு நல்ல தீர்ப்பு வழங்கிய மன்னன் யார்? அவ்வாறு செய்யக் காரணம் என்ன?

சிறுவினா

1. 'புதிதாய்ப் பிறக்கும் உயிரை வரவேற்கும் பண்புடையவர் தொல்குடியினர்' – இக்கூற்றை அதியமான் வாழ்க்கை நிகழ்விலிருந்து புலப்படுத்துக.
2. இல்லுறை இன்பமே பெரிது எனத் தொல்குடியினர் வாழ்ந்ததாகப் பட்டினப்பாலை குறிப்பிடுவது யாது?
3. தொல்குடியின் கூடியுண்ணும் பொதுமைப்பண்பு குறித்த ஏங்கல்ஸின் கூற்று யாது?
4. சிறுபாணாற்றுப்படையின் 'மகாஅர் அன்ன மந்தி' என்னும் பாடலடி குறிப்பிடும் தொல்குடி விழுமியத்தை விளக்குக.
5. தொல்குடிப்பெண்களின் ஆளுமைப் பண்புக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.

நெடுவினா

1. தொல்குடியினரின் விருந்தோம்பல் பண்பைப் புறநானூற்றுப் பாடல்வழி விளக்குக.
2. தொல்குடியினர் உயிர்நேயப் பண்புமிக்கவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. 'தொல்குடியினர் வாழ்வில், இயற்கை வழிபாடு இன்றியமையாத செயலாக இருந்தது' – இக்கூற்றை நிறுவுக.
4. தொல்குடி விழுமியங்களுள் பெண்களைப் போற்றி மதிக்கும் பண்பு இருந்ததை எவையேனும் நான்கு இலக்கியச் சான்றுகளுடன் விவரிக்க.
5. தொல்குடியினர், வீரத்தையும் வெற்றியையும் போற்றினர் என்பதை 'நடுகல் வழிபாடு' வாயிலாக விளக்கி எழுதுக.

XI Ethics_Lesson 6 Folder.indd 121 13-12-2021 10:42:28

அலகு
7

அறவியலின் இயல்பும் அறச்செயல்களும்

கற்றல் நோக்கங்கள்

- அறவியலின் வரையறையை அறிதல்
- ஒழுக்கத்திற்கான அடிப்படை விதிகளைத் தெரிந்துகொள்ளுதல்
- அறச்செயல்களின் பண்புகளைப் புரிந்துகொள்ளுதல்
- அறவியலைப் பிற சமூக அறிவியியல் துறைகளோடு ஒப்பிட்டு அறிதல்
- மாணவர்களின் அறச்சிந்தனையை வளர்த்தல்

நுழைவு வாயில்

பொதுவாகக் குணம் நாடிக் குற்றமும் நாடிச் செய்யத் தகுந்ததும் செய்யத் தகாததுமான செயல்களை இனங்கண்டு ஏற்பதும் விலக்குவதும் அறமாகக் கருதப்படுகிறது. மனித நடத்தையை அளப்பதற்குச் சமன்செய்து சீர்தூக்கும் கோலாகப் பயன்படுவதுடன், மக்கட்பண்பையும் அறிவுத்திறனையும் இணைப்பதற்கும் அறம் உந்துவிசையாகிறது. பொருளும் இன்பமும் மட்டுமல்ல; அறிவும் அறத்தாலேயே வரவேண்டும். அப்போதுதான் மக்களின் பண்புநலன்களும் குன்றின் மேலிட்ட விளக்காகும். இத்தகைய அறம் அனைத்து வகை உயிர்களுக்கும் இன்றியமையாததாகும். இதுவும் அன்பையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

“என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்” (குறள்: 77)

எலும்பில்லாத புழுவை வெயில் உறுத்துவது போல அன்பில்லாத உயிர்களை அறம் உறுத்தும் என்கிறார். இந்த உறுத்தலுணர்வைத் தவிர்க்கவேண்டுமானால் மனத்துக்கண் மாசிலாத அறநிலைக்கு மனிதன் உயரவேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

அறவியல் சொல் விளக்கம்

அறவியல் என்பது ஆங்கிலத்தில் ‘Ethics’ அல்லது ‘Moral Philosophy’ என அழைக்கப்படுகிறது. ‘Ethics’ என்ற சொல், ‘Ethos’ என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ‘Ethos’ என்ற சொல்லிற்கு ‘வழக்கம்’ என்பது பொருள். ‘Moral’ என்ற சொல், ‘Mores’ என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லிற்கு, மரபு என்று பொருள். எனவே, அறவியல் என்பது, மக்கள் தொன்று தொட்டுத் தமது வாழ்க்கையில் பயன்படுத்திய சில வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றியது என்பதை அறிய முடிகிறது.

அறவியல் வரையறை

அறவியல் என்பது, மனிதச்செயல்கள் மற்றும் நடத்தையின் தரத்தைப் பற்றியதாகும். மக்கள் அன்றாட வாழ்க்கையில் உரையாடும்போது ஒருவன் நல்லவன், ஒருவன் தீயவன் என்றும், ஒருவன் செய்தது மிகவும் சரிதான் என்றும், ஒருவன் இப்படிச் செய்திருக்கக்கூடாது என்றும் வேறுபட்ட கருத்துகளைக் கூறுகின்றனர். இவ்வாறு கூறும்போது மனிதச் செயல்கள் பற்றி, ஒவ்வொரு மனிதனுக்கும் கருத்துகள்இருப்பதைஅறிகிறோம். இக்கருத்துகள் ஒரு பொது அறவரையறைக்குள் கொண்டுவரப்பட்டு விளக்கப்படுவதையே

XI Ethics_Lesson 7 Folder.indd 122 21-02-2022 22:28:34

அறவியல் என்கிறோம். மனிதனது குறிக்கோள் பற்றியும், அக்குறிக்கோளின் அடிப்படையில் அவனது செயல்கள் மற்றும் நடத்தைகள் அமைய வேண்டியது பற்றியும் அறவியல் பேசுகிறது. அது தனிமனித நடத்தைகள் அனைத்தும் உயரிய பண்புநலன்களின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

தனிமனித வாழ்க்கையுடன் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது. நமது சமூகத்தில் கணவன் – மனைவி, பெற்றோர் – பிள்ளைகள், ஆசிரியர் – மாணவர் எனப் பல்வேறு நிலைகளில் மனிதர்கள் இணைந்து வாழ்கிறார்கள். இப்படி வாழும்போது அவர்களுக்குரிய கடமைகளைச் சில ஒழுங்குமுறைகளுடன், சமூக விதிகளுக்கு உட்பட்டுச் செய்திருக்கிறார்களா என்றும், அவர்களின் நடத்தை சரியா? தவறா? என்றும் அறவியல் ஆராய்கிறது.

அறிஞர்களின் கருத்துகள்

சின்ஹா - 'அகநிலை அறப்பண்பு மற்றும் நடத்தை பற்றிய அறிவியல்'

மெக்கன்ஸி - 'மனித நடத்தையில் எது சரியானது அல்லது எது தவறானது, எது நன்மையானது அல்லது எது தீமையானது, என்பது பற்றிய படிப்பு'

அரிஸ்டாட்டில் - 'அறவியல் என்பது, நன்னடத்தை மூலமாக நற்செயல்களை உரிய நேரத்தில் செய்வித்து மனிதனை நல்வழிப்படுத்துவதுதான்'.

பாட்டர் ஸ்டிவர்ட் - எதைச் செய்வதற்கு உனக்கு உரிமையுள்ளது என்பதற்கும், எந்தச் செயல் செய்வதற்குரியது என்பதற்குமான வேறுபாட்டை அறிவது அறவியலாகும்.

இமானுவேல் கான்ட் - ஒரு மனிதன் பிறர் உரிமைகளில் தலையிடுவது என்பது சட்டப்படி குற்றமாகும். ஆனால், பிறர் உரிமைகளில் தலையிட நினைப்பதே அறவியல்படி குற்றமாகும்.

ஆல்பர்ட் சுவைட்சர் - மனச்செம்மையை அடைவதற்குரிய ஆளுமைமிக்க மனிதச் செயல்பாடே அறவியலாகும்.

வின்டன் மார்கலிஸ் – சட்டங்களைவிட அறங்களே மேலானவை.

ஔவையார் - செல்வமுள்ளபோது வறியோருக்கு வழங்கியும், செல்வமில்லாதபோது உள்ளதை உடனுண்டும் வாழ்வது மானுட அறமாகும். (புறம் :95)

புத்தர் - செயலே வாழ்வாகும்; செயலின்றி வாழ்வில்லை; பிறருக்குத் தீங்கு தரும் செயல்களைத் தவிர்க்கவேண்டும்; அனைவருக்கும் நன்மையளிக்கும் செயல்களையே செய்யவேண்டும்.

வள்ளுவர் – மனித வாழ்வின் உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பர். இவற்றுள் வீடுபேற்றைத் தனியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. முதலில் மனிதன் அறவழியில் நிற்கவேண்டும் என்றும், அந்த அறத்தின் அடிப்படையில் பொருளீட்ட வேண்டும் என்றும், அறவழியில் ஈட்டிய நற்பொருள் மூலமே இன்பம் நுகரவேண்டும் என்றும் கூறுகின்றார்.

அறவியலின் இயல்பும் பணியும் (Nature of Ethics)

அன்றாட வாழ்க்கையில் மனிதர்களின் நடத்தைகள் மற்றும் செயல்களை மதிப்பிட்டு, அவை சரியா? தவறா? என்று கூறுவதே அறவியலின் இயல்பாகும். பொதுவாகத் தனி மனிதர்களின்

உங்களுக்குத் தெரியுமா?

அறமும் சட்டமும்

"அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையில் சமுதாய இன்பத்தை வளர்க்கிறது. சட்டம் சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குறச் செய்கிறது. "நன்மையைச் செய்ய வேண்டும்" என்று அறம் கூறுகிறது. "தீமையைச் செய்யாதே" என்று சட்டம் தடுக்கிறது. அறம் காரணங்காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது. சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது. சட்டம் அச்சுறுத்துகிறது. மக்களின் சிந்தனையை உயர்த்துகிறது. அறம், செயல்களைத் திருத்துகிறது சட்டம். மக்கள் மனதிலே இயல்பாயெழுவது அறம். மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாறாத நெறியினைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

நடத்தைகள், மரபுகள் அல்லது அறநெறிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து உரிய தீர்வுகளை வழங்குவதே அறவியலின் பணியாகும்.

அறவியல் ஓர் அறிவியல் (Ethics as a Science)



அறிவியல்

ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ எடுத்துக்காட்டி விளக்கம் கேட்க முற்பட்டால், அதனோடு இணைந்த எல்லாச் செய்திகளையும், ஒருவகை ஒழுங்கமைப்பினுள் தருகின்ற அறிவே அறிவியல் ஆகும் (Science is an organized or systematized knowledge). இவ்வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிமுறைகளின் தொகுப்பான அறவியலும் ஓர் அறிவியலே எனலாம்.

அறிவியல் முறை

ஒருவகை ஒழுங்கமைப்பினுள் வேண்டாத செய்திகளை நீக்கி, வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் முறையாக இணைத்துத் தருவது அறிவியலின் முறையாகும். ஓர் இலையைக் கொடுத்தால், அறிவுடையவன், அந்த இலையைப் பற்றிய எளிய சில செய்திகளை மட்டுமே கூறமுடியும். ஆனால், தாவரவியல் அறிஞனோ, அந்த இலையைப் பற்றிய முழுமையான செய்திகளை ஓர் ஒழுங்கமைப்பினுள் அமைத்துத் தந்துவிடுவான். அவ்வாறே அறவியலும், மனிதனுடைய எந்தச் செயலையும் விளக்க முற்படும்போது, அச்செயலைச் சரி தவறு, நன்மை தீமை, என்ற அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அதை அமைத்துக்காட்டும். எனவே, அறவியலும் அறிவியல் நோக்குடையதே ஆகும்.

அறவியல்: ஓர் உயர்நிலை அறிவியல்

சில செயல்கள் ஏன் இப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதற்கோ விடைகளைக் காண, உயர்நிலை அறிவியல் அல்லது மேல்நிலை அறிவியல் தேவைப்படுகிறது. அளவையியல் (Logic), அழகியல் (Aesthetics), அறவியல் (Ethics) என்ற இம்மூன்றும் உயர்நிலை அறிவியலைச் சேர்ந்தவை.

நல்ல சிந்தனை எப்படி இருக்கவேண்டும் என அளவையியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல அழகு எப்படி இருக்கவேண்டும் என அழகியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல நடத்தை எப்படி இருக்கவேண்டும் என விளக்க முற்படுவது அறவியலின் அடிப்படையாகும்.

தனிமனிதனின் செயல் அல்லது நடத்தை என்பதை எடுத்துக்கொண்டால், சமூகவியல் (Sociology) அறிஞர்களும், மானிடவியல் (Anthropology) அறிஞர்களும், உளவியல் (Psychology) அறிஞர்களும் மனித நடத்தைகளைப் பற்றியே ஆராய்கின்றனர். எனவே, சமூகவியல்

வ. எண்	உயர்நிலை அறிவியல்	நேர்நிலை அறிவியல்
1.	ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது.	என்னவெல்லாம் இருக்கவேண்டும், இவையெல்லாம் இப்படித்தான் செயல் பட்டாகவேண்டும் என்ற விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.
2.	மதிப்பீடுகள் பற்றியது.	உண்மைகளைப் பற்றியது.
3.	நிகழ்வுகளின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது.	ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது.
4.	மாறும் மனநிலையை அடிப்படையாகக் கொண்ட மனிதனைப் பற்றிய ஆய்வு ஆகும். எனவே, திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலாது.	மாறும், மாறாத்தன்மையுள்ள புறப்பொருள்களின் ஆய்வு என்பதால் திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலும்.

XI Ethics_Lesson 7 Folder.indd 124 21-02-2022 22:28:35

முதலான இவையும் அறிவியல் அடிப்படை கொண்டவையே எனலாம். ஆனால், அழகியல், அளவையியல், மானிடவியல், சமூகவியல், அறவியல் ஆகிய இந்த ஐந்து இயல்களும் மனிதனைப் பற்றி விளக்கினாலும், அறிவியல் இவற்றிலிருந்து சிறப்பாக வேறுபடுகின்றது. நேர்நிலை அறிவியல் உண்மைகளை மட்டுமே முன்வைக்கிறது. எனினும் அறவியல் முதலியன, ஏன்? எதற்கு? எப்படி? என அக்கால நிகழ்வுகளை அறிவியல் கண்கொண்டு மதிப்பீடுகளை முன்வைக்கின்றன. அதனால் இவை உயர்நிலை அறிவியல் எனப்படுகின்றன.

நேர்நிலை அறிவியல்

ஒரு பொருள் குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது என்பதையும், குறிப்பிட்ட வகையில் செயல்படுகிறது என்பதையும், புலனறிவு மூலமாக ஆராய்ந்து விளக்குவது நேர்நிலை அறிவியல் ஆகும். விலங்கியல் (Zoology), தாவரவியல் (Botany), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) போன்றவற்றை நேர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

அறவியல் பயிற்சி தரும் நிறுவனங்கள்

1. குடும்பம்

மனித உயிர்களிடையே இயல்பாக அமைந்த அன்பு என்ற உயர்ந்த உணர்வின் அடிப்படையில் சமுதாயத்தின் மூலக்கருவாக, அமைவதே குடும்பம் ஆகும். மிகப்பழங்காலம் முதல் இன்றுவரையில், சமுதாயத்தின் முதன்மைப் பயிற்சி நிலையமாகக் குடும்பமே விளங்குகிறது.

மனித வரலாற்றில் குடும்பமே முதல் நிறுவனமாக விளங்குகிறது. இக்குடும்பம், பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிக்கும் சமுதாய நிறுவனமாகும்.

2. கல்வி நிறுவனங்கள்

குடும்பத்துக்கு அடுத்தநிலையில், தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்துவன கல்வி நிறுவனங்களாகும். கல்வி நிறுவனங்கள் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியவை யாகும். இவற்றின் வாயிலாக ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் பிற நற்பண்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

கணவன், மனைவி, குழந்தைகள் ஆகிய உறுப்பினர்களைக் கொண்டதே குடும்பம். அது குழந்தைகளின் உடல், உள்ளம், அறிவு, அறம், ஆன்மீகம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாகும். இத்தகைய குடும்பத்தில் நிலவும் அமைதி நாட்டிலும் பிரதிபலிக்கும்; குடும்பத்தில் அமைதி நிலவாவிடில் சமூகத்திலும் அதன் எதிரொலிகள் கேட்கும். எனவே, ஒரு சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குடும்பம் ஒரு குறியீடாகிறது எனலாம்.

கல்வி நிறுவனத்தின் பயன்கள்

- முன்னோர்களின் அனுபவக் கருத்துக் கருவூலங்களை எடுத்துக்காட்டித் தன்னைக் காத்துக்கொள்ளவும், வாழ்க்கையில் சிறப்படையச் செய்யவும் கல்வி நிறுவனமே பயிற்சி அளிக்கிறது.
- தனித்தன்மையை வளர்த்துக்கொள்ளவும், ஒற்றுமை, பொறுமை, நிதானம், அன்பு போன்ற நற்பண்புகளை வளர்க்கவும் கல்வி நிறுவனம் உதவுகிறது.
- பலன் கருதாது கடமையைச் செய்யவேண்டும் என்ற உயரிய உணர்வு, சகிப்புத்தன்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, பணிவு, ஒழுக்கம், முதலியவற்றைப் பின்பற்றி வாழும் முறைகளைப் பயிற்றுவிப்பதும் கல்வி நிறுவனமேயாகும்.
- சமநோக்கு, துணிவு போன்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பெறுவதற்குக் கல்வி நிறுவனம் வழிவகை செய்கிறது.
- அறவாழ்வின் பெருமையையும், மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய வழிகளையும் பயிற்றுவித்துச் சமுதாயத்தில் மாணவர்கள் சிறப்பதற்குக் கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன.

3. குடிமைப்பயிற்சி நிறுவனங்கள்

தனிமனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினனாக, ஒருநாட்டின் நற்குடிமகனாக அமையவேண்டும்

என்றால், அவன் குடிமைப்பயிற்சியையும் கல்வி நிறுவனப் பயிற்சியையும் பெறுவதோடு மட்டுமல்லாமல், நல்ல குடிமகனாக விளங்கும் தன்மையையும் உறுதி செய்யவேண்டும்.

குடிபெயர்ந்து ஒரு நாட்டில் வாழும் அனைவரும், குடியுரிமை பெறத் தகுதி பெற்றவராவர். குடியுரிமை பெற்றவர் குடிமைப்பண்பு பெறுவது அவர்தம் தலையாய கடமையாகும். சமுதாயத்தின் அறநெறிக் கட்டுப்பாட்டு விதிகளும், அரசாங்கத்தின் சட்ட விதிகளும் குடிமைப்பண்பு பெற வழிகாட்டியாக விளங்குகின்றன.

அரசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறியவும், யாவரிடத்திலும் எளிமையோடு பழகவும், அன்புடையவராக இருக்கவும், அறிவினும் உயர்ந்த மக்கட்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் குடிமைப் பயிற்சி நிறுவனங்கள் உதவுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

அன்பு, அடக்கம், அறிவு, அறம், ஒழுக்கம், பண்பு, நடுவுநிலைமை, வாய்மை, வெகுளாமை, கொல்லாமை, நாணம், நகை, ஈகை, இன்சொல், பிறரை இகழாமை, பொறையுடைமை, அழுக்காறாமை போன்றவற்றின் ஒன்றுபட்ட நிலையே குடிமைப் பண்பாகும் என்பதைத் திருக்குறள்வழி அறியலாம்.

சிறந்த குடிமக்களின் பண்புகள்

ஒரு நாட்டின் சிறந்த குடிமக்களாகத் திகழப் பின்வரும் பண்புகள் இன்றியமையாதனவாகும்.

- உண்மையான நாட்டுப்பற்று
- சிறந்த கல்வியறிவு
- கடின உழைப்பு
- சகிப்புத்தன்மை
- உதவும் மனப்பான்மை
- மனிதநேயம்
- அகப்புறத்தூய்மை
- பொதுஅறிவு
- நேர்மையாக வரிகளைச் செலுத்துதல்
- வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துதல்.

4. தொழில் நிறுவனங்கள்

குடும்பம், கல்வி நிலையம், குடிமைப்பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்றும் இயல்பான அன்பின் பிணைப்பினால் செயல்படுகின்றன. ஆனால், தொழிற்கூடங்கள் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுகின்றன.

தனிமனிதனின் தனித்திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைத் தொழிற்கூடங்கள் அமைத்துத் தரவேண்டும். அவரவர் திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைப் பாகுபாடின்றி வழங்குவதற்குத் தொழிற்கூடங்கள் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒருவன், தொழில் வேறுபாட்டையும், திறமை வேறுபாட்டையும் இணைத்துக்கொண்டு முன்னேற முடியும். தொழில் நிறுவனங்கள் ஒழுக்கம், காலம் தவறாமை, விதிமுறைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் போன்ற இன்றியமையாத பிற பண்புகளைப் பின்பற்றவும் கற்றுத்தருகின்றன எனலாம்.

5. அரசமைப்பு நிறுவனங்கள்

பிற அறவியல் பயிற்சி நிறுவனங்கள் எல்லாவற்றையும் வழிநடத்தும் ஆற்றல் பெற்றவையாக அரசமைப்பு நிறுவனங்கள் உள்ளன.

தொன்றுதொட்டு வரும் மக்கள் சமுதாயத்தின் அடிப்படை அறக்கோட்பாடுகள், புறத்தூண்டல்களால் அழியாமல் காப்பதும் அதற்குரிய சட்டங்களை இயற்றுவதும் இவற்றின் பணிகளாகும். இவை பிற நிறுவனங்களைக் காட்டிலும் மேலான அதிகாரங்களைக் கொண்டவையாகும். இவை தனிமனிதன் தன் உரிமைகளை அறிய உதவவேண்டும்; அவற்றைப் பாதுகாக்கவேண்டும். எல்லா வாய்ப்புகளையும் எல்லோரும் பெறப் பாடுபடவேண்டும். சமுதாயத்தில் மனிதனை எல்லா நிலையிலும் வளர்ச்சியடையச் செய்வதும் அரசமைப்பு நிறுவனங்களின் அடிப்படையான பணியாகும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (குறள்: 734)

என்று, உடலுயிரை வருத்தும் பசியும், தீராத நோயும், அழிக்கும் பகையும் இல்லாத நாடே சிறந்த

நாடாகும் என்கிறார் வள்ளுவர். மேலும் அவர்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு" (குறள்: 739)

என செல்வம்தேடித் தன் மக்களைப் பிற இடங்களில் அலைய விடாதது நாடாகும் என்றும், அவ்வாறு அலையவிடுவது நாடன்று என்றும் அறிவிக்கிறார்.

குடும்பமும் ஏனைய அறப்பயிற்சி நிறுவனங்களும் தனிமனிதனை அறமுள்ளவனாக வளர்ச்சியடையச் செய்கின்றன. இவை, காலத்தையும் இடத்தையும் கடந்த எல்லையற்ற உலகளாவிய அறவியல் வாழ்வினைப் பற்றி அறிந்து கொள்ளவும் தன்னை மேம்படுத்திக்கொள்ளவும் மனச்சான்றின்படி வாழவும் தனிமனிதனை நெறிப்படுத்துகின்றன எனலாம்.

பழக்கம் (Habit)

கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடீஸ், "நல்லொழுக்க நற்பண்பு" (Virtue) என்பது, உயர்நிலை அறிவுடைமை என்று கூறினார். அவருக்குப் பின்வந்த அரிஸ்டாட்டில், 'நல்லொழுக்க நற்பண்பு என்பது, நல்ல பழக்கங்களை நமது வாழ்வில் நிலையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே' என்று கூறினார். இவ்விரு கிரேக்க அறிஞர்களின் கூற்றுகளும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை. இவற்றின் சாரம் ஒன்றுதான். நல்ல பழக்கங்களைக் கண்டறிந்து நிலையாகக் கடைப்பிடிப்பதால் பண்புகள் மேம்படுவதுடன் அறிவாற்றலும் வளரும் என்பதுதான்.

ஏற்றுக்கொண்ட செயல்களைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யும்போது அவை பழக்கமாக மாறிவிடுகின்றன. ஒருவயதுக் குழந்தை நடக்கத் தொடங்கும்போது முதலில் சிறிது தடுமாறுகிறது. சில முறை கீழேயும் விழுகிறது. ஆனால், பலமுறை நடந்தபின் அது பழக்கமாக மாறி இயல்பாகிவிடுகிறது. எந்தச் செயலும் பழக்கமானபின், இயல்பாகவே நம் மனம், அதில் ஈடுபட்டுவிடுகிறது.

நற்செயல்களைச் செய்வதென்பது ஒரு பழக்கமாக மாறி, மனித மனத்தில் நற்சிந்தனையாகும்போதுதான், உண்மையிலேயே, மனிதன் அறப்பண்புள்ளவன் ஆகிறான். நற்செயல்களைச் செய்வதில் ஒருவிதமான மகிழ்வும் ஈடுபாடும் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அரிஸ்டாட்டில், 'ஒரு மனிதன் நல்ல செயல்களைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்து நல்லவனாவதாகக் கூறுகிறார். எனவே, நற்செயல்களைச் செய்யும் பழக்கம் ஒருவனிடத்து வேரூன்றும்பொழுது, அப்பழக்கம் இயல்பானதாகிறது எனலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்க்கலைக்களஞ்சியம் "ஐரோப்பிய அறநூல் வரலாறு" என்னும் தலைப்பில் பின்வரும் செய்திகளைத் தருகிறது.

"அறிவும் சிந்தனையும் சுய நிருணயமும் அறத்தின் உயிர்நாடிகள்"

– சாக்ரட்டீஸ்

"ஏற்புடைய சூழ்நிலையையும் சிறந்த அரசியல் திட்டத்தையும் அமைத்து உத்தம இலட்சியங்களைத் தருக்க முறையில் நிரூபணம் செய்து மக்களை அறவாழ்வில் ஈடுபடச் செய்ய வேண்டும்".

– பிளாட்டோ

"ஞானம், தன்னடக்கம், தைரியம், நியாய உணர்ச்சி" இவை அறத்தின் வேர்கள்"

- அரிஸ்டாட்டில்

நடத்தை (Conduct)

விரும்பியேற்ற செயல்களும், பழக்க வழக்கங்களுமே ந டத்தை எனப்படும். நடத்தை நிலையில் ம னமும் உடலும் ஒருங்கிணைந்து இயல்பாகச் செயல்படுகின்றன.

இந்நிலையில், ஒரு மனிதனின் நடத்தையில், அவனது அகப்பண்புகள் அனைத்தும் வெளிப்படுவதால், நடத்தையை ஒரு மனிதனின் ஆளுமையைத் தீர்மானிக்கும் கருவியாகக் காணலாம். நடத்தை என்பது ஒரு மனிதனின்

XI Ethics_Lesson 7 Folder.indd 127 21-02-2022 22:28:35

ஓரிரு செயல்களை மட்டும் குறிப்பதில்லை. அவன் வழக்கமாகச் செய்யும் எல்லாவகைச் செயல்களையும் பொறுத்தே நடத்தை தீர்மானிக்கப்படுகிறது.

அறப்பண்பு (Character)

அறப்பண்பு என்பதைப் பற்றிய ஆய்வு, அறவியலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அறப்பண்பின் முக்கியத்துவத்தைப் பின்வரும் ஆங்கிலத்தொடர்கள் வலியுறுத்துகின்றன என்கிறார் பில்லிகிரகாம்.

ஒருவர் உடைமையை இழக்கும் போது, எதையும் இழப்பதில்லை;
ஒருவர் உடல்நலத்தை இழக்கும் போது, எதையோ இழக்கிறார்;
ஒருவர் பண்பை இழக்கும் போது, அனைத்தையும் இழக்கிறார்.

When wealth is lost, nothing is lost;
When health is lost, something is lost;
When character is lost everything is lost.

மனித வாழ்க்கையில் எந்த அளவுக்குப் பண்புடைமை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பது, இத்தொடர் மூலம் அறியப்படுகிறது.

நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே அறப்பண்பாகும். சிலவகைச் செயல்களைப் பழக்கமாகச் செய்யும்போது, அச்செயல்களுக்குப் பின்னே இருக்கக்கூடிய நல்மனப்பாங்கு அறநிலையாக கருதப்படுகிறது. இந்நிலையில், நல்வழியில் செல்லும் ஒருவனது மனம் முழுவதுமாக அறப்பண்பு உடையதாகிறது. இப்பண்பு, அவனது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது. குடும்பத்திலும் சமூகச்சூழலிலும், வளர்ந்தவிதத்திலும் கற்றுக்கொண்டவற்றிலும் தாக்கம் செலுத்தி அறப்பண்பை உருவாக்குகின்றது.

ஒவ்வொரு செயலும் நமது உள்மனத்தில் ஓர் ஆழமான பாதிப்பை உண்டாக்குவதால், நமது நடத்தையும் அறப்பண்பை உருவாக்குவதில் பங்கேற்கிறது.

அ) அறவியலும் பிற சமூக அறிவியல்களும் (Ethics and other Social Sciences)

அறவியல் என்பது ஓர் உயர்நிலை அறிவியல் என்று அறிந்தோம். அறவியல் ஓர் அறிவியல் என்ற வகையில், அது எவ்வாறு பிற சமூக அறிவியல்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை இப்பகுதியில் காண்போம்.

உங்களுக்குத் தெரியுமா?

'சமூகவியல்' (Sociology) என்ற சொல்லைப் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரும், சமூகவியலாளருமான ஆகஸ்தே காம்தே (Auguste Comte) (1798 – 1857) என்பவர், முதன்முதலில் உருவாக்கிப் பயன்படுத்தினார்.

அறவியலும் சமூகவியலும் (Ethics and Sociology)

அறவியல் என்பது, மனிதனின் ஒழுக்கத்துடன் தொடர்புடையதாகும். அறவியல் மனிதனுக்குத் தேவையான நன்னடத்தை முறைகளையும், விதிகளையும் உருவாக்கியுள்ளது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள்: 131)

என்கிறார் வள்ளுவர். சமூக அறிவியலும் அறவியலும் இணைந்து, மக்களின் செயல் முறைகளை ஆராய்ந்து, அவை ஏற்கக் கூடியவையா? பயன்தரக் கூடியவையா? என்று முடிவு செய்கின்றன. சமூகவியலுக்கும் அறவியலுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சமூகவியலில் உள்ள எல்லாச் சிக்கல்களையும் அறவியலின் அடிப்படையில் விளக்கவியலாது. அதுபோலவே, அறவியல் சிக்கல்களையும் சமூகவியலால் விளக்கவியலாது. எனவே, ஒரு சிக்கலைச் சமூகவியல் ஏற்றுக்கொண்ட அதேநோக்கில், அறவியலும் ஏற்கவேண்டியதில்லை எனலாம்.

சமூகவியல் என்பது, சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஓர் அறிவியல் ஆகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் அங்கம் என்பதால், சமூகவியல் அறவியலோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறலாம்.

ஒவ்வொரு தனிமனிதனின் நடத்தையும் சமூகத்தில் ஏதாவது ஒருவிதமான விளைவைத் தோற்றுவிக்கவே செய்கிறது. பெரும்பாலும் தனிமனிதனின் செயல்கள், சமூக மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களின் தாக்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தனிமனிதன் தனித்துச் செய்யும் செயல்களைவிடச் சமூகத்தின் அங்கமாயிருந்து அவன் செய்யும் செயல்களையே அறவியல் கருத்தி ல்கொள்கிறது. எனவே, அறவியல் ஆய்வுகளுக்கும் சமூகவியல் ஆய்வுகளே அடித்தளங்களாக அமைகின்றன.

ஆ) அறவியலும் மானுடவியலும் (Ethics and Anthropology)

மானுடவியல் என்பது, மனித இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்கின்றது. அறவியல் என்பது, சில மானுடவியல் மரபுகளின் அடிப்படையில் அமைகின்றது. எனவே, மானுடவியலின் ஆராய்ச்சி முடிவுகள், அறவியலுக்கும் பெரிதும் உறுதுணையாய் உள்ளன எனலாம்.

மிகப்பழங்காலம் தொட்டு, மனிதச் சமுதாயம் பலவகையான மரபுகளையும் நம்பிக்கைகளையும் கடைப்பிடித்து வந்துள்ளது. இவற்றில் சில மரபுகளும் பழக்கவழக்கங்களும் தீய விளைவுகளைத் தோற்றுவித்தாலோ, அல்லது தேவையற்ற பயன்களை அளித்தாலோ அவை கைவிடப்படுகின்றன என்பதை மானுடவியல், ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மரபுவழி அறவியல் கோட்பாடுகளை நாம் வடிவமைத்து ஏற்றுக்கொள்ளும் முன்னர், மானுடவியல் ஆய்வுகளின் முடிவுகளைக் கருத்தில் கொள்வோமானால், அறவியலில் பயனற்ற பல கோட்பாடுகளைத் தவிர்க்கலாம். இவ்வகையில் மானுடவியல் அறவியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இ) அறவியலும் உளவியலும் (Ethics and Psychology)

உளவியல் என்பது மனித மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். மனித மனத்தில் நிகழும் மாறுதல்களைப் பற்றியும், மனிதச்செயல்களுக்குப் பின்னணியாக அமையும் உணர்ச்சிகள் மற்றும் அறிவாற்றல் பற்றியும் உளவியல் ஆராய்கின்றது. மனித நடத்தைகள் யாவும் பல்வேறு மனநிலைகளின் வெளிப்பாடுகளேயாகும். மனிதச்செயல்கள் யாவுமே தொடக்கத்தில் எண்ணமாக எழுந்து, பின்னரே செயல்வடிவத்திற்கு வருவதால், உளவியலுடன் அறவியலுக்கு நெருங்கிய தொடர்புள்ளதாகக் கூறலாம்.

மனித உணர்ச்சிகளாகிய காமம், குரோதம், ஆசை, அச்சம், பசி, இரக்கம் முதலியன மனிதனுடைய செயல்களை ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கின்றன. எனவே, உளவியல் அறிவு, அறவியல் ஆராய்ச்சிக்கு மிகத்தேவையான ஒன்றாகிறது.

அண்மைக்காலங்களில் உளவியலில் சமூக உளவியல் (Social Psychology), நடத்தைசார் உளவியல் (Behavioural Psychology) என்ற இருபிரிவுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமூக உளவியல், ஒரு சமூகம் தனிமனிதனின் மனநிலையை எவ்விதத்தில் பாதிக்கின்றது என்பதைப் பற்றியும், தனிமனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் சமுதாயத்தில் எத்தகைய விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதைப் பற்றியும் ஆராய்கின்றது. நடத்தைசார் உளவியல், சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படும் தனிமனிதப் பழக்கவழக்கங்களைப் பற்றி ஆராய்கின்றது. உளவியலின் இவ்விரு பிரிவுகளுமே, அறவியல் ஆராய்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

ஈ) அறவியலும் தத்துவவியலும் (Ethics and Philosophy)

ராஸ்டல்

ஹெகல்

அறவியலுக்கும் தத்துவவியலுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஹெகல் (Hegal)

மற்றும் கிரீன் (Green) போன்றவர்கள், தத்துவவியலை அடிப்படையாகக் கொண்டே அறவியல் அமைவதாகக் கருதுகின்றனர். ஆனால், ராஸ்டல் (Rashdall) போன்றவர்கள், அறவியலை அடிப்படையாகக் கொண்டே தத்துவவியல் அமைவதாகக் கூறுகின்றனர். இந்த விவாதம் ஒருபுறம் தொடர்ந்தாலும், அறவியலும் தத்துவவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கீழ்க்கண்ட கருத்துகளின் அடிப்படையிலும் இதை விளக்கலாம்.

- அறக்கருத்துகள் யாவும் சமுதாய நடத்தைகள் வழியே உருவாக்கப்பட்டுள்ளன.
- உயிர், உலகம், இறைவன் பற்றிய கருத்துகளை ஆராய்வதும், அவை பற்றி விரிவாக விளக்க முனைவதும் தத்துவவியலின் அடிப்படையாகும்.
- அறவியல் என்பது அறிவியல் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. தத்துவவியல் அந்த அறிவியல் மதிப்பீட்டை முறைப்படுத்துகிறது.
- தத்துவவியல், உலகத்திற்கும் மனிதனுக்குமான தொடர்பை விளக்குகிறது. அறவியலோ, மனிதனின் மனச்சான்றுடன் விவாதிக்கிறது.
- அறவியல் தீர்ப்பு என்பது, முழுமையானதும் தெளிவானதும் நேரிடையானதும் ஆகும்.
- கடவுளுக்கும் மனிதனுக்குமான தொடர்பையும், உலகத்திற்கும் சமுதாயத்திற்குமான தொடர்பையும் அறிந்துகொள்ளத் தத்துவவியல் உதவுகிறது. எனவே, மனிதனை நெறிப்படுத்தும் அறவியலுக்கும், மனிதத்தேடல்களை ஊக்குவிக்கும் தத்துவவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது எனலாம்.

ஒழுக்கத்தின் அடிப்படை விதிகள்

கடவுளை ஏற்கும் தத்துவவியலாளர்கள், ஒழுக்கத்தைச் சமூகத்தில் நிலைநிறுத்துவதற்குப் பயன்படும் அடிப்படை விதிகளாகப் பின்வரும் மூன்றைச் சுட்டுகின்றனர்.

1. பற்றுறுதி சுதந்திரம் (Freedom of Will)
2. உயிரின் இறவாத்தன்மை (Immortality of Soul)
3. கடவுளின் இருப்பு (Existence of God)

பற்றுறுதி சுதந்திரம் (Freedom of Will)

பற்றுறுதி சுதந்திரம் என்பது, மனிதனின் தீர்மானங்களுக்கும் செயல்களுக்கும் பின்புலமாகி, அவற்றை இயக்கும் 'மன ஆற்றல்' ஆகும். இந்த ஆற்றல், அனைத்து மனிதர்களிடத்தும் காணப்படுகிறது. மனிதன், தன் விருப்பப்படி எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் சுதந்திரமாக இயங்கினால் மட்டுமே அவன் செய்யும் செயலுக்கு அவனைப் பொறுப்பாக்க முடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய, சீன மற்றும் ஈரானியத் தத்துவங்களைப் போலவே, கிரேக்கத் தத்துவமும் தொன்மையானதாகும். கிரேக்கத் தத்துவ உலகில் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்பவர் சாக்ரடீஸ் கி.மு. (பொ.ஆ.மு) 470 – 399 ஆவார். அவரைத் தொடர்ந்து இருவர் தத்துவ உலகிற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஒருவர் சாக்ரடீஸின் மாணவர் பிளாட்டோ, கி.மு. (பொ.ஆ.மு) 428-348); மற்றவர் பிளாட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டில் கி.மு. (பொ.ஆ.மு) 384 – 322.

ஒரு செயலைச் செய்வதற்குப் பல வழிகள் இருந்தபோதிலும், மனிதன் அவற்றுள் தனக்கு பிடித்ததையே தேர்ந்தெடுத்துச் செயல்படுகின்றான். இதனையே 'பற்று உறுதி சுதந்திரம்' என்கிறோம். இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஒருவன் செயலாற்றும்பொழுது, பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காதவகையில் அச்செயல் அமையவேண்டும். இதற்கு மனிதனின் பகுத்தறிவு உறுதுணையாக இருக்கிறது.

மரபான சமயங்கள் அனைத்தும், கடவுளே சுதந்திரமுள்ளவன், மனிதன் கடவுளுக்குக் கட்டுப்பட்டவனே என்கின்றன. கடவுளையும் மனிதனையும் பற்றிய இத்தகைய விவாதங்கள், இன்றுவரை அறவியல் வரலாற்றில் தொடர்கின்றன. இந்த விவாதங்களின் அடிப்படையில், பொதுவாக மூன்றுவகைக் கொள்கைகள் உருவாகியுள்ளன.

XI Ethics_Lesson 7 Folder.indd 130 21-02-2022 22:28:35

அ. தீர்மானக் கொள்கை

ஆ. தீர்மானிக்க இயலாத கொள்கை

இ. தன் தீர்மானக் கொள்கை.

அ) தீர்மானக் கொள்கை

மனிதனின் சுதந்திர மனநிலை, புறவுலகப் பொருள்களைப் போன்றே, இயற்கை விதிகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பாகக் காரண காரிய விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும். சுதந்திர மனநிலை எவ்வழியில் செயல்படவேண்டும் என்பதை, அதற்கு அப்பாற்பட்ட சக்திகளும் தீர்மானிக்கின்றன. இதனையே, "நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படும்" என்கிறார் கணியன் பூங்குன்றனார். அதாவது, நீரில் மிதக்கும் தெப்பம்போல் உயிரும் முறை வழிப்படும் என்கிறார். இங்கு முறை என்பதைச் சிலர் விதி என்றும், வேறு சிலர் நியதி என்றும் கருதுகின்றனர். விதி என்பதை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றும், நியதி என்பதை இயற்கையின் ஒழுங்கமைவு என்றும் விளக்கலாம். இங்குச் செயல்களைச் செய்யும் வழியைத் தேர்வு செய்வதில் மனிதனுக்குப் பங்கில்லை என்றும், கடவுளும் விதியுமான மேல்நிலையாற்றல்கள் கூடிச் சுதந்திர மனநிலையின் போக்கைத் தீர்மானிக்கின்றன என்றும் பெரும்பாலான தீர்மானக் கொள்கையினர் கூறுகின்றனர். தீர்மானக் கொள்கையினரின் இக்கருத்து ஏற்புடையதன்று; இக்கொள்கைக்கு எதிராகப் பல வாதங்கள் உள்ளன.

ஆ) தீர்மானிக்க இயலாத கொள்கை



வில்லியம் ஜேம்ஸ்



ஹென்றி பெர்க்ஸோன்

அமெரிக்கத் தத்துவ அறிஞரான வில்லியம் ஜேம்ஸ் மற்றும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞரான ஹென்றி பெர்க்ஸோன் ஆகியோர், மனிதர்களது சுதந்திர மனநிலை நிபந்தனையற்றது என்றும், அதனால் தீர்மானிக்க இயலும் என்றும் வாதிடுகின்றனர். தேர்வு செய்யும் உரிமையைப் பகுத்தறிவு மனிதனுக்கு வழங்கியுள்ளது என்பதால், மனிதனுக்கு முழுச்சுதந்திரம் உண்டு என்கின்றனர். இக்கொள்கையின்படி, தீய இயல்புடையவர்கள் தாம் விரும்பிய வழிகளில் தவறிழைக்க வாய்ப்புண்டு என்பதால், இந்த வாதத்தை முழுமையாக ஏற்கமுடியாது எனலாம்.

இ) தன் தீர்மானக் கொள்கை

மேலே விவாதிக்கப்பட்ட இரு கொள்கைகளுமே, எதிரெதிர்த் தத்துவநிலைகளை விளக்குகின்றன. இவ்விரண்டுமே ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அமைந்துள்ளமைக்குக் காரணங்கள் கூறப்பட்டன. எனவே, இவ்விரு கொள்கைகளுக்கும் நடுவுநிலையாக ஒரு கொள்கை தேவைப்படுகின்றது. அவ்வகையில் அமைந்ததே தன் தீர்மானக் கொள்கையாகும்.

தன் தீர்மானக் கொள்கையாளர்கள், மனிதனின் சுதந்திரநிலை புறவுலகில் உள்ள எதனாலும் தீர்மானிக்கப்படவில்லை; மாறாகத் தன் செயல்களை மனிதனே தீர்மானிக்கிறான் என்பர். குறிப்பிட்ட செயலைத் தேர்ந்தெடுத்தபின், அச்செயலின் எல்லா விளைவுகளுக்கும் தேர்ந்தெடுத்தவனே பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. (எ.கா) ஒரு மாணவன் மேல்நிலைப்பள்ளியில் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதில் அவனுக்குச் சுதந்திரம் இருந்தாலும், ஏதாவது ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுப்பதால் பின்னர் அவனது பட்டப்படிப்பு எத்துறையில் இருக்கவேண்டும் என்பதும், அந்தத் தன் தேர்வினாலேயே தீர்மானிக்கப்பட்டு விடுகிறதல்லவா!

எனவே, மனிதனின் செயல்நிலைக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைவரையே சுதந்திரம் உண்டு என்பதும், அதற்கப்பால் அது தன்கட்டற்ற தன்மையை இழந்துவிடுகிறது என்பதும் தெளிவாகிறது. தனக்குள்ள பகுத்தறிவின் துணைகொண்டு, ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் இருப்பதால், மனிதன் விலங்குகளின்று மாறுபட்டு உயர்நிலையில் வைக்கப்பெறுகிறான். ஆனால், அவனது சுதந்திரத் தேர்வுக்கும் கடந்து செல்ல முடியாத சில எல்லைகளுண்டு. எல்லையற்ற சுதந்திரம் யாருக்கும் இங்கு இல்லை என்கிறது தன் தீர்மானக் கொள்கை.

உயிரின் இறவாத்தன்மை

உயிரின் இறவாத்தன்மை என்பது, மனிதன் இறந்தபின்னும் அவன் வாழ்கிறான் எனக் கருதி, இயற்கையிறந்த மேலாற்றல்களை நம்பும் ஆன்மக்கொள்கையை வலியுறுத்துகிறது. உயிரின் அல்லது ஆன்மாவின் எதிர்கால இருப்பை உறுதி செய்ய மனசாட்சியும் தேவை என்கிறார் காண்ட்.

இமானுவேல் காண்ட்

காண்டின் கருத்துப்படி, உள்ளத்திலிருந்து எழும் உள்ளுணர்வின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் என்பது எல்லாவற்றிலும் உயர்ந்ததாகும். மேலை மற்றும் கீழை நாட்டுத் தத்துவக் கொள்கைகளில், உயிரின் இறவாத்தன்மை என்பது, ஒழுக்கத்தின் அடிப்படை விதியாகக் கருதப்படுகிறது. அதாவது, ஒழுக்கமுடைய உயிரே இறவாத்தன்மைக்கு உரியதாகிறது என்கின்றனர்.

கடவுளின் இருப்பு

அறவுணர்வு உடையோரின் மனநிலை வளர்ச்சியில் கடவுள் உயர்ந்த இடத்தில் இருக்கிறார். கடவுள் மிகவும் புனிதத்தன்மை மிக்கவராகவும், முழுமை நிறைந்தவராகவும் அறியப்படுகிறார். கடவுள் மட்டுமே மனிதனின் அனைத்துச் செயல்களையும் உள்நோக்கங்களையும் அறிந்தவர் எனச் சமயங்கள் கருதுகின்றன. எனவே, அறத்தை நிலைநாட்டத் தனி மனிதர்களுக்குக் கடவுள் தேவைப்படுகிறார். அதேவேளையில், அறப்பண்புகளற்றுத் தீயவனாகச் செயல்பட்டால், கடவுள் தண்டிப்பார் என்ற அச்ச உணர்வும் கற்பிக்கப்படுகிறது.

அறவியலின் இன்றியமையாமை

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில், மனிதனை ஒரு 'சமூக விலங்கு' (Man is a social animal) என்றும், ஆனால் 'பகுத்தறிவுள்ள விலங்கு' (Rational animal) என்றும் வரையறை செய்துள்ளார். காமம், பசி, அச்சம் போன்ற உடல் சார்ந்த உணர்ச்சிகள் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை. இந்த உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டுமே மனிதன் செயலாற்றினால், அவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடுகளைக் காண இயலாது. பகுத்தறிவுள்ள ஒரே காரணத்தினால், மனிதன் விலங்கினின்றும் வேறுபட்டு உயர்நிலையில் வைக்கப்படுகிறான்.



அரிஸ்டாட்டில்

இப்பகுத்தறிவை அவன் எவ்வகையில் பயன்படுத்தவேண்டும் என்பதை, அறவியல் கோட்பாடுகளே அவனுக்கு உணர்த்துகின்றன. கடவுளைக் கற்பிக்கும் சைவம், வைணவம், யூதம், கிறித்துவம், இசுலாம், சீக்கியம் எனச் சமயங்கள் பலவற்றிலும் அறக்கோட்பாடுகள் உள்ளன. எனினும், கடவுளின்றியே நல்லொழுக்கம்வழி மனிதன் அமைதியும் நிறைவும் பெறலாம் என்பதைச் சிறப்பாகச் சமண பௌத்த சமயங்களே வலியுறுத்துவதை, அவற்றின் தனித்தன்மையாகக் குறிப்பிடலாம்.



பிளாட்டோ

அறவியல் கோட்பாடுகளுக்குப் பௌத்தமும் சமணமும் இன்றளவிலும் உலகம் ஏற்கக்கூடிய அன்பு, நேர்மை, தூய்மை, சமத்துவம், ஒழுக்கம், இரக்கம், உண்மை, எனப் பல்வேறு அறநெறிகளின் பிழிவை அளித்துள்ளன. இது சிறப்பாகக் கருதத்தக்கதாகும்.

தனிமனித வாழ்விலும் சமுக வாழ்விலும், ஒரு முக்கிய இடத்தை அறவியல் கோட்பாடுகள் வகிக்கின்றன. தனிமனிதனின் உயர்வுகூட அவன் ஏற்றுக்கொண்ட அறநெறிகளைப் பொறுத்தே அமைகிறது என்பதையும், செம்மையான அறநெறிகளே ஒரு சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நிலையான தன்மையைப் பேணக்கூடியவையாய் உள்ளன என்பதையும், அறநெறியினின்றும் வழுவிய சமுதாயங்கள் யாவுமே நலிவடைந்தன என்பதையும் மனித வரலாறு நமக்கு எடுத்துரைக்கின்றது.

- மக்களிடம் தவறாகப் பரவிவிட்ட சில அறமற்ற பழக்கவழக்கங்களை நீக்கவும், அல்லது அறத்தோடு அவற்றை இணைக்கும்வகையில் மாற்றியமைக்கவும் அறவியல் அறிவு துணைபுரிகின்றது.
- மாறிவரும் சமுதாயச் சூழல்களுக்கேற்ப, உலக ஒருமைப்பாடு மற்றும் மனிதநேயக் கொள்கைகளின் அறச்சிறப்பை எடுத்துக்கூறிப் பொதுமைநிலையில் நின்று மனிதர்கள் செயல்பட அறவியல் அறிவே உதவுகிறது.
- இன்று உலகின் பல பகுதிகளிலும் உள்ள பல்வேறு பிரிவு மக்களிடத்தும் காணப்பெறும் அமைதியின்மை மற்றும் அறமல்லாச் செயல்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தவும் அறவியல் அறிவே காரணமாகிறது.
- ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், 'இதுதான் பொருந்தும்' என்று விரைந்து முடிவு செய்யவும், முடிவு செய்ததைச் செயல்படுத்தவும் அறவியல் அறிவு வழிகாட்டுகிறது.
- மானுடர்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் அளிக்கும் அறத்தைவிட நன்மையானது என்று வேறு எதுவும் இருக்கமுடியாது என்கிறார் வள்ளுவர்.

அறச்செயல்களும், அறஞ்சாராச் செயல்களும் (Moral Actions and Non – Moral Actions).

அறச்செயல்கள் (Moral Actions)

மனிதன் பல செயல்களில் ஈடுபடுகிறான். சமுதாயத்தோடு இணைந்து வாழும் மனிதனின் செயல்கள் சரியான வையா, தவறானாவையா, நல்லவையா, கெட்டவையா, ஏற்புடையவையா, ஏற்பற்றனவா, சமுதாயத்தை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பாதிக்கும் இயல்புடையனவா என்றெல்லாம் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த ஆய்வுகளின் முடிவாகச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்காத செயல்கள் அனைத்தும் நற்செயல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றையே அறச்செயல்கள் என்கிறோம்.

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" (குறள்: 32)

என, ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை, அவ்வறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடத் தீமையானதும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

பகுத்தறிவின் அடிப்படையில் ஒருவன் விரும்பியேற்றுச் செய்யும் செயல், இடைவிடாப் பயிற்சியின் காரணமாகப் பழக்கமாகிறது. இந்த நற்பழக்கமே அறச்செயல் எனப்படுகிறது.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்" (குறள்: 33)

எனச் செல்லும் இடமெல்லாம் இயன்ற வகையில் அறச்செயலைச் செயல்படுத்தச் சொல்கிறார் வள்ளுவர்.

அறஞ்சாராச் செயல்கள் (Non – Moral Actions)

அறம் சார்ந்தவை மற்றும் அறம் சாராதவை எனச் செயல்களை வேறுபடுத்தும்போது, 'அறஞ்சாரா' என்ற சொல்லுக்கான பொருள் மிகவும் நுண்மையானதாகும். அறத்திற்கு எதிரான செயல் என, இதற்குப் பொருள்கொள்ளக்கூடாது. அறம் என்ற மதிப்பீட்டு வளையத்திற்குள் வராமல் அதற்கு வெளியில் நிற்கும் செயல்கள் எனப்பொருள் கூறவேண்டும்.

மதம்பிடித்த யானை, வண்டியைக் குடைசாய்க்கும் மாடு, மனநிலை பிறழ்ந்த மனிதன் போன்றோரின் செயல்களை 'அறஞ்சாராச் செயல்கள் என்ற வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.

அறத்தின் அடிப்படையில் அளவிட முடியாத செயல்களை, 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம். ஒரு குறிப்பிட்ட மனிதன், ஒரு குறிப்பிட்ட தருணத்தில் செய்யும் செயல்கள், அவனது அறிவினாலோ உணர்வினாலோ உந்தப்படாமல், என்ன நடக்கிறதோ இதை ஏன் செய்கிறோமோ என்று அவனே அறியாமல் அவனால் செய்யப்படும்போது, அத்தகைய தன்மறதிச் செயல்களுக்கு சரி, தவறு என்ற பழகிய முத்திரைகளைக் குத்தக்கூடாது. இத்தகைய முத்திரை குத்தப்படாத செயல்களே, அறஞ்சாராச் செயல்கள் எனப்படுகின்றன.

இடதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவுகிறவர்கள் அதிகமுள்ள ஒரு சமூகத்தில் ஒருவன் வலதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவினால் அவனது அச்செயல் கேலிக்குரியதாக இகழப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவிவரும் அற மதிப்பீடுகளின் அடிப்படையில், இது இவ்வாறு செய்யப்படுகிறது. ஆனால், வலதுபுறம் வகிடெடுத்துச் சீவியவன் எக்குற்றத்தையும் செய்துவிடவில்லை. பொதுப்பண்பாட்டிலிருந்து விலகியதாக அவன் செயல் உள்ளதாலேயே அவன் இகழப்படுகின்றான். அவ்வாறு அவனை இகழ்வது தவறாகும். அச்செயலை அவன் அனிச்சையாகவோ நனவிலி நிலையிலோ செய்திருக்கலாம்; அத்தகைய செயலுக்கு நன்மை அல்லது தீமை என்ற மதிப்பீட்டை நாம் கற்பிக்க முடியாது. இவ்வாறு நன்மை தீமை கற்பிக்க முடியாத அற வரையறைக்கு வெளியில் நிற்கும் செயல்களையே 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம்.

நம் வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர், உணவு மேசையில் அமர்ந்திருக்கும்போது, மேசை மீதுள்ள தண்ணீர்க்குவளையைக் கைதவறித் தட்டிவிட்டுவிடுகிறார். நம்மை அவமதிக்கும் செயலாக, இதைக் கருதக்கூடாது. அத்தகைய நோக்கம் நமது விருந்தினருக்கு இல்லாதபோது, அக்குற்றத்தை அவருக்கு நாம் கற்பிப்பது அறமாகாது. மதிப்பதும் அவமதிப்பதுமான இந்த இரண்டு எல்லைகளையும் தாண்டித் தன்னிச்சையாக அவர் கைப்பட்டுக் குவளை கீழே விழுந்தது என்பது, அறஞ்சாராச் செயலுக்குச் சிறந்த சான்றாகும்.

ஒரு மனிதன் செய்யும் செயலில் நன்மையோ, தீமையோ இல்லை. அதைச் செய்யத் தூண்டும் அவனது நோக்கத்தில்தான் அதைக் காணவேண்டும். இருவர் ஒரே செயலைச் செய்கின்றனர். ஒருவனுக்கு உள்நோக்கம் உள்ளது, இன்னொருவனுக்கு அத்தகைய நோக்கம் ஏதும் இல்லை. உள்நோக்கம் கொண்டவனின் செயல் அறம் அல்லது அறமின்மையாகலாம். எந்த நோக்கமும் அற்றவனின் அனிச்சைச் செயலில் அறமோ அறமின்மையோ இல்லை என்பதை அறியவேண்டும்.

பெருங்கருணையால் தூண்டப்பட்டுப் பிச்சையிடுகிற ஒருவனுக்கும், பிச்சையிடுகிறோம் என்பதே தெரியாமல் திருவோட்டில் காசுபோடும் குழந்தைக்கும் வேறுபாடுள்ளது. முதல் செயல் அறமாகும். குழந்தையின் செயலில் எவ்வித அறநோக்கமும் இல்லை என்பது வெளிப்படையாகும். ஒரு மனிதனின் பெருமிதத்தை வளர்ப்பதாகவோ, அல்லது அவனைக் கீழ்மைப்படுத்துவதாகவோ, அறஞ்சாராச் செயல்கள் அமைவதில்லை. நனவிலியின் தூண்டுதலுக்கு உட்பட்டு அவை செய்பவனின் நோக்கமின்றியே நிகழ்கின்றன.

நற்செயல் (Good Action)

ஒரு குழந்தை, தன் விரலை வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டிருக்கிறது. இது அறிவோடு இணைந்த செயலா? அல்லது விரும்பி ஏற்ற செயலா? என்ற கேள்விக்கு, ஆய்ந்து விடை காண முற்படுவது அறவியலின் கடமையாகும்.

குழந்தை தன் விரலை வாயில் வைத்துச் சுவைக்கும்போது, அது அறிவுக்கு உட்படாத செயலே. ஆனால், பின்னர் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தவறு என்று தெரிந்துவிட்டால், அச்செயலைக் குழந்தை தவிர்த்துவிடும். தவறெனக் கண்ட பிறகும் தவிர்க்க இயலாவிடில், அது தீய பழக்கமாகும். ஒரு குறிப்பிட்ட செயலைக் கூர்ந்து நாம் சிந்தித்திருந்தால், அதைத்

தவிர்த்திருக்க முடியும் என்ற கருத்து எழுமானால், அப்படித் தவிர்த்துவிடும் செயலே நற்செயலாகும்.

விரும்பி ஏற்ற செயல் (Voluntary Action)

பகுத்தறிவும் செயல்திறனுமுள்ள ஒருவன், தன் குறிக்கோளைச் சரியானது இது என ஆராய்ந்து, இன்னது இது என வரையறை செய்துகொண்டு, அதை அடைய விரும்பிச் சுதந்திரமாகச் செய்வது விரும்பி ஏற்ற செயலாகும்.

செயற்தூண்டலும் உள்நோக்கமும் (Motive and Intention)

உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நாம் ஒரு செயலைத் தொடங்கி முடிப்பதற்குக் காரணமாகப் பல காரணிகள் இயங்குகின்றன. அவற்றுள் செயற்தூண்டலும் உள்நோக்கமும் இரண்டு முதன்மைக்காரணிகள் ஆகும். இவை எத்தகைய இயல்புடையன? எவ்வாறு செயல்படுகின்றன? என்பதை விரிவாக அறியவேண்டும்.

செயற்தூண்டல் - விளக்கம்

எந்த ஆற்றல் நம்மைச் செயலை நோக்கிக் குறிப்பிட்ட வழியில் செல்லுமாறு தூண்டுகின்றதோ, அதுவே செயற்தூண்டலாகும் (Motive). ஒரு செயலைத் தோற்றுவிக்கவும் நிறைவுசெய்யவும் உரிய காரணமாகச் செயற்தூண்டல் அமைகிறது. செயல்களின் தன்மை, செயல்கள் நிகழும் இடம், காலம், செயலாற்றுவோரின் இயல்பு போன்றவற்றிற்குத் தக்கவாறு பல வகைகளில் செயற்தூண்டல் அமையும்.

இன்ப துன்பங்களே செயலின் உள்நோக்கங்கள் என்று கொண்டால், துன்பமே செயலைத் தொடங்கி வைப்பதாகவும் (நாட்டு நலனுக்காகத் தன் உயிரைப் போர்வீரன் தியாகம் செய்தல்), இன்பமே செயலை முடித்து வைப்பதாகவும் (பொருள் தேடி வெளிநாடு சென்றவர் தாய்நாட்டுக்குத் திரும்புதல்) கொள்ளலாம். இதற்கு எதிர்மாறாகத் துன்பமே முடிவாகவும் இன்பமே தொடக்கமாகவும் அமைவதும் உண்டு.

உள்நோக்கம் (Intention)

செயற்தூண்டலைவிட உள்நோக்கம் விரிந்த பொருளுடையது. அது ஒரு செயலைச் செய்பவரது உள்நோக்கத்தை அடைவதற்கான வழிவகைகளையும் குறிப்பதாகும். (எ.கா.) ஒரு மாணவன் நன்கு படிக்கிறான் என்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. நிறைய மதிப்பெண்கள் பெறவேண்டும், முதல்வகுப்பில் தேர்ச்சி பெறவேண்டும், பெற்றோரிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் நல்ல பெயர் எடுக்கவேண்டும், நல்ல வேலையில் சேரவேண்டும், நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும், நன்றாக வாழவேண்டும் போன்ற பல வகையான இலக்குகள் அவனது கடின உழைப்பிற்குக் காரணமாக அமைகின்றன. இவை யாவுமே அவனது செயலின் நோக்கங்களாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து, உள்நோக்கம் என்பதைக் குறிக்கோள் எனலாம். ஒரு செயலின் முடிவுக்கான காரணம் என்றும் கூறலாம். இது பல்வேறு கூறுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

செயற்தூண்டலைப் போன்றே உள்நோக்கமும் இடம், காலம், செயல் நிகழும் சூழ்நிலை, செயல் செய்பவரது மனநிலை போன்றவற்றிற்குத் தக்கவாறு அமைகிறது. இவற்றின் அடிப்படையில் உடனடி நோக்கம், நீண்டகால நோக்கம், குறிப்பான நோக்கம் எனப் பகுக்கலாம்.

1. உடனடி நோக்கம்

உடனடி நோக்கம் என்பது, ஒரு செயலின் மூலம் அடையக்கூடிய உடனடிக் குறிக்கோளாகும். கல்லூரியில் சேர ஒரு மாணவன் விண்ணப்பப் படிவம் வாங்குதல் என்ற செயலின் உடனடிக் குறிக்கோள், உடனே அவன் கல்லூரியில் சேர்ந்துவிடவேண்டும் என்பதாகும்.

2. நீண்டகால நோக்கம்

ஒரு மாணவன், நல்ல வளமான எதிர்காலத்தைத் தனக்கு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவது, நீண்ட காலப் பயன் தரும் ஒரு நோக்கமாகும்.

XI Ethics_Lesson 7 Folder.indd 135 21-02-2022 22:47:05

3. வெளிப்படையான நோக்கம்

பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம், குழந்தைகளின் உடல்நலனைப் பேணும் என்பது வெளிப்படையான நோக்கமாகும்.

4. குறிப்பான நோக்கம்

பள்ளிக் குழந்தைகளின் இடைநிற்றலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம் தவிர்க்கும் என்பது குறிப்பான நோக்கமாகும்.

அறப்பண்புகளின் வளர்ச்சி

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதன் தன்னைப் பண்பட்டவனாக மாற்றிக்கொள்வதை அறப்பண்பின் வளர்ச்சியாகக் கருதலாம். இத்தகைய தனிமனித அறவளர்ச்சி, அவனுடைய மனவளர்ச்சியைச் சார்ந்தே அமைகிறது. இத்தனிமனித அறவளர்ச்சியைப் பின்வரும் மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1. மரபொழுக்க நிலை,
2. இயல்பூக்க நிலை
3. மனச்சான்று நிலை

மரபொழுக்க நிலை (Customary Morality)

ஒரு செயல் அல்லது குறிப்பிட்ட சில செயல்களைத் தலைமுறைகள்தோறும் மனிதன் பின்பற்றிவரும் நிலையே, மரபொழுக்க நிலையாகும். அறவியல் கொள்கைகள், பெரும்பாலும் மரபொழுக்கநிலையின் விளைவாகவே தோன்றியுள்ளன. நெடுங்காலமாகச் சமூகத்தில் நிலைப்பட்டுள்ள முன்னோர்களின் அறச்செயல்களைக் 'குடும்ப மனிதன்' வாழையடி வாழையாகப் பின்பற்றி வருகிறான். அவனுக்கும் அவனது வழித்தோன்றல்களுக்கும் அச்செயல்கள் நன்மை அளித்ததே, இதற்குக் காரணமாகும்.

மரபொழுக்கநிலை: நிறைகளும் குறைகளும்

நிறைகள்

1. தனிமனிதன் தன்னை அறம் சார்ந்தவனாக மாற்றிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், தன்னைச் சார்ந்த அனைவரையும் அறம் சார்ந்தவனாக உயர்த்திவிடுகின்றான்.
2. சமுதாயத்துடன் இணைந்து செயல்படுதல், தொண்டு செய்தல் முதலான நற்பண்புகளை மனிதர்களிடம் மரபொழுக்கநிலை வளர்க்கின்றது.
3. மனிதர்களுக்கு இடையே பொதுவான மரபுகளே பின்பற்றப்படுவதால், அவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் களையப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.
4. தனிமனிதன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு செயல் சரியா? தவறா? என்று சிந்தித்துச் செயல்படாது, தன் குழுவின் மரபுகளை எளிமையாகக் கடைப்பிடிக்க, மரபொழுக்கநிலை உதவுகிறது.
5. மரபொழுக்கநிலையைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் வாயிலாக, மனிதர்கள் அனைவரும் ஒன்றுபடும் உயரிய சமூகம் உருவாக வாய்ப்புள்ளது.

குறைகள்

மரபொழுக்கநிலையில் பல நன்மைகள் இருப்பினும் சில குறைகளும் உள்ளன.

1. தனிமனிதச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மறுக்கப்படுகின்றன.
2. தொன்றுதொட்டுவரும் மூடப்பழக்க வழக்கங்களை இன்றும் பின்பற்றும் சூழல் உருவாகிறது.
3. சமுதாய நன்மைகளுக்காகத் தனிமனித உரிமைகள் துறக்கப்படுகின்றன.
4. மூத்தோரின் விழுமிய மரபுகளையே பின்பற்றும் சமுதாயத்தில், புதியதாகத் தோன்றும் சிந்தனைகள் தடை செய்யப்படுகின்றன.

இயல்பூக்க நிலை (Instinctive Morality)

புறத்தூண்டுதலின்றித் தன்னியல்பாக எழக்கூடிய உணர்ச்சி, 'இயல்பூக்க நிலை' எனப்படுகிறது. (எ.கா.) பசி, காமம், பயம், தாகம், இரக்கம். இத்தகைய உணர்ச்சிகளின் இயல்பூக்கநிலையில் பகுத்தறிவு செயல்படுவதில்லை. இயல்பூக்க உணர்ச்சிகள், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன. ஆனால், மனித உணர்ச்சிகளையும் விலங்குணர்ச்சிகளையும் பிரித்தறியத் தெரியவேண்டும். ஏனெனில்,

விலங்கினங்களின் இயல்பூக்கநிலை, தேவையை நிறைவு செய்வதாக மட்டுமே உள்ளது. மனிதனிடமோ தேவையின் நிறைவுக்குப் பின்னாலும், நன்மை மற்றும் தீமை பற்றிய போராட்டமாகத் தொடர்கிறது.

மனச்சான்று நிலை (Reflective Morality)

மனச்சான்று நிலை என்பது, 'தன்னுண்மையறிவு' எனப்படுகிறது. இது செயலின் விளைவைக் கருதி, அச்செயல் சரியானதா? தவறானதா? எனத் தீர்மானிக்கும் அறிவு நிலைப்பாட்டின் உயிராற்றலாகும். ஒவ்வொரு மனிதனும் செயல்களைச் செய்யும்பொழுது, தன்னுண்மை அறிவு சரியா? தவறா? என்றாராய்ந்து கூறிக்கொண்டேயுள்ளது. இதனையே மனச்சான்றுநிலை என்கிறோம். ஒரு மனிதன் தான் செய்த செயலுக்குப் பின்னர் மனம் வருந்துவது மனச்சான்றின் வெளிப்பாடேயாகும். சமயம், அரசு, சட்டம் முதலான நிறுவனங்கள், தனிமனிதன்மீது செலுத்தும் ஆதிக்கம் காரணமாக மன அமைதி குலைகிறது. மேலும் பஞ்சம், பசி, கொடிய நோயின் தாக்குதல்கள், சமயச் சச்சரவு, போர், சுரண்டல் ஆகியவற்றின் காரணமாகத் தனிமனிதன் பாதிக்கப்படும்போதும், மரபொழுக்கநிலை ஏற்புடையதாக இருப்பதில்லை. எனவே மனிதன், தன் மனச்சான்றின் அடிப்படையில் செயல்படுவது தவிர்க்க முடியாததாகும்.

நிறைகள்

1. மனச்சான்றின் வழிபட்ட தனிமனிதன் முடிவுகளை எடுக்கும்போது, மூடநம்பிக்கைகளிலிருந்து அவன் விடுபடுகிறான். அறத்தெளிவும் அவனுக்கு ஏற்படுகிறது.
2. மனச்சான்றைக் குற்றவாளியின் கருத்திலெடுத்து அவன் செய்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்படும்போது, சூழல்களைக் கருதித் தண்டனை குறைக்கப்படலாம் அல்லது குற்றவாளி விடுவிக்கப்படலாம்.
3. மனிதனிடத்தில் மனச்சான்று உள்ளபோது, அறச்சிந்தனைகள் உருவாகி அறவளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

குறைகள்

மனச்சான்றுக்கு உட்பட்டுத் தன் செயல்களைத் தீர்மானிக்கும்போது, சுய இரக்க உணர்வு மிகுதியால் (Self-Sympathy), தான் செய்தது தனக்குச் சரியே என்ற கண்மூடித்தனமான முடிவுக்கு மனிதன் வருவதற்கும் வாய்ப்புள்ளது.

மரபொழுக்கநிலை, இயல்பூக்கநிலை, மனச்சான்றுநிலை ஆகிய மூன்றும் பல்வேறு சூழல்களில், ஒன்றை ஒன்று சார்ந்தே செயல்பட்டு வருகின்றன. வேறு சில சூழல்களில் ஒன்றை மற்றொன்று விலக்கவும் செய்கின்றன. எனவே, இம்மூன்று நிலைகளிலும் முரண்பாடுகள், சார்புகள் ஆகியவை காணப்படுகின்றன.

ஒரே மனிதனிடத்தில்கூட இம்மூன்று அறவளர்ச்சி நிலைகளும், அவன் சூழலுக்குத் தகுந்தாற்போல் மாறிமாறிச் சுழல்வதைக் காணலாம். ஒரு மனிதன் கோபப்பட்டு அறிவிழக்கும்பொழுது, இயல்பூக்கநிலையில் அவன் செயல்படுகின்றான். தேர்தலில் அவன் வாக்களிக்கும்போது, மனச்சான்றின்படி அவன் செயல்படுகிறான். சமயநெறியின் அடிப்படையில் அவன், மரபொழுக்க நிலையிலும் செயல்படுகிறான். எனவே, அறப்பண்புகளின் வளர்ச்சி என்பதை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் வைத்துக் கருதாமல், மனநிலைகளில் ஏற்படும் மாற்றத்தின் வளர்ச்சி எனக்கொள்வதே பொருத்தமுடையதாகும்.

நிறைவுரை

தனிமனித வாழ்க்கை மட்டுமின்றிச் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது என்பதையும், அவரவருக்கு உரிய கடமைகளைச் சமூகவிதிகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டுச் செயல்படுத்துகிறார்களா என்பதையும் அறவியல் ஆராய்கிறது. பகுத்தறிவின் மூலம் மனிதன் தனக்கும் சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய செயல்களைச் செய்யவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீடு

CX8P0

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'Ethos' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
   அ) வழக்கம் ஆ) மரபு இ) இயல்பு ஈ) தன்மை

2. கீழ்க்காண்பனவற்றுள் 'உயர்நிலை' அறிவியல் பிரிவைச் சாராததனைத் தேர்ந்தெடுக்க.
   அ) அழகியல் ஆ) அளவையியல் இ) உளவியல் ஈ) அறவியல்

3. ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காண்பது என்பது, ---- அறிவியல்
   அ) உயர்நிலை ஆ) அழகியல் இ) நேர்நிலை ஈ) சமூகவியல்

4. கீழ்க்காண்பனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
   (1) சமூகவியல் என்பது, சமூகத்தைப் பற்றிய ஆய்வு
   (2) அறவியல் என்பது, மனித மனத்தைப் பற்றிய ஆய்வு
   (3) மானுடவியல் என்பது, மனித இனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வு
   (4) உளவியல் என்பது, மனித நடத்தையின் தரத்தைப் பற்றிய ஆய்வு
   அ) 1, 2 சரியானவை ஆ) 1, 3 சரியானவை
   இ) 1, 4 சரியானவை ஈ) 2, 4 சரியானவை

5. ஒரு செயலைத் திரும்ப திரும்பச் செய்யும்போது, அது -----.
   அ) வழக்கச் செயலாகிறது. ஆ) பழக்கச் செயலாகிறது.
   இ) அனிச்சைச் செயலாகிறது. ஈ) மரபுச் செயலாகிறது.

6. கீழ்க்காண்பனவற்றுள் தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.
   அ) நல்லொழுக்க நற்பண்பு என்பது, உயர்நிலை அறிவுடைமை என்று கூறியவர், சாக்ரடீஸ்.
   ஆ) நல்லொழுக்க நற்பண்பு என்பது, நல்ல பழக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல் என்று கூறியவர், அரிஸ்டாட்டில்.
   இ) நல்லொழுக்க நற்பண்பை ஆய்வு செய்தவர், பில்லிகிரகாம்.
   ஈ) பிறர் உரிமைகளில் தலையிடுவது சட்டப்படி குற்றம் என்று கூறியவர், இமானுவேல் கான்ட்.

7. தவறான கூற்றைச் சுட்டுக .
   அ) மரபொழுக்கநிலை என்பது, குறிப்பிட்ட சில செயல்களைத் தலைமுறைகள்தோறும் பின்பற்றுதல்.
   ஆ) இயல்பூக்கநிலை என்பது, புறத்தூண்டுதலின்றித் தன்னியல்பாக எழக்கூடிய உணர்ச்சி.
   இ) மனச்சான்று நிலை என்பது, தன்னுண்மை அறிவு.
   ஈ) பற்று உறுதி சுதந்திரம் என்பது, மனிதன் தன் விருப்பத்தைக் கட்டுப்பாட்டுடன் இயக்குதல்.

8. மரபொழுக்கநிலைக்குப் பொருத்தமில்லாத கூற்றைச் சுட்டுக.
   அ) தனிமனிதச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் ஏற்கப்படுகின்றன.
   ஆ) தனிமனிதன், தன்னைச் சார்ந்தவரையும் அறம் சார்ந்தவராக உருவாக்குகிறார்.

இ) பொதுவான மரபுகள் பின்பற்றப்படுவதால், மனிதர்களிடையே உள்ள வேறுபாடுகள் களையப்படுகின்றன.

ஈ) மனிதர் அனைவரும் ஒன்றுபடும்போது, உயரிய சமூகம் உருவாகிறது.

9. அறவியலை அடிப்படையாகக் கொண்டதே தத்துவவியல் என்று கருதியவர் ----
   அ) ஹெகல் ஆ) வில்லியம் ஜேம்ஸ் இ) கிரீன் ஈ) ராஸ்டல்

10. ஒரு சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குறியீடாக அமைவது ----------.
   அ) குடும்பம் ஆ) கல்லூரி இ) பள்ளி ஈ) பல்கலைக்கழகம்

குறுவினா

1. அறவியல் – வரையறு.
2. மானுட அறம் பற்றி ஔவையார் யாது கூறுகிறார் ?
3. மனித வாழ்வின் உறுதிப் பொருள்களாகக் குறிப்பிடப்படுவன யாவை ?
4. நடத்தை என்றால் என்ன ?
5. அரிஸ்டாட்டில் அறவியலை எவ்வாறு வரையறை செய்கிறார் ?
6. உயர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டாக எவற்றைக் கூறலாம் ?
7. நேர்நிலை அறிவியல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
8. அறச்செயல்கள் – வரையறு.

சிறுவினா

1. குடும்பம் – வரையறு.
2. தனிமனித அறவளர்ச்சியில், மரபொழுக்கநிலையின் பங்கு யாது?
3. திருக்குறள் குறிப்பிடும் குடிமைப்பண்புகளைப் பட்டியலிடுக.
4. ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யும்போது, அது பழக்கமாக மாறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு தருக.
5. அறவியலுக்கும் மானுடவியலுக்கும் உள்ள தொடர்பை விளக்குக.
6. தத்துவவியலார் குறிப்பிடும் ஒழுக்கத்தின் மூவகை அடிப்படை விதிகள் யாவை?
7. கடவுளையும் மனிதனையும் குறித்த கருத்துகளின் அடிப்படையில், உருவான மூவகைக் கொள்கைகள் யாவை ?
8. அறஞ்சாராச் செயல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

நெடுவினா

1. 'அறவியலும் ஓர் உயர்நிலை அறிவியலே' - இக்கூற்றை நிறுவுக.
2. சமூக அறப்பயிற்சி மையமெனக் கல்வி நிறுவனத்தை ஏன் கூறுகின்றோம்? அந்நிறுவனத்தினால் விளையும் பயன்களைப் பட்டியலிடுக.
3. குடிமைப்பண்பைப் பெறத் தகுதியுடையவர்கள் யார்? அவர்களுக்குரிய சிறந்த குடிமைப்பண்புகளைக் குறிப்பிடுக.
4. மனிதனின் சுதந்தர மனநிலைக்கும் தீர்மானக் கொள்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்து எழுதுக.
5. ஒரு செயலைச் செய்துமுடிப்பதில், 'உள்நோக்கம்' (INTENTION) எவ்வாறு உதவுகிறது? அதன் நால்வகைப் பகுப்புகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
6. தனிமனித அறவளர்ச்சி நிலையில் மனச்சான்று பெறுமிடம் யாது? அதன் நிறை குறைகளை விவரிக்க.

அலகு
8

அறநெறி வாழ்வு

கற்றல் நோக்கங்கள்

- அறநெறி வாழ்வு பற்றி அறியச் செய்தல்.
- மாணவர்கள் நல்லொழுக்கத்தின் முக்கியத்துவத்தை அறியச் செய்தல்.
- சமுதாயத்தில் தனிமனிதரின் பங்களிப்பினைப் புரிந்துகொள்ளுதல்.
- மாணவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்துகொள்ளுதல்.
- அறநெறி வாழ்வின் மையமாகக் குடும்பம் திகழ்வதைத் தெரிந்துகொள்ளுதல்.

நுழைவு வாயில்

தொடக்கக்காலத்தில் மனிதன் தனித்து வாழ்ந்து வந்தான். அப்பொழுது அவனுக்குக் கடமைகளும் உரிமைகளும் இல்லை. உரிமைகளும் கடமைகளும் இல்லாதபோது, நற்பண்புகள் என்று போற்றப்படும் வாழ்வியல் அறங்களும் அங்கில்லை. தனியாக வாழ்ந்த மனிதன் சமுதாயமாக வாழத் தொடங்கிய நாள்முதல், பொதுவாழ்வில் பின்பற்றவேண்டிய வாழ்வியல் அறங்கள் பல தோன்றின. பலபேர் இணைந்து வாழும்போது, அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வைக்கும் அறவியல் விதிகளுக்கு இணங்க வேண்டிய கடமை மனிதனுக்கு உண்டாகிறது.

மனிதனிடமுள்ள பண்புகள் அனைத்தும், அவனது செயல்கள் மூலமே வெளிப்படுகின்றன. சமூகம் வகுத்துள்ள அறநெறிக்கோட்பாடுகளை மனிதன் பின்பற்றும்போது, சிறந்த அறநெறியாளனாக அவன் கருதப்படுவான். இத்தகைய தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்புடைய அறக்கருத்துகளைப் பல நூல்களும் வலியுறுத்தியுள்ளன. மனிதன் என்பவன் தானும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்பவனாக உருவாவதற்கு அறநெறிக் கருத்துகள் எவ்வாறு துணை செய்கின்றன என, இனிக் காண்போம்.

தனிமனிதனும் சமுதாயமும்

தனிமனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் ஆவான். தனிமனிதன் இல்லை என்றால் சமுதாயமும் இல்லை. பல மரங்கள் ஒன்று சேர்ந்திருப்பதைத் 'தோப்பு' என்கிறோம். அதைப்போல், தனிமனிதர்கள் பலர் ஒன்று கூடி வாழ்வதைச் 'சமுதாயம்' என்கிறோம்.

தனிமனிதனுக்கு இருக்க வேண்டிய சமுதாயப் பண்புகளாக காந்தியடிகள் கூறுவன

- சமுதாயம் ஒரு குடும்பம் போன்றது; சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் குடும்ப உறுப்பினர்களே.
- தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது.
- ஒவ்வொரு மனிதனும், ஒரு உலகளாவியச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட வேண்டும்.
- ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வாழக் கற்கவேண்டும்.
- ஒவ்வொரு தனிமனிதனும் பிறருக்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழவேண்டும்.
- ஒவ்வொரு மனிதனும் சிறந்த அறநெறிகளையும் பண்பாட்டையும் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

- அண்டை வீடுகளில் வாழ்பவர்களின் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் பங்கு கொள்ள வேண்டும்.
- பிறருடைய சிக்கல்களைப் புரிந்துகொண்டு, அவற்றிற்குத் தீர்வு காண உதவவேண்டும்.
- பிறர் முன்னேற்றம் கண்டு பொறாமை கொள்ளக்கூடாது.
- எப்பொழுதும் மனிதநேயத்துடன் செயல்பட்டுச் சமுதாய உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சமுதாயமும் அறவாழ்வும்

தனிமனிதனின் அறக்கொள்கைகள் அவன் வாழும் சமுதாயத்திலுள்ள பிறருடன் அவன் தொடர்பு கொள்ளும்போதுதான் முழு வளர்ச்சியைப் பெறுகின்றன; தனிமனிதனைப் பண்புடையவனாகவும் மாற்றுகின்றன. சமுதாயம், மனிதத்தன்மையுடையவனாக வாழும் முறைகளைக் கற்றுத் தருகிறது. சமுதாய வாழ்வுதான் மிகச்சிறந்த அறவாழ்வாழ்வுக்குப் பயிற்சிக் களமாகிறது.

சமுதாயத்தில் வாழும் மக்கள், தமக்கென ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளையும் அறக்கோட்பாடுகளையும் வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு தனிமனிதனின் நலத்திலும் கவனம் செலுத்துகின்றனர். சமுதாயத்திலிருந்து விலகித் தனித்து வாழ்பவர்கள், அத்தகைய நன்மைகளை அடைய முடியாது. எனவே, சமுதாயம் என்பது அதில் வாழும் தனிமனிதனுக்குச் சமூகநலன் தரும் (Social Welfare) அமைப்பாக விளங்குகிறது.

சமுதாய நலன்

மனிதனிடத்தில் பல்வேறு பண்புகள் உள்ளன. அவற்றில் பண்படாத விலங்குப் பண்புகளும் மேலோங்கி நிற்கின்றன. இச்சமூகத்தில், மக்களிடையே சேர்ந்து வாழும்போது தன்னலமற்றவர்கள்கூடத் தன்னலவாதிகளாக மாறிவிடுகின்றனர். இது மாறவேண்டும்.

பாவம், பொறாமை, ஆசை, பேராசை, சுயநலம், ஆதிக்கம் செலுத்துதல், தற்பெருமை, பழிக்குப்பழி, கோபம், சோம்பல், வெட்கம், வெறுப்பு போன்ற பின்பற்றத்தகாத குணங்களும் சமூக வாழ்வில் பரவிக்கிடக்கின்றன. தனிமனிதனின் நலத்திற்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இவை கேடு விளைவிக்கின்றன.

சமுதாய அறப்பயிற்சி நிறுவனங்களாக விளங்குவன கல்வி நிறுவனம், சமுதாய நிறுவனம், தொழில் நிறுவனம், மத நிறுவனம், குடிமைப்பயிற்சி நிறுவனம் போன்றவை. இந்த அமைப்புகளின் மூலம் தனிமனிதன் அனைத்து நலன்களையும் பெறமுடியும்.

தனிமனிதனும் நாடும்

இப்புவியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும், ஒவ்வொரு தனிமனிதனின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுக்கும் பேரமைப்பாக, நாடு திகழ்கிறது.

மேலைநாட்டு அறிஞரான பிலன்ட்சிலி என்பவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைக் கொண்ட மக்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பையே நாடு என்கிறார்.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழும் மக்கள் தமக்குள் உரிய சட்ட விதிகளை வகுத்துக்கொண்டு ஆள்வதே நாடு' என்று உட்ரோ வில்சன் கூறுகிறார்.

உட்ரோ வில்சன்

தனிமனிதன், சமுதாயம், நாடு இம்மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. மக்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்நிலையை அறிந்து, சமூக வாழ்வில் பங்கேற்பவர்களாகத் திகழவேண்டும். சமுதாயத்தில் குடும்பம், பள்ளி,

XI Ethics_Lesson 8 Folder.indd 141 21-02-2022 22:28:14

அலுவலகம், மத நிறுவனங்கள் எனப் பல்வேறு அமைப்புகள் செயல்படுகின்றன. இந்த அமைப்புகள் எல்லாம் நாட்டின் நலனுக்கு வழிகாட்டுபவையாக விளங்குவதால், இந்த அமைப்புகள் யாவற்றிற்கும் பேரமைப்பாகச் சனநாயக அரசைக் கொள்வர்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நலன் தரும் காரணத்தால், ஒரு நாட்டை 'நன்னாடு' என்று அழைக்கிறோம். அந்நாட்டின் நலன் மற்றும் வளர்ச்சி என்பது, அனைத்து மக்களின் நலன்களையும் உள்ளடக்கியதாகும். 'நாடு நம்மை வாழ வைக்க வேண்டும்; நாமும் நாட்டின் நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டும்'. நம் வாழ்வின் கடமைகளை நிறைவேற்ற நாடு நமக்குத் துணைபுரியவேண்டும்;

ஒரு நாட்டின் செல்வம், அந்நாட்டில் பிறந்த அனைவருக்கும் பொதுவானது. அதைச் சிலர் மட்டும் பயன்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

மூன்று நலக்கொள்கைகள்

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, அறக்கொள்கைகளை மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

- தன்னலக் கொள்கை
- பிறர்நலக் கொள்கை
- பொதுநலக் கொள்கை (அ) உலகக் கொள்கை

தன்னலக் கொள்கை

தன்னலக் கொள்கை என்பதும் ஒருவகை அறவியற்கொள்கை எனக் கொள்ளப்படுகிறது. எந்த ஒரு மனிதனும் தன் நலத்தைத் துறந்து பிறர் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுதல் கடினமாகும்.

மனிதன் பிறப்பிலேயே தன்னலவாதியாக இருக்கிறான்; மற்றவர் நலத்தைக் காப்பதில்கூடத் தன்னலத்தையே கருதுகிறான் என்பதும் தன்னலக்கொள்கையாகும். இதன்படி மனிதன் தன் மேன்மையை மட்டுமே கருதுகிறான்; அவன் பிறர் நலத்தைக் கருதுவதில்லை. தன்னை முழுமையாக அழித்துக்கொண்டு பிறர் நலம் பேணுவது, இயற்கைப் பொருள்களுக்குப் பொருந்தும். ஆனால் அது, மனித இனத்துக்குப் பொருந்தாது. ஒரு தானியம் தன்னை அழித்துக்கொண்டு, பல தானிய மணிகளை விளைவிக்கிறது. ஆனால் மனிதன், இழந்த உயிரை மீண்டும் பெறமுடியாது. இது தன்னலக்கொள்கையினர் கருத்தாகும்.

புத்தர், ஏசு, காந்தி போன்ற பல பேரறிஞர்கள் தன்னலவாதிகளாக விளங்கி இருந்தால், இன்று காணும் நல்லதொரு உலகச் சமுதாயத்தை உருவாக்கியிருக்க முடியுமா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உளவியற்கருத்துப்படி, தன்னலம் தனிமனிதனின் இயற்கையறமாக விளங்குவது போலவே, பிறர்நலம் பேணுதலும் தனிமனிதனின் இயற்கையறமாக விளங்குகிறது எனலாம். இந்த அடிப்படையில் நோக்கினால், தனிமனிதன் இயற்கையாகவே தன்னலம் பேணியும், பிறர்நலம் காத்தும் வாழும் இருமைக் குணமுடையவன் எனலாம். எனவே, தன்னலத்துடன் பிறர் நலமும் கருதுவதே செய்யத்தக்கதாகும் எனலாம்.

பிறர் நலக்கொள்கை

தனிமனிதன் தன்நலத்தைக் கருதாது பிறர்நலத்தையே தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதைப் பிறர்நலக்கொள்கை வலியுறுத்துகிறது. பிறர் நலக்கொள்கை தன்னையே தியாகம் செய்ய வழிவகுப்பதாகும். மற்ற தனிமனிதர்களின் நலனையே காக்கவேண்டும் என்பதும், அவ்வாறு செய்யும்போது மறந்தும்கூடத் தன்நலன் பற்றி எண்ணாமலிருப்பதும் பிறர்நலக் கொள்கையரின் கருத்தாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

தியாகம் என்பது பிறருக்காகத் தன் உரிமையை விட்டுக்கொடுத்து, பிறர்நலம் நல்குவதே ஆகும்.

XI Ethics_Lesson 8 Folder.indd 142 21-02-2022 22:54:43

பிறருக்குத் தொண்டு செய்யும் ஆர்வத்தில் தன் உடல்நலம் பேணாமலும், தான் செய்ய நினைத்த அளவுக்குப் பொதுநலத்தைப் பேண முடியாமலும் ஒருவனது உடல்நலம் கெட்டுத் தனக்கே பிறர் தொண்டு செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகிவிடலாம் அல்லது தன் உயிரையே தியாகம் செய்துவிடலாம். (எ.கா.) ஒரு தீவில் உள்ள மக்கள் ‘பிளேக்’ நோயால் பாதிக்கப்பட்டபோது, கருணை உள்ளம் கொண்ட மருத்துவர் ஒருவர், அங்குச் சென்று, மக்களைக் காப்பாற்றுகிறார். அவர் மக்களுடன் இணைந்து செயல்பட்டதால், தாமும் அந்நோய்க்குப் பலியாகி தம் உயிரைத் தியாகம் செய்துவிடுகிறார்.

பிறர்நலக் கொள்கை தியாகத்தின் பெருமையைத் தெரிவிக்கிறது. பிறர்நலக் கொள்கை உடையவரின் தியாகம் என்பது, அறவாழ்வு கூறும் பல வழிகளில் ஒன்றேயன்றி, அதுவேதான் ஒரே வழி என்பதில்லை. இக்கருத்தைப் பிறர்நலக் கொள்கையினர் உணர்வதில்லை.

பொதுநலக் கொள்கை அல்லது உலகக் கொள்கை

ஒவ்வொரு தனிமனிதனும் தன் சமுதாயத்தின் நலனையே கடமையாகக் கொள்ளவேண்டும்; சமுதாயம் வளர்ந்தால் தனிமனிதர்களும் உயர்வர் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அவன் இயங்கவேண்டும். பிறருக்குத் துன்பம் தரக்கூடாது; அனைவரும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழ வழியேற்படுத்தவேண்டும்; வெறுப்புணர்வையும் பகைமையையும் விட்டொழிக்கவேண்டும்; இன்னாமையிலும் இனிமையைக் கண்டு நல்வினையாற்றவேண்டும். இவ்வாறு செயல்படும் பொதுநன்மை பேணும் பெருமனம், பொதுநலக் கொள்கையின் சிறப்பியல்பைப் புலப்படுத்துவதாகும்.

சமுதாயநலக் கொள்கை, ஆழ்ந்த அற உணர்வின் அடிப்படையில் விரிவடையும் தன்மையைப் பெற்றுள்ளது. தான் வாழும் சமுதாயத்தின் நலன், தன் நாட்டின் நலன், அனைத்துலக நலன் மற்றும் உலகில் உள்ள எல்லா உயிரினங்களின் நலன் எனப் பொதுநலக் கொள்கை விரிந்துகொண்டே போகும். அறவழியில் எத்தகைய குறுகிய வரையறையையும் இக்கொள்கையினர் விரும்புவதில்லை.

யானைக்கு மட்டுமானதில்லை இவ்வுலகம்; அது எறும்புக்கும்கூட உரியதாகும். இதைப் புரிந்துகொண்டவரே பொதுநலக் கொள்கையினராகத் திகழமுடியும். தமக்காக உழைப்பதில் சான்றோருக்கு மகிழ்ச்சியில்லை. மொழி, இனம், நாடு, உலகம், எனப் பொதுநலன் கருதிப் பாடுபடுவதில்தான் பெரியோருக்குப் பெருமையுள்ளது. ‘கடன் என்ப நல்லவையெல்லாம் சான்றோருக்கு’ எனச் சான்றோர் கடமையாக நற்செயல்களைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவை உண்டு, தானுண்டு என்போன் உள்ளம் சின்னதோர் கடுகுள்ளம் என்கிறார் பாவேந்தர். அனைவருக்கும் பயன்படும் தென்னையுள்ளமே நல்லுள்ளம் என்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா?

மார்க்சிய அறம்

மனிதகுலத்தின் எழுச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் வித்தாகத் தோன்றியவர் கார்ல் மார்க்ஸ். அவர் தந்த பொதுவுடைமைக் கோட்பாட்டின் வழி புதிய அறவியல் எண்ணங்கள் தோற்றம் பெற்றன. அவர் கூறும் அறவியலுக்கு அடிப்படையானவை – வாழ்வியலுக்கு பொருள் முதல் அடித்தளமானது : பொருளியல் சமநிலை பேணப்படுவது: சுரண்டலற்ற, ஆதிக்கமற்ற, வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்குவது: கூடிவாழும் தோழமை உணர்வை வளர்ப்பது: ஆண் பெண் இருபாலரையும் ஒப்ப மதிப்பது : ஒவ்வொருவரும் அனைவருக்காக; அனைவரும் ஒவ்வொருவருக்காக என்னும் உயரியக் கோட்பாட்டை அடைவது போன்றவையாகும்.

பொதுநலக் கொள்கை என்பது முழுச்சமூகத்திற்கும் நன்மை செய்யும் ஒரு மனிதநேயக் கொள்கையாகும். ஒரு மனிதன்

www.tnschoolbooks.in

உலகில் பசியால் வாடினாலும், அது பொறுக்காமல், இந்த உலகை இயற்றியவனை நோக்கி, 'பரந்து கெடுக' எனச் சீறுகிறார் வள்ளுவர். 'தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்கிறார் பாரதியார். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்; நமக்காக ஒரு பொன்னுலகம் காத்திருக்கிறது என்கிறார் கார்ல் மார்க்ஸ். கல்கத்தா நகரத்து வீதிகளில் சுருண்டு கிடந்த தொழுநோயாளிகளையும் தொட்டுக் கனிவுடன் மருந்திட்டுக் காத்தார் அன்னை தெரசா. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார்.

பாரதியார்


கார்ல் மார்க்ஸ்

அன்னை தெரசா

இவர்கள் யாரும் தமக்காக வாழவில்லை; பொதுச்சமூக நன்மை கருதியே தம் வாழ்வை ஒப்பளித்தனர். உலகம் அனைத்தும் ஒன்று என்றும், உயிர்கள் எல்லாம் நன்று என்றும் இவர்கள் கருதினர். இந்த உலக நோக்கே பொதுநலக் கொள்கையின் சாரமாகும்.

உங்களுக்குத் தெரியுமா?


லியோ டால்ஸ்டாய்

"எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களும் ஒத்த விதத்தில் மகிழ்ச்சியாக இருக்கின்றன; ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் தனக்கே உரிய விதத்தில் மகிழ்ச்சியற்று இருக்கிறது" - லியோ டால்ஸ்டாய்

குடும்ப வாழ்வும் அறநெறியும்

மனித உயிர்களிடம் இயல்பாக அமைந்த 'அன்பு' என்ற உயர்ந்த குறிக்கோளின் அடிப்படையில் அமைவதே குடும்பமாகும். சமுதாயத்தின், முதல்நிலைக் குழுவாக அமைவதும் குடும்பமேயாகும். 'பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம்' என்பது, அரிஸ்டாட்டிலின் கருத்து. பழங்காலம் முதல் இன்றுவரையில் சமுதாயத்தின் முதன்மைப் பயிற்சி நிறுவனமாக விளங்குவது குடும்பமாகும். குடும்ப அமைப்பு, பன்மைகளுக்கு நடுவே ஒருமையையும், வேறுபாடுகளுக்கு இடையே ஒற்றுமையையும் ஏற்படுத்துகிறது. அறம் சார்ந்த உலகப்பண்பை விளக்கும் சமுதாய நிறுவனமாகவும் குடும்பம் திகழ்கிறது. 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்', 'குடும்பம் ஒரு கோயில்' என்ற முதுமொழிகள் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன.

மனித வரலாற்றில் குடும்பமே முதல் சமுதாய நிறுவனமாகும். தொடக்கத்தில் மனிதர்களால் தனித்து வாழ இயலவில்லை; சிறுசிறு கூட்டங்களாகச் சேர்ந்தே வாழ்ந்தனர். குடும்பத்துடன் இணைந்துவாழ்ந்தால் எல்லா நலன்களையும் வளங்களையும் அடையமுடியும் என்பது தம்மனுபவம் வழி அவர்கள் உணர்ந்த உண்மையாகும். எனவே, குடும்பம் என்பது அடிப்படையானதும் உலகளாவியதுமான நிறுவனம் என்றும், ஒவ்வொரு சமுதாயமும் அதைச் சார்ந்தே அமைகிறது என்றும் முடிவுரைக்கலாம்.

குடும்பத்தின் செயற்பாடுகள்

உடல்தேவை, அறிவுத்தேவை, ஆன்மீகத் தேவை என்ற மூன்றையும், 'குடும்ப அமைப்பு' மூலமே நிறைவு செய்துகொள்ள முடியும். குறிப்பாக குழந்தைக்கும் முதியோர்க்கும் பாதுகாப்பானதாகக் குடும்பத்தைக் குறிப்பிடலாம். இக்குடும்பம் உடைந்தால் சமூகம் உடைந்துவிடும். சமூகத்தில் வாழும் அனைத்து மனிதர்களுக்குமான பல குடும்பங்கள் சேர்ந்ததே ஒரு சமூகமாகும். இந்தச் சமூகத்தின் நன்மைக்கும் குடும்பம் இன்றியமையாததாகும். அன்பின் அடிப்படையில் குழந்தைகளின் உடல், உள்ளம் மற்றும் அறிவுத் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமே குடும்பம் என்றும் கொண்டாடலாம்.

XI Ethics_Lesson 8 Folder.indd 144 21-02-2022 22:28:14

'நடுநிற்றல்' என்ற பேரறப் பயிற்சியை அளிப்பது குடும்பமே. அறக்கொள்கைகளைப் போற்றல், நல்லொழுக்க நற்பண்புகளைப் பேணல் ஆக்கச் செயல்திறன்களை வளர்த்தல், ஒன்றுபட்டு வாழும் ஒற்றுமையுணர்வைக் கற்பித்தல், அன்பையும் அமைதியையும் வலியுறுத்தல் ஆகிய ஐந்தையும் அனுபவம் மிக்க பெரியோர் அடங்கிய குடும்பத்தின் வழி அறிந்து கொள்கிறோம். இத்தகைய மேன்மைகளைப் பெற்றுள்ள குடும்பத்தின் செயற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ❖ சமூக விதிகளை மதித்து நடப்பதற்குப் பழக்கப்படுத்துதல்.
- ❖ தோல்வியையும் ஏமாற்றத்தையும் எதிர் கொள்வதற்குரிய மனத்துணிவை வளர்த்தல்.
- ❖ தனிமையிலும் வெறுமையிலும் துன்புறாமல், அன்பிலும் அருளிலும் மனிதர்களை நெகிழச்செய்து உயிர் வாழ்தலின் மகிழ்ச்சியை மிகுவித்தல்.
- ❖ எச்சூழலிலும் தமக்குரியவர்களை கைவிட்டு விடாமல், அவர்களுக்கு உரிய நம்பிக்கையளித்தல்.
- ❖ குழந்தைகள், நோயாளிகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், மனச்சிதைவுற்றோர், நலிந்தோர், பெண்கள் எனப் பலரையும் பேணிக்காத்தல்.
- ❖ உறவுகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, ஒருவருக்காக ஒருவர் இருப்பதை உறுதி செய்து உடன் வாழ்வோரைப் பொருட்படுத்திச் சிறப்பான முறையில் ஆறுதலளித்தல்.
- ❖ வெளியுலகின் வெறுப்புணர்விலிருந்து பாதுகாத்துப் பண்பார்ந்த வாழ்வு எது என்பதைச் சுட்டிக்காட்டித் தக்கவாறு நெறிப்படுத்துதல்.

பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான உரிமைகளும் கடமைகளும்

ஒருவன், தாய் தந்தையோடும் பிள்ளைகளோடும் சேர்ந்து குடும்பமாக வாழ்கின்றான். அவன் தன் தாய் தந்தையருக்கும், தனக்குமுள்ள உறவுநிலையில் உரிமைகளும் கடமைகளும் பெற்றுள்ளான். தன் தாய் தந்தையரின் அறக்கொள்கைகளைத் தன் அனுபவத்தால் அவன் பகுத்தறிகிறான். அதேவேளை, தான் தந்தையாக நின்று, தன் பிள்ளைகளின் செயல்களையும் மதிப்பீடு செய்கிறான். இக்குடும்ப வாழ்வைவிட இனிமையானது என்று இவ்வுலகில் வேறு எதுவுமில்லை. இத்தகைய இனிய குடும்பத்தின் உயர்பண்பைப் பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலால் அறியலாம்.

"அமர்ந்த உள்ளம் பெரிதாகின்றே
அகன் பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன்னகை பயிற்றிச்
சிறுதேர் உருட்டும் தளிர்நடை கண்ட"

(ஐங்குறுநூறு : 403)

தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடுகிறான் குழந்தை. அதைக் கண்டு தாயும் தந்தையும் அன்பின் மிகுதியால் மகிழ்ந்து புன்முறுவல் செய்கின்றனர். இவ்வளவு இனியது குடும்ப வாழ்வு என்கிறது ஐங்குறுநூறு. தன் மகனுக்குத் தந்தை ஆற்றவேண்டிய கடமை என்ன என்பதைப் பின்வரும் குறளால் அறியலாம்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (குறள் எண்: 67)

சான்றோர் பலர் கூடியுள்ள அவையில், தன் மகனைத் தலைமைச் சிறப்புக்குரியவனாக உருவாக்குவது தந்தையின் சமூகக் கடமை என்கிறார் திருவள்ளுவர். மேலும் அவர்,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல் (குறள்: 70)

என்றும் கூறுகிறார். இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ? எனப் பிறர் மகிழ்ந்து பாராட்டும் அளவிற்குச் சிறப்படைவதே மகன் தந்தைக்குச் செய்யும் நன்றிக்கடன் என்கிறார்.

XI Ethics_Lesson 8 Folder.indd 145 21-02-2022 22:55:09

www.tnschoolbooks.in

குடும்பத்தின் சிறப்புகள்

- திருமணம்
- மக்கட்பேறு
- நட்பு

என்ற மூன்று வாழ்வியல் சிறப்புகளைக் குடும்பம் கொண்டுள்ளது.

திருமணம்

ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு படைத்த உயிரினங்கள்வரை, திருமணம் என்ற ஓர் ஒப்பந்தம் இல்லை. ஆனால், ஆறறிவு படைத்த மனித இனத்தில் ஆண், பெண் இருவரும் இணைந்து வாழ்வதற்குச் சமூகத்தின் ஒப்புதல் பெறத் திருமணம் தேவைப்படுகிறது.

உடலாலும் உள்ளத்தாலும் இயற்கையாகப் பெண்ணும் ஆணும் இணைவதைத் திருமணம் எனச் சமூகம் அங்கீகரிக்கிறது. பழங்காலம் முதல் இன்றுவரை திருமண வாழ்க்கை ஒரு புனிதமான அறநெறி வாழ்க்கையாகக் கருதப்பட்டு வருகிறது. திருமணம் இன்றி ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையைச் சமூகத்தினர் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அது ஒரு சிறந்த அறநெறி வாழ்வாகக் கருதப்படுவதில்லை. எனவேதான் வள்ளுவரும்,

அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று (குறள்: 49)

எனப் பிறரால் பழிக்கப்படாமல் அறவழியில் நடத்தப்படும் இல்லறமே நல்லறம் என்கிறார். மேலும் அவர்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள்: 45)

என்றும் கூறுகிறார். குடும்ப வாழ்வில் அன்பும் அறனும் நிறைந்திருக்குமானால், அந்த அழகிய வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும் என்கிறார் வள்ளுவர். எனவே, அன்பின் அடிப்படையில் வாழ்வாங்கு வாழ்ந்து, மானுட வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நடுவுநிலையோடு ஆய்ந்து சிறப்படையச் செய்வதே குடும்ப வாழ்வின் அடிப்படை எனலாம்.

மழலைச் செல்வம்


கலில் ஜிப்ரான்

ஒவ்வொரு குடும்பமும் தங்களின் எதிர்காலத் தலைமுறையினரைச் சிறப்பான முறையில் உருவாக்க வேண்டும் என்று நினைப்பது இயல்பாகும். குடும்பத்தின் முதன்மையான சிறப்புகளுள் ஒன்றாக 'மழலைச் செல்வம்' கருதப்படுகிறது. குழந்தைகளுக்குச் சிறந்த சூழலை உருவாக்கித் தன்னலம் கருதாது குழந்தையின் நலனைப் போற்றுவது பெற்றோர் கடமையாகும். பிறக்கின்ற குழந்தையின்மீது தாய் தந்தையருக்கான உரிமை எந்த அளவில் இருக்கவேண்டும் என்பதும் அறத்திற்குட்பட்டதே ஆகும். 'குழந்தைகளை அடிக்கவும் உதைக்கவும் தங்களுக்குச் சிறப்புரிமை இருப்பதாகப் பெற்றோர் கருதக்கூடாது. உங்கள் குழந்தைகள் உங்களிடமிருந்து தோன்றியிருக்கலாம்; ஆனால் அவர்கள் உங்கள் உடைமைகள் அல்லர்' என்கிறார் கலில் ஜிப்ரான்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது (குறள்: 68)

என்கிறார் வள்ளுவர். தம்மைவிடத் தம் குழந்தைகள் அறிவுடையோராக அமைந்தால், அதுவே உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இன்பம் தரும் என்கிறார் வள்ளுவர். இத்தகைய மனநலம் பெற்றோர்க்கு இன்றியமையாததாகும்.

ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள்: 69)

தன் மகனைச் சான்றோனாகப் பிறர் கூறக் கேட்ட தாய், அம்மகனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள் என்கிறார் வள்ளுவர்.

தாய், தந்தை என்ற இருவருக்கும் சம உரிமையுண்டு. இருவருக்கும் உரிய பொதுச் சொத்தாகக் குழந்தைகள் உள்ளனர். இங்குப் 'பொதுச்சொத்து' என்பது, குழந்தைகளின் அறிவும் ஆற்றலும் உலகுக்குப் பயன்படும் வகையில் அமைய

XI Ethics_Lesson 8 Folder.indd 146 22-02-2022 12:28:46

வேண்டும் என்பதேயாகும். இதை வள்ளுவர்,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் எண்: 60)

என்கிறார். "நன்மக்கள் பேறு" என்பது, நல்ல மக்களைப் பெறுவதாகும். நன்மக்களை ஈன்றெடுப்பதால் வீடும் நாடும் மகிழும். இந்த உலகமே போற்றுமளவுக்குப் பெற்றோர் சிறப்படைவர் என்கிறார் வள்ளுவர்.

நட்பு

குடும்பத்தின் கிளைகளான திருமணமும் மக்கட்பேறும் நடுவுநிலையாக வாழும் பயிற்சியை அளித்துப் பற்று, அன்பு, பொறுமை, பிறர் நலம் பேணல் போன்ற உயர்பண்புகளை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன. இவற்றைச் சார்ந்துவரும் நட்பு, குடும்ப வாழ்வில் ஆண் பெண் என்ற வேறுபாடில்லாமல், ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டிப் பொருந்தி வாழ்வதைச் சிறப்பிப்பதாகும். கணவன் மனைவி இருவருமே ஆழ்ந்த அன்புடையவர்களாகவும், சிறந்த நண்பர்களாகவும் இருப்பதே இல்லற நட்பாகும்.

உயர்நட்புக்குச் சிறந்த சான்றாகக் கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையாரைக் குறிப்பிடலாம். (புறநானூறு: 212,216) நேரில் ஒருவரை ஒருவர் காணாவிட்டாலும், கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு இருந்தனர்; பின் இறந்தனர். வடக்கிருந்து கோப்பெருஞ்சோழன் உயிர்விட்டான். நண்பனின் இறப்பைத் தாளமுடியாமல் பிசிராந்தையாரும் உயிர் நீத்தார் என்று அறிகிறோம்.

உரிமைகள் மற்றும் கடமைகள்

உரிமைகளும் கடமைகளும் மனிதனின் இரண்டு கண்களைப் போன்றவை; ஒன்றையொன்று சார்ந்திருப்பவை; ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகத் திகழ்பவை எனலாம். ஒருவன் முறையாகக் கடமையாற்றும்போது, அவனை வினை ஒழுக்கமுடையவன் எனக் கூறுவர். இப்பண்பே அவனது நன்னடத்தையாகிப் பின் நல்லொழுக்கமாகவும் மாறிவிடுகிறது. இவ்வகையில் உரிமையும் கடமையும் பிரிக்கமுடியாத தொடர்பைப் பெற்றுள்ளன.

1. உரிமைகள் (Rights)

மனிதச் சமூகத்தில் "உரிமை" என்பது, அறமுறையிலோ அல்லது சட்டவகையிலோ ஒன்றைப் பெறுவதாகும். அறமும் சட்டமும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறானவை. 'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்' என்பது மூதுரை கூறும் அறம். இந்நியதியால் ஆசிரியர், மாணாக்கர்மீது அறவகையில் உரிமையுடையவர் ஆவார். ஆனால், சட்ட வகையில் மாணக்கரின்மீது ஆசிரியருக்கு உரிமை ஏதும் கிடையாது.

உரிமையும் சமூகமும்

காட்டிலோ தீவிலோ மனிதன் தனித்து வாழும்போது, அவனுக்கு எத்தகைய உரிமையும் தேவையில்லை. காரணம், தன்னந்தனியாக வாழ்வதால் அவன், உரிமைகளைத் தானாகவே பெற்றிருக்கிறான். ஏனென்றால், அவன் வாழும் சூழலில் அவனுக்குக் கிடைக்கக் கூடியவற்றை மறுக்க, அவனைத் தவிர வேறு எவரும் இல்லை. அவன் யாரிடமும் எந்த உரிமையையும் போராடி நிலைநாட்ட வேண்டியதில்லை. சமுதாயத்தோடு சேர்ந்து வாழும்போதுதான் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவையே அவனுக்கு உருவாகிறது.

தன் உரிமையை எங்கே வலியுறுத்த வேண்டும் அல்லது தவிர்க்கவேண்டும் என்பதைச் சரியாக அறிவதுதான் மனிதனின் சிறந்த அறமாகும். தனிமனிதனுக்கு உரிமைகளை வழங்குவதன் மூலம் சமூகம், தனிமனிதனின் மனநலத்திற்கும், வாழ்வு வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகிறது. எனவே, தனக்குள்ள உரிமைகளால் தன்னை வளர்த்துக்கொள்ளும் தனிமனிதன், தனக்குதவிய சமூகத்திற்கு நன்றி பாராட்டும் முறையில் பொதுநன்மைகளுக்காகப் பாடுபட முன்வருகிறான் எனலாம்.

மனிதனின் உரிமைகள்

மனிதனின் முதன்மையான உரிமைகளாகப் பின்வரும் ஐந்தையும் குறிப்பிடலாம்.

(அ) வாழ்வதற்கான உரிமை
(ஆ) சுதந்திர மனிதனாயிருக்கும் உரிமை
(இ) உடைமைகளுக்கான உரிமை
(ஈ) ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை
(உ) கல்வி கற்கும் உரிமை

(அ) வாழ்வதற்கான உரிமை

பிறப்பு, இறப்பு என்பது உலகில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. வாழும் உரிமை என்பதும் எல்லா உயிர்களுக்கும் அடிப்படையான உரிமையாகும். இதை உணர்த்தவே, ஆண்டுதோறும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமை நாளாகக் (Human Rights Day) கொண்டாடப்படுகிறது. 'வாழு' அல்லது 'வாழவிடு' என்ற முதுமொழியும், மனிதர்களின் வாழும் உரிமைக்கு அரணாகிறது.

(ஆ) சுதந்திரமாக வாழும் உரிமை

சுதந்திரமாக வாழும் உரிமை என்பது, ஒருவகைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிலையாகும். ஆனால், இக்கட்டுப்பாட்டிலும் ஒருவகைச் சுதந்திரமுள்ளது. (எ.கா) சாலையில் செல்லும் போது இடப்பக்கமாகச் செல்லவேண்டும் என்பது சாலையின் விதி. இந்த விதிக்கு உட்பட்டு நடந்தும் போகலாம்; வாகனத்திலும் போகலாம். இது மனிதனுக்குரிய 'கட்டற்றச் சுதந்திரமாக இயங்கும் உரிமை' ஆகும். ஆனால், வலப்பக்கமாகச் செல்லக்கூடாது என்ற வகையில் இதுவும் சாலைவிதிக்குக் கட்டுப்பட்டதாகும்.

சமூகத்தில் பல கட்டுப்பாட்டு விதிகள் உண்டு. அந்த விதிகளுக்கு அடங்கிய நிலையில், பிற மனிதர்களின் சுதந்திர உரிமையை மீறாத வகையில் ஒருவன், தன்னுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதனால், அவனுக்கும் பிறர்க்கும் பயனுண்டு என்பதால், அனைவருமே சுதந்திரமாக வாழ முடியும் எனலாம்.

(இ) உடைமைகளுக்கான உரிமை

வாழும் உரிமையும் கல்வியுரிமையும் பெற்று, உழைக்கும் உரிமையால் கட்டற்ற நிலையில் நின்று பணிபுரியும் ஒருவன், தன் விருப்பப்படி பொருள்கள் பலவற்றைத் தன் உடைமையாக்கிக்கொள்ளும் உரிமையைச் சமூகம் அவனுக்கு வழங்கியுள்ளது. பொருள்களை உடைமையாக்கிக் கொள்ளுவதன் நோக்கம் பிறருக்கு நன்மை செய்வதற்குத்தான் என்பதை உணர்ந்து, அந்த உரிமையைச் சமூகம் அவனுக்கு அளிக்க முன்வரவேண்டும்.

(ஈ) ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை

கல்வியுரிமையும் உழைப்புமுள்ள மனிதன், பொருள்களைத் தன்னுடைமையாக்கும் முயற்சியில் ஈடுபடும்போது, அதற்குப் பிற மனிதனின் உதவியும் தேவைப்படுகிறது. ஒருவன் பிறனோடு இணைந்து செயலாற்றும் நிலைமை ஏற்படுமானால், அவ்விருவரும் இணைந்து செயல்புரிவதற்கான ஒப்பந்த உரிமையைச் சமூகம் வழங்குகிறது.

(உ) கல்வி கற்கும் உரிமை

வாழும் உரிமையைப் போலவே, கல்வியைப் பெறுவதற்கும் சமூகம் எல்லாவகை உதவியும் செய்கிறது. ஒருவர் கல்வியைப் பெறுவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும். ஒருவர் தாம் விரும்பும் அளவுக்குக் கல்வி கற்பதன்வழித் தம்மிடத்தில் மறைந்துள்ள பேராற்றல்களைச் சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

இவ்வகையில், பண்பட்டவர்களாகச் சமூக உறுப்பினர்களை மாற்றி அமைக்கக் கல்வியாலேயே முடியும். பண்பட்ட உறுப்பினர்களால் பண்புள்ள தனித்தன்மை வாய்ந்த சமூகம் அமையும். எனவே, தனிமனிதன் விரும்பும் கல்வியைச் சமூகம் அவனுக்குத் தரவேண்டும்.

வாழும் உரிமை, கல்வியுரிமை, ஒப்பந்த உரிமை, சுதந்திர உரிமை, உடைமைகளைப் பெறும் உரிமை இவை ஐந்தும் பொதுநலனுக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இவ்வுரிமைகள் வலுப் பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் பொதுநலனுக்குக் கருவியாவதால், அனைத்து மக்களின் உரிமைகளும் ஒருவருக்கொருவர் உதவும் நிலையில் ஒரு வரம்பிற்குள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

கடமை என்பதன் பொருள்

இரண்டு செயல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அது சூழலுக்குப் பொருத்தமாகவும் சட்டத்துக்குட்பட்டதாகவும் இருக்குமாயின் அதனையே கடமை என்று கூறவேண்டும்.

கான்டின் கடமைக் கொள்கை

இமானுவேல் கான்டின் கடமைக் கொள்கை (Duty for Duty's Sake) கடமையை மட்டுமே கருத்திற் கொண்டு கடமை செய்வதாகும். இதன் விளைவுகளும் நன்மைகளும் பற்றிக் கருதத் தேவையில்லை. கடமையைச் செய்யும்போது, எவ்வித ஊக்கிகளின் தூண்டுதலுமின்றிச் சுதந்திர மனநிலையில் நிற்கவேண்டும். கடமைக்காகக் கடமை என்ற உணர்வு மட்டுமே நம் சுதந்திர மனநிலையை இயக்கும் ஊக்கியாக இருக்கவேண்டும் என்று கான்ட் கூறுகிறார்.

நல்லொழுக்கம்

'VIRTUE' என்ற ஆங்கிலச்சொல்லிற்கு இணையாக, 'நல்லொழுக்கம்' என்ற தமிழ்ச் சொல்லைக் கருதலாம். இச்சொல்லை நாம் பயன்படுத்தும்போது, மனிதனுடைய மேம்பாட்டைக் குறிப்பதாகக் கொள்கிறோம். நல்லொழுக்கம் என்பது நற்சிந்தனை, நற்செயல், நன்னடத்தை, நற்பண்பு, நல்லறிவு, தன்னடக்கம், நேர்மை, உறுதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடாகும்.

நல்லொழுக்கத்தை அடையும் வழிகள்

அறிவின் வழியில் இயங்குபவன் அறிவுடையவன் எனக் கூறலாம். அறிவுடைய மனிதன் விரும்பியேற்கும் செயலே, விருப்பச்செயல் (Voluntary Action) ஆகும். அறிவாற்றல், ஆசையின் நிறைவைக் குறிக்கோளாக்கிச் செம்மைநெறியில் மனிதனைக் கொண்டு செலுத்துகிறது. எனவே, விருப்பச்செயல் என்பது, தன் அறிவினால் நல்லது எது, தீயது எதுவென ஆய்ந்து, மனிதன் மேற்கொள்ளும் செயல் எனலாம்.

விரும்பியேற்ற செயலைச் செய்ய முனைகையில், அதை அறிவின் நெறிப்படுத்த வேண்டும். விருப்பச்செயலில் ஒரு மனிதன் ஈடுபடும்போது, அவனுடைய அறிவும் அச்செயல் செல்லவேண்டிய பாதையும், பயன்கள் மற்றும் அதனால் விளையும் பின்விளைவுகளும், அதன் முடிவும் ஆராயப்படவேண்டும். ஒரே செயலைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யும்போது, அது அனிச்சைச் செயலாக (Non- Voluntary Action) மாறிவிடுகிறது. இதையே 'பழக்கச்செயல்' (Habitual Action) என்றும் கூறலாம்.

ஒருவன் நன்னடத்தையை விருப்பச் செயலாக விரும்பி ஏற்றுச் செயல்பட்டு வந்தால், அவன் மனதில் நன்னடத்தை பதிந்துவிடும். இந்த மனப்பதிவைத்தான் நாம் நற்பண்பு (Good Character) என்று கூறுகிறோம்.

நற்பண்புகளின் வகைகள்

நற்பண்புகள் மூன்று வகைப்படும்.

- தன்னைப் பற்றியவை
- பிறரைப் பற்றியவை
- குறிக்கோளைப் பற்றியவை

1. தன்னைப் பற்றியவை

கடமைகளை மேற்கொள்ளும்போது, நற்பயனளிக்கும் இயல்பான செயல்களையே ஒருவன் செய்வான். நடுவுநிலைமை, தன்னடக்கம், சிக்கனம், கண்ணியம், நேர்மை, தியாகம், உழைப்பு போன்ற தன்னை மேம்படுத்தும் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளும் மனிதன் வீழ்வதில்லை. இவை தன்னைப் பேணும் நற்பண்புகளாகும்.

2. பிறரைப் பற்றியவை

பிறரது அல்லது பிற உயிர்களின் நன்மைக்காகக் கடமைகளை மேற்கொள்ளும் போது, அவற்றிற்கேற்ற நற்பண்புகளையே கடைப்பிடிக்க வேண்டும். நீதி, நியாயம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதநேயம், அறச்செயல்கள் முதலியன பிறரைப் பற்றிய நற்பண்புகளாக அமைகின்றன.

3. குறிக்கோளைப் பற்றியவை

உண்மையின்மீது அன்பு, நன்மையின்மீது பற்று, செயலின்மீது உறுதி, உழைப்பின் மீது மதிப்பு போன்றவை குறிக்கோளை நோக்கிய நற்பண்புகளாகும்.

ஆளுமைப்பண்பு

'ஆளுமை' என்பது, ஒருவன் பெற்றுள்ள உடற்பண்புகள், உளப்பண்புகள், சமூக அறநெறிப் பண்புகள் ஆகியன யாவும் ஒருங்கிணைந்ததைக் குறிக்கிறது. ஆளுமையில் உடற்தோற்றம், அனுபவங்கள், நினைவுகள், கற்பனைகள், பற்றுகள், பழக்கவழக்கங்கள் எனப் பலவும் அடங்கியுள்ளன.

குற்றமும் தண்டனையும்

நற்செயல்கள் எவ்வாறு பாராட்டிற்கு உரியவையோ, அவ்வாறே குற்றங்களும் தண்டனைக்கு உரியவை. எந்த ஒரு விதியையும் மீறுகின்ற எச்செயலுமே குற்றம் எனவும், அது தண்டனைக்கு உரியது எனவும் கருதுவர்.

தன் மனச்சான்றின் அடிப்படையில் தனிமனிதன் ஏற்றுக்கொண்டிருக்கும் அறவியல் விதிகள், சமூக அமைப்பு உருவானபோது, சமூகம் அமைத்த விதிகள், அரசு விதித்த விதிகள் என இன்று பெருகியுள்ளன. தனிமனிதனின் அறவாழ்வைப் பாதிப்பதாகச் சில தருணங்களில் இவை அமைந்துவிடுகின்றன. இவ்விதிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டிய மனிதன், இவ்விதிகளைத் தானே மீறத் தொடங்கும்போது, அறவாழ்வில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

தீய எண்ணங்கள்

தீய எண்ணங்கள் மனத்தில் பதிந்துவிட்டால் அவை நல்லொழுக்கத்தைக் கெடுத்து, அதற்கேற்ப வெளிப்புறச் செயல்களையும் இழிவுபடுத்திவிடும். பொறாமை, பேராசை, கடுஞ்சினம், கடுஞ்சொல் முதலிய நான்கும் தீய எண்ணங்களாகக் கருதப்படுகின்றன. இதுபற்றி வள்ளுவர்,

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (குறள்: 35)

என்று கூறுகிறார். இத்தீய எண்ணங்களைச் சட்டத்தாலும் அரசாலும் தண்டிக்க முடியாது; அவரவர் மனச்சான்றே அவரவருக்கும் தண்டனையாகும்.

பிழை (Mistake)

மனிதன் தன் அறிவாற்றலின் துணையால் ஒரு செயலைச் செய்யும்போது, இது தவறான செயல்தான் என்று தெரிந்தே அச்செயலைச் செய்வதைப் 'பிழை' என்கிறோம். ஆனால், அதே மனிதன், அறியாமையால் ஒரு செயலைச் செய்யும்போது, அது தவறான செயல் எனப்படுகின்றது. பிழையைப் பொறுத்துத் தவறுகளைத் திருத்திக்கொள்ளச் சமூகம் மனிதனுக்கு உதவவேண்டும் எனலாம்.

அறத்தீமைகள்

அறத்தீமை என்பது, ஒருவன் அறிந்தே அறக்கொள்கையை மீறுவதாகும். அறவிதியை மீறுதல் தீமை தரும் என்பதை உணர்ந்தபின்னும் செய்யப்படும் ஐம்பெருங்குற்றங்களை இதற்குள் அடக்கலாம். மது, பொய், களவு, காமம், கொலை ஆகிய ஐந்தும் விலக்கப்பட வேண்டும் என்பதைத் திருக்குறள் முதலிய அறநூல்கள் மிகவும் வலியுறுத்துகின்றன. இந்த ஐம்பெரும் குற்றங்களைத் தெரியாமல் மனிதன் செய்வதில்லை. ஆசையின் தூண்டுதல்களுக்கு உட்பட்டே இக்குற்றங்களை இழைக்கிறான். எனவே, இவற்றை அறத்திற்குத் தீமை செய்வன என்ற பொருளில் 'அறத்தீமைகள்' என்கின்றனர் சான்றோர்.

தண்டனை (Punishment)

குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட்டாக வேண்டும். எவ்வாறு நற்செயல்களுக்குப் பரிசுகள் அளிக்கப்படுகின்றனவோ, அதைப் போன்றே குற்றங்களுக்கும் தண்டனைகள் அளிக்கப் படுகின்றன. குற்றவாளி சமூகத்தின் சட்டங்களை மீறுகிறான்; அவற்றை வேண்டுமென்றே தகர்த்தெறிகிறான். அவன் தவறுகளுக்குத் தண்டனை அளிப்பதன் மூலமாகச் சமூகம் தன்னைச் சீரமைத்துக் கொள்கிறது. எனவே, தண்டனை எனப்படுவது, அறவழியிலான ஒரு நேர்மையான நெறிப்படுத்தும் செயலாகும். தண்டனை பற்றிய கொள்கைகள் மூன்றாக உள்ளன.

XI Ethics_Lesson 8 Folder.indd 150 21-02-2022 22:55:51

அ) எச்சரிப்புத் தண்டனைக் கொள்கை

ஆ) பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை

இ) சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை

அ) எச்சரிப்புத் தண்டனைக் கொள்கை (Deterrent Theory of Punishment)

குற்றம் செய்தவனைத் தண்டிக்கும் முறையில் அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பர். (எ.கா.) "ஆடு திருடியதற்காக நீ தண்டிக்கப்படவில்லை; எதிர்காலத்தில் ஆடுகள் திருடுபோகாமல் இருக்கத்தான் இத்தண்டனை" எனத் தீர்ப்பளித்தல்.

இக்கொள்கையில் சில குறைபாடுகள் உள்ளன. இக்கொள்கையின்படி, மற்றவர் நலனுக்கான வெறுங்கருவியாகத் தனிமனிதன் பயன்படுத்தப்படுகிறான். ஒருவனைப் பிறருக்கு முன்மாதிரியாகக் காட்டுவதுதான், இக்கொள்கையின் அடிப்படையாகும். இது தனிமனித நிலையைவிடச் சமூகத்திற்கான அவனது நிலையையே வலியுறுத்துகிறது. சிலவேளைகளில் குற்றம் இழைத்தவனை நீதிபதி தண்டிக்க முற்படு ம்போது, மற்றவர்களுக்கு இத்தண்டனை எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றெண்ணி, மிகக்கடுமையாகத் தண்டிக்கலாம்; மிகக்குறைவாகவும் தண்டிக்கலாம். இரண்டுமே சரியன்று. எதிர்காலத்தில் குற்றம் நேராமல் தடுப்பதாகவும், குற்றவாளியைத் திருத்துவதாகவும் தண்டனை அமைவதே சிறந்ததாகும்.

ஒரு குற்றவாளி முதன்முறையாக ஒரு குற்றத்தைச் செய்யும்போது, அக்குற்றத்தை அவன் மீண்டும் செய்யமாட்டான் என்ற நிலையில், நீதிபதி அவனை எச்சரிக்கை செய்யலாம். மிகக்குறைந்த தண்டனையையும் வழங்கலாம் அல்லது தண்டிக்காமலேயேகூட விட்டுவிடலாம். ஆனால், மற்றவர்களை எச்சரிக்கும் வகையில் தண்டனை விதிக்கும்போது, சற்றுக் கடுமையாகவே நீதிபதி தண்டனை விதிப்பார். ஒரே குற்றத்தைத் திரும்பத் திரும்பச் செய்ய நேர்ந்தால், அக்குற்றவாளிக்குக் கடுமையான முறையில் தண்டனை வழங்கத்தான் வேண்டும்.

ஆ) பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை (Retributive Theory of Punishment)

பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை என்பது, மற்றொருவனுக்கு ஒருவன் இழைத்த துன்பத்தைக் குற்றவாளியான அவனும் அனுபவிக்கும்படி செய்வதாகும். இக்கொள்கையின்படி, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பதைப் பொதுவாக நோக்கும்போது, இது பழிவாங்கும் தண்டனை என்பதை அறியலாம். (எ.கா) சோழர் வரலாற்றில், மனுநீதிச்சோழனின் மகனான இளவரசன், தேர்க்காலில் ஒரு பசுவின் கன்றினைக் கொன்ற குற்றத்திற்குத் தண்டனையாக, அதே தேர்க்காலில் மகனையும் இட்டுக் கொன்ற மன்னனின் செயலைச் சான்று காட்டலாம்.

குற்றங்களால் சமுதாயம் அழிவதை யாரும் ஏற்கமுடியாது. மனிதச் சமுதாயம் அழிந்தால், மனிதன் விலங்கைவிடவும் கீழ்நிலையை அடைய நேரிடும் என்பதால், குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதைத் தவிர்க்கக்கூடாது என்பர். இக்கொள்கையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. பழிக்குப் பழி வாங்குதல் என்பது, உணர்ச்சியின் அடிப்படையில் நிகழும் செயலாகும். இது அறிவில் முதிர்ந்த சான்றோர்கள் வாழும் சமுதாயத்திற்குப் பொருந்துவதன்று எனலாம்.

குற்றவாளி அக்குற்றத்தை எதற்காகச் செய்தான்?, அவனைத் தண்டிப்பது, சமூகத்திற்கு நன்மை பயக்குமா?, எத்தகைய தண்டனையை அவனுக்கு வழங்குவது?, பாதிக்கப்பட்டவன் செய்த குற்றத்தின் பின்னணி என்ன? போன்றவற்றைத் தீர ஆராயாமல், பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தில் தண்டனைகளை அளிக்கக்கூடாது..

இ) சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative Theory of Punishment)

குற்றம் செய்தவனைத் திருத்தும் வகையில் தண்டனை அமையவேண்டும் என்பது, இக்கொள்கையின் நோக்கமாகும். இக்கொள்கையை மக்கள் அனைவரும்

www.tnschoolbooks.in

ஏற்றுக்கொள்கின்றனர். குற்றம் புரிந்தவனையும் மனிதனாக மதித்து, அவன் நன்மையையும் மனங்கொண்டு தண்டனை அளிக்கப்படவேண்டும் என்று இந்தக் கொள்கையினர் கருதுகின்றனர்.

குற்றவியல் ஆய்வுகள், ஒருவன் ஏன் குற்றம் செய்கிறான் என்பதற்கான காரணங்களைக் கண்டறிய முனைகின்றன. உடற்குறைகளும் மனக்குறைகளும் குற்றங்களுக்குக் காரணமாகின்றன என்று கண்டறிந்துள்ளனர். சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளே மனிதனைக் குற்றவாளியாக்குகின்றன என்றும் கருதுகின்றனர்.

குற்றவாளிகளின் உடல்நலம், உளநலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தி, ஒரு நோயாளிக்கு மருத்துவர் எவ்வாறு சிகிச்சை அளிக்கின்றாரோ, அதேபோல் குற்றம் புரிந்தவனையும் நோயாளியாகப் பாவித்து அவனைச் சீர்திருத்தும் வகையில் அவனுக்குத் தண்டனை தரப்படவேண்டும்.

சீர்திருத்தத் தண்டனைக் கொள்கையிலும் சில குறைபாடுகள் உள்ளன. எல்லாக் குற்றவாளிகளுமே உடலியல் மற்றும் உளவியல் குறைபாடுகளினால் குற்றம் செய்தவர்கள் அல்லர். மேலும், எல்லாக் குற்றங்களும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் ஏற்பட்டவையே என்பதையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்பர்.

நிறைவுரை

தனிமனிதன், சமுதாயம், நாடு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பு, இப்பாடப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. தனிமனிதனுக்குரிய சமுதாயப் பண்புகள் பட்டியலிப்பட்டுள்ளன. தன்னலம், பிறர்நலம், பொதுநலம் ஆகிய மூவகை அறக்கொள்கைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. குடும்ப வாழ்வோடு தொடர்புடைய அறநெறிகள், பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உரிய உரிமைகள், கடமைகள், குடும்பத்தின் சிறப்புகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மனிதனின் அடிப்படை உரிமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. நற்பண்புகளின் வகைகள், தண்டனை - விளக்கம், அதன் வகைகள் ஆகியனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

I08WY

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. ஒருவரையொருவர் காணாமலேயே நட்புக்கொண்டவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள்

   அ) பாரி – கபிலர் ஆ) கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார்

   இ) அதியமான் – ஔவையார் ஈ) குமணன் - பெருஞ்சித்திரனார்

2. 'பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம்' என்று கூறியவர்

   அ) ரூஸ்வெல்ட் ஆ) இமானுவேல் காண்ட் இ) பிளாட்டோ ஈ) அரிஸ்டாட்டில்

3. பொருத்துக.

கூற்று		கூறியவர்
அ. மக்கள் ஏற்படுத்திய அரசியலமைப்பே நாடு	-	1. அரிஸ்டாட்டில்
ஆ. மக்கள் உரிய சட்டவிதிகளை வகுத்து ஆள்வதே நாடு	-	2. பாரதியார்
இ. ஒருவனுக்கு உணவில்லையெனில் உலகை அழிப்போம்	-	3. பிலன்ட்சிலி
ஈ. பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம்	-	4. உட்ரோ வில்சன்

   அ) அ - 1 ஆ - 2 இ - 3 ஈ - 4 ஆ) அ - 2 ஆ - 1 இ - 3 ஈ - 4

   இ) அ - 4 இ - 2 இ - 1 ஈ - 3 ஈ) அ - 3 ஆ - 4 இ - 2 ஈ - 1

XI Ethics_Lesson 8 Folder.indd 152 21-02-2022 22:56:05

www.tnschoolbooks.in

4. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : 'உங்கள் குழந்தைகள் உங்களிடமிருந்து தோன்றியிருக்கலாம்; ஆனால், அவர்கள் உங்கள் உடைமைகள் அல்லர்'. – கலில் ஜிப்ரான்

காரணம்: தம்முடைய குழந்தையாயிருந்தாலும், அதன்மீது உரிமை கொள்வதற்கு ஓர் அளவு உண்டு.

அ) கூற்று சரி, காரணமும் சரி. ஆ) கூற்று தவறு, காரணமும் தவறு

ஆ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று சரி, காரணம் தவறு.

5. 'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்' – இக்குறட்பாவில் 'அழுக்காறு' என்பது,

அ) பேராசை ஆ) கடுஞ்சினம் இ) பொறாமை ஈ) கடுஞ்சொல்

6. தன்னலம் கொண்டவர்களைக் 'கடுகுள்ளம்' கொண்டவர்கள் என்று கூறியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) ஔவையார் ஈ) திருவள்ளுவர்

7. குடும்ப அமைப்பு மூலம் நிறைவுசெய்து கொள்ளக்கூடியவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) உடல், அறிவு, ஆன்மீகத் தேவைகள் ஆ) அறிவு, உள்ளம், ஆன்மீகத் தேவைகள்

இ) ஆன்மீகம், உணவு, அறிவுத் தேவைகள் ஈ) உடல், உள்ளம், அறிவுத்தேவைகள்

8. மனித உரிமை நாளாகக் கொண்டாடப்படும் நாள்

அ) டிசம்பர் -5. ஆ) நவம்பர் -20 இ) டிசம்பர் – 10 ஈ) நவம்பர் – 30

9. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : தாயொருத்தி, தன்மகனைப் பெற்றெடுத்த பொழுதைக்காட்டிலும் அவனைச் சான்றோன் எனப் பிறர் கூறும்போது, மிக்க மகிழ்ச்சியடைவாள்.

காரணம்: சமுதாயத்தில் சிறந்த பண்புநலன்கள் கொண்ட சான்றோர்களே அனைவராலும் மதிக்கப்படுகின்றனர்.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று சரி, காரணம் சரி.

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

10. பிறரைப் பற்றிய நற்பண்புகளுள் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) மொழிப்பற்று, நாட்டுப்பற்று ஆ) மனிதநேயம், அறச்செயல்கள்

இ) தன்னடக்கம், நேர்மை ஈ) நீதி, நியாயம்

11. 'நமக்காக ஒரு பொன்னுலகம் காத்திருக்கிறது' எனக் கூறியவர்

அ) காரல் மார்க்ஸ் ஆ) லியோ டால்ஸ்டாய் இ) உட்ரோ வில்சன் ஈ) கலில் ஜிப்ரான்

XI Ethics_Lesson 8 Folder.indd 153 21-02-2022 22:28:15

குறுவினா

1. சமுதாயம் – வரையறு.
2. குடும்பத்தின் மூவகை வாழ்வியல் சிறப்புகள் எனக் குறிப்பிடப்படுவன யாவை ?
3. பாவேந்தர் சின்னதோர் கடுகுள்ளம் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
4. மகன் தந்தைக்கு செய்யும் நன்றிக் கடன் எனத் திருக்குறள் குறிப்பிடுவது யாது?
5. கடமை என்பதன் பொருள் யாது?
6. நல்லொழுக்கம் – சொற்பொருள் விளக்கம் தருக.
7. தியாகம் என்றால் என்ன?

சிறுவினா

1. ஒரு நாடு எப்போது நன்னாடாகிறது?
2. தனிமனிதன், சமுதாயம் –இவற்றின் அடிப்படையில் உருவாகும் மூவகை நலக் கொள்கைகள் யாவை?
3. ‘கடமைக் கொள்கை‘ பற்றி, இமானுவேல் கான்ட் கூறுவது என்ன?
4. ஆளுமைப் பண்பு என்றால் என்ன ?
5. ‘பிழை‘ குறித்து அறநெறி வாழ்வு கூறுவது யாது ?
6. ஐம்பெருங்குற்றங்கள் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுவன யாவை ?
7. அறவாழ்வில் சிக்கல்கள் எவ்வாறு தோன்றுகின்றன ?

நெடுவினா

1. தனிமனிதனுக்கு இருக்க வேண்டிய சமுதாயப் பண்புகளாகக் காந்தியடிகள் கூறுவனவற்றைப் பட்டியலிடுக.
2. மனிதனின் முதன்மையான உரிமைகளுள் எவையேனும் மூன்றை விளக்கி எழுதுக.
3. நற்பண்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? விளக்குக.
4. தண்டனை என்றால் என்ன? அதன் வகைகளுள் ஒன்றான சீர்திருத்த தண்டனைக் கொள்கையை விளக்குக.
5. குடும்பத்தின் முதன்மையான சிறப்புகளுள் மழலைச்செல்வமும் ஒன்று – இக்கூற்றை நிறுவுக.
6. குடும்பத்தின் செயல்பாடுகளைத் தொகுத்தெழுதுக.

அலகு

9

தொழில்சார் அறங்கள்

KOFW3

கற்றல் நோக்கங்கள்

- தொழில்சார் அறங்கள் பற்றி அறிதல்.
- தொழில்சார் அறங்களின் தேவையை அறிதல்.
- தொழில்சார் அறங்களைப் பின்பற்றுவதால் ஏற்படும் பயன்களைத் தெரிந்து கொள்ளுதல்.
- தொழில்சார் அறங்களைப் பின்பற்றாமையால் ஏற்படும் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல்.

நுழைவு வாயில்

மனிதன், சமூகத்தில் நன்னெறிகளோடு வாழ்வது மட்டுமல்லாமல், தான் ஏற்றுக்கொண்ட செய்தொழிலிலும் அறநெறிகளைப் பின்பற்றி வாழவேண்டும். ஒருவன் எந்தத் தொழில் செய்தாலும், அதில் அவன் அடையும் பயனைவிட, மற்றவர்களும் மிகுந்த பயன் பெறவேண்டும். அதுவே, அத்தொழிலுக்குச் சிறப்பாகும்.

இப்பகுதியில், பல்வேறு தொழில் செய்வோர்க்கான தொழில்சார் அறங்கள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகக் கல்வி, மருத்துவம், வணிகம், சட்டம், அரசியல் போன்ற துறைகளில் ஈடுபடுவோர் பின்பற்ற வேண்டிய தொழில்அறங்கள் பற்றிய நெறிமுறைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தொழில்சார் அறம் – சொற்பொருள் விளக்கம்

தொழில்சார் அறம் என்பது, தொழில் தொடர்பான கொள்கைகளையும், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் கூறுவதாகும். தொழில் புரிவோரின் தனிமனித ஒழுக்கம், உயர்நிலை விழுமியங்கள், சட்டங்களைப் பின்பற்றும்முறை போன்றவற்றைக் குறிப்பிடுவதே 'தொழில்சார் அறம்' ஆகும். வாடிக்கையாளருக்கு நியாயமான விலையில் பொருள்களை வழங்குதல், பணியாளர்களை உரிய மதிப்புடன் நடத்துதல், கண்ணியமான முறையில் லாபம் ஈட்டுதல், முறையாக வரி செலுத்துதல் போன்றவை தொழில்சார் அறங்கள் எனலாம்.

தொழில்சார் அறம், தொழிற்கூடங்கள் செயல்படும் முறையில் ஏற்படும் தவறுகளைக் களைந்து சரியான நடைமுறைகளைப் பின்பற்றச் செய்வதாகும்.

தொழிற்கூடங்களிலும், நிறுவனங்களிலும் அறவியல் நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணித்து, உயர் மதிப்பீடுகளைப் பின்பற்றச் செய்வதே தொழில்சார் அறம் எனலாம்.

தொழில்சார் அறம் பற்றிய பொதுக் கருத்துகளுக்கு ஏற்ப தனிமனிதர்களும் நிறுவனங்களும் தமக்கான அறவியல் கோட்பாடுகளை வகுத்துச் செயல்படுதல் சிறப்பாகும்.

பரந்த சமூகக் கண்ணோட்டத்துடன் தொழில்சார் அறங்களை உருவாக்கவேண்டும். தொழில் முனைவோரும் நிர்வாகிகளும்

பணியாளர்களும் தங்கள் பணியைச் செவ்வனே செய்வதற்கு வழிகாட்டுவதே தொழில்சார் அறங்களின் முதன்மை நோக்கமாகும்.

தொழில்துறையின் செயல்பாடுகள், தனி மனிதனுக்கோ, சமூகத்திற்கோ தீங்கு விளைவிப்பதாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு தொழிலுக்கும் அதைச் சார்ந்துள்ளோருக்கும் செயல்பாட்டு வரையறைகள் உண்டு. அத்தகைய வரையறைகளைப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும். சமூகப் பொருளாதாரச் சூழல்களுக்கு ஏற்றவாறு தொழில்சார் அறங்கள் வகுக்கப்படவேண்டும். சூழலின் மாற்றங்களுக்கேற்ப அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுத் தேவையான திருத்தம் அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொழில்சார் அறங்களின் தேவை

விழுமியங்களைப் பேணும் நிறுவனத்தோடு தொடர்புகொள்ள மக்கள் விரும்புவர். அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றுவதில் ஆர்வம் காட்டுவர். தங்கள் பணத்திற்கு மதிப்பளித்து, நேர்மையாகச் செயல்படக் கூடிய நிறுவனங்களின் தயாரிப்பையே மக்கள் வாங்குவர். இதனால்தான் பல நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் பொருள்கள் தரமானவை என்றும் பாதுகாப்பானவை என்றும் விளம்பரம் செய்கின்றன.

உயர் விழுமியங்களுடன் இயங்கும் ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள், தங்கள் நிறுவனத்தைப் பற்றிப் பெருமிதம் கொள்வர். அந்த நிறுவனத்தின் இலக்குகளையும், புகழையும் வளர்த்தெடுப்பதில் ஊக்கத்துடன் செயல்படுவர். பொதுமக்களின் மதிப்புக்குரிய அந்நிறுவனத்தின் மனிதவள நிர்வாகி, ஊழியர்களாலும் விரும்பப்படுவார். தாம் பணி செய்யும் நிறுவனத்தின் சமூகக் கண்ணோட்டத்தையும் உயர் விழுமியங்களையும் தம் ஊதியத்தைவிட மேலானதாகப் பணியாளர்கள் கருதுவர்.

தொழிற்சாலை

இத்தகைய நிறுவனங்கள் தொழிலின் நீண்ட கால வளர்ச்சி, பணியாளர் நலன், சமூக நலன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே முக்கிய முடிவுகளை எடுக்கின்றன. அறவியல்வழி நடக்கும் நிறுவனங்கள், தொடக்கத்தில் கடினமான சூழ்நிலையைச் சந்திக்க நேரிட்டாலும் காலப்போக்கில் வெற்றிகரமான நிறுவனங்களாக நிலைத்துவிடுகின்றன.

தொழில்சார் அறப்பண்புகள்

நேர்மையும் பிறரை மதித்தலும் தொழில் சார்ந்த அறப்பண்புகளாக உள்ளன. ஒரு நிறுவனத்தின் செயல் தலைவராயினும், உயர் அதிகாரியாயினும் தொழில் நியதிகளுக்கும் ஒழுகலாறுகளுக்கும் அவர்கள் கட்டுப்பட வேண்டும். அத்தகைய நடத்தை, ஊழியர்களுக்கு முன்மாதிரியாக அமைவதுடன், அவர்கள் அறங்களைப் பின்பற்றுவதற்கும் ஊக்கமளிக்கும். நிறுவனத்தின் அறங்கள் அனைத்தும் நடத்தை விதிகளாக வகுக்கப்பட்டு, முறையாக அவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். நேர்மை, தரம், பாதுகாப்பு, பணியாளர்களின் நலன் போன்றவற்றை அவை பேண வேண்டும். இத்தகைய அறங்கள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா எனத் தொடர்ந்து மேலாண்மை அமைப்புகளால் கண்காணிக்கப்பட வேண்டும். இவை பற்றிய தெளிவான அறிக்கைகளும் தொழில் நிறுவனங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்பட வேண்டும்.

www.tnschoolbooks.in

கல்வி அறம்

மனிதனை மனிதனாக மாற்றுவதற்குக் கல்வி இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனும் தனது இலக்குகளை அடைவதற்குக் கல்வி உறுதுணை புரிகிறது. இச்சமூகத்தில் ஆசிரியர் பணி என்பது, ஓர் உன்னதமான அறப்பணியாகும். இப்பணிக்குப் பல அறங்கள் உள்ளன. விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் அறிவளிப்பதை இலக்காக்கி ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டும். ஆசிரியர்களை மதித்து, அவர்களது அறிவுரைகளை ஏற்று மாணவர்களும் கற்க வேண்டும்.

தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுதில்லி (NCERT)

ஆசிரியர்கள் அணுகுமுறை

ஆசிரியர்கள், தம் வகுப்பறைகளில் உற்சாகமூட்டும் வகையிலும், மாணவர்கள் மனம் கலந்து பங்கேற்கும் வகையிலும் கற்பிக்கும் முறையைப் பின்பற்றவேண்டும். அப்போதுதான், மாணவர்களது படைப்பாற்றல் வெளிப்படும்.

- ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி பெறும் உரிமை உண்டு என்பதை உணர்த்துதல்.
- ஒட்டுமொத்த மனிதவள வளர்ச்சிக்கும் கல்வி பயன்படும் என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.
- குடியாட்சி, சமூக நீதி, சமய நல்லிணக்கம் போன்ற குறிக்கோள்களின்மீது நம்பிக்கையை ஏற்படுத்துதல்.
- நாட்டின் வளமான பண்பாட்டுப் பின்புலங்கள் குறித்த அறிவு, நாட்டுப்பற்று, உலக நடைமுறைகளைப் பற்றிய புரிதல், உலக அமைதி போன்ற கருத்துகளைக் கல்வியின் மூலம் வளர்த்தெடுத்தல்.
- மக்களின் தேவைகளையும் நம்பிக்கைகளையும் புரிந்துகொண்டு செயல்படல்.
- ஆசிரியர் பணிக்குத் தேவையான அறிவாற்றல், தனித்துவமான திறமைகள், கற்பித்தலில் ஆழ்ந்த ஈடுபாடு, உலகியல் அறிவு போன்ற தகுதிகளைப் பெற்றிருத்தல்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நற்பண்புகளும் கற்பிக்கும் திறனுமே அவருக்குரிய நன்மதிப்பைச் சமூகத்தில் பெற்றுத்தரும் என்பதை அறிந்திருத்தல்.

ஆசிரியர்- மாணவர் உறவு

- கல்விப்பணிகளில் காலந்தவறாமை.
- பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுந்த முன்னேற்பாட்டுடன் செல்லுதல்.
- அன்போடும் அரவணைப்போடும் மாணவர்களை அணுகுதல்.
- மாணவர்களிடம் சாதி, மதம், இனம், மொழி, பொருளாதாரம், பாலினம், நாடு போன்ற வேறுபாடுகளைக் காட்டாமை.
- மாணவர்களின் உடல் தகுதி, உணர்வுத் திறன், அறிவு வளர்ச்சி, சமூக உணர்வு, ஒழுக்க நெறிக்கான வழிகாட்டல்களில் கவனம் செலுத்துதல்.
- மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூகப் பின்புலங்களைப் புரிந்துகொண்டு, அவற்றின் அடிப்படையில் அவர்களுக்குக் கற்பித்தல்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைத் தவிர வேறு எவ்வகையிலும் கல்வி கற்பிப்பதற்காக மாணவர்களிடம் கட்டணம் பெறாமை.
- மாணவர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பெற்றோரைத் தவிரப் பிறர் எவரிடமும் வெளிப்படுத்தாமை.

XI Ethics_Lesson 9 Folder.indd 157 21-02-2022 22:28:01

- ஆளுமை விளக்கமாகத் திகழும் மெய்ப்பாடுகள் மூலம் மாணவர்களுக்குத் தகுந்த முன்மாதிரியாகத் திகழ்தல்.

- மாணவர்களின் கல்வி வளர்ச்சி அல்லது குறைபாடுகள் குறித்து, அவ்வப்போது பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தல்.

- மாணவர்களின் தன்னம்பிக்கையைக் குலைக்கும்படியாகப் பெற்றோர் அல்லது காப்பாளர்களிடம் பேசாதிருத்தல்.

- கல்விக்கூடத்தைச் சமூக மேம்பாட்டிற்குத் தேவையான அறிவு, தகவல்கள், திறன்கள் முதலியவற்றை வளர்க்கும் மனிதவள நிறுவனமாகக் கருதுதல்.

- சமூகச் சிக்கல்களைப் புரிந்துகொள்வதுடன், அவற்றை எதிர்கொள்வதற்குரிய திறன்களுடன் இருத்தல்.

- கல்விப்பணி மேம்பாட்டிற்கான தகுதி, பயிற்சி, ஆய்வரங்கம், கருத்தரங்கம், விவாதங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து பங்கேற்பதுடன் மாணவர்களையும் பங்கேற்கச் செய்தல்.

- ஒவ்வொரு மாணவனின் கல்வித்தகுதியையும் தனித்திறன்களையும் வளர்த்தெடுப்பதில் பங்காற்றுதல்.

மாணவர்களின் அறிவுத்தேடல் திறனைக் கூர்மைப்படுத்தி, அவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பது தான் ஆசிரியர் மாணவர் உறவின் சிறப்பம்சமாகும்.

உயர்கல்வி

உயர்கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர்கள், எதிர்காலச் சமூகத்திற்கு வழிகாட்டும் முன்மாதிரிகளாகத் திகழவேண்டும். மனிதவளத் துறையின் இதயங்களான இளையோரைப் பேணும் பொறுப்புமிக்கவர்களாகத் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும். உயர்கல்வி பயிலவரும் மாணவர்களின் பதின்ம வயது காரணமாக, எதிர்மறைச் சக்திகள் இவர்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. இளம் சமுதாயத்தினரைப் பொறுப்புணர்வுடன் ஆசிரியர்கள் வழிநடத்த வேண்டும்.

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சமூகம் குறித்துப் பற்பல கேள்விகள் எழும். அதன் காரணமாகச் சுதந்திரமான சிந்தனையுள்ள மாணவர்கள், சமூகச் செயல்பாடுகளில் கவனம் செலுத்தத் தொடங்குவர். இது பிற்காலத்தில் சமூகத்தில் பற்பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும். இத்தகைய பொறுப்புணர்வு உள்ள இளம் சமுதாயத்தை உருவாக்குவதே, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் உன்னத நோக்கமாதல் வேண்டும்.

உண்மையையும் பக்குவத்தையும் கல்வி வாயிலாக அடைய விழையும் மாணவர்களின் கல்விப்பயணத்தில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ வேண்டியது, ஆசிரியரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இத்தகைய பண்புகளை வளர்த்தெடுக்கும் வகையில், அனைத்திந்தியக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியக் கூட்டமைப்பு, ஆசிரியர்களுக்கான அறவியல் கோட்பாடுகளை வடிவமைத்துத் தந்துள்ளது. அவை வருமாறு:

- பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பேராசிரியர்கள் கல்விப்பணி சார்ந்த தம் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும்.

- பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், கல்லூரி நிர்வாகிகள், கல்வித்துறையைச் சார்ந்த செயலர்கள், இயக்குநர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள், மாணவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் என அனைவருக்கும் உரிய அறக்கோட்பாடுகள் தெளிவாக வரையறுக்கப் பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

- கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள துணைவேந்தர்கள், பதிவாளர்கள், பல்கலைக் கழக மற்றும் கல்வி நிறுவனத் தாளாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் உரிய நடத்தை விதிகள்

XI Ethics_Lesson 9 Folder.indd 158 21-02-2022 22:28:01

வகுத்தளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உயர்கல்வி நிறுவனங்கள், அரசியல் தலையீடுகளுக்கோ மற்ற சமூக நிறுவனங்களின் அழுத்தங்களுக்கோ இடந்தராது சுதந்திரமாகச் செயல்பட்டுக் கல்விப்பணியில் திறனுடன் திகழ முடியும்.

- அறிவியல் மனிதனின் திறமைகளை வளர்த்தெடுக்கும் கருவி மட்டுமன்று. அதுவே வாழ்வியல் பழக்கமாகவும் மாறவேண்டும். கூர்த்த அறிவுத்திறன், நன்னடத்தை, ஏற்றுக்கொண்ட செயல்களில் முழுஈடுபாடு போன்றவை அறிவியல் கல்வியினால் கிடைக்கும் கூடுதல் நன்மைகளாகும்.

- கல்வி கற்பது என்பது அறிவு வளர்ச்சியுடனோ, திறன் மேம்பாட்டுடனோ நின்றுவிடக்கூடாது. மற்றவர்களுக்காக வாழ்வதற்கும் மற்றவர்களோடு வாழ்வதற்கும் அது உதவ வேண்டும். சிந்தனையையும் செயலையும் கூர்மைப்படுத்தாத கல்வி, அறம் இல்லாத அதிகாரப்போக்குள்ள மனிதர்களையே உருவாக்கும். அன்பும் பண்புமுள்ள மனிதர்களை உருவாக்குவதற்கு அறப்பண்புடன் கூடிய கல்வியே தேவையாகும்.

- தனி மனிதன், சமூகம், நாடு ஆகியவற்றின் எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கட்டமைக்கும் வல்லமையுடன் கல்விக்கூடங்கள் உள்ளன. இதில் பங்கேற்கும் கல்வியாளர்களுக்குக் கடமையும் பொறுப்பும் மிகுதி. உண்மை, நேர்மை, அமைதி, அகிம்சை, அன்பு ஆகிய உயரிய விழுமியங்களின் அடிப்படையில் தமக்குத் தாமே அறக்கோட்பாடுகளை வகுத்துக்கொண்டு கல்வியாளர்கள் பணியாற்றவேண்டும்.

கல்வியின் நோக்கம் முழுமையான மனிதனை உருவாக்குவதாகும். தனி மனிதனாக, குடும்ப உறுப்பினனாக, சமூக மனிதனாக, நாட்டின் நல்ல குடிமகனாக, புதியனவற்றைக் கண்டுபிடிப்பவனாக, ஆய்வியல் அறிஞனாக, எதிர்காலச் சமூக உருவாக்கம் குறித்த கனவுகள் உள்ளவனாகத் தான் பெற்ற கல்வியால் மேம்பாடு அடைபவனாக மாணவன் இருக்கவேண்டும். இவற்றை அடைவதற்கு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்றலே சிறந்த வழியாகும்.

மருத்துவ அறம்

இந்திய மருத்துவத்துறை மிகவும் தொன்மையானது. மருத்துவர்களுக்கான கல்வி, நோயைக் கண்டறியும் திறன், நோயாளிகளை அணுகும்முறை போன்றவை பற்றிய இந்திய மரபுசார் மருத்துவ அறிவு மிகவும் வளமானதாகும்.

- மருத்துவக்கல்வி மாணவர்கள், தம் துறையில் முழுப் பற்றுடனும் ஒப்பளிப்போடும் இருப்போம் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.
- மருத்துவப்பயிற்சியின்போது கற்றல், கற்பித்தல், உரையாடுதல் ஆகிய வழிகளில் மருத்துவக்கல்வியை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.
- நோயாளியின் உடலுறுப்புகளை அறிவொளியால் ஆய்ந்தறிபவராக மருத்துவர்கள் திகழவேண்டும்.
- நோயாளியின் உடல்நிலையை ஆய்ந்தறிந்த பிறகே அவருக்குரிய மருத்துவத்தைத் தொடங்க வேண்டும்.
- கனிவோடும், கருணையோடும் நோயாளியைக் கவனிக்க வேண்டும்.
- மருத்துவர்கள் அறவழியில் செயல்பட வேண்டும்.

XI Ethics_Lesson 9 Folder.indd 159 21-02-2022 22:28:01

உங்களுக்குத் தெரியுமா?

சில மருத்துவர்கள் நோயாளியின் உடலைக் குணப்படுத்துவர். சிலர் மனத்தைக் குணப்படுத்துவர். ஆனால் இரண்டையும் சமமாகக் கருதி மருத்துவம் செய்வதே சிறந்த மருத்துவ முறை என்கிறார் கிரேக்கத் தத்துவ ஞானி பிளாட்டோ.

உலகச் சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ள மருத்துவ அறங்கள்

- "அனைவருக்கும் ஆரோக்கியம்" என்ற இலக்கை நோக்கிச் செயல்படுதல்.
- பச்சிளங்குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் முன்னுரிமை அளித்தல்.
- பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறைத்தல்.
- பச்சிளங்குழந்தைகள்/சிறார்கள் போன்றோரின் இறப்பு விகிதங்களைக் குறைத்தல்.
- பேறுகால இறப்பு விகிதங்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- நகர்ப்புற/ கிராமப்புறப் பகுதிகளில் குடும்பநல / உடல்நல மையங்களை ஏற்படுத்தி முறையாகப் பேணல்.
- உயிருக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய தொற்று நோய்கள்/ தொற்றா நோய்களைக் கண்டறிந்து அவற்றிற்கு ஏற்ற தடுப்புமுறைகளையும் நோய் நீக்கும் முறைகளையும் மேற்கொள்ளுதல்.
- எந்நேரத்திலும், உயிர் காக்கும் மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிவகை செய்தல்.
- மாநில / மாவட்ட அளவில் தரமான மருத்துவம் வழங்கப்படுகின்றதா எனத் தொடர்ந்து கண்காணித்தல்.
- நாடு முழுவதும் உள்ள மக்கள் அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு அளித்தல்.
- இயற்கைப் பேரிடர்க் காலங்களில் ஏற்படும் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான உடனடி மருத்துவ மையங்களை எப்பொழுதும் ஆயத்தநிலையில் வைத்திருத்தல்.
- போர், தீவிரவாத நடவடிக்கைகள் போன்ற எதிர்பாராத இடர்களின்போது, தரமான மருத்துவம் வழங்குவதற்குத் தயாரான நிலையில் மருத்துவத்துறையை ஆயத்தப்படுத்துதல்.
- மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி மருத்துவக் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் மனிதவளக் குறைபாடு ஏற்படாமல் கண்காணித்தல்.
- மருத்துவ முறையில் வளர்ந்த / வளரும் நாடுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்குத் தொடர்ந்து முயற்சி எடுத்தல்.
- வளர்ந்த / வளரும் நாடுகளில் குடும்ப நலம் பேணுவதில் காணப்படும் வேறுபாடுகளை நீக்குதல்.
- மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர் வேதம், யுனானி போன்றவற்றில் உயர்ஆய்வுகள் மேற்கொண்டு அதன் சிறப்புகளைப் பொதுமக்கள் அனைவரும் அறியச் செய்ய வேண்டும்.

மருத்துவரின் பொறுப்புணர்வுகள்

- நோயாளிகளுக்கு மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளைக் குறைப்பதோடு, அவை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.
- நோய்கள் தொடர்பான அனைத்தையும் மருத்துவரிடம் நோயாளி ஒளிவுமறைவின்றித் தெரிவிக்கவேண்டும்.

தேசிய மருத்துவ ஆணையம், புதுதில்லி

உங்களுக்குத் தெரியுமா?

1934 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்திய மருத்துவக் கழகம் (MEDICAL COUNCIL OF INDIA - MCI) 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் நாள்முதல் தேசிய மருத்துவ ஆணையம் (NATIONAL MEDICAL COMMISSION) என்னும் பெயரில் இயங்கி வருகிறது. மருத்துவ சேவைக்கும் மருத்துவக் கல்விக்கும் உரிய நடைமுறைகளையும் நெறிமுறைகளையும் வகுத்தளித்து ஒழுங்குபடுத்துவது இதன் பணியாகும்.

வணிக அறம்

- வணிகச் செயல்பாடுகளாலும், வணிக முடிவுகளாலும் ஏற்படும் தீமைகளை விலக்கிப் பொதுநன்மை கருதும் வரம்புகளைத் தொழில் நிறுவனங்கள் வகுத்துக்கொள்வதும், தம் கடமையையும் பொறுப்புணர்வையும் அறிந்து செயல்படுவதும் வணிக அறமாகும்.

வணிக அறத்திற்குரிய முதன்மை விதிகள்

- வணிக அறம் என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய கருத்தாகும்.
- வளர்ந்த நாடுகள், இத்தகைய கருத்தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் சிறந்த முன்மாதிரிகளாக உள்ளன.
- தம் தொழில்களில் செய்யவேண்டியவற்றை ஏற்றுக்கொண்டும், செய்யக்கூடாதவற்றை விலக்கியும், உரிய விதிகளை வகுத்தும் சமூகநீதி மற்றும் பொதுநன்மை கருதியும் வணிக நிறுவனங்கள் செயல்பட வேண்டும்.
- வாடிக்கையாளர், பணியாளர், சிறுவணிகர், பங்குதாரர்கள், கடனுதவி வழங்கியோர், அரசமைப்பினர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கவேண்டும்.
- சட்ட நியதிகளுக்குட்பட்டுப் பண்பாட்டு விழுமியங்களுடன் தொழில்நிறுவனங்கள் செயலாற்றவேண்டும்.
- தொழில் நிறுவனத் தலைவர்கள், தம் நிறுவனங்களின் அறவியல் கோட்பாடுகளைச் செயல்படுத்துவதில் முன்மாதிரிகளாகத் திகழவேண்டும்.
- வணிக அறவியல் குறித்த முறையான கல்வி அறிவுடையவராகவும், அறிந்த அறிவைச் செயல்படுத்தத் தக்க நடைமுறைகளை அறிந்தவராகவும் நிறுவனத் தலைவர்கள் இருக்கவேண்டும்.
- வணிக அறங்கள் சூழ்நிலைக்கு ஏற்பவும், நிறுவனங்களின் தன்மைக்கேற்பவும், அவை செயல்படும் நாடுகளின் நலனுக்கேற்பவும் மாறும் தன்மையுடையன. வளரும் நாடுகள், இத்தகைய வணிக அறக்கோட்பாடுகளைப் பின்பற்றுவதில் பின்தங்கியேயுள்ளன.
- ஒவ்வொரு நிறுவனமும் அதன் உயர்அதிகாரிகளும், பணியாளர்களும் நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு என்று வகுக்கப்பட்ட அறவியல் நடைமுறைகளையும் கொள்கைகளையும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
- சட்ட வரைவுகளுக்கும் மனித நியதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதோடு, அவற்றை மீறுவதற்கான சூழல்களையும் கவனமாக ஆராய்ந்து அவற்றைத் தவிர்க்கவேண்டும். இக்கடமைகளிலிருந்து பிறழும் வணிக நிறுவனங்கள் காலப்போக்கில் மதிப்பிழந்து விடும்.

- தொழில் / வணிக நிறுவனங்கள், தாம் ஈட்டும் பொருளில், குறிப்பிட்ட ஒரு தொகையைச் சமூகத்திற்காகச் செலவிடுவது கட்டாயமாகும். நூலகம், சுகாதாரம், கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு, கிராமப்புற மேம்பாடு, சாலை வசதி, குடிநீர் வசதி, ஆராய்ச்சி போன்றவற்றிற்குப் பெருநிறுவனங்கள் நிதி உதவி செய்யவேண்டும்.

வணிகத்தின் சிறப்புப் பற்றிப் பின்வருமாறு பட்டினப்பாலை கூறுகிறது.

நெடுநுகத்துப் பகல்போல,
நடுவுநின்ற நல்நெஞ்சினோர்,
வடுஅஞ்சி வாய்மொழிந்து,
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது,
கொடுப்பதூஉம் குறைகொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்
(பட்டினப்பாலை: 206 – 211)

பண்ட விலைக்கு மிகையாகவோ குறையாகவோ கொடுக்காமல் வணிகம் செய்யவேண்டும் என்கிறது பட்டினப்பாலை.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின் (குறள்: 120)

என்கிறார் வள்ளுவர். “மற்றவர்களுடைய பொருளைத் தம்பொருள் போலப் பேணி, அறவழியில் வணிகம் செய்வதே மேலானது என்பது அவரது கருத்தாகும்”.

நுகர்வோர் உரிமைகள்

நுகர்வோர் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (Consumer Protection Act), 1986ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் மூலம், நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் கீழ்க்காணும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

2005ஆம் ஆண்டு, அக்டோபர் 12ஆம் நாள், தகவல் அறியும் உரிமைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம், பொது நிறுவனங்கள் சார்ந்த தகவல்களை அறிந்துகொள்வதும் பொது மக்களின் உரிமையாகிறது.

- பாதுகாப்பு உரிமை
- தகவல் பெறும் உரிமை
- தேர்வு செய்யும் உரிமை
- கேள்வி கேட்கும் உரிமை
- நேர்மையற்ற வணிகத்திலிருந்து பாதுகாக்கும் உரிமை
- இழப்பீடு பெறும் உரிமை
- தூய்மையான சுற்றுச்சூழல் பெறும் உரிமை
- அடிப்படை வசதிகள் பெறும் உரிமை

இச்சட்டத்தின்படி பொருள்களுக்கு இருக்கவேண்டிய தகுதி (Quality), அளவு (Quantity), ஆற்றல் (Potency), தூய்மை (Purity), தரம் (Standard) ஆகியன இல்லாததே குறைபாடு (Defect) எனப்படும். இக்குறைபாடுகள் இல்லாமல் மக்களுக்குப் பொருள்களை வழங்கவேண்டும். இக்குறைபாடுகள் காணப்பட்டால் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அந்தந்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களை அணுகித் தமக்கு ஏற்பட்ட குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ளலாம்.

தேசியத் தர நிர்ணய அமைப்பு

XI Ethics_Lesson 9 Folder.indd 162 21-02-2022 22:28:02

உங்களுக்குத் தெரியுமா?

உலக அளவில், பொருள்களின் தரத்தை உறுதி செய்வதற்கு உலகத்தர அமைப்பு (ISO) 1947 ஆம் ஆண்டில் ஜெனிவாவில் தொடங்கப்பட்டது. இந்தியத் தர நிர்ணய அமைப்பு நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொதுவிநியோக அமைச்சகத்தின் ஆளுமைக்குட்பட்ட ஓர் அமைப்பாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வோர் ஆண்டும், மார்ச் 15 ஆம் நாள் உலக நுகர்வோர் தினமாகவும், டிசம்பர் 24ஆம் நாள், தேசிய நுகர்வோர் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

சட்டஅறம்

இந்திய வழக்குரைஞர் கழகம்

- நீதிமன்றத்தில் வழக்காடும்போது, வழக்குரைஞர்கள் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.
- நீதிமன்றச் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.
- நீதிமன்றங்களால் மட்டுமே சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.
- சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே வழக்குகளை எடுத்து வாதாடவேண்டும்.
- நீதிமன்றத்தில் கண்ணியமான சொற்களைப் பயன்படுத்தவேண்டும்.
- எதிர்த்தரப்பினரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடக்கூடாது.
- தாத்தா, பாட்டி, தந்தை, தாய், கணவன், மனைவி, மகன், மகள், பேரன், பேத்தி, உடன் பிறப்புகள், உடன்பிறப்புகளின் வாரிசுகள், மாமனார், மாமியார், தந்தை மற்றும் தாயாரின் உடன்பிறப்புகள், அவர்களது வாரிசுகள் போன்ற உறவினர்களில் எவரேனும் நீதி அரசராக இருக்கும்போது அந்த நீதி மன்றம் வாதாடக்கூடாது.
- பணிபுரியும் நிறுவனத்திற்குச் சாதகமாகவோ, எதிராகவோ வாதாடக்கூடாது.
- தாமே சாட்சியாக இருக்கும் வழக்கில் வாதாடக் கூடாது.
- தம் வாடிக்கையாளரிடம் வழக்கு தொடர்பான விவரங்களை, வழக்கு தொடங்கியது முதல் வெளிப்படையாகவும் முழுமையாகவும் தெரிவிக்கவேண்டும்.
- தம் வாடிக்கையாளர் தம்மிடம் நம்பிக்கை வைத்துப் பரிமாறிக்கொண்ட தகவல்களை ஒருபோதும் முறைகேடாகப் பயன்படுத்தக் கூடாது.
- வாடிக்கையாளரின் நலம், நேர்மை, கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாப்பது வழக்குரைஞரின் கடமையாகும்.
- தம் சொந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் வழக்குகளை அணுகக்கூடாது.
- தகுந்த சாட்சியங்கள் இல்லாமல் எவரும் தண்டிக்கப்படக்கூடாது. இதில் வழக்குரைஞர் உறுதியாக இருக்கவேண்டும்.
- குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றம் தொடர்பான சாட்சி, தகவல் போன்றவற்றை வழக்காடுபவர் மறைத்துவைத்து அப்பாவிகள் தண்டனைக்கு உள்ளாகும்படி செய்யக்கூடாது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய வழக்குரைஞர் கழகம் – Bar Council Of India – 1961 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவிலுள்ள வழக்குரைஞர்களுக்கான நடத்தை விதிகளைத் தீர்மானிக்கிறது.

- வாடிக்கையாளருக்கும் தமக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களை, வழக்குரைஞர் நேரிடையாகவோ மறைமுகமாகவோ எவருக்கும் தெரிவிக்கக்கூடாது.
- வாடிக்கையாளருக்கு வழக்கு தொடர்பாகக் கூறிய அறிவுரைகள் பற்றி வெளியில் வழக்குரைஞர் பேசக்கூடாது.
- வாடிக்கையாளருக்கு வழக்கு தொடர்பான செலவுகள் குறித்து அவ்வப்போது தெரியப்படுத்தவேண்டும்.
- எதிர்த்தரப்பினருக்குத் தாம்வழங்கிய சட்ட அடிப்படையிலான உறுதிமொழிகளைக் காப்பற்றவேண்டும்.
- வழக்குரைஞர் எவரும் தமது தொழில் குறித்து விளம்பரம் செய்யக்கூடாது.
- சட்டத்திற்குப் புறம்பான வழக்குகளுக்குத் தம் சட்ட அறிவைப் பயன்படுத்தக்கூடாது.

வழக்குரைஞர்கள், தம் தொழிலைப் பொருள் ஈட்டுவதற்கான வழியாக மட்டுமே கருதக் கூடாது. மாறாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளையும் அறிவுரையையும் வழங்கித் தம் வாதத் திறனால் உரிய தீர்ப்புகள் கிடைக்கச் செய்யவேண்டும்.

வழக்குரைஞர்களின் கண்ணியம், நேர்மை, மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நன்னடத்தை ஆகியவற்றால் மட்டுமே, சமூகம் பயன்பெறும். எனவே, ஒட்டுமொத்தச் சமூகமும் சட்டத்தின்வழி நீதி, நியாயம் ஆகியவற்றைப் பெறுவதற்குச் சட்ட அறங்கள் துணைநிற்க வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்றம்

தொழில்நுட்ப அறம்

நவீனத் தகவல் கருவிகளைப் பயன்படுத்திப் பொதுமக்களின் நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே தொழில் நுட்பமாகும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் சுருங்கி ஒரு கிராமமாக மாறிவிட்டது. தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சேவைகள் அறவியல் சார்ந்த சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய அறம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண விழைவது தகவல் தொழில்நுட்ப அறமாகும்.

தொழில்நுட்ப நிறுவனங்களின் மென்பொருள்களைச் சந்தைப்படுத்தும் வேகத்தில், அறவியல் நெறிமுறைகளைப் பின்பற்றாத போக்கே நிலவுகிறது. வரையறுக்கப்பட்ட நெறிமுறைகள் இல்லாதபோது சிலர் அறியாமையாலும், பலர் சட்டங்களைப் பின்பற்றாமலும் தவறு செய்வதற்கு வழி ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு நடைபெறும் நிகழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தொழில்சார் அறம் தேவைப்படுகிறது.

தொழில்நுட்பத்தின் மூலம் சமுதாயத்தைக் கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் எவரையும் பாதிக்காதவாறு அமையவேண்டும். இதை உறுதி செய்வதே தொழில்நுட்பப் பணிசார் அறமாகும்.

தற்சார்பு, கண்ணியம், நாணயம், சவால்களை எதிர்கொள்ளுதல் போன்றவை சேவைத்துறையின் அடிப்படை அறங்களாகும். ஆனால், தொழில்நுட்பத்துறையின் இத்தகைய அடிப்படை அறவியல் நெறிகளுக்கு மாறான

உங்களுக்குத் தெரியுமா?

அரசியல் அறம்

'அதிகாரம் என்பது ஒன்று, அறிவு ஞானம் என்பது வேறொன்று'. ஒரு தேசம் செல்ல வேண்டிய திசையைத் தீர்மானிப்பவர்கள் அதில் வாழும் மக்களின் கண்ணியம், தலைவர்களின் கண்ணியம், அரசியல் கட்சிகளின் கண்ணியம் என்று தனித்தனியாகப் பார்க்க வேண்டியதில்லை. நாடு செல்ல வேண்டிய எதிர்காலப் பாதையே எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் போதுமானது.

- டாக்டர் அம்பேத்கர்

செயல்பாட்டினால், பலவித இடர்ப்பாடுகளைச் சமூகம் சந்திக்க நேரிடுகிறது. தொழில் நுட்பத்துறையில் மென்பொறியாளரே தொழில் நுட்பத்தை உருவாக்குபவராகவும் பாதுகாப்பவராகவும் இருக்கிறார்.

தொழில்நுட்பத்தை மேலாண்மை செய்யத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும். மனித குலத்தின் நிலைத்த நன்மைக்கு பயன்படுத்த அறிவியல் வலியுறுத்துகிறது. சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் மனிதனின் பண்பட்ட வாழ்விற்கு, மிகப்பெரிய அச்சுறுத்தலாகத் தகவல்தொழில்நுட்பங்கள் உள்ளன. அந்த அச்சுறுத்தலைப் போக்கும் வகையில் தொழில்நுட்ப அறங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

அரசியல் அறம்

அரசியலின் நோக்கம், குடிமக்கள் அனைவரும் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் நல்வாழ்வு வாழ்வதற்கான சூழலை உருவாக்கித் தருவதாகும். குடிமக்களை நெறிப்படுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதும் அரசின் கடமையாகும். அரசியலில் ஈடுபடுவோர் தம் கடமைகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து

உங்களுக்குத் தெரியுமா?

அறமும் அரசியலும்

மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ, அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அறம், யாரோ சில துறவிகளின் பேச்சு என்பது போய், வாழ்க்கைச் சட்டம் என்னும் தெளிவு வேண்டும். அரசியல் அல்லல் விளைப்பதற்கெல்லாம் முதல்காரணம் அறமாகிய அடிப்படையைப் புறக்கணிப்பது தான் என்று உணரவேண்டும். காற்று ஊரெல்லாம் கெட்டிருக்கும்போது, நம் நுரையீரலில் மட்டும் தூய்மை நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? பொது வாழ்க்கையாகிய அரசியலில் அறத்தைப் புறக்கணித்தபிறகு தனி வாழ்க்கையில் மட்டும் அறத்தைப் போற்றமுடியுமா? வெளிக்காற்றின் தூய்மையைக் கெடுக்காமல் காப்பது முதல் கடமை. அதை விட்டு மூச்சைப் பிடித்துத் திணறிப் பயன் என்ன?

(- மு. வரதராசனார்)

விலகும்போதும், அரசின் கொள்கைகள் குடிமக்களுக்கு உகந்ததாக இல்லாதபோதும் அறம் சார்ந்த சிக்கல்கள் எழுகின்றன. இது போன்ற சூழ்நிலையில் அரசியல் அறம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண முனைவதும், அரசியல் செயல்பாடுகள் மீதான அறத்தீர்வுகளை வழங்குவதும் 'அரசியல் அறம்' எனப்படும். 'அரசியல் அறம்' அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களின் அணுகுமுறைகள் பற்றி விவாதிப்பதும், அரசின் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் குறித்து விளக்குவதுமாகும்.

XI Ethics_Lesson 9 Folder.indd 165 21-02-2022 22:28:02

திருக்குறளில் அரசியல் அறம்

திருக்குறளில் நாடு, அரசன், ஆட்சிமுறை, குடிமக்கள், படை முதலியவற்றின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்துஅமை வில்லாத நாடு. (குறள் – 740)

ஒரு நாட்டில் எல்லா நலங்களும் வளங்களும் அமைந்திருப்பினும், நல்வேந்தன் ஆட்சியில் இல்லாவிடில், அந்நாடு எவ்வகையிலும் பயனில்லாத நாடாகும் என்கிறார் வள்ளுவர்.

பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து. (குறள்: 738)

நோயின்மை, செல்வம், நல்ல விளைச்சல், இன்பம், தக்க காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அணிகலன்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். இந்த ஐந்து அணிகலன்களில் எவ்விதக் குறைவும் இல்லாமல் நிறைவுடன் ஆட்சி செய்வது வேந்தன் மற்றும் ஆட்சியாளர்களின் கடமையாகும்.

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (குறள்: 381)

படைவலிமை, நற்குடிமக்கள், உணவுவளம், நல்ல அமைச்சர், நல்ல நண்பர், காவல் நிலைகள் ஆகிய ஆறும் உடையவரே ஆட்சி செய்யத் தகுந்தவர் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

நிறைவுரை

தொழில்சார் அறம், கல்வி அறம், மருத்துவ அறம், வணிக அறம், நுகர்வோர் உரிமைகள், சட்டஅறம், தொழில்நுட்ப அறம், அரசியல் அறம் ஆகியன இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வருவனவற்றுள் தொழில்சார் அறங்கள் எனக் குறிப்பிடப்படுபவை
   1) தனிமனித ஒழுக்கம், உயர்நிலை விழுமியங்கள்
   2) உயர்நிலை விழுமியங்கள், சட்டங்களைப் பின்பற்றல்
   3) சட்டங்களைப் பின்பற்றல், தனிமனித ஒழுக்கம்
   4) அரசியல் நெறிமுறைகள், தொழில் துறை

   அ) 1, 2 சரியானவை ஆ) 1, 4 சரியானவை
   இ) 1, 2, 3 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

2. பின்வருவனவற்றுள் தொழில்சார் அறத்திற்குப் பொருந்தாத கூற்றைத் தேர்ந்தெடுக்க.
   அ) தொழில் அறங்களைப் பரந்த கண்ணோட்டத்துடன் உருவாக்க வேண்டும்.
   ஆ) தொழில்துறையின் செயல்பாடுகள், தீங்கு விளைவிப்பனவாக இருத்தல் கூடாது.
   இ) சமூக, பொருளாதாரச் சூழலுக்கேற்றவாறு வகுக்கப்பட வேண்டும்.
   ஈ) சூழலின் மாற்றங்களுக்கேற்ப, அவ்வப்போது திருத்தம் மேற்கொள்ள வேண்டியதில்லை.

3. பின்வருவனவற்றுள் தனிமனிதன், சமூகம், நாடு ஆகியவற்றின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முதன்மை நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க.
   அ) தொழில்நிறுவனம் ஆ) பயிற்சி நிறுவனம்
   இ) கல்வி நிறுவனம் ஈ) குடிமை நிறுவனம்

XI Ethics_Lesson 9 Folder.indd 166 21-02-2022 22:28:02

www.tnschoolbooks.in

4. இந்திய மருத்துவக் கழகம், தேசிய மருத்துவ ஆணையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு ----.

அ) 2018 ஆ) 2020 இ) 2021 ஈ) 2019

5. பின்வரும் கூற்றுக்குப் பொருத்தமற்ற தொடர் எது?

ஆசிரியர் பணிக்குத் தேவையானவை

அ) அறிவாற்றல் ஆ) தனித்துவமான திறமைகள்

இ) உள்ளார்ந்த ஈடுபாடுகள் ஈ) வணிகச் செயல்பாடுகள்

6. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தெரிவு செய்க.

அ. உலக நுகர்வோர் தினம்	-	1. டிசம்பர் 24
ஆ. கல்வி வளர்ச்சி நாள்	-	2. அக்டோபர் 12
இ. தகவல் அறிவும் உரிமைச் சட்டம்	-	3. ஜூலை 15
ஈ. இந்திய தேசிய நுகர்வோர் தினம்	-	4. மார்ச் 15

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ - 4

ஆ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ - 3

இ) அ – 3, இ – 2, இ - 1, ஈ - 4

ஈ) அ – 4, ஈ – 3, இ – 2, ஈ – 1

7. ஒவ்வொரு நிறுவனமும் தங்களின் தயாரிப்புகளைத் தரமானவை, பாதுகாப்பானவை என---------

அ) வியாபாரம் செய்கின்றன ஆ) விளம்பரம் செய்கின்றன

இ) இறக்குமதி செய்கின்றன ஈ) ஏற்றுமதி செய்கின்றன

8. பொருந்தாத விடையைக் கண்டறிக.

அ) நீதிமன்றத்தில் கண்ணியமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஆ) பணிபுரியும் நிறுவனத்திற்கு எதிராக வாதாடலாம்.

இ) எதிர்தரப்பினரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடக் கூடாது.

ஈ) சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே வழக்குகளை எடுத்து வாதாட வேண்டும்.

9. தொழில்துறையில் தொழில்நுட்பத்தை உருவாக்குபவர்

அ) பணியாளர் ஆ) மென் பொறியாளர்

இ) தொழிலாளர் ஈ) கண்காணிப்பாளர்

10. கூற்று: 'பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்குஇவ் வைந்து ' - குறள்

விளக்கம்: நோயின்மை, செல்வம், நல்ல விளைச்சல், இன்பம், தக்க காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அணிகலன்கள். இவற்றில் எவ்வித குறைவும் இல்லாமல் நிறைவுடன் ஆட்சி செய்வது வேந்தன் மற்றும் ஆட்சியாளரின் கடமை.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்று சரி, விளக்கம் சரி

இ) கூற்று தவறு, விளக்கம் தவறு ஈ) கூற்று சரி, விளக்கம் போதுமானதன்று

XI Ethics_Lesson 9 Folder.indd 167 21-02-2022 22:28:02

குறுவினா

1. தொழில்சார் அறம் – குறிப்பு வரைக.
2. மருத்துவமுறைபற்றிப் பிளாட்டோ கூறியது யாது ?
3. வணிக அறம் என்றால் என்ன ?
4. தகவல் அறியும் உரிமைச்சட்டம் எப்போது, எதற்காகக் கொண்டுவரப்பட்டது ?
5. ISO உலகத் தர அமைப்பினால் நீவிர் அடையும் நன்மைகள் யாவை ?
6. மாணவர்களின் படைப்பாற்றல் வெளிப்பட, ஆசிரியர் பின்பற்ற வேண்டிய அணுகுமுறை யாது ?
7. மருத்துவரின் பொறுப்புணர்வுகள் யாவை ?

சிறுவினா

1. 'மனிதர்களை உருவாக்குவதற்கு அறப்பண்புடன்கூடிய கல்வி தேவை'. – இக்கூற்றை விளக்குக.
2. சட்ட அறம் என்றால் என்ன ? அஃது எப்போது உருவாக்கப்பட்டது ?
3. தகவல் தொழில்நுட்ப அறம் என்றால் என்ன ?
4. தொற்றுநோயின்போது நீவிர் கடைப்பிடிக்க வேண்டியனவற்றைக் கூறுக.
5. நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் உரிமைகள் யாவை ?
6. அறிவியல் கல்வியினால் கிடைக்கும் கூடுதல் நன்மைகள் யாவை ?

நெடுவினா

1. இன்றைய உலகில் தொழில்சார் அறங்களின் தேவையை விளக்குக.
2. உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ள மருத்துவ அறங்கள் யாவை ?
3. வழக்குரைஞர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைப் பட்டியலிடுக.
4. உயர்கல்வியில் ஆசிரியர்களுக்கான அறவியல் கோட்பாடுகளை விளக்குக.
5. வணிக அறத்திற்கு அடிப்படையான முதன்மை விதிகளை எடுத்துரைக்க.
6. மனிதனை மனிதனாக மாற்றும் கல்வியால் நீவிர் அடையும் நன்மைகள் யாவை ?

அலகு
10

அண்மைக்கால அறநெறிப் போக்குகள்

ZN7UA

கற்றல் நோக்கங்கள்

- காந்தியடிகளின் அறக்கோட்பாடுகளை அறிதல்.
- சமய நல்லிணக்கத்தின் தேவையைப் புரிந்துகொள்ளுதல்.
- சுயமரியாதை இயக்கத்தின் நோக்கத்தை அறிந்துகொள்ளுதல்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான செயல்பாடுகளை தெரிந்துகொள்ளுதல்.
- இராணுவ அறத்தின் இன்றியமையாமையை தெரிந்துகொள்ளுதல்.
- இன்றைய உலகில் பெண்ணியத்தின் முக்கியத்துவத்தை அறிதல்.

நுழைவு வாயில்

அண்ணல் காந்தியடிகளின் அறக்கோட்பாடுகளான உண்மை, அகிம்சை, சத்தியம், சர்வோதயம் ஆகியன விளக்கப்படுகின்றன. அவரின் சமுதாய அறம், சமயநெறி, சமய நல்லிணக்கம் ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. மனிதநேயம் – வரையறை, வள்ளலாரின் அறவாழ்வு, சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த பெரியாரின் அறஞ்சார் குறிக்கோள்கள் ஆகியவையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சூழலியல் அறம், இராணுவ அறம், விலங்கு நல அறம் சார்ந்தும் பெண்ணிய அறம் சார்ந்த கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

காந்திய அறம்

இந்தியாவில் தோன்றிய சமூகச் சீர்திருத்தவாதிகளுள் குறிப்பிடத்தக்கவர் காந்தியடிகள். இவர் உண்மை, அகிம்சை ஆகியவற்றைத் தம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பின்பற்றி வெற்றி கண்டவர். இவற்றின் மூலம், இந்தியாவை ஒரு சிறந்த அகிம்சை நாடாக உலகறியச் செய்தார்.



மகாத்மா காந்தி

காந்திய அறக்கோட்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது ‘உண்மை’ மற்றும் ‘அகிம்சை’ என்ற இரண்டு அறநெறிகளே ஆகும். இந்தியா மட்டுமன்றி உலகமே வியக்கும்படி அன்பு, அகிம்சை, சத்தியம், தர்மம், தூய்மை, கடமை, தியாகம், எளிமை, புலனடக்கம், நம்பிக்கை போன்ற நற்பண்புகளைச் சிறுவயது முதற்கொண்டு வாழ்நாள் இறுதிவரை பின்பற்றியவர் காந்தியடிகள்.

அகிம்சை என்னும் அணுகுமுறையின் மூலம், சமூகப் பிரச்சனைகளுக்கு அறவழியில் தீர்வு கண்டார். அகிம்சைவழிப் போராட்டத்தின் மூலம் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்தார்.

உண்மை

'அறிவியலுக்கு அடிப்படையானதும் முதன்மையானதும் உண்மையே' என்கிறார் காந்தியடிகள். உண்மையே கடவுள் என்றும் குறிப்பிடுகிறார். உண்மை என்பது அனைவரும் ஏற்கும் ஒன்றாகும். கடவுளை ஏற்காதோரும் உண்மையை ஏற்கின்றனர். உண்மை அன்றாட வாழ்வில் அனைவருக்கும் நன்மை பயப்பதாகும். கடவுளின் இயல்புகளாகிய இருப்புநிலை, உணர்வுநிலை, ஆனந்தம் என்பனவும் மாறாத உண்மைகளாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

அரிச்சந்திரன் உண்மைக்காகவும் சத்தியத்திற்காகவும் அரசாட்சி, நாடு, அரண்மனை, மனைவி, மகன், செல்வம் என அனைத்தையும் இழந்து, பல சோதனைக்குட்பட்டபோதும் உண்மை பேசுவதைக் கைவிடவில்லை. இது சிறுவயதிலேயே காந்தியடிகளை மிகவும் கவர்ந்தது.

அன்பு அல்லது அகிம்சை மூலமாக மட்டுமே கடவுளை உணரலாம். மேலும், மனிதர்களுக்குச் செய்யும் தொண்டுகள் மூலமும் இறைவனைக் காணலாம் என்கிறார். மனிதர்களுக்குச் செய்யும் தொண்டே மனிதனை மனிதனோடு இணைக்கக்கூடிய செயலாகும். சமூகத் தொண்டுக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சி என்பது இவ்வுலகில் இல்லை.

அகிம்சை

தனிமனிதன் பிற உயிர்களுக்கு எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் தீங்கு விளைவிக்காத செயலே 'அகிம்சை' ஆகும். காந்தியடிகளின் கருத்துப்படி சத்தியமும், அகிம்சையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். அகிம்சை நெறியைத் தனிமனிதநிலை முதல் குடும்பம், சமுதாயம், நாடு என அனைத்து நிலைகளிலும் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான ஆற்றல் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. மனிதரைத் திருத்த வேண்டுமென்றால் அவர்மீது அன்பு செலுத்தி, அகிம்சை வழிநின்று திருத்திவிடலாம் என்கிறார் காந்தியடிகள். சமயங்களில் கூறப்படும் அகிம்சைக் கோட்பாடுகளுக்குக் காந்தியடிகள் புதிய விளக்கம் கண்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

இருபதாம் நூற்றாண்டில் அமைதி வழிப் புரட்சி கண்டவர் காந்தியடிகள். அறம்பற்றிக் கூறும் காந்தியடிகளார் சமயத்தையும் ஆன்மீகத்தையும் அறத்துடன் இணைக்கின்றார். அறம் சமய அடிப்படை கொண்டது. தெய்வீகமானது – புலன் இன்பம் நாடாதது – வாழ்வுக்கு உயிரானது – தன்னலமற்றது – செல்வவிருப்பற்றது – தியாகம் செய்வது – பிறர்க்கென வாழ்வது என்பன காந்தியடிகளார் காணும் அறத்தின் அடித்தளங்களாகும்.

"அறிவியல் எண்ணங்கள் செயல்வடிவம் பெறாவிட்டால் பயனற்றதாகிவிடும். உடலாற்றல், அறிவாற்றல் இரண்டைக்காட்டிலும் ஒழுக்க ஆற்றலே உலகுக்கு நல்லது".

சத்யாகிரகம்

சத்யம் + ஆகிரகம் = சத்யாகிரகம், சத்யம்-உண்மை, ஆகிரகம்-பற்றுதல். சத்தியாகிரகம் என்றால் உண்மையை உறுதியாகப் பற்றுதலாகும். மேலும், உண்மைக்காக அறவழியில் அமைதியாக எதிர்ப்பைத் தெரிவிப்பதுமாகும். உண்மையே கடவுளாக இருப்பதால் அறவழியில் போராடித் தீமையை வெல்லுவதே 'சத்யாகிரகம்' எனப்படுகிறது.

சத்யாகிரகத்தைக் கடைப்பிடிப்பவர் தீமையை நன்மையின் மூலமும், கோபத்தை அன்பின் மூலமும், பொய்ம்மையை உண்மையின் மூலமும், வன்முறையை அகிம்சையின் மூலமும்

XI Ethics_Lesson 10 Folder.indd 170 21-02-2022 22:27:25

உங்களுக்குத் தெரியுமா?

மகாத்மா காந்தியடிகள் சத்யாகிரகக் கொள்கையைக் கடைப்பிடித்து முதன்முதலில் வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில்தான். அந்த அறவழி வெற்றியே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் வித்திட்டது.

வெற்றி கொள்ளவேண்டும். அகிம்சை என்பது, கோழைகளின் ஆயுதமன்று; அது வீரம் உடையவர்கள் மட்டுமே கையாளக்கூடியதாகும். எளிமை, அமைதி, துறவு, தியாகம், புலனடக்கம், அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளை உடையவராகச் சத்யாகிரகி திகழவேண்டும். 'சத்யாகிரகியாகத் திகழ விரும்புபவர், தம் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். அனைத்து மனிதர்களையும் பாகுபாடில்லாது மதித்தும், சமய நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும். அகிம்சை தனிமனித வாழ்க்கைக்கான நடத்தை மட்டுமன்று, அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார வாழ்வுக்கும் ஏற்புடையதாகும். இதுவே உலகப் பண்பாட்டிற்குக் காந்தியடிகளின் கொடையாகும்.

சத்யாகிரகத்தின் பண்புகள்

- கொண்ட கொள்கையில் பெருமையும், முயற்சியில் கண்ணியமும் கொண்டிருத்தல்.
- வெளிப்படையான எண்ணத்துடனும் திறந்த மனத்துடனும் செயலாற்றுதல்.
- எதற்கும் கலங்காது, அச்சத்தை வெற்றி கொள்ளும் திறன் பெற்றிருத்தல்.
- உண்மை ஈடுபாடும், செயலுறுதியும் கொண்டிருத்தல்.
- மனம், வாக்கு, செயல் இம்மூன்றையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றுதல்.
- தன்னடக்கம், பொறுமை, கடவுள் நம்பிக்கை முதலியவற்றைக் கொண்டிருத்தல்.
- அடக்கம், எளிமை, தியாக மனப்பான்மை ஆகிய அரிய குணங்களைப் போற்றுதல்.
- திருடாமை, பிறர் பொருளை விரும்பாமை, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தல்.

உங்களுக்குத் தெரியுமா?

தென்னாப்பிரிக்காவில் கருப்பர் இன மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட மார்டின் லூதர் கிங், காந்தியடிகளின் அகிம்சை நெறியைப் பின்பற்றி வெற்றி கண்டார்.

சர்வோதயம்

'சர்வோதயம்' என்ற சொல்லின் பொருள் 'அனைவருக்கும் மேம்பாடு' என்பதாகும். ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும், அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே சர்வோதயம் ஆகும். சமுதாயத்தில் கடைநிலையில் இருப்பவர்களும் கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் சமயத் துறைகளில் ஏற்றம் பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இக்கருத்தையே மேலை நாட்டு அறிஞரான ஹென்றி S.L. போலக் ஜான் ரஸ்கினின் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற நூல் வலியுறுத்துகிறது. இந்நூலைக் காந்தியடிகள் படித்ததன் மூலம் சர்வோதயத்தின் அடிப்படை உண்மைகளைத் தெரிவு செய்தார்.



ஹென்றி S.L. போலக் ஜான் ரஸ்கின்

"சர்வோதயம்" என்பது, "முழுமையான வளர்ச்சி" அல்லது அனைத்து நிலைகளிலும் மனிதன் அடையும் முழுவளர்ச்சி எனவும்

XI Ethics_Lesson 10 Folder.indd 171 21-02-2022 22:27:26

பொருள்படும். அனைத்துச் சமூகத்தினருக்கும் எல்லா வகை நலன்களையும் பெற்றுத் தருவதே சர்வோதயம் ஆகும். அனைத்துத் தொழிலுக்கும் சமமதிப்பு, எத்தொழிலையும் மதித்தல், அனைவருக்கும் உடல் உழைப்பு என்பன சர்வோதயக் கொள்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

காந்தியடிகளின் சமுதாய அறங்கள்

நாட்டிலுள்ள அனைவரும் சகோதரர்களே. 'பிறப்பு' என்பது இனம், மொழி, சமயம், சாதி என்ற அனைத்தையும் கடந்த ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். உண்மைக்குமுன் அனைவரும் சமம். எனவே, கடவுளுக்கு முன்பும் அனைவரும் சமம் என்ற காந்தியடிகளின் கருத்து சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படையானதாகும்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்படவேண்டும். பெண்கள் அனைத்துத் துறையிலும் சம உரிமை பெறவேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருந்தார். மக்களின் உடல், உள்ளம், ஒழுக்கம், பொருள் ஆகியவற்றுக்கு மது ஊறு விளைவிப்பதால் மதுவிலக்கைக் கடுமையாக வலியுறுத்தினார். தொடக்கக்கல்வி, தாய்மொழியில் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்றார். கல்வி என்பது, பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாது, மாணவனின் உயிர், உடல், மனம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்றார். தொழிற்கல்விதான் நாட்டுக்கு நலன் தரும் என்றும் காந்தியடிகள் கருதினார்.

ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே பிறப்பாலோ, சாதி மற்றும் மதங்களாலோ வேறுபாடு இருப்பின், அது சமூக ஒற்றுமைக்கு ஏற்புடையதன்று. மனிதன் சக மனிதனை நேசிக்க எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் ஒழுகவேண்டும்.

இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்பதைத் தாமும் உணர்ந்து, உலகிற்கும் காந்தியடிகள் உணர்த்தினார். ஒவ்வொரு மனிதனும் அறவழியில் நின்று, பிறரை வருத்தாது, தனது தேவைகளுக்கு ஏற்பப் பொருள் ஈட்ட வேண்டும். ஈட்டிய பொருளை அளவோடு செலவிட்டுப் பிறருக்கும் கொடுக்க வேண்டும். எளிய உணவு, எளிய ஆடை, எளிய வாழ்வு, எல்லாரிடத்தும் அன்பு எனக் காந்தியடிகள் எளிமையின் இலக்கணமாய் ஆசிரம வாழ்வு வாழ்ந்தார். அவர் தமக்குரிய வேலைகள் அனைத்தையும் தாமே செய்துகொண்டார். அவரின் எளிய வாழ்க்கைதான், அவருக்கு மகத்தான ஆற்றலைக் கொடுத்து, 'மகாத்மாவாக' அவரை உயர்த்தியது.

உங்களுக்குத் தெரியுமா?

சமுதாயத்தின் ஏழு பாவங்கள்
(Seven deadly sins)

1. உழைப்பில்லாத செல்வம்
   (Wealth without work)
2. மனச்சான்றில்லாத மகிழ்ச்சி
   (Pleasure without conscience)
3. பண்பில்லாத அறிவு
   (Knowledge without character)
4. அறமில்லாத வணிகம்
   (Business without morality)
5. மனிதநேயமில்லாத அறிவியல்
   (Science without humanity)
6. தியாகமில்லாத சமயம்
   (Religion without sacrifice)
7. கொள்கையில்லாத அரசியல்
   (Politics without principle)

யங் இந்தியா 22.10.1925,
(மகாத்மா காந்தி)

காந்தியடிகளின் சமயநெறி

காந்தியடிகள் சிறுவயதிலிருந்தே 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கையுடையவர். ஒருவருடைய சிக்கல்களுக்காக அனைவரும் கடவுளிடம் கூட்டுப் பிரார்த்தனை செய்யும்போது, அனைவரிடமும் ஒற்றுமையுணர்வு ஏற்பட்டு, அந்த ஒற்றுமையின் வலிமையால் கடவுளைக் காணலாம் என்ற கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டது. மனிதனிடமுள்ள விலங்குத்தன்மையைத் திருத்திச் சீர்செய்வதே 'ஒழுக்கம்' என்றும், அதைத் தருவது சமயம் என்றும் காந்தியடிகள் கூறினார். சமயத்தின் சாரமே ஒழுக்கம். 'சமயமில்லாத

வாழ்வு துடுப்பு இல்லாத படகு போன்றது' என்றும் கருதினார். வேத உபநிடதங்கள், மகாவீரர் அறிவுரைகள், பௌத்தப் பிடகங்கள், தோரா, பைபிள், திருக்குரான், கிரந்தசாகிப் போன்ற பல சமய புனித நூல்களில் உள்ள கருத்துகள், ஒரு சமயத்தவருக்கு மட்டுமே உரியவை அல்ல; உலக மக்கள் அனைவரும் கற்றுணர்ந்து பின்பற்ற வேண்டியனவாகும் என்றும் காந்தியடிகள் வலியுறுத்தினார்.

உங்களுக்குத் தெரியுமா?

மதங்களிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையைத் தவிர வேறு எதுவும் நிலைத்திருப்பதில்லை என்பதில் அனைத்துச் சமயங்களும் ஒன்றுபட்டுள்ளன. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய சமயங்களில் இணைந்து அதற்குரிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகள்

- அன்பு, தன்னடக்கம் உள்ளவனிடத்தில் உண்மையைக் காணலாம்.
- ஆடை, அணிகலன்களில் அழகு இல்லை, உண்மையாகப் பணியாற்றுவதில்தான் அழகு உள்ளது.
- பிறரைத் தாழ்த்துபவன் எவனோ, அவன் பிறரால் தாழ்த்தப்படுவான்.
- உண்மையான அன்பு, தியாகம் பலனை விரும்பாது.
- இலட்சியத்திற்காக உழைப்பவனை யாராலும் வெல்ல முடியாது.
- நமக்குத் தெரிந்த உண்மைப்படி வாழ்ந்தால் போதும், நமது உண்மை எதுவென்று கடவுளுக்குத் தெரியும்.
- ஒழுக்கமில்லாத கல்வியால் பயன் ஏதும் இல்லை.
- ஐம்புலன்களை அடக்காமல், மனத்தை அடக்க முடியாது.

போன்றவை மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகளில் போற்றத்தக்கனவாகும்.

சமய நல்லிணக்கம்

சமய நல்லிணக்கம் அல்லது மத நல்லிணக்கம் (Religious harmony) என்பது, ஒரு நாட்டில் அவரவர் தங்கள் சமயத்தைப் பின்பற்றி வாழும்போது, பிற சமயம் சார்ந்த மக்களின் நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் மதித்து ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ்வதாகும். மக்களிடையே சமய நல்லிணக்கம் வளர, நமது அரசியல் அமைப்புச் சட்டம், மக்களுக்குப் பல உரிமைகளை வழங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளாகவே பல சமயத்தவர், பல இனத்தவர், பல மொழியினர், பல பண்பாட்டு மரபினர் வாழும் பன்மைச் சமூகமாகவே நம் நாடு திகழ்ந்து வருகிறது. பன்மைச் சமூகத்தில் சமய நல்லிணக்கம் இருந்தால் மட்டுமே அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். எனவே, சமய நல்லிணக்கமே நம் நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் வலுவான அடித்தளமாகிறது.

சமய நல்லிணக்கத்திற்குத் தடையாக இருப்பவை கொள்கை வேறுபாடுகள் அல்ல. சமயங்களுக்கிடையே காணப்படும் ஆதிக்க மனப்பான்மை, வெறுப்பு, பகைமை, பொறாமை, நம்பிக்கையின்மை போன்றவையாகும். இவற்றைக் களைய, மனிதர்களிடையே சமய சமரசம் வேண்டும்.

உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்தினரும் பிற சமயங்களின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களைப் பற்றித் தெரிந்துகொண்டு அவற்றின் உணர்வுகளையும், உயர்ந்த பண்புகளையும் மதிக்கவேண்டும். ஒரு நாட்டில், 'மொழி, சமய, பண்பாட்டுப்பன்மை' இருப்பது என்பது தவிர்க்க முடியாததாகும். அவரவர் சமய உரிமைகளையும் நெறிகளையும் முறையாகப் பின்பற்றி வாழ்ந்துவந்தால் சமயப் பூசலற்ற சமத்துவச் சமுதாயம் உருவாகும்.

XI Ethics_Lesson 10 Folder.indd 173 21-02-2022 22:27:26

உங்களுக்குத் தெரியுமா?

இந்துக்கள் நாகூராண்டவர் மசூதிக்குச் செல்வதும்–வேளாங்கண்ணித்திருச்சபைக்கு செல்வதும் – பிற சமயங்களோடு கொண்டுள்ள சமய நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அனைத்துச் சமயங்களும் மனிதனுக்கு மிக உயரிய நிலையைக் கொடுத்துள்ளன. மனிதர்கள் அனைவரும் கடவுள் தன்மையை அடைய முடியும் என்பதை அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. இதையே காந்தியடிகளும் பரிந்துரைத்துள்ளர்.



இந்து திருக்கோயில்

நாகூர் தர்கா

வேளாங்கண்ணித் திருத்தலம்

சமயநல்லிணக்கம் சமூக நல்லிணக்கத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. இதை நன்குணர்ந்த வள்ளலார், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் முதலானோர் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தியுள்ளனர். சமய நல்லிணக்கம் என்பது, அனைத்துச் சமயங்களையும் உண்மையானதாக ஏற்கும் மனநிலையாகும். ஏனெனில், அனைத்துச் சமயங்களின் அடிப்படை உண்மைகளும் ஒன்றாகவே உள்ளன. அவற்றின் சடங்குகள், சம்பிரதாயங்கள் நடைமுறைகள் மட்டுமே வேறுபடுகின்றன. 'அனைத்துச் சமயங்களும் கடவுள் என்ற கடலைத் தேடிச் செல்லும் பல்வேறு நதிகள்' எனத் தாயுமானவர், வள்ளலார், இராமகிருஷ்ணர் எனப் பலரும் கூறியுள்ளனர். எனவே, சமய நல்லிணக்கம் இக்காலத்தின் தேவையாகும்.

இராமகிருஷ்ணர்

விவேகானந்தர்

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20, சமய நல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்கப் படுகிறது.

'ஒரு மனிதன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், அவனை மகிழ்விப்பதும் அவனது பசிக்கு உணவளிப்பதும் துயர் துடைப்பதுமே மிகச்சிறந்த சமூகத் தொண்டு' என்று நபிகள் நாயகம் கூறுகிறார். எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்து அவற்றை எல்லா மக்களும் பின்பற்றும் வகையில் அறியச் செய்வதால் உலகளாவிய சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்படுவது உறுதியாகும். இதனால், சமய நல்லிணக்கம் மேம்படும் எனலாம்.

மனிதநேயம்

பிற உயிர்கள்மீது அன்பு செய்தல், பரிவு காட்டுதல், மன்னித்தல், ஒற்றுமையைப் பேணல், பகைவனுக்கும் நன்மை செய்தல் போன்ற உயரிய பண்புகளை உள்ளடக்கியதே மனிதநேயம் ஆகும்.

இத்தகைய மனிதநேயப் பண்புகளைப் பண்டைய தமிழர்கள் தாங்கள் மேற்கொண்ட போர்முறை முதற்கொண்டு, பல்வேறு சமூக நெறிமுறைகளிலும் பின்பற்றினர். போர் அறங்களை மதித்துப் போற்றியது போலவே வாழ்வியல் அறங்களிலும் மனிதநேயத்தைப் போற்றிக் காத்தனர். இதற்குச் சங்க இலக்கியம் சான்றாகிறது.

மனிதநேயம் - வரையறை



வடலூர் இராமலிங்க அடிகளார்

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று அனைத்து உயிர்கள் மீதும் பெரும்பரிவு காட்டினார் வள்ளலார். ஆறறிவு பெற்ற மனிதன், சக மனிதனிடம் மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களிடமும் கருணையோடும் அன்போடும் நடந்துகொள்வதே மனித நேயமாகும். மற்றவர்களுக்கு உதவுவதற்காகத்தன்னையே முழுமையாக ஒப்பளிக்கும் உயர்ந்த உள்ளமே மனித நேயத்திற்கு அடிப்படையாகும்.

உலகில் மனித நேயத்தைப் பற்றி அதிகம் பேசுவதைவிட, மனிதநேயமிக்க உலகாக இதை மாற்றுவதே நமது கடமையாகும்.

மனிதனின் சிக்கல்களையும் துன்பங்களையும் சகமனிதர்களால் மட்டுமே தீர்க்கமுடியும். நமது தமிழ்ப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலில் உலகளாவிய மனிதநேயம் வலியுறுத்தப்படுகிறது. தற்காலத்தில் நிகழும் பெரும்பாலான சமூகப் சிக்கல்களுக்கு மனிதநேயமே தீர்வாக அமையும்.

உங்களுக்குத் தெரியுமா?

வள்ளலாரின் கொள்கை சீவகாருண்யமும் ஆன்மநேய ஒருமைப்பாடுமே ஆகும். எல்லா உயிர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி இரக்கம் காட்டிச் சமமாகப் பாவித்து அன்புடன் ஒத்து வாழ்தல் வேண்டும் என்பதே வள்ளலார் காட்டிய வழியாகும். சமயவேறுபாடு, சாதிவேறுபாடு, வருணாசிரமம் ஆகியவற்றைக் முற்றிலும் வெறுத்து ஒதுக்கிய கருணையாளர் வள்ளலார். உலக உயிர்கள் அனைத்தையும் மனிதநேயத்தாலும் அருள் உணர்வாலும் ஒப்ப மதித்து ஒழுகிய சித்தர். சடங்குகளையும் சமயத்தின் பெயரால் நிகழும் பலியினையும் முற்றாகக் கண்டித்தவர். கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப்போக புலாலைத் தவிர்க்கவேண்டும் என்று போதித்தவர். உயிர்களுக்கு இரக்கம் காட்டினால்தான் இறைவன் நம்மிடம் இரக்கம் காட்டுவான் என்று ஆன்மநேயம் கொள்ளச் செய்த ஆன்றோர். சமத்துவம் பேசிய சான்றோர். பசிபோக்கும் பேரறத்தை வலியுறுத்திய அருட்செல்வர். எல்லா உயிர்களிடத்தும் பரிவும் இரக்கமும் அன்பும் அருளும் படைத்தவர். இவர் மக்களின் நல்வாழ்வுக்காக ஏற்படுத்திய அமைப்புகளாவன:

1. சத்திய தருமச் சாலை
2. சத்திய ஞான சபை
3. சமரச சுத்த சன்மார்க்க சங்கம்.

குடும்ப உறவினர்களிடமும் மனிதநேயம் காக்கப்பட வேண்டும். குடும்பத்தில் வயதானவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்களிடத்தும் மனிதநேயத்தோடு நடந்துகொள்ள வேண்டும். குடும்பத்தில் மனிதநேயம் இல்லாதபோது சமூகத்திலும் மனிதநேயம் அற்றுப்போகிறது. எனவே, மனிதநேயம் குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

சுயமரியாதை அறம்

பெரியார் ஒரு சிந்தனைக் களஞ்சியம், சமூகச் சீர்திருத்தச் செம்மல் ஆவார். கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, எழுத்துச் சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு, எனப் பல பயனுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தப் பெரியார் அரும்பாடுபட்டுள்ளார். மக்களிடையே சுயமரியாதை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஓங்கி வளர வேண்டும் என்பதே இவரின் உயிர் மூச்சாக இருந்தது.



தந்தை பெரியார்

ஒவ்வொரு சாதியும் முன்னேறவேண்டும் என்றில்லாமல், ஒட்டுமொத்தச் சமூகமும் முன்னேற வேண்டும் என்கிறார் தந்தை பெரியார். சமூகத்தில் உயர்வு, தாழ்வு நீங்கி உண்மையறிவு வளரவேண்டும். சமத்துவம் நிலைக்கவேண்டும். சமூக ஒற்றுமை வலிமை பெறவேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் வாழவேண்டும் எனப் பெரியார் விரும்பினார். இதைச் சாதிப்பதற்காக உருவாக்கப்பட்டதே சுயமரியாதை இயக்கமாகும். இதுவே, பெரியாரின் உயிர்நாடியாக விளங்கியது.

மக்கள் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பிடித்தவர் தந்தை பெரியார். இவர் மிகச்சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். இவர் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு சமூகச் சிக்கல்களுக்காக மிகுந்த துணிவுடன் போராடி வெற்றி கண்டு சமூக நீதியை நிலைநாட்டினார். தேசநலன் கருதித் தம் குடும்பத்தையே பல சமூகநீதிப் போராட்டங்களில் ஈடுபடுத்தினார். ஆதலால், இவர் 'சமுதாயச் சிற்பி' என்றும் அழைக்கப்பட்டார். இவரது துணிச்சலான போராட்டங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது 'வைக்கம்' போராட்டம். இவர் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது, கேரளா வாழ் மக்களுக்காகவும் போராடிச் சிறை சென்று வெற்றி கண்டார்.

வைக்கம் வீரர்

கேரள மாநிலத்தின் திருவாங்கூரில் உள்ள 'வைக்கம்' என்ற ஊரில் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு மட்டும், அவ்வூரின் முக்கிய வீதிகளில் நடப்பதற்கும் அங்குள்ள ஆலயங்களுக்குள்ளே சென்று வழிபடவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதை அறிந்த தந்தை பெரியார் அங்குச் சென்று திருவாங்கூர் மன்னருக்கு எதிராகப் போராடி, அவ்வூர் மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்தார். சமூக நீதிக்காக மிகுந்த துணிச்சலுடன் மன்னரையே எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட இச்செயலைப் பாராட்டி இவருக்குத் திரு.வி.க. அவர்கள் 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்தை அளித்தார்.



திரு.வி.க

உங்களுக்குத் தெரியுமா?

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் சென்னையில் மறைமலை அடிகளின் மகளான திருமதி நீலாம்பிகை அம்மையார் தலைமையில் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் வைக்கம் வீரர் ஈ.வெ.ரா. அவர்கள் கலந்துகொண்டு பெண்ணுரிமைக்காக எழுச்சியுரையாற்றினார். இம்மாநாட்டின் இறுதியில் திருமதி நீலாம்பிகை அம்மையார் இவருக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தை வழங்கினார். அன்றுமுதல் அனைவராலும் பெரியார் என்றே அழைக்கப்படுகிறார்.

சுயமரியாதை இயக்கம்

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் சமூகத்தில் சமத்துவம் ஏற்படவேண்டும் என்பதாகும். கல்வி, உணவு, உடை, நீதி, வேலைவாய்ப்பு, பதவிகள் என அனைத்திலும் சமத்துவம் வேண்டும் என்பதே இக்கொள்கையின் மையக்கருத்தாகும். மனிதன் என்பவன் மானம் உள்ளவனே என்பதை உணர்ந்து, ஒவ்வொரு மனிதனும் சக மனிதனுக்கு மதிப்பளிக்க வேண்டும்; மக்களுக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும்; மக்கள் அனைவரும் அறிவும் மரியாதையும் மிக்கவர்களாக வாழவேண்டும் என்றார் பெரியார். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் சுயமரியாதைக்கு உரிமையுடையவன் என்பது பெரியாரின் உறுதியான கருத்தாகும். சமூகத்திலுள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சுயமரியாதை பெற்றுத் தங்கள் உரிமையை நிலைநாட்டவேண்டும் எனப் பெரியார் கூறினார். தம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சுயமரியாதை இயக்கத்திற்காகவே அவர் ஒதுக்கினார்.

சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்

சாதிப் பட்டங்களையும், சமய அடையாளக்குறிகளையும் மக்கள் விட்டொழிக்க வேண்டும். உரிய வயதுக்கு மேல்தான் பெண்களுக்குத் திருமணம் செய்யவேண்டும். மணமான பெண்களுக்கு 'மணவிலக்கு' செய்துகொள்ளும் உரிமை வேண்டும்; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை, தொழில் நடத்த உரிமை, சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி, ஆசிரியர் பணியில் பெண்களை மட்டுமே நியமித்தல், தாய்மொழிக் கல்வி, சுயமரியாதைத் திருமணம் மற்றும் முழுமையான பெண் விடுதலை போன்ற சமுதாய முன்னேற்றச் செயல்திட்டங்கள் இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

சுயமரியாதை இயக்கத்தின் நல்விளைவுகள்

சமுதாயத்தில் இளைஞர்கள் பலர் விழிப்புணர்வு பெற்றார்கள். பெண் பிள்ளைகள் பெருமளவில் கல்வி கற்க முற்பட்டனர். திருமணங்களில் உள்ள தேவையற்ற சடங்குகள் நீங்கின. ஏழை எளியோர் பொருட்செலவின்றித் தங்கள் குழந்தைகளுக்குத் திருமணம் செய்தனர். சாதியுடன் கூடிய பட்டப்பெயர்கள் குறையத் தொடங்கின.

சூழலியல் அறம்

இந்தப் பூமி முழுவதிலும் மக்கள் வாழும் இடங்களையும், அவ்விடங்களில் உள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்றவற்றையும் குறிக்கும் ஒருங்கிணைந்த ஒரு சொல்லாகச் 'சூழலியல்' (Ecology) பயன்படுத்தப்படுகிறது. இது நீர், உணவு, காற்று, நிலம், கடல், மலை, காடு, சூரிய ஒளி எனப் பலவற்றையும் குறிப்பிடுவதாகும். இச்சூழலியல் என்பது, மனிதன் தோன்றுவதற்கு முன்பே இங்குள்ளதாகும்.

உலகத் தோற்றத்திற்குக் காரணமாகப் பெருவெடிப்புக் கொள்கை (The Big Bang Theory), மாறாநிலைக் கொள்கை (The Steady State Theory), துடிப்புக்கொள்கை (The Pulsating Theory or The Oscillating Universe Theory) என்ற மூன்றைப் பகுத்தறிவாளர் முன்வைக்கின்றனர். இம்மூன்றினுள் இன்று பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுவது, 'பெருவெடிப்புக் கொள்கை' ஆகும்.

பெருவெடிப்புக் கொள்கைப்படி, ஏறக்குறைய 20 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், பருப்பொருள்கள் அனைத்தும் துண்டுகளாகத் திசைகள்தோறும் வெடித்து விண்மீன் வடிவத் திரளாகச் சிதறின என்றும், இவ்விண்மீன் திரள்களிடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்துக் காலப்போக்கில் இவை முழுவதுமாக மறைந்தொழிந்துவிடும் என்றும், இறுதியில் இப்பேரண்டத்தில் பொருளோ ஆற்றலோ உயிரினமோ நில்லா என்றும் பெருவெடிப்பாளர் கருதுகின்றனர். இதை ஏற்கத் தயங்குவோரும், இங்குத் தொடர்ந்து நிகழும் சூழல் மாசுபாட்டால் உலகம் அழியலாம் என்ற அறிவியலாளர் கருத்துடன் முழுநிலையில் உடன்படுகின்றனர்.

இத்தகைய மாசுபாடுகள் அனைத்தையும் தவிர்த்தால் மட்டுமே, இந்தப் பூமியும் இங்கு வாழும்

மனிதர்கள் உள்ளிட்ட அனைத்துவகை உயிரினங்களும் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ முடியும். இதை அனைவருக்கும் நினைவூட்டுவதற்காகவே, ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதிலும் ஜூன் மாதம் 5ஆம் நாள், 'உலகச் சுற்றுச்சூழல் நாள் (World Environment Day)' எனக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை நாம் கொண்டாடினால் மட்டும் போதாது; 'சுற்றுச் சூழலைப் பேணுவோம்' என்ற உறுதிமொழியை ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் பணியாகக் கருதி ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் இவ்வுலகம் தூய்மையும் அழகும் பெற்றுச் சிற்றுயிர்களும் பேருயிர்களும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான தகுதியைப் பெறும். இந்தத் தகுதியைக் கற்றுத்தருவதே சூழலியல் அறமாகும்

உங்களுக்குத் தெரியுமா?

சூழலியல் மாசுபாட்டின் வகைகள்

காற்றுவெளி மாசுபாடு (Air Pollution)
இரத்த மாசுபாடு (Blood Pollution)
நீர் மாசுபாடு (Water Pollution)
கடல் மாசுபாடு (Marine Pollution)
மண் மாசுபாடு (Soil Pollution)
உணவு மாசுபாடு(Food Pollution)
கதிரியக்க மாசுபாடு (Radioactive Pollution)
வெப்ப மாசு (Heat Pollution)
ஹார்மோன் மாசுபாடு (Harmone Pollution)
ஒளி மாசுபாடு (Light Pollution)
இரைச்சல் மாசுபாடு (Noise Pollution)
நெகிழி மாசுபாடு (Plastic Pollution)
மனையக மாசுபாடு (Indoor Pollution)
திடக்கழிவு மாசுபாடு (Solid Waste Pollution)
பூச்சிக்கொல்லி மாசுபாடு (Pesticide Pollution)

நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் சூழல் அறச்செயல்பாடுகள், அறிஞர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

- 'ஒரு மனிதனுக்கு ஒரு மரம்' என்ற கொள்கையைப் பின்பற்றவேண்டும்.
- பயிர்நிலத்திற்காகத் தாவரங்களை அழிக்கக்கூடாது.
- வீடு கட்டுவதற்காகக் காட்டு மரங்களை வெட்டக்கூடாது.
- மண்ணரிப்பையும் மண்ணள்ளலையும் தவிர்க்கவேண்டும்.
- வேட்டையாடுவதை விட்டொழிக்கவேண்டும்.
- எந்திர மற்றும் வாகன இரைச்சலைக் குறைக்கவேண்டும்.
- உடனுக்குடன் கழிவுகளை அகற்றுவதும் இன்றியமையாததாகும்.
- எரிபொருள்களின் பயன்பாட்டையும் புகை வெளியேறுவதையும் கட்டுப்படுத்தவேண்டும்.
- இடுகாடுகளும் சுடுகாடுகளும் ஊருக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும்.
- இயற்கையைச் சுரண்டும் பேராசையைக் கைவிடவேண்டும்.

சூழலியல் அறம் என்பது மானுட அறமாகும். சுற்றுச்சூழலைப் பேணுவதன் வாயிலாகத் தம்மையே மனிதர்கள் பேணிக்கொள்கின்றனர். இது தொடர்பாகப் 'புலிட்சர் விருதை' (Pulitzer Award), 1979 மற்றும் 1991ஆம் ஆண்டுகளில், தம் உயிரியல் ஆய்வுகளுக்காகப் பெற்ற உலகப்புகழ் வாய்ந்த அறிஞர் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன் வலியுறுத்தும் சூழல் அறக்கருத்தும் எண்ணத்தக்கதாகும்.

"மானுடத்திற்குப் பல்லுயிர்ப் பன்மையின் பங்களிப்பை அறிந்து அதைப் பயன் கொள்ளும்போது, அதன் ஒவ்வொரு துகளும் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பது நமக்கு விளங்கும்" என்கிறார் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன்.

விலங்குநல அறம்

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவை விளக்குவதும் புரிந்துகொள்ள முனைவதும் விலங்குநல அறமாகும். இது விலங்குகளின் வாழ்வுரிமை, அவற்றின் மேம்பாடு, காட்டுயிர்ப் பேணல், விலங்குக்கல்வி, விலங்குநலச் சட்டம், உயிரிரக்கம் மற்றும் உயிர்நேயக் கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

விலங்குகளின் மாண்பைக் குலைப்பதாகவும், தார்மீக மீறலாகவும் விலங்குவதையைக்

XI Ethics_Lesson 10 Folder.indd 178 21-02-2022 22:27:28

கொள்ளலாம். ஓணான் அடித்தல், வண்ணத்துப்பூச்சிகளின் சிறகைப் பிய்த்தல், பொன்வண்டைப் பிடித்தல், நாயின்மீது கல்லெறிதல், மாட்டை அடித்தல், கழுதை வாலில் பட்டாசு கட்டுதல், கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தல் எனச் சிறார்ப் பருவத்தில் நம்மையும் அறியாமல் நாம் பல்வேறு உயிரிகளுக்குத் தீங்கு செய்திருக்கிறோம். இவை இன்று சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

நமது அன்றாட வாழ்வில் உரிய விழிப்பின்றிச் செய்யும் பல்வேறு செயல்களால், விலங்குநலத்துக்குத் தொடர்ந்து நாம் கேடு செய்கிறோம் என்பதை உணரவேண்டும். இதனை உணரத் தலைப்பட்ட நிலையில், 1866ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தை அமெரிக்கர்கள் கொண்டுவந்தனர். விலங்குகளை ஆய்வுப் பொருள்களாகப் பயன்படுத்துவதால் அவற்றுக்கு ஏற்படும் துன்பங்களைவிட, மனிதர்களுக்கு விளையும் நன்மைகளே அதிகமென்று அறிவியலாளர் வாதாடினர். இது பயன்பாட்டுக் கருத்தியலாகும். இதனை ஏற்க மறுத்த உயிரிரக்கக் கோட்பாட்டாளர்கள், உயிரினங்கள் அனைத்துக்கும் உயிர்வாழும் உரிமையுண்டு என்றும், மனிதர்களின் நலன்களுக்காக விலங்குகளை வதைக்கவோ அழிக்கவோ கூடாதென்றும் கருத்துரைத்தனர். இது பயன்பாட்டுக் கருத்தியலுக்கு எதிரானதாகும்.

1992இல் விலங்குகள் என்பவை பொருள்கள் அல்ல; அவை உயிர்கள் என்ற சட்டத் திருத்தத்தைச் சுவிட்சர்லாந்து நாட்டினர் நிறைவேற்றினர்.

2013இல் இந்தியச் சட்டம், மனிதர்களுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்க உயிரிகளாக டால்பின்களை ஏற்றுக்கொண்டதுடன், மனிதர்களுக்குள்ள அனைத்துரிமைகளையும் அவற்றுக்கும் உறுதிசெய்தது.

அசையும் சொத்துக்களாகக் கருதப்பட்ட விலங்குகளுக்கு உணர்வுயிரிகள் என்ற அடைமொழியை, 2014இல் சட்டத்திருத்தம் மூலமாகப் பிரான்ஸ் நாட்டினர் வழங்கியுள்ளனர்.

நெதர்லாந்து, நியூசிலாந்து, ஸ்வீடன், இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் ஒரங்குட்டன், கொரில்லா, சிம்பென்சி ஆகிய மூன்றும் மனிதனுக்கு ஒப்பானவை எனக் கருதப்பட்டு ஆய்வகச் சோதனைகளில் அவற்றைப் பயன்படுத்தக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

வன விலங்குகள் ஏன் அழிகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா ?

- பாதுகாப்பற்ற சூழ்நிலை
- காடுகளின் பரப்பளவு குறைதல்
- வனத்தாவரங்கள் அழிக்கப்படுதல்
- வறட்சி மற்றும் காட்டுத் தீ
- வேட்டையாடுதல்
- தொற்றுநோய்கள்
- மின்வேலிகள்

XI Ethics_Lesson 10 Folder.indd 179 21-02-2022 22:27:28

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ், 2000ஆம் ஆண்டில் கேரள உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, வேடிக்கை வட்டரங்கில் (Circus) உள்ள விலங்குகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நமது நண்பர்களான விலங்குகளிடம் இரக்கம் காட்டுவதுடன், அவற்றின் உரிமைகளை இனங்காண்பதும் பாதுகாப்பதும் நமது அடிப்படைக் கடமைகளாகும். 1960ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தில் 2012இல் மேற்கொள்ளப்பட்ட திருத்ததில், 15 ஆம் பிரிவு உயிருள்ள விலங்குகளைக் கல்வி ஆய்வுகளுக்காகக்கூடப் பயன்படுத்தக்கூடாது என இந்திய அரசு தடை செய்துள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள்

- அனைத்து உயிர்களிடமும் பரிவு காட்டுவது, ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமையாகும்.
- தெருவில் திரியும் விலங்குகளைக் காயப் படுத்துவதும் கொல்வதும் சட்டப்படி குற்றமாகும்.
- எக்காரணம் கருதியும் எவ்விலங்கையும் கைவிடும் செயல் மூன்றுமாதச் சிறைத் தண்டனைக்குரியது.
- கட்டிவைத்தோ, உணவிடாமல் வதைத்தோ, குடிநீரை மறுத்தோ, தங்குமிடம் தராமலோ விலங்குகளைப் பல மணிநேரம் துன்புறுத்துவது தண்டத்தொகைக்கும் சிறைத்தண்டனைக்கும் உரியதாகும்.
- குரங்குகளை வளர்ப்பதும், காட்சிப்பொருள் ஆக்குவதும் தடை செய்யப்பட்டுள்ளன. வேடிக்கை வட்டரங்குகளில் அல்லது தெருக்களில் வித்தை காட்டும் பொருட்டுக் குரங்கு, சிறுத்தை, கரடி, புலி, சிங்கம், காளை ஆகிய விலங்குகளைப் பயிற்சிகள்வழித் துன்புறுத்தக்கூடாது.
- உயிரியல் பூங்காக்களில் குப்பைகளை வீசுதலும், விலங்குகளைச் சீண்டுதலும், விலங்குகளுக்கு உணவிடுதலும், தொந்தரவு செய்தலும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு ரூபாய் 25,000 தண்டத்தொகையும், மூன்றாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.
- விலங்குகளைப் பிடித்தல், வலையில் அகப்படுத்தல், நஞ்சூட்டல், தாக்குதல் அல்லது துன்புறுத்த முனைதல் முதலிய குற்றங்கள் ரூபாய் 25,000 தண்டத்தொகைக்கும் ஏழாண்டுச் சிறைத் தண்டனைக்கும் உரியன.
- முட்டைகளை உடைத்தல் அல்லது இடம் பெயர்த்தல், ஊர்வன மற்றும் பறவைகளின் வாழ்விடங்களைச் சிதைத்தல், அவை வாழும் மரங்களை வெட்டுதல் அல்லது அதற்காக முனைதல் ஆகியன வேட்டையாடுவதற்கு இணையான குற்றங்களாகக் கருதப்பட்டு, ரூபாய் 25,000 தண்டத்தொகையும் ஏழாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்.
- விலங்குகளை ஆய்வுக்குட்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒப்பனைப் பொருள்களுக்கும், அவற்றை இறக்குமதி செய்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

விலங்கு நல அறம் என்பது, ஒரு நவீனக் கருத்தியல் மட்டுமன்று. இது பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிறப்பாக வலியுறுத்தப் பட்டுள்ளதைக் காண்கிறோம். தாய், தந்தை முதலிய உறவுநிலைகளை ஆநிரைக்கும் பொருத்திப் பசுங்கன்றின் துயரத்துக்காகப் பரிந்து, 'இன்னே வருகுவர்' என்று ஆறுதல் கூறுகிறாள், முல்லைப்பாட்டில் வரும் ஆய்மகள்.

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்"

(முல்லைப்பாட்டு : 16–12)

'இதோ வந்துவிட்டனர் உங்கள் அன்னையர்' எனக் கன்றுக்குப் பரிந்து பேசும்

இம்முல்லைப் பாட்டின் ஆய்மகள், விலங்குகள் மீது மானுடர் செலுத்த வேண்டிய உயிர்நேயப் பண்புக்குச் சிறந்த சான்றாகிறாள். சிற்றுயிர்களுக்கும் துன்பம் நேராதவாறு வாழ்வதே பழந்தமிழர் பண்பாடு ஆகும். இதன் பிழிவைப் பின்வரும் நற்றிணைப் பாடலிலும் காணலாம்.

'புணரி பொருத பூமணல் அடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர' (நற்றிணை: 8–6 :11)

கடற்கரை மணலில் தேரோட்டிச் செல்பவன், அங்குள்ள நண்டுகளுக்குத் துன்பம் நேராதவாறு குதிரைகளைத் திருப்புகிறான் என்கிறார் உலோச்சனார். இத்தகைய உயிர்நேயம் உலகோர் அனைவரும் வியக்கத்தக்கதாகும். இக்கருத்தின் இன்னொரு கோணத்தைக் கவிஞர் இன்குலாப், 'பவுர்ணமி இரவில்' என்ற தம் கவிதையில், பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

'பவுர்ணமி இரவின் படகுக்காரரே!
நதிநீரை அலைக்கும் நாணல் புதர்களை
விலக்கிச் செல்கையில்
மெதுவாகச் செல்லுங்கள்!
வழியில் தண்ணீர் வாத்துகள் அடைகாத்த
முட்டைகள் கிடக்கலாம்
கால்கள் - மோதிவிடாதிருக்கட்டும்!'

இத்தகைய உயிர்நேயம், என்றுமுள தென்தமிழின் மானுடக்கொடையாகும்.

இராணுவ அறம்

'இராணுவ அறம்' என்பது அனைத்துவகை இராணுவச்செயல்பாடுகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இராணுவ அறத்திற்குக் 'கீழ்ப்படிதல்' என்பது மிகவும் இன்றியமையாததாகும். இது குறிப்பாகக் போர்க்காலங்களில் கடைப்பிடிக்கபட வேண்டியதாகும். நவீன அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் திறனும் விழிப்பும் ஒழுங்கும் இங்குத் தேவைப்படுகின்றன. இத்தேவையைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவதை, 'இராணுவ அறம்' வலியுறுத்துகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

இராணுவத்திற்கான ஏழு அறங்கள்...

- பற்றுறுதி (Loyalty)
- கடமை (Duty)
- மதிப்பு (Respect)
- தன்னலமற்ற தொண்டு (Selfless Service)
- மாண்பு (Honour)
- நம்பிக்கை (Integrity)
- மனத் துணிவு (Personal Courage)

இராணுவ அறத்தின் பாற்பட்ட விலக்க முடியாத விதிகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

- ஒரு குறிப்பிட்ட சூழலில் படைகளைக் களமிறக்க வேண்டிய நெருக்கடியுள்ளதா என்பதைத் தெளிவாக அறிந்த பிறகே அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.
- போரிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்.
- எளிய குடிமக்களின் உயிர்களுக்கு ஊறு ஏற்படாத வகையில், தாக்குதல் நடவடிக்கைகளைக் கட்டுக்கோப்புடன் கையாளவேண்டும்.
- ஒரு நாட்டின் மாண்புக்கும் கண்ணியத்திற்கும் இழுக்கு ஏற்படாத முறையில், இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்கமுடியாமைக்கான நியாயங்களைப்பகுத்தறிவுக்கோட்பாட்டிற்குப் பொருந்துமாறு ஆட்சித்தலைவர்கள் பொதுவெளியில் விளக்கவேண்டும்.
- நவீனப் போர்த்தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகையில், அவை நடைமுறை இராணுவ அறவிதிகளுக்கு முரண்படாமலிருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- அமைதியை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்படும்இராணுவ நடவடிக்கைகள், இரு தரப்பிலுமுள்ள பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்குக் கேடு செய்யாதவாறு ஒழுங்குபடுத்தப்படுதல் சாலச்சிறந்ததாகும்.
- சட்டத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் இராணுவ முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.
- குழந்தைகள், பெண்கள், நோயாளிகள், முதியோர், எளியோர் முதலியோரைப் பாதுகாக்கவேண்டும்.
- வழிபாட்டிடங்கள், வரலாற்றுச்சின்னங்கள், நினைவில்லங்கள், நூலகங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், கலைக்கூடங்கள் முதலியவற்றைத் தாக்கக்கூடாது.
- சரியான முடிவுகளைத் தவறான காரணங்களுக்காகவோ, தவறான முடிவுகளைச்சரியானகாரணங்களுக்காகவோ மேற்கொள்வதைத் தவிர்க்கவேண்டும்.
- போர்க்கைதிகளைக் குற்றவாளிகளைப்போல் நடத்தக்கூடாது; அரசியல் கைதிகளைத் தண்டிப்பதற்குரிய சட்டங்களுக்குட்பட்டு அவர்களை அணுகவேண்டும்.

பெண்ணிய அறம்

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழும் சமத்துவச் சூழலை நோக்கித் தற்கால உலகம் சென்றுகொண்டிருக்கிறது, இச்சூழலில், சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தின் சிக்கல்களைப் பேசவும், அவற்றுக்குத் தீர்வு காணவும் உதவும் ஒரு கோட்பாடாகப் பெண்ணியத்தை வரையறுக்கலாம். இப்பெண்ணியம்வழிப் பெண்நலம் பேணுவது பெண்ணிய அறமாகும்.

பெண்ணிருப்புக்கான நியாயங்களைப் பெண்ணின் கண்ணோட்டத்தின் வழியாகக் காண்பதும் பெண்களின் சமத்துவத்தையும் வளர்ச்சியையும் வலியுறுத்துவதும் பெண்களின் சார்பாகப் போராடுவதும் எல்லா நிலைகளிலும் பெண்களின் பங்கேற்பை உறுதிசெய்வதும் பெண்ணிய அறக்கோட்பாட்டின் இலக்குகளாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> சமத்துவம் என்பது போராடிப் பெறும் ஏதோ ஒரு கருத்தியல் இல்லை; அது ஒரு தேவை; புவியீர்ப்பு விசை போன்று இயற்கையானது; ஆண்களும் பெண்களுமாகப் பூமியில் காலூன்றி நிற்பதற்கு அது வேண்டும்; அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள பெண் வெறுப்பு என்பது மானுடத்தின் உண்மை இயல்பன்று; அது ஒரு சமநிலைக் குலைவே. (ஜோஸ் வேடன்) பெண்ணியம், முனைவர் இரா. பிரேமா, தமிழ்ப் புத்தகாலயம்

சமூக எழுச்சியின் ஒரு பகுதியாகவும் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் நியாயமான எதிர்ப்புணர்வாகவும் பெண் விடுதலை பற்றிய கருத்தியல் உருவானதாகக் கூறலாம்.

வழிவழியாக வந்த நியாயங்கள், தொடர்ந்து உருவாக்கப்பட்ட மதிப்புகள், விதிக்கப்பட்ட நெறிகள், கற்பிக்கப்பட்ட புனிதங்கள் போன்ற அனைத்தையும் பெண்ணிய அறம் கேள்வி கேட்கிறது.

உரிய இடம், உரிய பங்கு, உரிய மதிப்பு, உரிய ஊதியம், உரிய உரிமை, உரிய அதிகாரம் முதலியவற்றைப் பெண்ணிய அறம் உறுதிசெய்கிறது.

உடலால், உள்ளத்தால், மொழியால், கருத்தால், செயலால், விளைவால் ஆணுக்கிணையாகத் தன்னையும் பெண் வெளிப்படுத்திக்கொள்வதைப் பெண்ணிய அறம் வரவேற்கிறது.

பெண்களின் இயல்பான விருப்பங்கள், உள்ளத்துணர்வுகள், அவற்றின் முறிவுகள், சிதைவுகள், அழுத்தங்கள் முதலியவற்றைப் படைப்பிலக்கியங்கள் மற்றும் பிற கலை வெளிப்பாடுகளின்வழிப் பதிவுசெய்வதைப் பெண்ணிய அறம் ஊக்குவிக்கிறது.

பொதுமொழி என்பது பெரிதும் ஆண் மொழியாகவே உள்ளது. ஆண் மொழியின் சொற்கள், பெண்ணைக் கேலி செய்வதாகவும், அவளின் இருப்புக்குரிய மதிப்பை மறுப்பதாகவும் உள்ளன. இந்நிலையில், ஒரு புதிய பெண் மொழியின் தேவையைப் பெண்ணிய அறம் வலியுறுத்துகிறது. (எ.கா.) Chairman – Chairperson, Chairwoman, Chair; ஆசிரியன் – ஆசிரியை, ஆசிரியர்; மாணவன் - மாணவி, மாணவர்.

பெண்களுக்குக் கல்வி உரிமை, மணத்தெரிவு உரிமை, சொத்து உரிமை, தொழில் உரிமை, வழிபாட்டு உரிமை, மணவிலக்கு உரிமை, குழந்தைப் பேற்றைத் தீர்மானிக்கும் உரிமை, பேறுகால விடுப்பிற்கான உரிமை, அரசியல் பங்கேற்பு உரிமை, ஓட்டுநர் உரிமை, வேலை பார்க்கும் பெண்கள் சங்கம் (Professional Women's Club) அமைப்பதற்கான உரிமை எனப் பல்வேறு உரிமைகளைப் பெண்ணிய அமைப்புகள் போராடிப் பெற்றுள்ளன.

மரபுவாதப் பெண்ணியம் (Conservative Feminism), தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism), சமதர்மப் பெண்ணியம் (Social Feminism), பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism), ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism), சீர்திருத்தப் பெண்ணியம் (Reformist Feminism), தலைமை வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism), அமைப்பை மறுக்கும் பெண்ணியம் (Rebellion Feminism), புரட்சிகரப் பெண்ணியம் (Revolutionary Feminism), வன்முறை எதிர்ப்புப் பெண்ணியம் (Anti-Violence Feminism), கருப்பினப் பெண்ணியம் (Black Feminism), சூழல் பெண்ணியம் (Eco-Feminism) எனப் பலவாறாகப் பெண்ணிய இயக்கங்களைப் பெண்ணியவாதிகள் பகுத்துள்ளனர். இந்தப் பெண்ணிய இயக்கங்கள், உலகம் முழுவதிலும் பரவிப் பெண் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன. இவற்றை முதல் கட்டப் பெண்ணியம், இரண்டாம் கட்டப் பெண்ணியம், மூன்றாம் கட்டப் பெண்ணியம் என மூன்றாகப் பகுக்கலாம்.

முதல் கட்டப் பெண்ணியம் (First Wave Feminism)

பெண் கல்வி, பாலினச் சமத்துவம், போதைப்பொருள் மறுப்பு, பெண்ணடிமை ஒழிப்பு முதலியவற்றைக் குறிக்கோளாக்கிப் பெண்ணியத்தின் முதல் அலை (1900– 1930), உலகம் முழுவதும் எழுந்தது. இது பெண் பற்றிய மரபுவழிக் கருத்துகளைப் பொதுநிலையில் எதிர்த்தது. அடிப்படையான மனித உரிமைகளையே இது கோரியது.

இரண்டாம் கட்டப் பெண்ணியம் (Second Wave Feminism)

ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் வாக்குரிமை, வேலை வாய்ப்பு, பணியிடப் பாதுகாப்பு, சம ஊதியம் முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்துவதாகப் பெண்ணியத்தின் இரண்டாம் கட்டம் (1900 1960–) அடைந்தது. இது ஒடுக்கப்பட்டவர்களான நலிந்தோரின் உரிமைகள் அனைத்தையும் தன்னோடு இணைத்துக்கொண்டு வலிமையுற்றது. இவ்வகையில் பெண்களின் அரசியல் பங்கேற்பையும் இது முன்னெடுத்தது.

மூன்றாம் கட்டப் பெண்ணியம் (Third Wave Feminism)

மானுட உரிமைப்போருக்கான உரையாடலின் ஒருபகுதியாக, மூன்றாம் கட்டப் பெண்ணியம் (1960 – இன்றுவரை) அமைகிறது. இது ஆண் வெறுப்பில் விளையவில்லை; இரண்டாம் பாலினமாகப் பெண்ணைக் கருதிப் பெண்ணுக்கான உரிமைகளைப் பெறக் கெஞ்சவில்லை; தடைகளைத் தானே உடைத்துத் தனக்கான விடுதலையைத் தானே படைத்துக்கொண்டது.

பெண்ணிய அறம் என்பது ஆண்களுக்கு இணையாகக் கல்வியும் வேலையும் சொத்தும் கேட்டுப்போராடுவதுடன் அமைதி கொள்வதில்லை. அது உலகம் முழுவதும் வாழும் அனைத்து மனிதர்களின் வாழ்வுரிமைகளுக்காகவும் ஒலிக்கும் ஒரு வலிமையான அறக்குரலாகும். இதனால்தான் கார்ல் மார்க்ஸ், "ஒரு சமூகத்தின்

முன்னேற்றத்தை வெள்ளையினப் பெண்களின் முன்னேற்றத்தை வைத்து மட்டுமல்லாமல், கருப்பினப் பெண்களின் முன்னேற்றத்தையும் சேர்த்து வைத்தே அளவிடவேண்டும்" எனச் சமூக விடுதலையின் முழுமுதற்காரணியாகப் பெண் முன்னேற்றத்தைப் பரிந்துரைக்கிறார்.

சமயஞ்சாரா அறம்

சாதி, மதம், இனம், மொழி, வட்டாரம், பால் பாகுபாடுகளைத் தாண்டிய நிலையில் அறம் என்பது உலகப் பொதுவானதாகும். இத்தகைய பொதுமை அறம் மனிதகுலம் முழுமைக்கும் பயனளிப்பதாகும். இயற்கையைத் தொடக்கத்தில் வழிபட்ட மனிதன், 'அரசு, குடும்பம், சமயம்' ஆகிய நிறுவன அமைப்புகள் உருப்பெற்றநிலையில் இயற்கையை மீறிய கருத்துருவங்களைச் சிலைகளாகவும் கோவில்களாகவும் பிற வழிபாட்டுச் சின்னங்களாகவும் தொழத் தொடங்கினான். இதன் விளைவாகச் சமயம் என்பது எளிய மனிதர்களின் அன்றாட வாழ்வில் குறுக்கிடும் திட்டவட்டமான இறுகிய விதிகளைக் கொண்ட நிறுவன அமைப்பானது.

இந்த உலகையும் இங்கு வாழும் வாழ்வையும் பெரிதாகக் கருதாமல் சொர்க்க நரகங்களைச் சமய நிறுவனங்கள் வலியுறுத்தின. அன்பு, அருள், இரக்கம், பரிவு, தோழமை முதலியவற்றை வளர்க்க விரும்பிய சான்றோர் பெருமக்கள், இவற்றுக்குச் சமய நிறுவனங்கள் வேண்டாம் என்று கருதிச் சமயஞ்சாரா அறத்தைச் சிறப்புக்குரியதாகப் பரிந்துரைத்தனர். இங்குச் சமயக் கருத்தியலில் அறம் இல்லை என்பது பொருளன்று; சமயஞ்சாரா மானுட விழுமியங்களில் செறிவும் ஆழமும் கூடிய மனிதப்பண்புகள் மிகுந்துள்ளன எனப் பொதுஅறத்தைப் பெரியோர் விரிவுபடுத்துவர்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனத் திருவள்ளுவர் கூறுவதைச் சமயஞ்சாரா அறக்கோட்பாடாகக் கருதலாம். இதன் நுண்விளக்கத்தைச் சீத்தலைச் சாத்தனார், "அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின், உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல்" என்கிறார். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றும், "உடம்பை வளர்த்தோம் உயிரை வளர்த்தோம்" என்றும், உணவையும் உயிரையும் உலகையும் வாழ்வையும் பொருட்படுத்திச் சான்றோர் பேசியுள்ளனர். 'பசிப்பிணி என்னும் ஒரு பாவி' என்றும், 'கையது கொண்டு மெய்யது பொத்தி' என்றும், 'அழிபசி வருத்தம்' என்றும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறாததால் விளையும் துன்பங்களைப் புலப்படுத்தியுள்ளனர். இவற்றுக்குக் கடவுள் மற்றும் சமயச் சிந்தனைகளைத் தாண்டிய தீர்வுகளை உலக வாழ்விலேயே தேட வேண்டும் எனச் சான்றோர் கருதினர். சமூக அமைதிக்குச் சமயங்களால் பங்கம் வராமல் காத்து நல்லிணக்கத்துடன் மனிதர்கள் அனைவரும் ஒருங்குகூடிவாழும் இயல்பையே அவர்கள் வலியுறுத்தினர்.

சமயஞ்சாராமை என்பது கடவுள்/ சமயங்களின் மறுப்பு என்றும், பல்வேறு சமயங்களின் இடையே எந்தக் குறிப்பிட்ட சார்புநிலையையும் எடுக்காத நல்லிணக்கம் என்றும் இருவகையாகப் பொருள் கூறப்படுகிறது. மனித அறிவுப்புலங்களான தருக்கவியல், நடத்தையியல், நுண்ணறிவியல், சமூகவியல் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றுவதே சமயஞ்சாரா அறமாகும். இக்கோட்பாடுகள் இயற்கையிறந்த ஆணைகளாலோ சமயங்களாலோ ஏற்பட்டதல்ல. இவை மனிதநேயம், நல்லிணக்கம், சுதந்திரச் சிந்தனை உள்ள எந்த அமைப்புக்கும் பொருந்தும். தொன்மை நியதிகள், சமூக ஒப்பந்தங்கள், சட்ட நெறிகள், பணிப் பண்பாடு போன்ற பகுத்தறிவுக்குப் பொருத்தமான ஒழுகலாறுகள் சமயஞ்சாரா அறத்திற்குரியன.

'அன்பு, நேர்மை, உண்மை, ஒழுக்கம்' ஆகிய அறங்களும், வன்முறை எதிர்ப்பும் சமயஞ்சார்ந்த மற்றும் சமயஞ்சாராக் கருத்தியல்களுக்குப் பொதுவானவை. தனிமனித நலனையும் சமூகநலனையும் முன்வைக்கும் அறக்கொள்கைகளை ஏற்பதிலும் இவற்றிடையே ஒற்றுமையுள்ளது. ஆனால், கடவுளையும் கற்பிதங்களையும் சமயஞ்சாரா அறம் ஏற்பதில்லை. இயற்கை கடந்த, உண்மைக்குப் புறம்பான எதையும்

ஏற்றுக்கொள்ளாத சமயஞ்சாரா அறவியலாளரின் எடுகோள்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

சமயங்களால் குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்கமுடியுமே தவிர, பண்பார்ந்த மனிதர்களை அவற்றால் உருவாக்கமுடியாது என்றும், பகுத்தறிவு விழுமியங்களே சிறந்தவை என்றும் கருதுவர். புகழ்பெற்ற உயிரியல் அறிஞரான ஸ்டீபன் ஜே கௌட் (Stephen Jay Gould), "இயற்கையிடமிருந்து விடைகளை மறுப்பேதும் சொல்லாமல் அப்படியே ஏற்கமுடியாது என்றும், பகுத்தறிவின் மூலமே அறத்தை வரையறுக்க வேண்டும்" என்றும் கூறுகிறார்.

- தமக்கு இயல்பான நற்பண்புகளின் அடிப்படையில், அறங்களைத் தமக்குத் தாமே படைக்கும் ஆற்றல் மனிதர்களுக்கு உண்டு.
- அறக்கோட்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவுகள் பொதுநலன்களைக் கருதியதாக அமையவேண்டும்.
- காரண காரிய அடிப்படையிலான நன்னெறிகளைக் காலத்திற்கு ஏற்ப மாற்றலாம்; புதுப்பிக்கலாம்.
- தீங்கு பயக்காத நன்னெறிகளையே தனிநபரும் சமூகமும் பின்பற்ற வேண்டும்.
- அறமும் பகுத்தறிவும் உள்ள பண்பட்ட சமூக அமைப்பை உருவாக்கவேண்டும்.

இத்தகைய சமயஞ்சாரா அறக்கருத்துக்களைத் திருக்குறளிலும் காண்கிறோம். கடவுள் பற்றிக் கூறும்போதும், எந்தச் சமயக் கடவுளையும் குறிப்பிடாமல், "தூய அறிவுடையவன், மெய்யான ஒழுக்கநெறி உடையவன், எண்வகை குணமுடையவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்" எனச் சமயப் பொறை பேசுகிறார் வள்ளுவர். அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அறிவுடைமை, பண்புடைமை, பொறையுடைமை, புறங்கூறாமை, வாய்மை, சான்றாண்மை, ஊக்கமுடைமை, இன்னா செய்யாமை எனச் சமயஞ்சாரா கருத்தியலின் அடிப்படைகளை வள்ளுவர் வரையறுத்துள்ளார். எனவே, எவ்வகை ஏற்றத்தாழ்வும் இன்றி, அனைவரும் உடன்பட்டு வாழும் மானுடநல அறமே 'சமயஞ்சாரா அறம்' எனலாம்.

நிறைவுரை

அண்ணல் காந்தியடிகளின் அறநெறிகள், மனிதநேயம் சார்ந்த அறக் கருத்துகள், சூழலியல் அறம், விலங்குநல அறம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள், பெண்ணிய அறம், இராணுவ அறம், சமயஞ்சாரா அறம் ஆகியவை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மாணாக்கர் அறிந்துகொள்ளும் வகையில், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அண்மைக்கால அறநெறிப்போக்குகள், அவர்தம் வாழ்வில் கடைப்பிடித்து, நன்மாணாக்கராய் உயர வழிகாட்டும் என்பது திண்ணம்.

மதிப்பீடு

E3RCQ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவை, சிறந்த ஓர் அகிம்சை நாடாக உலகிற்கு எடுத்துக்காட்டியவர் ------ .

அ) நேரு ஆ) காந்தி இ) வல்லபாய் பட்டேல் ஈ) தாகூர்

2. உண்மைக்காக அறவழியில் அமைதியாக எதிர்ப்பைத் தெரிவிப்பது --- என்பதன் குறிக்கோளாகும்.

அ) சர்வோதயம் ஆ) சத்யாகிரகம்

இ) அகிம்சை ஈ) அறம்

3. மகாத்மா காந்தியடிகள் சத்தியாகிரகக் கொள்கையைக் கடைப்பிடித்து, முதலில் வெற்றி கண்ட நாடு.

அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) இங்கிலாந்து ஈ) தென்னாப்பிரிக்கா

4. மாணவனின் உயிர், உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது எது?

அ) செல்வம் ஆ) முயற்சி இ) கல்வி ஈ) மனஉறுதி

5. கீழ்க்காணும் கூற்றுகளில், காந்தியடிகளுக்குப் பொரத்தமில்லாத கூற்று எது?

அ) எம்மதமும் சம்மதம் என்ற கொள்கை.

ஆ) மனிதனிடமுள்ள விலங்குத்தன்மையை விலக்குவதே ஒழுக்கம்.

இ) எல்லாச் சமயத்தவரின் புனிதநூல்களும் ஒரு சமயத்தவருக்கே உரியது அல்ல.

ஈ) அனைத்துச் சமயங்களும் கடவுள் என்ற கடலைத்தேடிச் செல்லும் பல்வேறு நதிகள்.

6. இந்தியாவில் சமயநல்லிணக்கம் கடைப்பிடிக்கப்படும் நாள்

அ) ஆகஸ்ட் – 20 ஆ) ஆகஸ்ட் –21 இ) ஆகஸ்ட் –22 ஈ) ஆகஸ்ட் –24

7. வள்ளலாரின் கூற்றுகளுள் சரியானவற்றைத் தெரிவு செய்க.

1) பகைவனுக்கும் நன்மை செய்ய வேண்டும்.

2) வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்.

3) மனிதனுக்குப் பசிக்கு உணவளிக்க வேண்டும்.

4) மனிதனின் புனிதமான நம்பிக்கையே சமயம்

அ) 1, 2 சரியானவை ஆ) 2, 3 சரியானவை

இ) 3, 4 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

8. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல்வரி வலியுறுத்துவது

அ) உலக சமாதானம் ஆ) சமூக ஒற்றுமை இ) மனிதநேயம் ஈ) தேசபற்று

9. பெரியாருக்கு 'வைக்கம்வீரர்' என்ற பட்டத்தை அளித்தவர்

அ) அண்ணா ஆ) காமராஜர் இ) இராஜாஜி ஈ) திரு. வி.க,

10. ஈ.வெ. ராமசாமியை முதன்முதலில் பெரியார் என அழைத்தவர்

அ) முத்துலெட்சுமி அம்மையார் ஆ) நீலாம்பிகை அம்மையார்

இ) சரோஜினி அம்மையார் ஈ) மணியம்மையார்

குறுவினா

1. சமுதாயத்தின் ஏழு பாவங்கள் எனக் காந்தியடிகள் கூறுவன யாவை ?
2. சமய நல்லிணக்கம் என்றால் என்ன ?
3. சுயமரியதை இயக்கம் – குறிப்பு வரைக.
4. சூழலியல் – வரையறு?
5. சர்வோதயம் என்றால் என்ன ?
6. விலங்குநல அறம் என்றால் என்ன ?
7. மனிதனுக்கு ஒப்பானவையாகக் கருதப்பட்டு ஆய்வகச் சோதனைகளில் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்ட விலங்குகள் யாவை ?

சிறுவினா

1. சத்தியா கிரகம் – வரையறு.
2. சர்வோதயக் கொள்கையின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
3. 'வைக்கம் வீரர்' – சிறு குறிப்பு எழுதுக.
4. சமய நல்லிணக்கம் ஏற்பட நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.
5. உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுவதன் நோக்கம் யாது ?
6. மகாத்மா காந்தியின் மணிமொழிகளுள் மூன்றைக் குறிப்பிடுக.
7. பெண்ணிய இயக்கங்களுள் எவையேனும் மூன்றைக் குறிப்பிடுக.

நெடுவினா

1. காந்தியடிகளின் சமுதாய அறக்கோட்பாடுகளைத் தொகுத்து எழுதுக.
2. பெரியாரின் சுயமரியதை இயக்கம் பற்றி விளக்குக.
3. மனிதநேயம் குறித்து வள்ளலார் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.
4. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு நல உரிமைகள் யாவை ?
5. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அறிஞர்கள் பரிந்துரைத்த செயல்பாடுகள் யாவை ?
6. இராணுவ அறம் வலியுறுத்தும் விதிகளை விளக்குக.
7. சமயஞ்சாரா அறங்களை விளக்குக.

XI Ethics_Lesson 10 Folder.indd 187 21-02-2022 22:27:28

இணையச்செயல்பாடு

காந்தியம்

கதர் ஆடை கதாநாயகனின்
வாழ்வியல் அறிவோமா !

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி mkgandhi என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
- திரையில் தோன்றும் ENTER என்பதைச் சொடுக்கியதும் அவரின் அரசியல், பிரபலமான பேச்சுகள், காந்தி மற்றும் கல்வி போன்ற அவரது வாழ்வியல்சார்ந்த பல தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றைத் தேர்வு செய்து, அவரது வாழ்க்கை மற்றும் கொள்கைகளைப் பற்றி அறிக.
- எடுத்துக்காட்டாக, **காந்தி மீது வினாடி வினா** என்பதைச் சொடுக்கி, அவர் வாழ்வோடு தொடர்புடைய வினாக்களுக்கு விடையளித்து, விளையாட்டின்வழி அவர் வாழ்வியலை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



காந்தியம் இணைய பக்கத்தின் உரலி

https://translate.google.com/translate?hl=en&sl=en&tl=ta&u=https%3A%2F%2Fwww.mkgandhi.org%2F

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

XI Ethics_Lesson 10 Folder.indd 188 21-02-2022 22:27:29

www.tnschoolbooks.in

மேல்நிலை முதலாமாண்டு
மாதிரி வினாத்தாள் – I
அறவியலும் இந்தியப்பண்பாடும்

வகுப்பு : 11 ஆம் வகுப்பு

காலம்: 2.30 மணி ***மதிப்பெண்கள்: 90***

அறிவுரைகள் :

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பிரிவு – I

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. ***20×1=20***

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" - இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ----.

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) கலித்தொகை ஈ) அகநானூறு

2. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானதைச் சுட்டுக.

இசைப்பாடலாகிய பரிபாடல் குறிப்பிடுவது,

அ) பாண்டியர்களின் தலைநகரமான மதுரையின் சிறப்பு

ஆ) வையை ஆற்றின் சிறப்பு

இ) திருமால் முருகன் போன்ற தெய்வங்களை வழிபடும் முறை

ஈ) விநாயகரது சிறப்பு

3. பொருத்துக.

குறுநில மன்னர்கள்	ஆட்சிசெய்த பகுதி
அ) வல்வில் ஓரி	1. பொதியமலை
ஆ) அதியமான்	2. மலையமாநாடு
இ) ஆய் அண்டிரன்	3. தகடூர்
ஈ) திருமுடிக்காரி	4. கொல்லிமலை

Maathiri Vina Vidai.indd 189 12-12-2021 23:08:59

அ) அ – 4, ஆ – 2, இ – 3, ஈ – 1

ஆ) அ – 4, ஆ – 3, இ – 1, ஈ – 2

இ) அ – 3, ஆ – 1, இ – 2, ஈ – 4

ஈ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4

4. சரியாகப் பொருந்தியுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.

திணை		உரிப்பொருள்
அ) முல்லை	–	ஊடலும் ஊடல் நிமித்தமும்
ஆ) நெய்தல்	–	புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
இ) பாலை	–	பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
ஈ) மருதம்	–	இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

5. சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகமே என்று உறுதி செய்தவர்-----

அ) சர். மார்டிமர் வீலர் ஆ) ஆர். டி. பானர்ஜீ

இ) சர். ஜான் மார்ஷல் ஈ) ஹீராசு பாதிரியார்

6. கீழடித் தொல்லியல் களம் அமைந்துள்ள மாவட்டம்

அ) மதுரை ஆ) இராமநாதபுரம் இ) திருச்சி ஈ) சிவகங்கை

7. சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

தமிழகத்தில் முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்

1. அத்திப்பாக்கம், அரிக்கமேடு

2. ஆதிச்சநல்லூர், திருகாம் புலியூர்

3. தாமிரபரணி ஆற்றங்கரை, அத்திரப்பாக்கம்

4. பூம்புகார், தரங்கம்பாடி

அ) 1, 2 சரியானவை ஆ) 1, 2, 3 சரியானவை

இ) 2, 4 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

8. ஹரப்பாவில் கிடைத்த முத்திரைகளில், அமர்ந்த நிலையில் பொறிக்கப்பட்டுள்ள உருவம்---.

அ) பசுபதி ஆ) தாய்தெய்வம் இ) மகாயோகி ஈ) நடனமாது

9. கூற்று : "இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும்

இவர்களே நரகில் எய்துவார் – வில்லிபாரதம்.

விளக்கம்: நல்லறிவுடைய அமைச்சராய் இருந்தும் அரசாட்சியை வேண்டுமென்றே கெடுப்பவர், சான்றோர் மொழியைப் புறக்கணிப்பவர், பிறர் செய்த உதவியை மறப்பவர், ஒருவர் வாழும்

வீட்டில் உணவு உண்டு, அவருடன் சினந்து போர் புரிபவர் ஆகியோர் சூரிய, சந்திரன் உள்ளவரை துன்பம் அடைவர்.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) கூற்று சரி, காரணமும் சரி.

இ) கூற்று தவறு, காரணமும் தவறு.

ஈ) கூற்று சரி, காரணம் சரி

10. தமிழ்மொழி தொன்றுதொட்டு -------- நெறிகளை உள்ளடக்கியது.

1. அறம், அன்பு 2. நீதி, அநீதி 3. அடக்கம், அமைதி 4. உண்மை, உழைப்பு

அ) 1, 3 சரியானவை ஆ) 3, 4 சரியானவை

இ) 1, 2, 3 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

11. "நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்

கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே" - எனக் கூறும் நூல்

அ) பதிற்றுப்பத்து ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) கலித்தொகை

12. சமண சமயக் கொள்கைகளைப் பற்றி நாலடியார் வலியுறுத்திக் கூறுவது

1. துறவறத்தைப் பாராட்டிப் பேசுதல் 2. புலால் உண்ணுதல்

3. உயிர்க் கொலை புரியாமை 4. உலக இன்பத்தை வெறுத்தல்

அ) 1, 3, 4 சரியானவை

ஆ) 2, 3, 4 சரியானவை

இ) 1, 2, 3 சரியானவை

ஈ) 1, 2, 4 சரியானவை

13. பொருந்தாததைச் சுட்டிக்காட்டுக.

இந்தியக் கட்டடக் கலை பரவியுள்ள நாடுகள்

அ) பர்மா, மலேசியா ஆ) இலங்கை, கம்போடியா

இ) மலேசியா, இந்தோனேசியா ஈ) பர்மா, இலங்கை

14. தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி, வகைப்படுத்திய அழகுக்கலைகளின் எண்ணிக்கை--

அ) ஐந்து ஆ) நான்கு இ) ஆறு ஈ) மூன்று

15. தமிழகத்தில் ---------- பல்லவ மன்னர் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது.

அ) மகேந்திரவர்மன் ஆ) நரசிம்மவர்மன் இ) நந்திவர்மன் ஈ) நிருபதுங்கன்

16. நடுகல் பற்றிய குறிப்புகள் இடம்பெறாத நூல்

அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) பரிபாடல்

17. 'வேலன் வெறியாட்டு விழா' பற்றிக் குறிப்பிடாத நூலைத் தேர்ந்தெடுக்க.

அ) திருமுருகாற்றுப்படை ஆ) பட்டினப்பாலை

இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு

18. தமிழகத்தில் சைவமும் வைணவமும் இணைந்து கொண்டாடும் மிகப்பெரிய திருவிழா

அ) சித்திரைத் திருவிழா ஆ) தீபத் திருவிழா

இ) மகாமகத் திருவிழா ஈ) ஆதிரைத் திருவிழா

19. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) ஓணம் – கேரளா

ஆ) புத்தகயா – பீகார்

இ) பொற்கோயில் – ஹரியானா

ஈ) அறுபடை வீடுகள் – தமிழ் நாடு

20. 'ஈத்' என்னும் அரபுச் சொல்லின் பொருள்

அ) நாள்காட்டி ஆ) நோன்பு இ) ஹாஜி ஈ) தடுத்து விடுவது

பிரிவு – II

எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 25 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 7×2=14

21. பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகள் யாவை ?

22. ஐந்திணைக்குரிய சிறுபொழுதுகள் யாவை ?

23. இந்தியாவில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை ?

24. சிந்துவெளி மக்கள், திராவிடர்களாக இருக்க வேண்டும் என்று கூறியவர்கள் யாவர் ?

25. நீங்கள் நன்மாணாக்கராய்த் திகழ, என்னென்ன இயல்புகளைப் பெற்றிருக்கவேண்டும்? பட்டியலிடுக.

26. நன்னூலார் குறிப்பிடும் நூலின் மாண்புகள் யாவை ?

27. பல்லவர் கால ஓவியங்கள் இடம்பெற்றுள்ள இடங்கள் யாவை ?

28. அடியார்க்கு நல்லார் கூறும் இசை நூல்கள் யாவை ?

29. திருவாதிரை விழா கொண்டாடும் இடங்கள் யாவை ?

30. நாட்டார் தெய்வங்கள் யாவை ?

www.tnschoolbooks.in

பிரிவு – III

எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 39 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.. 7×3=21

31. குடவோலை முறை என்றால் என்ன ?

32. ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள் யாவை ?

33. சிந்துவெளி மக்கள் இறந்தவர்களின் உடலை எவ்வாறு அடக்கம் செய்தனர் ?

34. சிந்துவெளி மக்கள் மேற்கொண்ட வழிபாடுகள் யாவை ?

35. கடிமரம் என்றால் என்ன ?

36. 'போரில் அறநெறி காத்தவர் தமிழர்' என்பதைப் புறநானூற்றுவழி விளக்குக.

37. ஐவகைப் பண்கள் யாவை ?

38. குரவைக் கூத்து என்றால் என்ன ?

39. தமிழர் வாழ்வில் இசை எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தது?

40. தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறும் இடங்கள் யாவை ?

பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 7×5=35

41. புறத்திணை – விளக்குக ?

(அல்லது)

பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

42. 'சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே' – என்பதைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

சிந்துவெளி மக்களின் வழிபாட்டு முறைகள் குறித்து எழுதுக.

43. கற்றலுக்கான வழிவகைகளாக நன்னூல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

சீவக சிந்தாமணி கூறும் அறங்கள் யாவை ? விளக்குக.

44. தஞ்சாவூர் ஓவியங்கள் குறித்து நீவிர் அறிந்தவற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

எவையேனும் இரண்டு தமிழக விளையாட்டுகளை விவரிக்க.

45. இயற்கை சார்ந்த விழாக்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

இஸ்லாம் சமய விழாக்களை விவரித்து எழுதுக.

Maathiri Vina Vidai.indd 193 12-12-2021 23:09:00

46. கம்பராமாயணம் கூறும் அறக்கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

தமிழக இசைக் கலைஞர்களைப் பற்றி விவரித்து எழுதுக.

47. பல்லவர்காலக் கட்டடக்கலைக்கும், சோழர்காலக் கட்டடக் கலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? விளக்குக.

(அல்லது)

திருவிழாக்கள் சமூக ஒற்றுமைக்கான வழி என்பதை விளக்குக ?

மேல்நிலை முதலாமாண்டு
மாதிரி வினாத்தாள் –II
அறவியலும் இந்தியப்பண்பாடும்

வகுப்பு : 11 ஆம் வகுப்பு

காலம்: 2.30 மணி **மதிப்பெண்கள்: 90**

அறிவுரைகள் :

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்க. அச்சுப்பதிவில் குறையிருப்பின், அதனைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பிரிவு – I

குறிப்பு : (1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. $20\times1=20$

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. மனித வாழ்வு செழிக்க, உயர்ந்த எண்ணங்களால் செம்மைப்படுத்தப்பட வேண்டியது----.

அ) மனம் ஆ) ஆற்றல் இ) உடல் ஈ) அறிவு

2. மாந்தனது புறத்தோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது, -----------.

அ) பண்பாடு ஆ) நாகரிகம் இ) கலாச்சாரம் ஈ) சுற்றுச்சூழல்

3. பொருந்தாத இணையைச் சுட்டிக்காட்டுக.

அ) தொல்காப்பியப் பொருளதிகாரம் - பழந்தமிழரின் அக, புற வாழ்க்கை

ஆ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு - மக்களின் சமூக, பொருளதார வாழ்க்கை

இ) பதிற்றுப்பத்து - மன்னரின் போர்த்திறம், கொடைத்திறம்

ஈ) இரட்டைக் காப்பியங்கள் - வளையாபதி, குண்டலகேசி

4. பொருத்துக:

அ. பொருந்தாக் காதல் - 1) பொதுவியல் திணை

ஆ. ஒருதலைக் காமம் - 2) பாடாண்திணை

இ. ஆண் மகனது வீரம் - 3) பெருந்திணை

ஈ. ஒன்பது திணைகளில் கூறாதவை - 4) கைக்கிளை

அ) அ -4 ஆ - 3 இ - 2 ஈ – 1

ஆ) அ - 2 ஆ - 3 இ - 4 ஈ - 1

இ) அ - 3 ஆ - 4 இ - 2 ஈ – 1

ஈ) அ - 3 ஆ - 4 இ - 1 ஈ - 2

5. சர் ஜான் மார்ஷல், இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த நகரங்கள் என உறுதிப்படுத்தியவை

1. மொகஞ்சதாரோ 2. ஹரப்பா 3. குந்தா 4. தானூர்

அ) 1, 2 சரியானவை ஆ) 3, 4 சரியானவை

இ) 2, 3 சரியானவை ஈ) 1, 4 சரியானவை

6. பண்டைய சிந்துவெளி பகுதியில் வழங்கப்பட்ட பெயர்களுள் எவையெவை தற்போதைய பாகிஸ்தானில், இன்றும் வழக்கத்தில் உள்ளன ?

1. ஆரணி 2. கொற்கை 3. சின்னமனூர் 4. மைலம்

அ) 1, 2, 3 சரியானவை ஆ) 1, 2, 3 தவறானவை

இ) 1, 2, 4 சரியானவை ஈ) 1, 2, 4 தவறானவை

7. மகா யோகியின் முத்திரையில் இடம்பெற்றிராத விலங்குகள்

1. காண்டாமிருகம், எருமை 2. யானை, புலி

3. புலி, கரடி 4. புலி, ஒட்டகம்

அ) 3, 4 சரியானவை ஆ) 1, 2, 3 சரியானவை

இ) 1, 2 சரியானவை ஈ) 1, 3, 4 சரியானவை

Maathiri Vina Vidai.indd 195 12-12-2021 23:09:00

8. கூற்று : "புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்

துரனுடை யாளர் கேண்மை யோடு

இயைந்த வைகல் உளவா கியரோ"

விளக்கம் : எலியைப்போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக் கொள்வதினும் புலியைப் போன்ற வலிமையும் முயற்சியும் உடையவரும் நட்புக் கொள்வது சிறந்ததன்று.

அ) கூற்றுசரி, விளக்கம் சரி ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு

இ) கூற்று தவறு, விளக்கம் தவறு ஈ) கூற்று சரி, விளக்கம் பொருத்தமானதன்று

9. தமிழர்களின் வீட்டுவாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, எதற்கு அடையாளமாகக் கருதப்படுகிறது ?

அ) விருந்தோம்பல் ஆ) வீரம் இ) நட்பு ஈ) வாய்மை

10. பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூலில், இடம்பெற்றுள்ள இரு அதிகாரங்கள்

அ) எழுத்து, சொல் ஆ) எழுத்து, பொருள்

இ) சொல், பொருள் ஈ) சொல், யாப்பு

11. தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் கலைகளையும் சிறப்பாகப் பதிவு செய்த நூல்

அ) குண்டலகேசி ஆ) வளையாபதி இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

12. தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.

மாடல மறையோன், கோவலனைப் புகழாத கூற்று எது ?

அ) கோவலன், யானையிடமிருந்து முதியவரைக்காத்த கருணை மறவன்.

ஆ) பிரிந்த கணவன் மனைவியைப் பெரும்பொருள் கொடுத்து, இணைத்த 'செல்லாச் செல்வன்'.

இ) தலைவனை இழந்து தடுமாறும் குடும்பத்தாரையும் அவர்தம் சுற்றத்தாரையும் அரவணைத்த 'இல்லோர் செம்மல்'

ஈ) கொண்ட பணியை முடிக்கும் தொண்டுள்ளம் கொண்ட " சொல்லின் செல்வன்"

13. பண்டைய நாளில் வாழ்ந்த இசைக்கலைஞர்கள் ஏழிசைத் திறங்களை இசைக்க பயன்படுத்திய கருவிகள்

1. குழல் 2. கஞ்சக்கருவி 3. தோல் கருவி 4. யாழ்

அ) 1, 4 சரியானவை ஆ) 1, 3 சரியானவை

இ) 1, 2 சரியானவை ஈ) 3,4 சரியானவை

14. சாளுவன் குப்பத்தில் உள்ள குகைக் கோயிலின் வெளிமுகப்பில், எந்த விலங்கின் முகம் காணப்படுகிறது?

அ) புலி ஆ) யானை இ) யாளி ஈ) மான்

15. கோயில் விமானத்தில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை

அ) நான்கு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) ஆறு

16. பொருத்துக.

அ. ஆயிரங்கால் மண்டபம் அமைந்துள்ள இடம்	–	1. நாமக்கல் கோயில்
ஆ. கட்டடக் கலையின் மணிமகுடமாகத் திகழும் கோயில்	–	2. நெல்லையப்பர் கோயில்
இ. இசைத்தூண்கள் அமைந்துள்ள இடம்	–	3. தஞ்சைப் பெரியகோயில்
ஈ. திருமாலின் பத்து அவதாரங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ள கோயில்	–	4. மதுரை மீனாட்சியம்மன் கோயில்

அ) அ – 4, ஆ – 3, இ –2, ஈ – 1 ஆ) அ – 3, ஆ – 2, இ –1, ஈ – 4

இ) அ – 2, ஆ – 1, இ –4, ஈ –3 ஈ) அ – 1, ஆ – 4, இ –3, ஈ – 2

17. பரவை நாச்சியாரை மணந்து கொண்டவர்

அ) மாணிக்கவாசகர் ஆ) சுந்தரர்

இ) திருநாவுக்கரசர் ஈ) திருஞானசம்பந்தர்

18. முல்லை நிலமக்கள், எம்மரத்தைத் தாய் தெய்வமாக வழிபட்டனர் ?

அ) அரசமரம் ஆ) ஆலமரம் இ) புன்னைமரம் ஈ) வேப்பமரம்

19. சித்திரசபை அமைந்துள்ள இடம்

அ) குற்றாலம் ஆ) திருவாலங்காடு இ) திருநெல்வேலி ஈ) சிதம்பரம்

20. பொருந்தாத கூற்றைக் கண்டறிக.

விஜய தசமி என்பது,

அ) வெற்றியைத் தருகின்ற நாள்

ஆ) கல்வியைத் தொடங்கும் நாள்

இ) கார்த்திகை மாதத்தில் வரும் நாள்

ஈ) செல்வத்தைத் தருகின்ற நாள்

www.tnschoolbooks.in

பிரிவு – II

எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 25 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். *7×2=14*

21. மூன்றாம் தமிழ்ச்சங்க நூல்கள் யாவை ?
22. கால அடிப்படையில், சங்கங்களை எவ்வாறு வகைப்படுத்தினர் ?
23. சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய உலோகங்கள் யாவை ?
24. சிந்துவெளி மக்கள் வணிகத்தில் சிறப்புற்றிருந்த துறைமுகங்கள் யாவை ?
25. உண்மையான செல்வம் பற்றி நல்வேட்டனார் கூறுவது யாது ?
26. 'பொய்யாச் செந்நா' என்ற புறநானூற்றுப் பாடல் வாயிலாக நீவிர் அறிவன யாவை ?
27. பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் மூன்றைக் குறிப்பிடுக.
28. சங்க காலக் கோயில்கள் அழிந்ததற்கான காரணம் யாது ?
29. எவ்வகை இயற்கைப் பொருள்களைப் பெரும்ஆற்றலாகக் கருதி மக்கள் வழிபட்டனர் ?
30. இந்திர விழா கொண்டாடுவதன் நோக்கம் யாது ?

பிரிவு – III

எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்க. 37 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். *7×3=21*

31. விருந்தினர் என்ற சொல்லின் பொருள் யாது ?
32. குறுநில மன்னர்களின் பெயர்களை குறிப்பிடுக ?
33. சிந்துவெளி மக்களின் கலையார்வத்தை வெளிப்படுத்தும் சான்றுகள் யாவை ?
34. சிந்துவெளி நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்கள் யாவை ?
35. சங்க காலப் பெண்பாற்புலவர்களுள் ஐவரின் பெயர்களைக் கூறுக ?
36. சங்ககால மன்னர்களின் மாண்புகள் யாவை ?
37. உலோகப் படிமங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது ?
38. அழகும் தொன்மையும் வாய்ந்த பல்லவர் காலக் கோயில் யாது ? யாரால் கட்டப்பட்டது ?
39. திருவிழாக்கள் எவற்றின் அடிப்படையில் கொண்டாடப்படுகின்றன ?
40. இந்திர விழாவின் வேறு பெயர்கள் யாவை ?

Maathiri Vina Vidai.indd 198 12-12-2021 23:09:00

பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. $7\times5=35$

41. கடையெழு வள்ளல்களையும் அவர்களின் வள்ளல் தன்மைகளையும் விவரிக்க.

(அல்லது)

பழங்கால நாணயங்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

42. சிந்துவெளி நாகரிகத்தில் பெண்கள் நிலை எவ்வாறு இருந்தது ? விளக்குக.

(அல்லது)

இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு சிந்துவெளி நாகரிகம் வழங்கியுள்ள கொடையை விளக்குக.

43. கற்றளிக்கும், குடைவரைக் கோயிலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

(அல்லது)

விமானத்திற்கும் கோபுரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

44. மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கு உண்டு என்பதைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

மன்னர்கள் அறநெறி வழுவாது அரசாட்சி நடத்தினர் என்பதை விளக்குக.

45. வளையாபதி கூறும் அறங்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

தீமையின் உருவங்களாகப் படைக்கப்பட்ட பாத்திரங்கள் யாவர் ? விளக்குக.

46. தஞ்சாவூர் ஓவியங்கள் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

தமிழரின் நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான சிலம்பாட்டத்தை விவரித்து எழுதுக.

47. தேர்த்திருவிழாவின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

குருநானக்ஜெயந்தி சீக்கியர்களால் எவ்வாறு கொண்டாடப்படுகிறது? விளக்குக.

www.tnschoolbooks.in

கலைச்சொற்கள்

Aesthetics	-	அழகியல்
Air Pollution	-	காற்றுவெளி மாசுபாடு
Altruistic	-	பிறர் நலம்
Ambition	-	இலட்சியம்
Anarcha Feminism	-	தலைமை வேண்டாப் பெண்ணியம்
Ancestry	-	பரம்பரை
Anklet	-	காற்சிலம்பு / கொலுசு
Anti-Violence Feminism	-	வன்முறை எதிர்ப்புப் பெண்ணியம்
Appreciation	-	பாராட்டு
Archaeology	-	தொல்லியல்
Architecture	-	கட்டடக்கலை
Argument	-	வாதிடுதல்
Art Gallery	-	கலைக்கூடம்
Astrology	-	ஜோதிடம்
Astronomy	-	வானவியல்
Bamboo	-	மூங்கில்
Barn	-	தானியக் களஞ்சியம்
Barter / Commodity Exchange	-	பண்டமாற்று
Battle field	-	போர்க்களம்
Bitumen / Asphalt	-	நீலக்கீல்
Black Feminism	-	கருப்பினப் பெண்ணியம்
Blood Pollution	-	இரத்த மாசுபாடு
Bravery / Heroism / Valor / Bolder	-	வீரம்
Brotherhood	-	சகோதரத்துவம்
Cameos	-	பிரதிமைகள்
Canvas	-	கித்தான்
Cave Temple	-	குகைக்கோயில்
Character	-	பண்பு
Chariot	-	தேர்
Charity	-	தொண்டு
Circus	-	வேடிக்கை வட்டரங்கம்
Civic	-	குடிமை
Civilization	-	நாகரிகம்

Kalaichorkal.indd 200 13-12-2021 10:36:44

Classic	-	செவ்வியல்
Committed	-	ஈடுபாடுமிக்க
Community Architect	-	சமுதாயச் சிற்பி
Compassion	-	இரக்கம்
Complex	-	சிக்கலான
Conduct	-	நடத்தை
Conduct / Morality / Discipline	-	ஒழுக்கம்
Conscience	-	மனசாட்சி
Conservative Feminism	-	மரபுவாதப் பெண்ணியம்
Consumer	-	நுகர்வோர்
Contrasts	-	வேற்றுமைகள்
Copper Coins	-	செப்பு நாணயங்கள்
Copper Plate	-	செப்புப் பட்டயம்
Courage	-	துணிவு
Cowards	-	கோழைகள்
Creative	-	ஆக்கத்திறன்
Crescent moon	-	பிறை நிலவு
Crew/Group	-	குழுவினர்
Crime	-	குற்றம்
Culture	-	பண்பாடு
Cultural Feminism	-	பண்பாட்டுப் பெண்ணியம்
Curved horn	-	வளைவான கொம்பு
Customary	-	பழக்கமான
Customs	-	சம்பிரதாயங்கள்
Dedicated	-	அர்ப்பணிப்பு
Definition	-	வரையறை
Destinations	-	இலக்குகள்
Determination	-	தீர்மானம்
Devotion	-	பக்தி
Dignity	-	கண்ணியம்
Disaster	-	பேரழிவு
Discrimination	-	பாகுபாடு
Discussions	-	விவாதங்கள்
Document	-	ஆவணம்
Domestic Business	-	உள்நாட்டு வணிகம்
Donation / Contribution	-	கொடை
Draft	-	வரைவு
Drill Pipe	-	துளைக்கருவி
Duties	-	கடமைகள்

Ecology	-	சூழலியல்
Eco-Feminism	-	சூழல் பெண்ணியம்
Economic power	-	பொருளாதார சக்தி
Electronic Device	-	மின்னணு சாதனங்கள்
Emperors	-	பேரரசர்கள்
Entrepreneur	-	தொழில் முனைவோர்
Environment	-	சுற்றுச்சூழல்
Epic quintet / The five great epics	-	ஐம்பெருங்காப்பியங்கள்
Equality	-	சமத்துவம்
Ethics	-	அறவியல்
Excavation	-	அகழாய்வு
Exhausting	-	தீரக்கூடிய
External Life	-	புறவாழ்வு
Factory	-	தொழிற்கூடம்
Fasting	-	நோன்பு
Fatally / Fate	-	ஊழ்வினை
Feminist	-	பெண்ணுரிமையாளர்
Festival	-	திருவிழா
Field	-	கழனி
Fine Arts	-	கவின்கலைகள்
Flower garden / Paradise / Oasis	-	பாலைவனச்சோலை
Food Pollution	-	உணவு மாசுபாடு
Forecast	-	முன்னறிவிப்பு
Forest / Jungle	-	கானகம்
Geographical Code	-	புவியியல் குறியீடு
Golden Age	-	பொற்காலம்
Golden Temple	-	பொற்கோவில்
Good character	-	நற்பண்பு
Government Treasury	-	அரசுக் கருவூலம்
Granites	-	கருங்கற்கள்
Greatness / Honour / Goodness / Norms	-	மாண்புகள்
Habitual/Habit	-	பழக்கம்
Harmone Pollution	-	ஹார்மோன் மாசுபாடு
Heat Pollution	-	வெப்ப மாசுபாடு
Hero Stone	-	நடுகல்
Highs and lows	-	உயர்வு தாழ்வு
Hospitality	-	விருந்தோம்பல்
Human rights	-	மனித உரிமைகள்

Humanity	-	மனிதநேயம்
Hunting	-	வேட்டையாடுதல்
Hymn	-	பாசுரம்
Immortality of soul	-	உயிரின் இறவாத் தன்மை
Indoor Pollution	-	மனையக மாசுபாடு
In memory	-	நினைவாக
Inappropriate nature	-	தகாத குணம்
Independent power	-	சுதந்திர உரிமை
Indeterminism	-	தீர்மானிக்கப்படாத
Industry	-	தொழிற்சாலை
Information	-	தகவல்
Inoffensive	-	புண்படுத்தாமல்
Inscription	-	கல்வெட்டு
Inseparable	-	இணைபிரியாத
Instinctive	-	இயல்பூக்கம்
Integrated	-	ஒருங்கிணைந்த
Intellectually	-	அறிவுபூர்வமாக
Intention	-	உள்நோக்கம்
Internal Life	-	அகவாழ்வு
Involvement	-	ஈடுபாடு
Justice	-	நீதி
Labour	-	தொழிலாளர்
Legal	-	சட்டம் / நீதி
Liberal Feminism	-	தாராளவாதப் பெண்ணியம்
Light Pollution	-	ஒளி மாசுபாடு
Literature	-	இலக்கியம்
Livestock	-	கால்நடைகள்
Logic	-	அளவையியல்
Logo	-	சின்னம்
Lutes	-	யாழி
Maintain	-	பராமரித்தல்
Martyrdom	-	வீரமரணம்
Material Culture	-	புறப்பண்பாடு
Measurement	-	அளவீடு
Medical Insurance	-	மருத்துவக் காப்பீடு
Merciful	-	கருணையுள்ள
Metal Sculpture	-	உலோகச் சிற்பங்கள்
Mistake	-	பிழை
Monitors	-	கண்காணித்து

Monolithic	-	ஒற்றைக்கல்
Mood	-	மனநிலை
Moral action	-	அறச்செயல்
Motive	-	உள்நோக்கு
Mural Art	-	சுவர் ஓவியம்
Musicians	-	இசைக் கலைஞர்கள்
National Unity	-	தேச ஒற்றுமை
Nemesis/Retributive	-	பழிக்குப்பழி
Neutral slack	-	நடுநிற்றல்
Non Material Culture	-	பொருள்சாராத பண்பாடு
Noise Pollution	-	இரைச்சல் மாசுபாடு
Norms	-	நெறிகள்
Numismatics	-	நாணயவியல்
Ore / Mineral	-	தாதுப்பொருள்
Origin	-	பூர்வீகம்
Ornament	-	அணிகலன்
Overseas Business	-	வெளிநாட்டு வணிகம்
Plastic Pollution	-	நெகிழி மாசுபாடு
Patriot	-	நாட்டுப்பற்றுமிக்கவர்
Pipal Tree	-	அரசமரம்
Penal	-	தண்டனைக்குரிய
Personality	-	ஆளுமை
Pesticide Pollution	-	பூச்சிக்கொல்லி மாசுபாடு
Philosophy	-	தத்துவம்
Physical property	-	உடற்பண்பு
Pictography	-	சித்திர எழுத்து
Pilgrimage	-	புனிதப்பயணம்
Pillars	-	தூண்கள்
Political	-	அரசியல்
Potency	-	ஆற்றல்
Prison	-	சிறை
Professional	-	தொழில்சார்
Proliferated	-	பல்கிப்பெருகி
Property	-	சொத்து
Psychology	-	உளவியல்
Psychotic behaviour	-	உளநடத்தை
Public Welfare	-	பொதுநலம்
Punishment	-	தண்டனை
Quantity	-	அளவு

Radical Feminism	-	தீவிரவாதப் பெண்ணியம்
Radioactive Pollution	-	கதிரியக்க மாசுபாடு
Rational	-	பகுத்தறிவு
Rebellion Feminism	-	அமைப்பை மறுக்கும் பெண்ணியம்
Reclamation	-	மீட்டல்
Reflective	-	மனச்சான்று
Reform	-	சீர்திருத்தம்
Reformative	-	சீர்திருத்த
Reformer	-	சீர்திருத்தவாதி
Reformist Feminism	-	சீர்திருத்தப் பெண்ணியம்
Regeneration	-	மீட்டுருவாக்கம்
Registrars	-	பதிவாளர்கள்
Rejuvenation	-	புத்துணர்வு
Relief Sculpture	-	புடைப்புச் சிற்பம்
Religion	-	மதம்
Religious Harmony	-	மத நல்லிணக்கம்
Renaissance	-	மறுமலர்ச்சி
Renunciation	-	துறத்தல்
Repetitive	-	தொடர்ந்து செய்தல்
Repository	-	களஞ்சியம்
Resolving	-	தீர்த்தல்
Revolution	-	புரட்சி
Revolutionary Feminism	-	புரட்சிகரப் பெண்ணியம்
Rights	-	உரிமைகள்
Rituals	-	சடங்குகள்
Rock Art	-	பாறை ஓவியம்
Roof	-	கூரை
Rules/Regulations	-	விதிகள் / கட்டுப்பாடுகள்
Sacrifice	-	தியாகம்
Savor	-	நறுமணம்
Sculpture	-	சிற்பம்
Seal	-	முத்திரை
Self determinism	-	சுயதீர்மானம்
Self respect	-	சுயமரியாதை
Self sympathy	-	சுய இரக்கம்
Selfishness	-	தன்னலம்
Sense of Humility	-	புலனடக்கம்
Service Industry	-	சேவைத்துறை
Simulations	-	பாவனைகள் / போலச் செய்தல்

Sin	-	பாவம்
Social Decay	-	சமூகச் சீரழிவு
Social Feminism	-	சமதர்மப் பெண்ணியம்
Social grassroots	-	சமூக அடித்தட்டு நிலைகள்
Social Inequality	-	சமூக ஏற்றத்தாழ்வுகள்
Social moral character	-	சமூக அறநெறிப்பண்பு
Social work	-	சமூகத்தொண்டு
Sodic Land	-	களர் நிலம்
Soil Pollultion	-	மண் மாசுபாடு
Solidarity	-	ஒருமைப்பாடு
Solid Waste Pollution	-	திடக்கழிவு மாசுபாடு
Sovereignty	-	இறையாண்மை
Spirituality	-	ஆன்மீகம்
Spiritual Feminism	-	ஆன்மீகப் பெண்ணியம்
Spy	-	ஒற்றன்
Standard	-	தரநிலை
Statue	-	தனிச் சிற்பம்
Stone Carving	-	கல்வேலைப்பாடு
Technique	-	நுட்பம்
Technology	-	தொழில்நுட்பம்
Tents	-	பந்தல்கள்
The legacy of community	-	சமுதாயத்தின் மரபு
Tiara	-	தலைப்பாகை
Traditional	-	தொன்றுதொட்டு
Treatment	-	சிகிச்சை
Truthfulness	-	வாய்மை
Uninterrupted / Unrestricted	-	தடையற்ற
University	-	பல்கலைக்கழகம்
Unreasonably	-	காரணமற்ற
Untouchability	-	தீண்டாமை
Valor	-	வீரம்
Values	-	விழுமியங்கள்
Vice	-	குற்றம்
Virtues	-	நல்லொழுக்கங்கள்
Voluntary	-	விரும்பியேற்றல்
Water Pollution	-	நீர் மாசுபாடு
Wisdom	-	ஞானம்
Worship	-	வழிபாடு

Kalaichorkal.indd 206 13-12-2021 10:36:44

பார்வை நூல்கள்

வ.எண்	நூல்கள்	ஆசிரியர் பெயர்
1.	அறவியல் ஓர் அறிமுகம்	வில்லியம் வில்லி தமிழாக்கம்: கோ.மோ. காந்தி தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017)
2.	அறவியலும் பண்பாடும்	முனைவர் கா. அரங்கசாமி
3.	இந்தியக்கலை வரலாறு (சிற்பக்கலை)	கோ. தங்கவேலு
4.	இந்தியப் பண்டிகைகள்	குமரி. முருகேசன்
5.	இந்து சமயத் தத்துவம்	T.M.P. மகாதேவன், தமிழாக்கம்: ஞா. இராஜாபகதூர்
6.	இந்துப் பண்டிகைகளில் வரலாறும் வழிபாட்டு முறைகளும்	ஆசிரியர் குழு – இராமநாதன் பதிப்பகம்
7.	இந்துமத இணைப்பு விளக்கம்	மகாவித்துவான் கே. ஆறுமுகநாவலர்
8.	உரைநடைத் தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள்	வித்துவான் நாராணய வேலுப்பிள்ளை
9.	ஐம்பெருங்காப்பியங்களுள் மூலமும் தெளிவும்	ச.வே. சுப்பிரமணியன்
10.	கம்பராமாயணம்	அ.ச. ஞானசம்பந்தன்
11.	கீழடி மதுரை – சங்ககால தமிழர் நாகரிகம்	க.த. காந்திராஜன்
12.	சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்)	முனைவர் அ. பாண்டுரங்கன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட் – 2016.
13.	சங்ககாலம் – வாழ்வியல்	தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் (ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017)
14.	சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்	பெ. மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை –2004.
15.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	பி. கிஸ்பர்ட், தமிழாக்கம்: ஜே. நாராயணன் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், (ஆவணப் பதிப்பு ஆகஸ்ட் 2017)
16.	சிந்துவெளி எழுத்து	வி. நட்ராஜ்
17.	சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்	ஆர். பாலகிருஷ்ணன்
18.	சீவகசிந்தாமணி ஓர் ஒப்பற்ற காப்பியம்	பேராசிரியர்ஜெ. ஸ்ரீசந்திரன்
19.	சீவகசிந்தாமணி – திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்கினியருரையும்	தமிழ்ப்பல்கலைகழகம், தஞ்சாவூர்
20.	சுற்றுச்சூழல்	தி.து. பாலசுப்பிரமணியன், வேங்கடம் வெளியீடு, சென்னை – 2005
21.	சூழல் அறிவியல்	முனைவர் S. ஜான் பிரிட்டோ திருச்சி – 2004.
22.	சைவமும் வைணவமும்	அருள்மிகு. சங்கரநாரயணன்
23.	சோழர் வரலாறு	டாக்டர் மா. இராசமாணிக்கனார்
24.	தமிழ் இலக்கியங்களில் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள்	பதிப்பாசிரியர் முனைவர் கலை. இராம. வெங்கடேசன் முனைவர் மு. இராஜேந்திரன் முனைவர் கோ. விஜய ராகவன் முனைவர் நாஞ்சில். நீல. மாதவன் ஆரஞ்சு பப்ளிகேஷன்ஸ், காஞ்சிபுரம் – 2017.

வ.எண்	நூல்கள்	ஆசிரியர் பெயர்
25.	தமிழ் இலக்கிய வரலாறு	பேராசிரியர் மது.ச. விமலானந்தம்
26.	தமிழ் இலக்கிய வரலாறு	மு. வரதராசன்
27.	தமிழ் இலக்கிய வரலாறு	முனைவர் ச. வே. சுப்பிரமணியன்
28.	தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள்	முனைவர் கா. அரங்கசாமி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் -2013.
29.	தமிழ்நாட்டு வரலாறு	தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு
30.	தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம், வாழ்வியியல்	தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
31.	தமிழக நாகரிகமும் பண்பாடும்	முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
32.	தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	டாக்டர் கே.கே. பிள்ளை
33.	தமிழக வரலாறும் பண்பாடும்	வேதி. செல்வம்
34.	தமிழக வரலாறும் பண்பாடும்	டாக்டர் அ. சுவாமிநாதன்
35.	தமிழர் கலையும் பண்பாடும்	அ.கா. பெருமாள்
36.	தமிழர் சமயம் தமிழர் வேதம், தமிழகத்துக் கோயில்கள்	யு. சுப்பிரமணியன்
37.	தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள்	முனைவர் ச.வே. சுப்ரமணியன்
38.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	இரா. பாலசுப்ரமணியம்
39.	தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்	மயிலை சீனிவெங்கடசாமி
40.	தமிழிலக்கியத்தில் மனித நேயம்	முனைவர் சா. கிருஷ்ணமூர்த்தி முனைவர் சூ. நிர்மலா தேவி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் – 2005.
41.	தமிழும் பிறபண்பாடும்	தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்
42.	திருக்குறள்	பரிமேழலகர் உரை
43.	திருக்கோயில் அமைப்பும் திருவுருவ அமைதியும்	முனைவர் அம்பை மணிவண்ணன்
44.	தென்னிந்திய திருவிழாக்கள்	பி.ஜி. ஜெகதீச அய்யர்
45.	நடுகற்கள்	ச. கிருஷ்ணமூர்த்தி
46.	பரதக்கலை	டாக்டர் பத்மா சுப்ரமணியம்
47.	பன்னிரு திருமுறை வரலாறு, (முதல் ஏழு திருமுறைகள்)	வித்துவான் வெள்ளைவாரணன்
48.	புதிய தமிழ் இலக்கிய வரலாறு, தொகுதி- I, II, III இடைக்கால இலக்கியம்	சிற்பி. பாலசுப்ரமணியம், நீலபத்மநாபன்
49.	பெண்ணியம் (இந்தியப் பெண்ணியவாதிகள்)	பேராசிரியர் இரா. பிரேமா,
50.	மதநல்லிணக்கம்	டாக்டர் மு. பெரியகருப்பு
51.	மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	திரு. வி. கலியாணசுந்தரனார் ஷாண்வி புக்ஸ். பெங்களூரு – 2015.

www.tnschoolbooks.in

மேல்நிலை முதலாம் ஆண்டு–அறவியலும் இந்தியப் பண்பாடும்
ஆக்கம்

மேலாய்வாளர் குழு

முனைவர் **மு. சுதந்திரமுத்து,**
இணைப்பேராசிரியர் (ப.நி)
மாநிலக்கல்லூரி, சென்னை .

முனைவர் **பொன். குமார்,**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

முனைவர் **கமலா கிருஷ்ணமூர்த்தி,**
இணைப்பேராசிரியர் (ப.நி)
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை.

திரு. **மூ. அப்பணசாமி,**
ஆலோசகர், தமிழ்நாடு பாடநூல் மற்றும்
.கல்வியியல் பணிகள் கழகம், சென்னை

முனைவர் **இரா. இராமன்**
இணைப் பேராசிரியர்
.அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

முனைவர் **க. பலராமன்**
உதவிப் பேராசிரியர்
.அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

திருமதி **பி. அமுல்சோபியா**
உதவிப் பேராசிரியர்
.ஸ்ரீமாலோலன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுராந்தகம்

பாடநூல் வல்லுநர் குழு

முனைவர் **சீ. தங்கராசு,**
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் துறை,
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) – கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

முனைவர் **பா. ஷீலா**
கலைப்புலத்தலைவர்,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
சிற்பத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்.

முனைவர் **சி. ஸ்ரீராஜா,**
உதவிப் பேராசிரியர் மற்றும் இந்தியப் பண்பாட்டுத் துறைத்தலைவர்,
அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக்கல்லூரி,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

முனைவர் **இர. இந்திரா,**
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்.
தத்துவம் சமயம் மற்றும் பண்பாட்டுத் துறை,
பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர், நாகப்பட்டிணம் மாவட்டம்.

முனைவர் **இரா. பாலசுப்ரமணியன்,**
உதவிப்பேராசிரியர், இந்தியப்பண்பாட்டுத் துறை,
அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக்கல்லூரி,
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

முனைவர் **மு. பரணி,**
உதவிப்பேராசிரியர்,
தத்துவத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

வரைபடம்

க.த. காந்திராஜன், ஆய்வு வளமையர்
தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.
சு.வெ. கோகுலகிருஷ்ணன், சென்னை.
ச. கௌதம், சென்னை.
தனஸ் தீபக் ராஜன், சென்னை.
நளன் நான்சி ராஜன், சென்னை.

வரைகலை & வடிவமைப்பு

விஜயசாரதி, ரகு, சி.சுகன்யா

In-House - QC

மனோகர் இராதாகிருஷ்ணன்
கோபு இராசுவேல்
ஜெரால்டு வில்சன். கி
ப அருண் காமராஜ்

அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

தட்டச்சர்

அ. கணேஷ்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், குமுளூர், திருச்சி மாவட்டம்.

ஆ. அஸ்வினி
போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

பாடநூல் உருவாக்கக் குழு

இரா. ஜெனமேஜெயன்,
முதுகலை ஆசிரியர், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

கி. அன்பழகன்,
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
பேரளம், திருவாரூர் மாவட்டம்.

கோ. பாக்கியலட்சுமி,
முதுகலை ஆசிரியர், வ.உ.சி. அரசினர் மேல்நிலைப்பள்ளி,
ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

மு. பழனிச்சாமி,
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கிணத்துக்கடவு, கோயம்புத்தூர் மாவட்டம்.

இரா. கண்ணன்,
முதுகலை ஆசிரியர், அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி,
செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.

கு. கந்தையா,
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம்.

மா. இராதாகிருஷ்ணன்,
முதுகலை ஆசிரியர், எஸ். ஆர். அரசினர் மேல்நிலைப்பள்ளி,
நாங்குநேரி, திருநெல்வேலி மாவட்டம்.

கோ. ஜெகநாதன்,
முதுகலை ஆசிரியர், இந்து மேல்நிலைப்பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை.

தொ. பால்ராஜ்,
முதுகலை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
மகபூப்பாளையம், மதுரை மாவட்டம்.

சு. சந்திரன்,
முதுகலை ஆசிரியர்,
ஆவிச்சி மேல்நிலைப்பள்ளி, சாலிகிராமம், சென்னை.

வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **நா. அருள்முருகன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

ஒருங்கிணைப்பு

ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

பணிவாய்ப்பு வழிகாட்டல்

முனைவர் **தே. சங்கர சரவணன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

கணினித் தொழில்நுட்பம்

த. ரேவதி, பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

பொ. சின்னத்துரை,
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி,
டி. சானார்பாளையம், திருப்பூர் மாவட்டம்

ஒருங்கிணைப்பு உதவி

இரா. கீதாராணி, பட்டதாரி ஆசிரியர்,
ஊ. ஒ. ந. நி. பள்ளி, பெரிய வேட்டுவபாளையம், பெருந்துறை , ஈரோடு

நூலக வளம்

இரா. ஜெயந்தி, நூலகர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

11th Ethics Tamil_Authors List.indd 209 13-12-2021 10:34:43

www.tnschoolbooks.in

குறிப்புகள்

11th Ethics Tamil_Authors List.indd 210 13-12-2021 10:34:43